# தமிழ் இலக்கணம் அறிவோம்



கந்தவனம் கோணேஸ்வரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் இலக்கணம் அறிவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(Thamizh Ilakkanam Arivom)

முதற்பதிப்பு ஆண்டு : 2020

பிரதிகள் : 1000

நூலாசிரியர் : கந்தவனம் கோணேஸ்வரன்.

விற்பனை உரிமை : திருமதி சரோஜினி கோணேஸ்வரன்.

முகவரி : 256/30சி உட்டுறைமுக வீதி,
திருக்கோணமலை.
81. கந்தசாமி கோவில் வீதி,
திருக்கோணமலை.

தொலைபேசி : 071 555 4162.

நூல் வடிவமைப்பு : திரு .சுதாகரன் கௌசிகன்.

அச்சுப்பதிப்பு : Happy Printers, Trincomalee.

தொலைபேசி : 077 103 4340

ISBN No : 978-955-97741-1-2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படையல்:
என் தாய்க்கும் எந்தைக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு தேசிய கல்விக் கல்லூரியின் ஓய்வுநிலைப் பீடாதிபதி திரு. சி. பாக்கியராசா அவர்களின் வாழ்த்துச் செய்தி

எமது நாட்டில் பேசப்படுகின்ற தமிழ் மொழி ஏனைய நாட்டு மக்களோடு ஒப்பிடும் போது உயர்ந்த இடத்தில் இருப்பதாகப் பல அறிஞர் பெருமக்களால் கணிப்பிடப்பட்டுள்ளது. இதனை எமது நாட்டுக்கு வருகை தரும் தமிழ் நாட்டை சேர்ந்த கல்வியாளர்களும் பேச்சாளர்களும் அடிக்கடி உறுதிப்படுத்தி இருக்கின்றனர்.

ஆயினும் அண்மைக்காலமாக எமது நாட்டின் ஒலி,ஒளி அச்சு ஊடகங்களிற்சில இனிய தமிழ்மொழியின் ஒலி வேறுபாடுகளில் அலட்சியமாக நடந்து கொள்வது வேதனையைத் தருகின்றது. உதாரணமாக, காலைச் செய்திகள் என்பதனைக் காளைச் செய்திகள் என்றும் "அறம் செய்ய விரும்பு " என்பது போன்ற உயரிய சிந்தனையை " அரம் செய்ய விரும்பு " என்றும் ஒலி, ஒளி ஊடகங்கள் தெரிவிக்கும் போது எமது இளைய தலைமுறையினரின் மொழியாற்றல் தவறிச் செல்ல வாய்ப்பு ஏற்படுகிறது. இவற்றுக்கேற்றாற் போல் இன்றைய ஆசிரியர்கள் சிலரும் இவ் விடயம் பற்றி கரிசனை கொள்வதில்லை என்ற குறைபாடும் தமிழ் கல்வியாளர்களால் சுட்டிக்காட்டப்படுகிறது.

இதேவேளை தமிழ்மொழியின் தொன்மைக்கு மெருகூட்டும் இலக்கணமரபுகளும் நலிவடைந்து கொண்டிருப்பதை நாம் காண்கின்றோம். தமிழ் மொழியின் பாடத்திட்டத்தை நிறைவு செய்வதற்கும் பரீட்சையில் சித்தியடைவதற்குமே மனனம் செய்யப்படும் ஒன்றாக இலக்கணம் அமைந்துள்ளது. நடைமுறையில் தமிழ் மொழி இலக்கணத்தை ஒப்பு நோக்குவதிலோ பயன்படுத்துவதிலோ நாம் அக்கறை கொள்ளா தவர்களாக இருக்கிறோம். இது செந்தமிழ் மொழியின் அழகு, பொலிவு என்பன குறைவடைவதற்கும் தடம் மாறுவதற்கும் வழிவகுக்கக்கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றுக்கு முக்கிய காரணம் இலகு வழியில் தமிழ் இலக்கணத்தைக் கற்றுக் கொள்ளாமை எனலாம். இந்நிலையைக் கருத்திற் கொண்டு நீண்ட கால அவதானிப்பினூடாகவும் அனுபவத்தினூடாகவும் தமிழ் இலக்கண அறிவை மாணவருக்கு வழங்கும் பொருட்டு திருக்கோணமலை திரு. கந்தவனம் கோணேஸ்வரன் அவர்கள் " தமிழ் இலக்கணம் அறிவோம் " என்ற நூலை யாத்துள்ளார். இந்நூல் மிகவும் எளிய நடையில் அமைக்கப்பட்டிருப்பதால் சாதாரண, உயர்தர வகுப்புகளில் தமிழ் மொழி கற்கும் மாணவர்களுக்கும் பிற ஆர்வலர்களுக்கும் பெரிதும் உதவும் என்பது என் எண்ணம். இவ்வுயரிய பணியை மேற்கொண்ட திரு. கந்தவனம் கோணேஸ்வரன் அவர்கள் பாராட்டப் பட வேண்டியவர். அவரது தமிழ்ப் பணி மேலும் சிறக்க எனது நல்வாழ்த்துகள்.

நன்றி

**சி. பாக்கியராசா**
**(ஓய்வு நிலைப் பீடாதிபதி - மட்டக்களப்பு**
**(தேசிய கல்விக் கல்லூரி )**
**"சௌமியம்"**
**ஆரையம்பதி.**
**2020.20.05**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

உலகில் வாழ்கின்ற பண்பட்ட மொழிகளுக்கெலாம் இலக்கணங்கள் உள. இலக்கணமின்றி எந்த ஒரு மொழியும் வளர்ச்சி பெறாது. மொழியின் அடிச்சட்டகமே இலக்கணம் எனலாம்.

மிகப்பழைய மொழிகளுள் ஒன்றானதும் இன்றும் இளமைச் சிறப்புடன் விளங்குவதுமான தமிழ்மொழி எமது தாய்மொழியாக வாய்த்தமை நாம்பெற்ற பெரும்பேறாகும். எமது தாய்மொழி அறிவை நாம் சரியாகப் பெற்றுக்கொள்ளத் தவறுவோமானால் அந்த இழப்பு எமக்கேயாகும். தாய்மொழி அறிவைப் பெறாத ஒருமனிதன் உலகில் வேறெந்த அறிவைப் பெற்றிருப்பினும் அது நிறைவானதொன்றன்று.

தாய்மொழி அறிவைப் பெறுதற்கு இலக்கிய, இலக்கணநூல்கள் எமக்குதவுகின்றன. வாசித்தலில் ஆர்வமுள்ள ஒருவரால் தனது மொழியிலுள்ள இலக்கியச் சுவையைப் படிப்படியாகப் பெற்றுக்கொள்ள முடியும். ஏனெனில் இலக்கியங்கள் சுவை தருவன. மனதுக்குகந்த இலக்கியங்களைப் படிக்கவும் அல்லாதவற்றைப் படிக்காமல் விடவும் எவராலும் முடியும். நந்தமிழ் மொழியில் ஏராளமான இலக்கியநூல்கள் உளவாதலின் தமிழ்மொழி அறிய விழைவோருக்கு இது சாத்தியமாகிறது.

ஆனால், இலக்கணம் அவ்வாறன்று. மொழியின் கட்டுமானம் எந்த அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை விளக்குவதே இலக்கணம் ஆகின்றது.

இலக்கணம் கற்கும் மாணவர்களுக்கு இலக்கணம் ஒரு சுவைதராத் துறையாகத் தென்படலாம். இஃது இலக்கணத்தின் தன்மையன்று: இலக்கணத்தைக் கற்பிப்போரின் தன்மையே. சொல்லும் விதத்திற் சொன்னால் இலக்கணம்கூடச் சுவையாகும். இனிய முறையைக் கையாளின் இலக்கணம் எளிமையான ஒரு துறையாகத் தோன்றும். இதற்கான ஒரேவழி இலக்கணத்தை இலக்கணத்துள் நின்று போதிக்காது மொழியின் நடைமுறையூடாகவோ, இலக்கியங் களுடாகவோ போதிப்பதுதான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கணத்திலிருந்து நடைமுறையோ இலக்கியங்களோ தோன்றுவதில்லை. மாறாக, நடைமுறைகளிலிருந்தும் இலக்கியங்களிலிருந்துமே இலக்கணம் வடித்தெடுக்கப்படுகிறது. உயர்ந்தோர் வழக்குகளும் உலகோர் நடைமுறைகளுமே இலக்கண விதிகளைத் தோற்றுவிக்கின்றன என்பது கண்கூடு.

மேற்சொன்னவற்றை மனத்திருத்திப் படிப்போர் எவரும் தாமே உய்த்து இலக்கண அறிவைப் பெற்றுக் கொள்ளத்தக்க வகையிலேயே இந்நூல் ஆக்கம் பெறுகிறது. எமது அன்னைத்தமிழ் இலக்கணத்தை இலகுவாகக் கற்க இவ்வழிநூல் துணையிருக்கும் என நம்புகிறேன்.

**கந்தவனம் கோணேஸ்வரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1 எழுத்து

எழுத்து என்பது ஒலியின் வரி வடிவமாகும். ஆதியில் மனிதன் ஒலிகளை எழுப்பித் தனது கருத்துகளை முன்னால் நிற்பவருக்கு உணர்த்தினான். இக்கருத்துகள் சீர்மை பெறவேண்டி ஒலிக் கூட்டங்களாற் சொற்கள் தோற்றம் பெற்றன. ஆயினும் இவை மனிதனின் உச்சரிப்புடன் மட்டுமே நின்றதால். கணப் பொழுதிலேயே மறைந்துவிடும் இயல்பினதாயின.

இக்குறைபாட்டை நிவர்த்தி செய்ய வேண்டிய தேவை காலப்போக்கில் எழுந்தபோது வார்த்தைகள் ஒலியன்களாகப் பிரிக்கப்பட்டு. அவ்வொலியன்களுக்கு வரிவடிவம் கொடுக்க மனிதன் முனைந்தான். அதுவே எழுத்தானது. சீர்பெற்ற எழுத்துகளால் தனது எண்ணங்களைச் சேமித்துவைத்துப் பிறர் பயன்பெறத்தக்க வகையில் வழங்க முடியும் என்பதை உணர்ந்த மனிதன், அவற்றின் சிறப்புகளைப் பாதுகாத்து அடுத்த தலைமுறையினருக்கு வழங்கத் தலைப்பட்டான். இச் சிறப்பியல்புகளைப் பற்றிப் பேசுதலே இலக்கணமாயிற்று. இதனடிப்படையில் எழுத்து இலக்கணம் தொடங்குகிறது.

தமிழ் எழுத்துகளை **உயிர் எழுத்து, மெய் எழுத்து, உயிர்மெய் எழுத்து, ஆய்த எழுத்து** என நான்கு வகைப்படுத்தி உணர்தல் இலகுவாக அமையும்.

உயிர் எழுத்து என்பது **அ, ஆ, இ, ஈ. உ, ஊ**, எ, ஏ, ஐ, ஒ, ஓ, **ஔ** எனப் பன்னிரண்டு ஆகும்.
மெய் எழுத்து என்பது **க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்** எனப் பதினெட்டு ஆகும்.

ஆய்த எழுத்து என்பது மேற்சொல்லப்பட்ட இரண்டின் வகையையும் சாராது மூன்று புள்ளி (ஃ) வடிவிலமைந்த எழுத்து ஆகும்.

உயிர்மெய் எழுத்து என்பது உயிர் எழுத்து ஒன்று மெய் எழுத்து ஒன்றில் ஏறி அதனை இயங்கச் செய்வதால் உண்டாகும் எழுத்து ஆகும்.

க்+அ = க, க்+ஆ = கா, க்+இ = கி எனத் தொடங்கிப் பதினெட்டு மெய்களின்மீதும் பன்னிரண்டு உயிரெழுத்துகளும் ஏறி வருவதால் 18x12 = 216 உயிர்மெய் எழுத்துகள் தோன்றுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே இதன்படி,

உயிர் எழுத்துகள் 12

மெய் எழுத்துகள் 18

ஆய்த எழுத்து 1

உயிர்மெய் எழுத்து 216 எனத் தமிழ் எழுத்துகள் 247 ஆகின்றன. இது தமிழ் நெடுங்கணக்கு எனவும் அழைக்கப்படுகிறது.

## மாத்திரை :

மாத்திரை என்பது அளவு. எழுத்தை எமது விருப்பத்துக்கு ஒலிக்கவிட்டால் ஒலியின் இயல்பு சிதைந்துவிட வாய்ப்புண்டு. உச்சரிப்பின் காலஅளவு அதிகப்படவோ குறைந்து போகவோ இடமுண்டு. அவ்வாறு நேரின் எழுத்தின் நோக்கமும் கெட்டு மொழியும் திரிபடைந்து விடும்.

இந்நிலையைத் தவிர்ப்பதற்காக எமது முன்னோர் ஓர் எழுத்தை உச்சரிப்பதாயின் அதன் ஒலி எவ்வளவு நேர நீளங்கொண்டதாக அமைந்திருக்க வேண்டும் எனத் தீர்மானித்தார்கள். இந்தக் கால அளவையையே நாங்கள் மாத்திரை என்கிறோம்.

மாத்திரை என்ற பதம் குறிக்கும் காலஅளவு ஒரு கண்ணிமைப் பொழுது அல்லது கைந்நொடிப் பொழுது என்பர் இலக்கண அறிஞர்.

இதற்கமைய உயிர் எழுத்துகளில் அ, இ, உ, எ, ஒ ஆகிய ஐந்து எழுத்துகளின் மாத்திரை ஒன்று ஆகவும் ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ ஆகிய ஏழு எழுத்துகளின் மாத்திரை இரண்டாகவும் அமைகிறது.

இதிலிருந்து, கண்ணைச் சட்டென இமைக்கும் சிறு பொழுதிலோ, விரல்களை நொடிப்பதன் மூலம் உருவாக்கப்படும் கைந்நொடிப் பொழுதிலோ உயிரெழுத்துகளில் ஐந்தை ஒலித்துவிட வேண்டும் என்பதையும், அதன் இருமடங்கு நேரத்தில் ஏனைய ஏழு உயிரெழுத்துகளை ஒலிக்க வேண்டும் என்பதையும் புரிந்து கொள்ளமுடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிரெழுத்துகளின் அட்டவணையின் இறுதியில் தனித்து வருகின்ற ஆய்தஎழுத்தின் ஒலிப்புக்காலம் அரை மாத்திரையாகும். அதேபோல் மெய்யெழுத்துகளின் ஓசைக்காலமும் அரை மாத்திரையாகும்.

இதன் பொருள் ஆய்தஎழுத்து, மெய்யெழுத்து என்பவற்றை கைந்நொடிக்கும் அல்லது கண்ணிமைக்கும் பொழுதின் அரைவாசி நேரத்தில் ஒலித்துவிட வேண்டும் என்பதாகும். எனினும் அரைமாத்திரைக் காலத்தில் ஆய்தஎழுத்தையோ மெய்யெழுத்தையோ எவ்வாறு ஒலித்துவிட முடியுமென இலக்கண மாணாக்கர் வினவுவராயின் அக்கேள்வி மிகச் சரியானதொன்றாகவே தோன்றும். ஏனெனில் இவ்வெழுத்துகளை உச்சரிக்கும்போது நடைமுறையில் ஒன்றரை மாத்திரைப் பொழுதாகி விடுகின்றது என்பதுதான் உண்மை.

எடுத்துக்காட்டாக, "அ" என்பதை ஒரு மாத்திரைப் பொழுதிலும், "ஆ" என்பதை இரண்டு மாத்திரைப் பொழுதிலும் ஒலித்துவிட முடியும். அதிற் சிரமமேதுமில்லை. ஆய்த எழுத்தையோ, மெய்யெழுத்தையோ அவ்வாறு ஒலிக்க முடிவதில்லை. ஆய்தஎழுத்தை "அகேனம்" என்றோ, "அஃகன்னா" என்றோதான் கூறுகிறோம். இதன் ஒலியளவை மாத்திரம் கருத்திற்கொண்டு உச்சரித்தால் அஃ என்றாகும்.

எனவே இவ்விடத்தும் "அ" கரத்துக்குரிய ஒரு மாத்திரையையும், ஆய்தத்துக்குரிய அரை மாத்திரையையும் சேர்த்தே ஒலிக்கிறோம்.
இதன்படி ஃ க்கு மாத்திரை ஒன்றரை ஆகிவிடுகிறது.

இதேபோல் "க்" என்ற மெய்யெழுத்தைக் கிட்டத்தட்ட "இக்" என்றுதான் உச்சரிக்கிறோம். அவ்வாறே ஏனைய மெய்யெழுத்துகளும் ஒலிக்கப்படுகின்றன.

இந்நிலையில் மெய்யெழுத்தை ஒலிக்கும்போது முன்னால் வருகின்ற "இ" கரத்தின் மாத்திரை ஒன்றாகவும், மெய்யெழுத்தின் மாத்திரை அரையாகவும் இருப்பதால் ஒலிப்புநேரம் ஒன்றரை மாத்திரையாகி விடுகிறது.

இதன்படி, இலக்கண மாணாக்கரின் ஐயத்துக்கும் இலக்கண நூலோரின் ஒலிப்புக்கால அளவுக்குமிடையில் முரண்பாடு காணப்படுவதுபோல் தோன்றுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது வெறுந் தோற்றமேயன்றி உண்மையன்று. உயிர் எழுத்துகளும், உயிர்மெய் எழுத்துகளும் தனித்துநின்று தமது ஒலியை வெளிப்படுத்த வல்லனவாயிருக்கின்றன. ஆனால் ஆய்தஎழுத்தோ மெய்யெழுத்துகளோ அவ்வாறாகா. இவை சொற்கள் உருவாகும்போதுதான் தமது ஒலியை வெளிப்படுத்துகின்றன.

ஆய்த எழுத்தானது தனக்கு முன்னால் ஒரு குறிலையும் தனக்கடுத்து ஒரு வல்லின மெய்யையும் ஏற்றுத்தான் இயக்கம் பெறுகிறது. உதாரணமாக அஃது. இஃது. எஃகு அஃகம் என்பவற்றை நோக்கலாம். இங்கு "அ" கரம் ஒருமாத்திரை நேரத்திலும், ஃ எழுத்து அரைமாத்திரை நேரத்திலும் ஒலிக்கப் பெறுகின்றன. எனவே அகேனத்தின் உச்சரிப்பு அரைமாத்திரை என்பது உறுதியாகிறது.

அதேபோல், மெய்எழுத்துகள் எப்போதும் ஒரு சொல்லின் இடையிலோ இறுதியிலோதான் அமைகின்றன. இதனால் அருகிலுள்ள எழுத்துகளுக்கு இசைவாகவே அவை செயற்படுவதால் அரைமாத்திரை ஒலிப்பு அவற்றுக்குப் பொருந்திவருகின்றன. உதாரணமாக, அக்கம், தமிழ், அந்தம் என்பவற்றைக் கொள்ளலாம்.
எனவே, அரைமாத்திரை அளவு ஒலிப்புப் பெறும் எழுத்துகள் (ஆய்தமும் மெய்யும்) மொழிக்கு முதலெழுத்தாக வராமல் இடையிலோ கடையிலோதான் வருவதால் அவை தனித்துநின்று ஒலி தரவேண்டிய தேவை குறைவாகவே அமைகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2

## உயிர் எழுத்து

**"அ" முதல் "ஔ" வரை உயிரெழுத்துகள் பன்னிரண்டாகும்.** இவை உயிர் எழுத்துகள் என அழைக்கப்படும் காரணம் என்ன என்பதை நோக்குவோம்.

ஒரு மனிதன் தான் உள்ளிழுத்த மூச்சுக்காற்றை வாயினூடாக வெளிப்படுத்தும்போது எழுகின்ற முதல் ஓசைதான் உயிரோசை. இத்தகைய உயிரோசை வெளிவரும்போது, வாயின் வடிவத்தை மாற்றுவதன் மூலம் கிடைத்த ஓசைகளின் வடிவங்களே பன்னிரண்டாக வகுக்கப்பட்டு உயிர் எழுத்துகள் ஆயின.

இப்பன்னிரண்டு ஒலிப்பு வடிவங்களும் நாவுடனோ, பற்களுடனோ, அண்ணத்துடனோ தொடர்புபடாமல் உதடுகளின் அமைப்புவடிவத்தில் மாற்றம் ஏற்படுத்துவதாலேயே பெறப்படுகின்றன. ஒலி புறப்பட்டு வெளிவரும் வரைக்கும் எவ்விதத் தடைக்கும் உட்படுவதில்லை என்பது கவனத்துக்கு உரியது.

ஒலிப்பின் நீளங்கருதி இவ்வுயிரெழுத்துகள் இரண்டாக வகைப்படுத்தப் படுகின்றன.

**அ, இ, உ, எ, ஒ** ஆகிய ஐந்தும் குறுகிய கால அளவுக்கே ஒலிக்கப்பட வேண்டுமென்பதால் காலஅளவைக் கருத்திற்கொண்டு "குறில்" என வகைப்படுத்தப் படுகின்றன. குறில் எனில் குறுகிய ஓசையுடையது என்பது கருத்து. இவற்றைக் குற்றெழுத்துகள் எனவும் அழைப்பர். இவ்வைந்து குற்றெழுத்துகளும் ஒருமாத்திரை அளவு நேரமே ஒலிக்கப்பட வேண்டும்.

**ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ** ஆகிய ஏழு எழுத்துகளும் நெடிய ஓசையுடன் ஒலிக்கப்பட வேண்டியவை ஆகையால் நெடில் எனப் பெயர் பெறுகின்றன. இவற்றை நெட்டெழுத்துகள் எனவும் அழைப்பர். நெட்டெழுத்தின் மாத்திரை இரண்டு ஆகும். இதன்பொருள் குற்றெழுத்து ஒலிக்கப்படும் நேரத்தைப்போல் இருமடங்கு நேரம் ஒலிக்கப்பெறல் வேண்டும் என்பதேயாம்.

எனவே, உயிரெழுத்துகள் பன்னிரண்டு எனவும், அவற்றுள் அ, இ, உ, எ, ஒ ஆகிய ஐந்தும் குற்றெழுத்து எனவும் ஏனைய ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ ஆகிய ஏழும் நெட்டெழுத்து எனவும் அறியப்படுகின்றன.

மேற்சொன்ன பொருளை மனத்திருத்திப் பின்வரும் கருத்தையும் நோக்குவது இலக்கண அறிவு மேம்பட வழிவகுக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றெழுத்தின் இருமடங்கு நேரமே நெட்டெழுத்து ஓசை பெறுகிறது. "அ" வைப்போல் "ஆ" இருமடங்கும் "இ" யைப்போல் "ஈ" இருமடங்கும் "உ" வைப்போல் "ஊ" இருமடங்கும் "எ" யைப்போல் "ஏ" இருமடங்கும் "ஒ" வைப்போல் "ஓ" இருமடங்கும் ஓசை பெறுகின்றன என்பது தெளிவு.

இவ்வாறெனில் "ஐ", "ஔ" ஆகிய எழுத்துகள் எவ்வகைப் படுகின்றன என்பது நோக்கற்பாலது.

தொல்காப்பியர் "அ" "இ" இரண்டும் இணைந்தே "ஐ" உருவாகிறது என்கிறார். அதேபோல் "அ" "உ" இரண்டின் இணைவே "ஔ" என்பதும் அவர் தெளிவு.

ஆனால் நன்னூலாரோ தொல்காப்பியர் கூறுபவற்றைச் சரியென ஏற்றுக் கொள்வதோடு "அ" "ய்" இரண்டும் சேர்ந்து "ஐ" தோன்றவும் "அ" "வ்" இரண்டும் இணைந்து "ஔ" தோன்றவும் இடமுண்டு என்றும் கூறுகிறார்.

அ, இ என்பவற்றின் இணைவே ஐ என்றும். அ, உ என்பவற்றின் இணைவே ஔ என்றும் நோக்குமிடத்து, ஐகாரத்தில் அகரத்தின் ஒருமாத்திரையும், இகரத்தின் ஒருமாத்திரையும் சேர்ந்து இரண்டு மாத்திரை என்பது சரியாகிறது. அதேபோல் ஔகாரமும் அகரம் உகரம் என்பவற்றின் ஒவ்வொரு மாத்திரையைப் பெற்று இரண்டு மாத்திரையாகிறது.

எனினும், ஐகாரம் அய் என வருமிடத்தும், ஔகாரம் அவ் என வருமிடத்தும் அகரத்தின் ஒலிப்பு ஒருமாத்திரையும், ய், வ் ஆகிய மெய்களின் ஒலிப்பு அரை மாத்திரையாகவும் அமைவதால், ஐ, ஔ என்பன ஒன்றரை மாத்திரை ஒலிப்பைப் பெறுகின்றன.

உதாரணமாக, ஔவை என எழுதுவதை அவ்வை அல்லது அவ்வய் என்றும். ஐயன் என எழுதுவதை அய்யன் என்றும் எழுதுவோமானால் ஒலிப்பு நேரத்தில் வேறுபாடு தோன்றுவதைக் காணலாம். ஔ இரண்டு மாத்திரையும், வை இரண்டு மாத்திரையுமாக நான்கு மாத்திரை நேர ஒலிப்பு, அ 1, வ் ½ , வை 2 என மூன்றரை மாத்திரை நேர ஒலிப்பாகவும், அ 1. வ் ½, வ 1. ய் ½ என மூன்று மாத்திரை ஒலிப்பாகவும் மாற்றம் பெறுவதைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதேபோல், ஐயன் ஐ = 2, ய = 1, ன் = ½ என மூன்றரை மாத்திரைநேர ஒலிப்புப்பெற, அய்யன்,
(1 + ½ + 1 + ½) மூன்று மாத்திரைநேர ஒலிப்பைப் பெறுகிறது.

எனினும், வைரம், வயிரம் என எழுதப்பட்டாலும், கைலாயம் கயிலாயம் என எழுதப்பட்டாலும் ஒலிப்புநேர அளவு சரியாகவே அமைகிறது. இவ்வாறே அயிராவதம் (ஐராவதம்), வயிராக்கியம் (வைராக்கியம்), போன்ற சொற்களையும் நோக்குக.

இவற்றை மனத்திருத்தி நவீன மொழிநூலார்

அ, இ, உ, எ, ஒ ஆகிய ஐந்தும் குற்றெழுத்துகள் எனவும்,

ஆ, ஈ, ஊ, ஏ, ஓள ஆகிய ஐந்தும் நெட்டெழுத்துகள் எனவும்,

ஐ, ஔ என்பவை கூட்டெழுத்துகள் எனவும் வகைப்படுத்தத் தலைப்படுகின்றனர். (தமிழ்மொழி இலக்கண இயல்புகள். அ. சண்முகதாஸ், பதிப்பு 1977, பக்கம் 81)

எவ்வாறெனினும் ஆரம்பநிலை மாணவர்கள் உயிரெழுத்துகளில் குறில் ஐந்து எனவும், நெடில் ஏழு எனவும் கொள்வதே இலக்கணச் சிறப்பு ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3

## மெய் எழுத்துகள்.

**க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்** ஆகிய பதினெட்டும் மெய்யெழுத்துகள் எனப்படும்.

மெய் என்பது உடல். உயிர் இருந்தாலன்றி உடல் அசைவதில்லை. இதற்கேற்ப மெய்யெழுத்தும் தன்மேல் உயிரெழுத்து ஏறினாலன்றி அசைவு பெறுவதில்லை. சொற்களின் இடையிலோ கடையிலோ இவை வரும்போது, அருகிருக்கும் உயிரோசையைத் தழுவி அரைமாத்திரை நேர ஒலிப்பைப் பெறுகிறது. தனித்து இவ்வெழுத்துகள் ஓசை பெற முயலும்போது "இக்" என்றோ, "இங்" என்றோ இகர உயிரை முன்னிறுத்தியே செயற்பட வேண்டியுள்ளன.

எவ்வாறெனினும் இவற்றின் ஓசைகருதி மூன்று வகைப் படுத்தப் படுகின்றன. வல்லோசையை உடைய எழுத்துகள் வல்லினம் என்றும், மெல்லோசையை உடைய எழுத்துகள் மெல்லினம் என்றும், இடைப்பட்ட நிலைபெறுபவை இடையினம் என்றும் பெயர் பெறுகின்றன.

**க, ச, ட, த, ப, ற** எனவாறும் வல்லினம் எனவும்,

**ங, ஞ, ண, ந. ம, ன** எனவாறும் மெல்லினம் எனவும்,

**ய, ர, ல, வ, ழ, ள** எனவாறும் இடையினம் எனவும் மொழி நூலோரால் வகுக்கப்பட்டிருக்கின்றன.

அத்துடன்

**க — ங**
**ச — ஞ**
**ட — ண**
**த — ந**
**ப — ம**
**ற — ன**

என்பவை இன எழுத்துகளாகவும் அடையாளப் படுத்தப்பட்டிருக்கின்றன. அதாவது ஒவ்வொரு வல்லின மெய்யும் தனக்கு அடுத்து வருகின்ற மெல்லின மெய்க்குத் துணை நிற்கிறது எனத் துணியலாம். இடையின எழுத்துகளுக்கு இன எழுத்துகள் கிடையா என்பது கருத்திற் கொள்ளப்படவேண்டியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை இன எழுத்துகள் என ஏன் வகுக்கப்பட்டிருக்கின்றன என்பதற்கான காரணத்தை நோக்குவோம்.

உதாரணமாக, "ங்" என்ற மெய்யை எடுத்துக் கொண்டால், இதற்கு அடுத்துவரும் எழுத்து "க" கர வரிசையில் ஒன்றாக இருக்கவேண்டும். அல்லது "ங" கர வரிசை சார்ந்ததாக இருக்கவேண்டும். வேறு எழுத்துகள் வரா.

இங்ஙனம் அங்ஙனம், எங்ஙனம் ஆகிய சொற்களை நோக்கின் "ங்" எழுத்தையடுத்து "ங" என்ற எழுத்தே வருகிறது. அதேபோல் இங்கே, அங்கு, சங்கு, தங்கம், சங்கீதம், பங்கயம் ஆகிய சொற்களை நோக்கின் "ங்" மெய்யையடுத்து "க" கரம் மட்டுமே வருகிறது. எந்தத் தமிழ்ச்சொல்லை நோக்கினும் இவ்வொழுங்கு தவறுவதேயில்லை.

இதேபோல் "ஞ்" மஞ்ஞை "ஞ" கரம் வந்தது. பஞ்சு, நெஞ்சு, வெஞ்சினம், பஞ்சம், தஞ்சம் என இனவெழுத்தான "ச" கரமே வருகிறது.

"ண்" கண்ணன், கண்ணியம் "ண" கரம் அடுத்து வருகிறது. கண்டான், தொண்டு பண்டு, விண்டாள், மண்டு என இனவெழுத்தான "ட" கரமே வருகிறது.

புறநடையாக, சிறுபான்மை "ம" கரமும் வருவதுண்டு. உதாரணமாக .... பெண்மை, திண்மை.

கண்வில்லை, மண்பொம்மை, விண்கல் போன்ற சொற்கள் காணப்படுகின்றபோதிலும் அவை தனிச் சொற்களாகவன்றிப் புணர்பதங்களாக அமைகின்றன என்பது கவனிக்கத்தக்கது.

"ந்" அந்நியன், சந்நிதி "ந" கரம் அடுத்து வருகிறது. சாந்து, கந்தை, விந்தியம், சந்திரன் என இனவெழுத்தான "த" கரமே வருகிறது.

"ம்" கம்மல், பொம்மை. இம்மி, அம்மி "ம" கரம் வருகிறது. தம்பி, தும்பு, கம்பன் என்பவற்றில் "ப" கரமே வருகிறது.

"ன்" அன்னம், சின்னம், கன்னி ஆகிய சொற்களில் "ன" கரமே வருகிறது. என்றான். குன்று. பன்றி, நின்ற ஆகியவற்றில் "ற" கரமே அடுத்து வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும், நன்மை, அன்பு, நான்கு போன்ற பதங்களில் **"ப"** கரம், **"ம"** கரம், **"க"** கரம் போன்றவையும் அடுத்து வரும் என்பதையும் நினைவிருத்தல் நலம்.

எவ்வாறெனினும், இன எழுத்துகள் என நோக்குமிடத்து **ங், ஞ், ண், ந், ம், ன்** ஆகியவை ஒரு சொல்லில் வருமிடத்து, இவ்வெழுத்துகளை அடுத்துவரும் எழுத்து இவ்வெழுத்துகள் சார்ந்த உயிர்மெய்யாகவோ. இவற்றின் இனவெழுத்துகளின் உயிர்மெய் வடிவங்களாகவோ அமையும் என்பதே பெருவழக்கு.

முக்கிய குறிப்பு என்னவென்றால், **"ண" கரத்தை டண்ணகரம்** என்றும், **"ந"கரத்தைத் தந்நகரம்** என்றும், **"ன"கரத்தை றன்னகரம்** என அடையாளப்படுத்தும் வழக்கமும் இருக்கிறது.

இதனடிப்படையிற்றான் "ந்" எழுத்தை **"இந் தன் னா"** என அழைக்கிறார்கள். எவ்வாறு உச்சரிப்பினும், "ந"கர மெய்யில் "த"கர மெய் ஓசை ஒருபோதும் வரமாட்டாது. அது "ந"கர மெய்யின் அடையாளப்படுத்தல் மாத்திரமே.

இதைப் புரிந்து கொள்ளாத பலர், **காந்தன்** என்ற பெயரைச் சுருக்கி **"காந்த்"** என எழுதுவதாக எண்ணிக்கொண்டு பிள்ளைகளுக்கு **"காந்"** எனப் பெயர் சூட்டிவிடுகிறார்கள். உதாரணமாக, லட்சுமிகாந், சூரியகாந், விஜயகாந் என்றெல்லாம் தவறாகப் பெயரிட்டு விடுகிறார்கள்.
இப்பெயர்களின் இறுதிப்பகுதி கான் என "ந"கர ஓசையுடன் நிறைவு பெறுமேயன்றி "த"கர ஓசையுடனன்று என்பதை மனதிற்கொளல் நன்று.

சில மெய்யெழுத்துகள் மொழியின் இடையில் அடுத்தடுத்து வருவதுண்டு. மகிழ்ச்சி. உயிர்ப்பு, வீழ்ச்சி, மெய்ம்மை, மெய்ஞ்ஞானம், பொய்ப்பிப்பு போன்றவற்றை உதாரணமாகக் கொள்ளலாம். இச்சொற்களில் இரண்டாவதாக வருகின்ற மெய்யெழுத்தின் இன உயிர்மெய்யே மூன்றாவதாக வருவது நோக்கத்தக்கது. மகிழ்ச்சி, மெய்ம்மை, பொய்ப்பித்தல் என்பவற்றில் "ச்" ஐ அடுத்து "சி" யும், "ம்" மையடுத்து "மை"யும், "ப்" ஐ அடுத்து "பி"யும் வருவது நோக்கத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச் சொற்களில் தொடர்ந்து மூன்று மெய் எழுத்துக்கள் இருப்பதை அவதானிக்கலாம் உதாரணமாக, மகிழ்ச்சி என்ற சொல்லில் "ழ்", "ச்", "ச்", "இ" ஆகிய எழுத்துகள் வருவதன்மூலம் மூன்று மெய்யெழுத்துகள் வருகின்றன என மொழிநூலார் கூறுவதோடு, மூன்றாவது மெய் உயிர் ஏறிநிற்கும் எனவும் பகர்வர். ஆயினும் விளங்கும் ஆற்றல் கருதி இந்நூலில் இரண்டு மெய்களும், இரண்டாவதாக வரும் மெய்யையடுத்து அதன் இனமான உயிர்மெய் அமையும் எனவும் கூறப்படுகிறது.

எனினும் **பஞ்ஞ்சு, சங்ங்கு,** போன்ம் எனவும் வருவதுண்டு. இவைபற்றிய விளக்கம் பிறிதோரிடத்திற் தரப்படும்.

## உயிர்எழுத்துகளில் இனஎழுத்துகள்.

மெய் எழுத்துகளில் இனஎழுத்துகள் இருப்பதைப் போலவே உயிரெழுத்துகளிலும் இனவெழுத்துகள் உள.

**அ - ஆ, இ - ஈ, உ - ஊ, எ - ஏ, ஐ - இ, ஒ - ஓ, ஔ - உ** ஆகியவை இன எழுத்துகளாம். பொதுவாக ஒலிஇயைபுகளை ஏற்படுத்துவதன்மூலம் இன எழுத்துகள் ஒன்றுக்கொன்று உதவுகின்றன. இந்நடைமுறை பெரும்பாலும் கவிதைகளிற்றான் கைக்கொள்ளப்படுகின்றன.

உதாரணம்:

| | | |
|---|---|---|
| அன்னை ஒர் ஆலயம் | - இங்கு | அ, ஆ |
| சொற்றுணை வேதியன் சோதி வானவன் | - இங்கு | ஒ, ஓ |
| வயலும் வாழ்வும் | - இங்கு | அ, ஆ |

எனக் கவிதை நயங்களை உற்றுப்பார்ப்போருக்கு இவை புலப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4

## உயிர் மெய் எழுத்துகள்.

உயிரும் மெய்யும் இணைவதனால் உயிர்மெய் எழுத்து தோன்றுகிறது. மெய் ஒருபோதும் தனித்து இயங்காது. அதன்மேல் உயிர் ஏறினால் மட்டுமே இயக்கம்பெறும். இதனடிப்படையிலேயே உயிர்மெய் எழுத்துகள் தோற்றம் பெறுகின்றன.

"அ" என்ற உயிரெழுத்தும். "க்" என்ற மெய்யெழுத்தும் சேரமுனைந்தால் "அக்" என்ற ஓசைதான் பிறக்கிறது. இங்கே உயிரெழுத்து அசையாதிருக்க மெய்யெழுத்து வந்து இணைய முயல்கிறது. ஆயினும் அவை தத்தமது ஓசையை இழக்காமல் வெவ்வேறாகவே ஓசைதர முயல்வதால் "அக்" என்று ஒலிக்க வேண்டியதாகின்றது.

ஆனால், "க்" என்ற மெய் அசையாதிருக்க, அதனுடன் "அ" என்ற உயிர்வந்து இணையும்போது க் + அ.. க என்ற ஓசை கிடைக்கிறது. எப்போதும் உடலானது உயிர் வந்து தங்கிச் செல்லும் ஊடகமாகவே உலகில் அமைந்திருக்கிறது என்ற உண்மையின் அடிப்படையிற்றான் இந்த இணைப்பும் இடம்பெறுகிறது என்பதைக் கருத்திற் கொள்க.

| | | | |
|---|---|---|---|
| இதன்படி | க் + அ | = | க |
| | க் + ஆ | = | கா |
| | க் + இ | = | கி |
| | க் + ஈ | = | கீ |
| | க் + உ | = | கு |
| | க் + ஊ | = | கூ |
| | க் + எ | = | கெ |
| | க் + ஏ | = | கே |
| | க் + ஐ | = | கை |
| | க் + ஒ | = | கொ |
| | க் + ஓ | = | கோ |
| | க் + ஔ | = | கௌ |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகிய பன்னிரண்டு உயிர்மெய் தோன்றுமாப்போல் பதினெட்டு மெய்யெழுத்துகளுடனும் பன்னிரண்டு உயிர்எழுத்துகள் இணைவதனால்
18 x 12 = 216 மெய்யெழுத்துகள் உருவாகின்றன.

தமிழை எழுதும்போது எழுதுமுறையை இலகுபடுத்துவதற்காக உயிர்மெய் எழுத்துகள் தோற்றம் பெற்றன எனக் கொள்வதிற் தவறில்லை. உதாரணமாக, அம்மா என எழுதும்போது மேல்வாரியாக அ, ம், மா ஆகிய மூன்றெழுத்துகள் அடங்குவதுபோற் தோற்றமளித்தாலும், உண்மையில் அ ம் ம் ஆ என்ற எழுத்துகளே அடங்கியுள்ளன என்பதை மறவற்க. இவ்வாறே கணபதி என்ற நான்கெழுத்து மொழியில் க் + அ, ண் + அ, ப் + அ, த் + இ என எட்டெழுத்துகள் இருப்பதை நோக்குக.

உயிர்மெய் எழுத்துத் தோன்றும்போது அதன் ஒலிப்புக்கால எல்லையில் மெய்யெழுத்தின் மாத்திரை கணக்கிற் கொள்ளப்படுவதில்லை. மாறாக அம்மெய்மேல் ஏறும் உயிரின் மாத்திரையே கருத்திற் கொள்ளப்படுகிறது. இஃது உடல் இயக்கமற்ற ஓருடகம் மட்டுமே என்ற அடிப்படையில் எழுந்ததாக இருக்கலாம்.

இதன்படி, க, கி, கு, கெ, கொ ஆகிய ஐந்து உயிர்மெய்களும் அவ்வவற்றின் உயிர்ஓசையின் இயல்புக்கேற்ப ஒருமாத்திரை நேர அளவுக்கே ஒலிப்புப் பெறுகின்றன. இதேபோல் கா, கீ, கூ, கே, கை, கோ, கௌ ஆகிய ஏழு உயிர்மெய்களும் இரண்டு மாத்திரை அளவு ஒலிப்பைப் பெறுகின்றன. எல்லா உயிர்மெய்களுக்கும் இவ்விதி பொருந்தும். ஆகவே, உயிர்மெய்க் குறில்கள் ஒருமாத்திரை அளவு ஓசையையும் உயிர்மெய் நெடில்கள் இரண்டு மாத்திரை அளவு ஓசையையும் பெறுகின்றன என்பது முடிபு.

## ஆய்த எழுத்து

இஃது மூன்று புள்ளி வடிவிலான தனி எழுத்தாகும். இதன் மாத்திரை அரை. இவ்வெழுத்தின் பயன்பாடு கருதி, ஆய்தம் என்ற பெயர் சூட்டப்பட்டிருக்கலாமோ எனத் தோன்றுகிறது. ஆய்த எழுத்தானது குற்றெழுத்துக்கும் வல்லின உயிர்மெய்க்கும் இடையிற்றான் வரும் என்பதை நினைவிற் கொள்ளல் நன்று. உதாரணமாக, **அஃது. இஃது. எஃகு, பஃறுளியாறு** ஆகிய சொற்களை நோக்கலாம். வல்லெழுத்தின் வலிய ஓசையை சற்றே மென்மைப்படுத்தும் தன்மை **ஃ இல்** காணப்படுவதை உச்சரிக்கும்போது தெரிந்துகொள்ள முடிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில எழுத்துகள் தங்கள் சிறப்பான பணிகருதி சிறப்புப் பெயர்கள் பெறுகின்றன. சுட்டெழுத்து, வினாவெழுத்து, போலியெழுத்து என்பவற்றை இவ்வாறு அடையாளப்படுத்தலாம். அவற்றை விரிவாகப் பார்ப்போம்.

## சுட்டெழுத்து.

ஒரு பொருளை அல்லது இடத்தைச் சுட்டுவதற்காகப் பயன்படுத்தப்படுகின்ற எழுத்துகள் சுட்டுகின்ற எழுத்துகள் ஆகின்றன. மொழிநூலார் இதனைச் சுட்டெழுத்து என்பர்.

தமிழில் **அ, இ, உ** ஆகிய மூன்று உயிர்எழுத்துகளும் சுட்டெழுத்துகள் எனப்படுகின்றன. இச் சுட்டெழுத்துகளின் உதவியின்றி தமிழ்மொழியில் எதனையும் சுட்டிக்காட்டிவிட முடியாது என்பதை நினைவிற் கொள்ள வேண்டும். சுட்டுப்பொருளில் இவ்வெழுத்துகள் பயன்படுகின்ற தன்மையைக் கருதி அகச்சுட்டு, புறச்சுட்டு என இருவகைப்படுகின்றன.

## அகச்சுட்டு

**அ, இ, உ** ஆகிய மூன்று எழுத்துகளில் எவையேனும் ஒருமொழிக்குள்ளேயே இரண்டறக் கலந்து தனது பணியைச் செய்யுமாயின் அஃது அகச்சுட்டு எனப்படும். இச்சொல்லிலிருந்து சுட்டெழுத்தைப் பிரித்துவிட்டால் சொல் சிதைவடைந்து பொருளற்றுப் போய்விடும்.

அது, இது, உது, அவை, இவை, உவை, அவன், இவன், உவன், அவள், இவள், உவள் அங்கே, இங்கே, உங்கே என்பவற்றில் வருகின்ற அ, இ, உ ஆகிய சுட்டெழுத்துகள் அகச்சுட்டு வகைக்குள் அடங்குகின்றன. இச் சொற்களிலிருந்து அ, இ, உ என்பவற்றை நீக்கிவிட்டால் சொற்கள் பொருளிழந்து போவதைக் காணலாம்.

## புறச்சுட்டு

சுட்டெழுத்துகள் சொல்லின் வெளியேநின்று தமது பணியைச் செய்யும்போது அவை புறச்சுட்டுகள் என அழைக்கப்படுகின்றன. புறச்சுட்டுகளைச் சொற்களிலிருந்து பிரித்துவிட நேர்ந்தாலும் அச்சொற்கள் தமது தன்மையை இழப்பதில்லை. மாறாகச் சுட்டுந்தன்மையை மாத்திரமே இழக்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அந்தமாடு, இந்தமனிதன், உந்தப்பெண், அப்பையன், இச்சட்டி, உவ்வாடு** போன்ற சொற்களிலிருந்து புறச்சுட்டுகளைப் பிரித்தால் **அவை மாடு, மனிதன், பெண். பையன், சட்டி, ஆடு** எனத் தம்நிலை இழக்காமற் பொருள் தருவதைக் காணலாம்.

தற்காலத்தில் உகரச்சுட்டின் பயன்பாடு குறைந்து வருகிறது. **இப்பொருளுக்கும் அப்பொருளுக்கும் இடையில் அமையும் பொருளைச் சுட்டவே உகரம் பயன்படுகிறது.** அவ்வாறு சுட்டுமிடத்து அஃது உப்பொருள் எனவமையும். வடமாகாண மக்களிடையே உகரச் சுட்டுச் சொற்களான உவன், உவள், உது, உங்கே என்பன இன்றும் பெருவழக்கிலே உள்ளன. தமிழுக்குச் சிறப்பைத்தரும் உகரச்சுட்டைப் பயன்படுத்துதல் நலந்தரும் விடயமாகும்.

## வினாவெழுத்து.

ஒரு வினாவை உருவாக்குவதற்குப் பயன்படும் எழுத்துகள் வினாவெழுத்துகள் எனப்படுகின்றன. இவற்றுள் சிலஎழுத்துகள் ஒரு சொல்லை உருவாக்கி வினாவைத் தருகின்றன. சிலஎழுத்துகள் தமது அசையால் (ஓசைப்பலத்தால்) வினாவைத் தருகின்றன. வினாவுக்கான சொல்லை உருவாக்கும்போது அவை சொல்லின் முதலிலும், அசையை ஏற்படுத்தி வினாவை உருவாக்கும்போது அவை சொல்லினிறுதியிலும் வருகின்றன என்பதைக் கருத்திற்கொளல் நலம்.

**எ, யா, ஆ, ஓ, ஏ ஆகிய ஐந்தெழுத்துகளும்** வினாவெழுத்துகள் ஆகின்றன. இவற்றுள் எ, யா ஆகிய எழுத்துகள் இரண்டும் எப்போதும் மொழியின் தொடக்கத்திலேயே வருமியல்புடையன.

உதாரணம்: எந்த மனிதன்? எது சிறந்தது? எங்கு கூடினர்? எவரிடம் கூறினாய்? யார் வந்தனன்? யாவர் சிரித்தனர்? யாது மொழிந்தனை? யாரிடம் உரைப்பாய்?

**ஆ, ஓ** ஆகிய எழுத்துகள் இரண்டும் மொழியின் இறுதியில் வந்தே வினாவைத் தோற்றுவிக்கின்றன.

உதாரணம்: வந்து விட்டாயா? ( விட்டாய் + ஆ )

சென்றனையோ ( சென்றனை + ஓ )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனா இவனா? (அவன் + ஆ, இவன் + ஆ)

அதுவோ இதுவோ? (அது + ஓ, இது + ஓ)

**ஏ** எனுமெழுத்து சொல்லின் முதற்பகுதியிலோ கடைப்பகுதியிலோ வந்து வினாவைத் தோற்றுவிக்கும்.

உதாரணம் : ஏது? ஏன்? (மொழிக்கு முதலில் வருகிறது.)
வந்தாளே ? ... அவனே? (மொழிக்கு இறுதியில் வருகிறது.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5

## போலி எழுத்துகள்.

சில சமயங்களில் ஓரெழுத்துக்குப் பதிலாக வேறோர் எழுத்தைப் பயன்படுத்தும்போது அது போலி எழுத்து எனப்படுகிறது. போலிஎழுத்தும் இலக்கண வலுவுடையது என்பதால் இலக்கண நூலார் அதனை "வழு" எனப் புறந்தள்ளுவதில்லை. எனினும் போலி எழுத்துகள் வலிந்து புகுத்தப்படாதிருப்பது மொழிக்கு அழகு தருமென்பதை நினைவிற் கொளல் நலம்.

போலி எழுத்துகள் சொல்லின் **முதலில்** இடம்பெறும்போது அது முதற்போலி எனவும், இடையில் இடம்பெறுகையில் **இடைப்போலி** எனவும், சொல்லினிறுதியில் வரும்போது **கடைப்போலி** எனவும் வழங்கப்படுகின்றன.

### 1. முதற்போலி

| | | | | |
|---|---|---|---|---|
| ஔவை | அவ்வை | **ஔ** | **அவ்** | போலி |
| பௌத்தம் | பவுத்தம் | **பௌ** | **பவு** | போலி |
| நண்டு | ஞண்டு | **ந** | **ஞ** | போலி |
| மயல் | மையல் | **ம** | **மை** | போலி |
| மையம் | மய்யம் | **மை** | **மய்** | போலி |
| ஐயர் | அய்யர் | **ஐ** | **அய்** | போலி |
| நாயிறு | ஞாயிறு | **நா** | **ஞா** | போலி |
| பையன்கள் | பசங்கள் | **பை** | **ப** | போலி |
| யாமம் | சாமம் | **யா** | **சா** | போலி |

### 2. இடைப்போலி

| | | | | |
|---|---|---|---|---|
| அரசன் | அரைசன் | **ர** | **ரை** | போலி |
| ஈயல் | ஈசல் | **ய** | **ச** | போலி |
| நிலயம் | நிலையம் | **ல** | **லை** | போலி |
| வலயம் | வலையம் | **ல** | **லை** | போலி |
| கலயம் | கலையம் | **ல** | **லை** | போலி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3. கடைப்போலி

| | | | | |
|---|---|---|---|---|
| அறம் | அறன் | ம் | ன் | போலி |
| பந்தல் | பந்தர் | ல் | ர் | போலி |
| கலம் | கலன் | ம் | ன் | போலி |
| குடல் | குடர் | ல் | ர் | போலி |
| மதில் | மதிள் | ல் | ள் | போலி |
| செதில் | செதிள் | ல் | ள் | போலி |
| அரும்பு | அரும்பர் | பு | அர் | போலி |
| இன்பம் | இன்பு | பம் | பு | போலி. |
| இயை | இசை | யை | சை | போலி |
| பிசை | பியை | சை | யை | போலி |

**ச, ஞ, ய** ஆகிய எழுத்துகளின் முன்னே இடம்பெறும் **"அ"கரம் "ஐ"காரமாகவும், ஐகாரம் "அ" கரமாகவும்** பெரும்பாலும் மாற்றமுறுகின்றன என்பது இலக்கணநூலார் கருத்து. போலி எழுத்து தோன்றுவதால் சொற்களின் இலக்கணப் பெறுமதியில் எந்த ஏற்றத்தாழ்வும் உருவாவதில்லை.

### மொழிக்கு முதலாக வரும் எழுத்துகள்.

தமிழில் எல்லா எழுத்துகளும் சொல்லின் முதலெழுத்தாக இடம் பெறுவதில்லை. இலக்கணநூலிற் குறிக்கப்பட்ட எழுத்துகளைத் தவிர வேறு எழுத்துகள் சொல்லின் முதலெழுத்தாக இடம்பெறுமாயின் நிச்சயமாக அது தமிழ்மொழிச் சொல்லன்று என உறுதியாகத் தெரிந்து கொள்ளலாம். எவ்வெவ் வெழுத்துகள் சொற்களுக்கு முதலெழுத்தாக வருகின்றன எனப் பார்ப்போம்.

**பன்னிரண்டு உயிர்எழுத்துகளும் மொழிக்கு முதலில் வருமியல்பின.** அம்மா, ஆசை, இயல்பு, ஈச்சை, உறவு, ஊர்வன, எழுச்சி, ஏற்றம், ஐந்து, ஒற்றுமை, ஓசை, ஔவியம் என அறியலாம்.

**ஆய்த எழுத்தோ மெய் எழுத்தோ மொழிக்கு முதலெழுத்தாக ஒருபோதும் வரமாட்டா.**

உயிர்மெய் எழுத்துகளில் **க, ச, த, ந, ப, ம, வ, ய, ஞ, ங** ஆகியவையும் உயிரேறிய அவற்றின் ஏனைத் தொடர்களும் மொழிக்கு முதலில் வருமியல்பின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றுள் **க, ச, த, ந, ப. ம** எனவாறும் **பன்னிரண்டு உயிர்களேறி** மொழிக்கு முதலாக நிற்கத்தக்கவை.

கலை, காகம், கிளி, கீற்று, குயில், கூட்டம், கெடு, கேள்வி, கைகலை, கொள்கை, கோயில், கௌரவம்.

சட்டி, சாரல், சிலை, சீற்றம், சுவை, சூடு, செல்வம், சேதம், சைகை, சொல், சோர்வு, சௌமியம்

தம்பி, தாரை, திக்கு, தீமை, துவை, தூக்கு, தெரு, தேடல், தையல், தொடு, தோழமை, தௌவல் (அழிவு)

நன்று, நாடு, நிலை, நீளம், நுரை, நூறு, நெகிழ்ச்சி, நேர்மை, நையாண்டி, நொச்சி, நோற்றல், நௌவி (மான்)

படை, பாடல், பிசை, பீடை, புசி, பூண்டு, பெருமை, பேறு, பையன், பொறுமை, போற்று, பௌத்தம்.

மரை, மாண்பு, மிடறு, மீசை, முதல், மூப்பு, மென்மை, மேன்மை, மையல், மொழி, மோப்பம், மௌனம்.

என்பவை இவற்றுக்கு எடுத்துக்காட்டுகளாம்.

மெய்யில் ஔகாரம் ஏறிய உயிர்மெய் எழுத்தை முதலாகக் கொண்ட சொற்கள் அதாவது கௌ, சௌ, தௌ, நௌ, பௌ, மௌ. வௌ, யௌ ஆகிய எழுத்துகளிற் தொடங்கும் பதங்களிற் பல தற்காலத்தில் வழக்கிழந்து வருகின்றன என்பதையும் ஔகாரம் ஏறிய ஏனைய உயிர்மெய் எழுத்துகள் மொழிக்கு முதலில் வரா என்பதையும் கருத்திற் கொள்க.

**“வ”கரம் அ, ஆ, இ, ஈ, எ, ஏ, ஐ, ஔ ஆகிய எட்டு** உயிர்களேறுவதாற் தோன்றும் உயிர்மெய்களை சொற்களின் முதலாகக் கொள்ளுமியல்புடையது.

வலிமை, வாட்டம், விடுதலை, வீடு, வெற்றி, வேட்டை, வையகம், வௌவால் என்பவற்றை உதாரணமாகக் கொள்ளலாம்.

**“ய”கரம் அ, ஆ, உ, ஊ, ஓ, ஔ ஆகிய ஆறு** உயிர்கள் ஏறுவதால் மொழிக்கு முதலில் வருமியல்பைப் பெறுகின்றது.

உதாரணம் : யவனம், யானை, யுகம், யூகம், யோகம், யௌவனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"ஞ"கரம் அ, ஆ, எ, ஒ ஆகிய நான்கு** உயிர்களுடன் **இணைந்து** மொழிக்கு முதலாகி நிற்கின்றது.

அவையாவன : ஞமலி (நாய்), ஞானம், ஞெகிழி (சிலம்பு), ஞொள்கல் (மெலிதல்).

**"ங"கரம் "ஙனம்" என்ற ஒரு பதத்துக்கு** மாத்திரம் முதலெழுத்தாக அமைகிறது. "ங்" "ங" ஆகிய இரண்டெழுத்துகள் மட்டுமே பயன்பாட்டில் இருக்கின்றபோதிலும் தமிழ் நெடுங்கணக்கில் ஏனைய எழுத்துகள் போன்று அனைத்து வரிவடிவங்களையும் அது பெற்றிருக்கிறது. இதனாற்றான் ""ங"ப்போல் வளை." என்று சொல்லப்பட்டிருக்கலாமோ என எண்ணத்தோன்றுகிறது.

எவ்வாறெனினும், **இன்றைய வழக்கில் "ங"கரம் முதலெழுத்தாக வருவதில்லை**. மாறாக எங்ஙனம், யாங்ஙனம் என வினா எழுத்துகளையோ, இங்ஙனம் அங்ஙனம் உங்ஙனம் எனச் சுட்டெழுத்துகளையோ முன்னிறுத்தித்தான் சொல்வடிவம் பெறுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

ஆறுமுகநாவலர் அவர்கள் தமது இலக்கணச் சுருக்கத்தில் "ங"கரத்தைச் சொல்லின் முதலெழுத்தாகக் குறிப்பிடவில்லை என்பதையும் கருத்திற் கொள்வது நலம்.

## ர"கர, "ல"கர எழுத்துகள்.

தற்காலத் தமிழில் "ர"கர, "ல"கர, வரிசை மெய்யெழுத்துகளும் மொழிக்கு முதலெழுத்தாக வரும் வழக்கம் பரவலாகி வருகின்றது.. இவை இலக்கண அறிஞர்களால் இன்றுவரை இலக்கணச் செம்மையெனக் கொள்ளப்படாத போதிலும், தவிர்க்கவியலா வகையில் அவை மொழியில் இடம்பெறுகின்றன. எனவே அவற்றையும் அறிந்து கொள்வது மொழியறிவுக்கு ஏற்றதெனலாம்.

**"ர"கரம்** முதலெழுத்தாக எழுதப்படுகின்ற சொற்களுட் சில.

ரகசியம், ராகம், ரிஷி, ரீங்காரம், ருசி, ரூபம், ரெட்டை, ரேகை, ரொக்கம், ரோகம், ரௌத்திரம்.

ஆயினும் முறையே, இரகசியம், இராகம், உருசி, உருவம் அல்லது அரூபம், இரட்டை, இரேகை, உரொக்கம், உரோகம், உருத்திரம் என எழுதுவதன்மூலம் இவற்றைத் தமிழ் இலக்கணத்துள் அடக்கிவிடலாம் என்பதை மறவற்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"ல"கரம்** முதலெழுத்தாக எழுதப்படுகின்ற சொற்களுட் சில:

லட்சம். லாவண்யம். லிங்கம், லீலை, லேகியம், லோகம், லௌகிகம்.

இவற்றை, இலட்சம், இலாவணியம், இலிங்கம், இலீலை, இலேகியம், உலோகம், இலௌகிகம் என எழுதின் தமிழ்இலக்கண நெறிக்கு ஏற்புடைத்தாகும்.

"ர"கர, "ல"கர, வரிசையில் தொடங்கும் சொற்கள் தமிழ்ச் சொற்களாக அமைவதில்லை. எனவே அ, இ, உ ஆகிய எழுத்துகளுட் பொருத்தமான எழுத்தை முதலெழுத்தாகக் கொள்வதன்மூலம் அவை தமிழிலக்கணப் பெறுமதி பெறுகின்றன எனலாம். இது "ட"கர வரிசைக்கும் பொருந்தும்.

## மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துகள்.

**"எ"கரம் தவிர்ந்த உயிரெழுத்து ஓசை பதினொன்றும், ஞ், ண், ந், ம், ன், ய், ர், ல், வ், ழ் ள் ஆகிய பதினொரு மெய்யெழுத்துகளும் சொற்களின் இறுதியில் இடம்பெற வல்லன என்பர் அறிஞர்.**
இதிலிருந்து வல்லெழுத்து மெய்களான க், ச், ட், த், ப், ற் ஆகிய ஆறுமெய்களும் "ங்" எனும் மெல்லின மெய்யும் மொழியின் இறுதி எழுத்துகளாக வரா என்பது தெளிவு.

"எ"கரம் தவிர்ந்த உயிர் எழுத்தொலி பதினொன்று சொற்களினிறுதியில் வருவதைப் பார்ப்போம்.

பல(அ), கடா(ஆ), விழி(இ), தீ(ஈ), படகு(உ), பூ(ஊ), எங்கே(ஏ), ஓசை(ஐ), நொ-துன்பம்(ஒ), போ(ஓ), கௌ-பற்றிப்பிடி(ஔ).

## பதினொரு மெய்களும் மொழியிறுதியாகும் வகை.

உரிஞ், கண், வெரிந்(முதுகு), மனம், பொன், மெய், பார், வேல், தெவ்(பகை), பாழ், கோள்.

எனினும் இக்காலத்தில் **"ஞ்", "ந்", "வ்"** ஆகிய மெய்களை இறுதியெழுத்தாகக் கொண்ட சொற்கள் பயன்பாட்டில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6

## அளபெடை

எழுத்துகள் தமக்கெனக் குறிக்கப்பட்ட மாத்திரை அளவுகளைவிட மிகுந்து ஒலிக்கின்ற சந்தர்ப்பங்களும் வருவதுண்டு. அவ்வாறு வருவதை அளபெடை என்கிறோம். ஒலிக்கும் அளபு ஓரெழுத்தின் மாத்திரை அளவைவிடக் கூடுதலான நேரத்துக்கு நீட்டிக்கப்படுவதே அளபெடை என விளங்கிக் கொள்வது பயன்தர வல்லது.

அளபெடையை நடைமுறையில் விளங்கிக் கொள்வதானால் தமது பொருட்களைக் கூவி விற்பவரை நினைவிற் கொள்ளவேண்டும். மீன் விற்பவர் மீஇ..ன் எனவும் மரக்கறி விற்பவர் மரக்கறீஇ□ எனவும் கேட்போர் கவனத்தைக் கவரும்வகையில் குரல்கொடுப்பதும், மரவள்ளிக் கிழங்கு விற்பவர் மரவள்ளிக் கிழாங்ங்கு எனவும் பஞ்சு விற்பவர் பஞ்ஞ்சு எனவும் அழுத்திக் குரல்தருவதும் அளபெடையைச் சார்ந்தவையே.

ஒருபாடலை இசைக்கும்போதும், ஒருவரை அழைக்கும்போதும், பண்டங்களைக் கூவி விற்கும்போதும், பிறரிடம் முறையீடு செய்யும்போதும், துக்கத்திற் புலம்பும்போதும் எழுத்தொலிகள் தத்தம் மாத்திரையைவிட அதிகமான நேரம் ஒலிப்புப் பெறுகின்றமையை நாம் உணரலாம். இயல்பான இந்த நடைமுறைகளையே அளபெடைகள் என அறிஞர் பகர்வர்.

அளபெடை **உயிரளபெடை, ஒற்றளபெடை** என இரு இருபெரும் வகுதிக்குள் அடங்கிவிடுகின்றது எனலாம்.

### உயிரளபெடை (இலகு விளக்கம்)

ஒரு நெட்டெழுத்து தான் அளபெடுக்கின்ற தேவை வரும்போது தனது உயிர்ஓசைசார்ந்த உயிர்க்குறிலைத் துணையாகக் கொள்வது உயிரளபெடை எனப்படுகிறது.
இங்கே மீன்விற்பவர் மீ என்ற நெட்டெழுத்தில் வரும் ஈ என்ற உயிரோசையை நீட்டிக்கொள்ள வேண்டி அவ்வோசைக்குரிய இனமான "இ" என்ற ஒலியைத் துணைக்கழைத்திருக்கிறார். அப்படிச் செய்வது அவருக்கு உரத்து ஒலியெழுப்புதற்கு இசைவாகவும், கொள்வனவு செய்பவர்களை ஈர்ப்பதற்கு வசதியாகவும் அமைந்திருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதேபோல் மரக்கறி விற்பவரும் மரக்கறி என்ற சொல்லினிறுதியில் வருகின்ற "றி" என்ற எழுத்தினோசையை "றீ" என "ஈ"காரமாக்கி அதற்கினமான "இ"கரத்தை இணைத்துக் கூவியுள்ளார். இதுவும் உயிரளபெடையைச் சார்ந்ததுதான்.

உயிர் அளபெடையின்போது "ஆ"வுக்கு "அ"வும். "ஈ"காரத்துக்கு "இ"கரமும், "ஊ"காரத்தக்கு "உ"கரமும், "ஏ"காரத்துக்கு "எ"கரமும். "ஓ"காரத்துக்கு "ஒ"கரமும், "ஐ"காரத்துக்கு "இ"கரமும், "ஔ"காரத்துக்கு உ"கரமும் உடனின்று துணைசெய்கின்றன. இவை இனஎழுத்துகள் என முன்னரே குறிப்பிடப்பட்டிருப்பதும் கவனத்துக்குரியது.

உயிளைபெடையானது மொழிக்கு முதலிலேனும், இடையிலேனும், கடைசியிலேனும் வரக்கூடியது. நெட்டெழுத்தை அடுத்து அதன் இன உயிர்க்குறில் வந்து அளபெடுப்பதுபோல், குறில் நெடிலாகி அதனையடுத்து தன்னினக் குறிலையேற்று அளபெடுப்பதுமுண்டு. வரும் எனுஞ்சொல் வரூஉம் என அமைவது இதற்கான உதாரணமாகும். அதேபோல் தழீஇ, குரீஇ என்பவற்றையுங் காணலாம்.

ஊஉமை (ஊமை), வரூஉம் (வரும்), தழீஇ (தழுவி) என்பவற்றை முறையே மொழிக்கு முதலிலும், இடையிலும், கடையிலும் வரும் அளபெடைகள் எனத் தெரிந்து கொள்ளலாம்.

உயிரளபெடை, **செய்யுளிசை அளபெடை, இன்னிசை அளபெடை, சொல்லிசை அளபெடை** என மூவகைப்படும். செய்யுளிசை அளபெடையை **இசைநிறை அளபெடை** எனவும் அறிஞர் அழைப்பர்.

**செய்யுளிசை அளபெடை அல்லது இசைநிறை அளபெடை**

செய்யுள் ஒன்றின் இசையை நிறைப்பதனால் இது இசைநிறை அளபெடை எனவும் அழைக்கப்படுகிறது. செய்யுளில் ஓசை குறையுமிடத்து அதை நிறைவிக்கவேண்டிப் பொருத்தமான நெட்டெழுத்து தன் மாத்திரையைவிட நீண்டொலிக்குமாயின் அது செய்யுளிசைஅளபெடை அல்லது இசைநிறைஅளபெடை எனப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக்காட்டாக,

"உறாஅர்க்கு உறுநோய் உரைப்பாய் கடலைச்
செறாஅஅய் வாழிய நெஞ்சு." (திருக்குறள் 1200)

"கெடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை
விடாஅர் விழையும் உலகு." (திருக்குறள் 809)

என்பவற்றைக் கொள்ளலாம். இங்கே, வெண்பாவில் முதற்சீர் ஓரசைச்சீராக வருதல் ஏற்புடையதாகாது என்பதால், அச்சீர் ஈரசையாகும் பொருட்டு நெடில் அளபெடுத்தலைக் காணலாம்.

## இன்னிசை அளபெடை

செய்யுளில் ஓசை குறையாவிடத்தும் இசைகருதி நெடில் அளபெடுக் குமாயின் அது **இன்னிசையளபெடை** எனப்படும்.

"கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே

எடுப்பதூஉம் எல்லாம் மழை." (திருக்குறள் 15)

இக்குறளில் ஓசைக்குறைபாடு எதுவும் நேராவிடினும் இனிய இசை கருதிக் கெடுப்பதும், எடுப்பதும் எனவருஞ் சொற்கள் எடுப்பதூஉம் எனவும் கெடுப்பதூஉம் எனவும் இன்னிசைக்காக அளபெடுத்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சொல்லிசை அளபெடை

செய்யுளொன்றில், தொழிற்பெயர் வினையெச்சமாகிச் செயற்படநேரின், அத்தொழிற்பெயர் அளபெடுப்பது சொல்லிசை அளபெடை எனப்படுகிறது.

" குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு" (திருக்குறள் 544)

" உரனசைஇ உள்ளம் துணையாகச் சென்றார்
வரனசைஇ இன்னும் உளேன்" (திருக்குறள் 1263)

மேலேகாட்டப்பட்ட குறள்களில் தழி, நசை என்பவை பெயர்ச்சொற்கள். அணைப்பு, விருப்பம் என்ற கருத்துகளை அவை குறித்து நிற்கின்றனவெனினும் வினையெச்சமாக மாறவேண்டி அளபெடுத்தன.

## உயிரளபெடைகளின் வகையை இலகுவாக அறியும் முறை

### செய்யுளிசை அளபெடை

"இ" தவிர்ந்த ஏனைய உயிரெழுத்து வரும்.

ஈரசைச் சீராக இருக்கும்

(எடுத்துக்காட்டு) அஓஉம், தொழாஅள், சேஎய், போஒய்.

### இன்னிசை அளபெடை.

"உ" என அமையும். மூவசைச் சீராக இருக்கும்.

(எ--கா) கொடுப்பதூஉம், எடுப்பதூஉம்.

### சொல்லிசை அளபெடை

"இ" எழுத்தில் முடியும். "இ" யை நீக்கிவிட்டால் சொல் ஓரசைச்சீராக இருக்கும்.

(எ---கா) தழீஇ, நசைஇ, கெழீஇ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒற்றளபெடை.

செய்யுளில் ஓசை குறையுமிடத்து மெய் எழுத்துகளும் அளபெடுக்கின்றன. இதனை ஒற்று அளபு எடுத்தல் எனும்பொருளில் ஒற்றளபெடை என்பர் இலக்கணநூலார்.

**ங், ஞ், ண், ந், ம், ன், வ், ய், ல், ள் ஆகிய பத்து மெய்யெழுத்துகளும் ஆய்தஎழுத்தும்** இரட்டித்து வருவதன்மூலம் அளபெடுக்கின்றன. வல்லினமான க், ச், ட், த், ப், ற், ஆகிய ஆறுமெய்களும், இடையினத்தைச் சார்ந்த ர், ழ் மெய்களும் அளபெடுக்கமாட்டா.

சங்ங்கு, பஞ்ஞ்சு, கண்ண்டம் பந்ந்து எஃஃகு என எடுத்துக்காட்டுகளை விரிவுபடுத்தலாம்.

கிழங்ங்கு என்றும் பஞ்ஞ்சு என்றும் கூவி விற்பதை நடைமுறை உதாரணமாகக் கொள்ளலாம்.

அளபெடைகள் பற்றி நினைவிற் கொள்ளவேண்டியவை:

அளபெடைகள் பெரும்பாலும் செய்யுள் வடிவங்களிலேயே பயன்படுத்தப்படுகின்றன.

உரைநடை வடிவத்தில் அவை பயன்படுவதற்கான வாய்ப்புகள் இல்லை என்றே கூறலாம்.

திரையிசைப் பாடல்கள், நாட்டார் பாடல்களுட்பட இசையோடு பாடப்படும் பாடல்களில் அளபெடைகளை உய்த்துணரலாம்.

பேச்சுவழக்கில், புலம்பல், முறையீடு, கூவுதல், விளித்தல், மகிழ்தல் ஆகிய சந்தர்ப்பங்களில் அளபெடைகள் தோற்றம் பெறுவதை நடைமுறையிற் காணலாம்.

உயிரளபெடை, மொழிக்கு முதலிலோ, இடையிலோ, கடையிலோ வருமியல்புடையது. ஆனால் ஒற்றளபெடை மொழிக்கு இடையில் மட்டுமே வருமியல்புடையது.

உயிரளபெடையின் மாத்திரை: நெட்டெழுத்து மாத்திரை 2, அதனோடிணைந்து வரும் குற்றெழுத்தின் மாத்திரை 1 என மூன்றாகும்.

ஒற்றளபெடையின் மாத்திரை: மெய்யெழுத்துகள் இரண்டினதும் அரை, அரை மாத்திரை சேர்ந்து **ஒன்றாகும்**.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7

## எழுத்துகளின் ஒலிஅளவு குறைதல்

எழுத்துகள் தமக்குரிய மாத்திரையின் அளவைவிட நீண்டொலிப்பதுபோல் சில எழுத்துகள் தமக்குரிய மாத்திரையைவிடக் குறைவாக ஒலிப்பதுமுண்டு. இவ்வொலிப்புக் குறைவுகள் சாதாரணமான பேச்சுவழக்கில் இருப்பதை உன்னிப்பாக நோக்கினாற் புரிந்து கொள்ளலாம். அப்பேச்சுவழக்கின் அடிப்படையை இலக்கண ஆசிரியர்கள் துல்லியமாகக் கணித்து இலக்கணம் செய்திருக்கிறார்கள்.

பொதுவாகத் தமிழர்கள் பேசும்போது தாய்மொழியின் எழுத்தொலிகளை எல்லாவிடத்தும் அச்சொட்டாகப் பேணுவதில்லை. சொற்களில் அமைகின்ற எழுத்துகள் சிலவற்றை வழக்கமான ஒலியளவைவிடக் குறைத்தே ஒலிக்கிறார்கள். அவ்வாறு ஒலிக்காமல் முழுமையாக எழுத்தொலிகளை உச்சரித்தால் பிறமொழியாளர்கள் தமிழ் பேசுவதுபோன்ற உணர்வே கேட்போருக்குத் தோன்றும்.

இவ்வொலிக் குறைப்புகள் மொழிக்கு இயல்பானவை, அழகு சேர்ப்பவை, மொழி இலக்கணத்தின் பாற்பட்டவை. அவை இலக்கணநூலில் **குற்றியல்உகரம், குற்றியல்இகரம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம்** என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

### குற்றியலுகரம்.

குற்றியலுகரம் என்பதன் பொருள் உகரவோசை கொண்ட எழுத்து தனக்கியல்பான ஒலிநேரத்தைவிடக் குறைவான நேரத்தில் ஒலிக்கப்படுகிறது என்பதாகும்.
அதாவது குறைந்த ஓசையையுடைய உகரம் எனக்கூறலாம். இது எவ்வாறு நிகழ்கிறது என்பதுபற்றிப் பார்ப்போம்.

உகரமேறிய வல்லின மெய்கள் குறிலோசையுடன் இணைந்துவரும் இரண்டெழுத்துச் சொற்கள் தவிர்ந்த வேறு சொற்களின் இறுதியில் வரும்போது தமக்குரிய ஓசையைவிடக் குறைவாகவே ஒலிக்கப்படுகின்றன என்பது நடைமுறை அனுபவம்.

உகரம் ஏறிய வல்லின மெய்களாவன, கு, சு, டு, து, பு, று ஆகிய ஆறு உயிர்மெய்களாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகு, தகு, கொசு, பசு, கொடு, விடு, புது, மது, அறு, சிறு போன்ற முதலெழுத்து குறிலாகவும் அடுத்துவரும் எழுத்து உகரம் ஏறிய வல்லின மெய்களிலொன்றாகவும் அமையும் இரண்டெழுத்துச் சொற்களை ஒலிக்கும்போது கு, சு, டு, து, பு, று ஆகிய எழுத்துகளின் ஓசை முழுமையாக வெளிவருவதை அவதானிக்கலாம். எனவே இவை முழுமையான ஓசையைப் பெறுகின்ற உகரங்களாகின்றன.

ஆனால், ஏனைய இடங்களில் சொற்களினிறுதியில் வருகின்ற வல்லின மெய்களிலேறிய உகரங்கள் எவையும் முழுமையான ஒலிப்புகளைப் பெறுவதில்லை. குறைவான ஒலிப்புகளைக் கொண்டிருப்பதால் இவை குற்றியலுகரங்கள் என அழைக்கப்படுகின்றன. இவற்றில் எவ்வுகரத்தையேனும் ஒருவர் முழுமையாக ஒலிப்பாரானால் அவ்வொலிப்பு வித்தியாசமான தமிழாகத் தோன்றும். தமிழறியாதார் தமிழ் பேசுவதுபோற் தோன்றும்.

**குற்றியலுகரம், தனக்கு முன்னேவரும் ஒலிக்கேற்ப ஆறு வகைப்படுகின்றன** என்பர் இலக்கண அறிஞர். அவை, **நெடிற்றொடர், ஆய்தத்தொடர், உயிர்த்தொடர், வன்றொடர், மென்றொடர், இடைத்தொடர்** என்பவையாம்.

## நெடிற்றொடர்க் குற்றியல்உகரம்.

இரண்டெழுத்துப் பதங்களில் நெடிலோசையை முதலெழுத்துக் கொண்டிருக்குமிடத்து அடுத்துவரும் வல்லின உகரம் நெட்டெழுத்தோசையை அடுத்து வருகின்றது என்ற பொருளில் நெடிற்றொடர்க் குற்றியலுகரம் எனப் பெயர்பெறுகிறது.

**ஆடு, காசு, பேசு, வீடு, நாடு, மாடு, ஓடு, மாது, ஓது, தீது, கோபு, சோறு, வீறு** போன்றவை இதற்கு உதாரணங்களாம்.

## ஆய்தத்தொடர்க் குற்றியல்உகரம்.

**தனக்கு முன்னமைகின்ற எழுத்து அல்லது ஓசை ஆய்தமாக அமையுமிடத்து** சொல்லிறுதியில் வருகின்ற வல்லின உகரங்கள் ஆய்தஓசையைத் தொடர்ந்து வருகின்றன என்ற பொருளில் ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம் எனப் பெயர்பெறுகிறது.

**இஃது, அஃது, எஃகு** என்பவை உதாரணங்களாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிர்த்தொடர்க் குற்றியல்உகரம்.

இவ்வகைக் குற்றியலுகரங்களுக்கு முன்னே உயிரோசை வருவதால் இவை இப்பெயர் பெறுகின்றன.

உதாரணங்களாக, **படகு, வரகு, பழசு, விளாசு, பவிசு, குறடு, சரடு, புதிது, பெரிது, உதறு, பதறு** என்பவற்றைக் கொள்ளலாம்.

இங்கே கவனிக்கவேண்டியது என்னவெனின், குற்றியலுகரங்களுக்கு முன்னேவரும் எழுத்துகளின் உயிரோசை மட்டுமே இலக்கணஆசிரியர்களால் கருத்திற் கொள்ளப்படுகிறது என்பதாகும். மேற்கண்ட பதங்களில் வருகின்ற ட, ர, ழ, ளா, வி, ற, ரி, த போன்ற உயிர்மெய்யெழுத்துகளைச் சிந்தித்துக் குழப்பமடையத் தேவையில்லை.

## வன்றொடர்க் குற்றியல்உகரம்.

சொல்லினிறுதியில் வல்லின மெய்களான க், ச், ட், த், ப், ற் ஆகிய எழுத்துகளை அடுத்து வருகின்ற வல்லினமெய்களில் ஏறிய உகரம், வலிதான எழுத்தைத் தொடர்ந்துவரும் குற்றியலுகரம் என்ற பொருளில் வன்றொடர்க் குற்றயலுகரம் என அழைக்கப்படுகிறது.

கொக்கு, திக்கு, அச்சு, கச்சு, பட்டு, சிட்டு, முத்து, வித்து, உப்பு, சிறப்பு, பற்று, ஒற்று என்பவை வன்றொடர்க் குற்றியலுகரத்துக்கு எடுத்துக்காட்டுகளாம்.

## மென்றொடர்க் குற்றியல்உகரம்.

மெல்லின மெய்களான ங், ஞ், ண், ந், ம், ன் ஆகிய ஆறெழுத்துகளையடுத்து மொழிக்கு இறுதியிலமையும் குற்றியலுகரம், மென்றொடர்க் குற்றியலுகரம் எனப்படுகிறது.

சங்கு, நுங்கு, பஞ்சு, நெஞ்சு, நண்டு, வண்டு, நொந்து, சிந்து, தும்பு, வேம்பு, கன்று, இன்று என்பவை மென்றொடர்க் குற்றியலுகரத்துக்கு உதாரணங்களாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இடைத்தொடர்க் குற்றியல்உகரம்.

இடையின மெய்களான **ய், ர், ல், வ், ழ், ள்** ஆகியவற்றையடுத்து மொழிக்கு இறுதியில் வருகின்ற வல்லின மெய்களிலேறிய உகரங்கள் இடைத்தொடர்க் குற்றியலுகரங்கள் என அழைக்கப்படுகின்றன.

கொய்து, பெய்து, சார்பு, சால்பு, போழ்து, வெள்கு போன்றவை இதற்கு உதாரணங்களாம்.

சொற்களின் இறுதியில் மட்டும்தான் குற்றியலுகரங்கள் வருகின்றன என்பதில்லை, அவை சொற்களின் நடுவேயும் வருவதுண்டு என்கின்றனர் இன்றைய இலக்கண அறிஞர்கள்.

முக்கியகுறிப்பு: **பன்மை விகுதியான "கள்" குற்றியலுகரச் சொற்களுக்குப் பன்மைத் தன்மையைத் தரும்போது வல்லெழுத்து ஒருபோதும் மிகாது.**

ஆறுகள், வீடுகள், படகுகள், குறடுகள், கொக்குகள், திறப்புகள், இருப்புகள், வண்டுகள், போழ்துகள் எனவமைவதைக் கருத்திற் கொள்க.

எனவே, சிறப்புகள், விருப்புகள், வாழ்த்துகள் என எழுதுவதுதான் முறை. மாறாகச் சிறப்புக்கள், விருப்புக்கள், வாழ்த்துக்கள் என எழுதுமிடத்து "கள்" பன்மைவிகுதி அற்றுப்போய் மது அல்லது தேன் என்ற பொருளைத் தரும் என்பதை நினைவிற்கொள்க.

எனினும் இந்துக்கள் எனவரும் பதத்தில் "து" மென்றொடர்க் குற்றியலுகரம் என்பதால் பன்மை விகுதியான "கள்" இன் "க"கரம் மிக வாய்ப்பில்லை. ஆனால் இந்துக்கள் என எழுதுவதும் அழைப்பதும் வழக்கமாகி விட்டதால், அது இலக்கண வழுவமைதியின் பாற்படுகிறது.

## முற்றியலுகரம்.

உகரம் ஏறிவருகின்ற உயிர்மெய்கள் சொல்லினிறுதியில் வரும்போதும், ஏனைய இடங்களில் ஒலிக்கும்போதும் தனது முழுமையான ஓசையை வெளிப்படுத்துமாயின் அவை முற்றியலுகரங்கள் எனப்படுகின்றன. அதாவது, முழுமையான ஒலிப்பைப் பெறுகின்ற உகரங்களே முற்றியல் உகரங்கள் எனப்படுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்கால இலக்கண வகுப்புகளில் முற்றியலுகரம் பற்றிய முக்கியத்துவம் குறைவடைந்து வருகின்றதெனினும் மாணவர்கள் இதுபற்றி அறிந்திருப்பது பயன்பாடுடைத்தாகும்.

இரண்டெழுத்துச் சொல்லின் முதலெழுத்து குறிலாக அமையுமிடத்து இரண்டாம் எழுத்தாகிக் கடைசியில் வருகின்ற வல்லின மெய்களில் ஏறிய உகரங்கள் குற்றியலுகரமாகக் கருதப்படமாட்டா. முதலெழுத்து நெட்டெழுத்தாக வருமிடத்துமட்டுமே வல்லின உகரங்கள் குற்றியலுகரமாகின்றன.

உதாரணமாக, பாடு என்றபதத்தில் வரும் "டு" குற்றியலுகரமாகிறது. ஆனால் படு என்றபதத்தில் வரும் "டு" குற்றியலுகரமாகாது. அது முழுமையான ஒலிப்பைப் பெறுவதால் முற்றியலுகரம் எனப்படுகிறது. இவ்வாறே பகு, பசு, விடு, பொது, குபு, செறு என்பவை முற்றியலுகரங்கள் எனப்படுகின்றன.

எனவே இரண்டெழுத்துப் பதத்தில் முதலெழுத்து குறிலோசையைக் கொண்டமையுமிடத்து அடுத்துச் சொல்லிறுதி எழுத்தாக வருகின்ற வல்லின உகரங்கள் முற்றியலுகரங்களாகும். ஏனைய மெல்லின, இடையின மெய்களிலேறி வருகின்ற அனைத்து உகரங்களும் எவ்விடத்தில் வரினும் அவை முற்றியல் உகரங்களேயாம்.

## குற்றியலிகரம்.

வல்லின உகரங்கள் சில இடங்களிற் தம் மாத்திரையிற் குறைந்தொலித்துக் குற்றியலுகரங்கள் ஆவதைப்போல், இகரங்களும் சிலவிடங்களிற் தம் மாத்திரையைவிடக் குறைவாக ஒலித்துக் குற்றியலிகரங்கள் ஆகின்றன. இவை புணர்ச்சி விதிகளின்படியும் தூயஒலிப்பின் அடிப்படையிலும் இலக்கண அறிஞர்களால் அடையாளப்படுத்தப் படுகின்றன.

குற்றியலுகரம் அமைந்த சொற்களுடன் யகரத்தை முதலெழுத்தாகக் கொண்ட சொற்கள் இணையநேரின் குற்றியலுகரம், குறுகிய இகர உச்சரிப்பைப் பெற்றே இணையும் என்பது இலக்கணவிதி. பொதுவாக நாகு, சோறு, அஃது, பஞ்சு, படகு, சிறப்பு, களிறு போன்ற பதங்களுடன் யாது என்ற பதம் இணையுமிடத்து, முறையே, நாகியாது, சோறியாது, அஃதியாது, பஞ்சியாது, படகியாது, சிறப்பியாது, களிறியாது என அவை தோற்றம்பெறும் என்பது ஒலிப்பை நுணுகிப் பார்ப்பவர்களுக்குத் தெள்ளெனப் புரியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதேபோன்று, மியா எனப்படும் அசைச் சொல்லில்வரும் மி எழுத்தும் தன் மாத்திரையைவிடக் குறைந்தே ஒலிக்கும்.

## முற்றியல் உகர குற்றியல் உகர, இகர மாத்திரைகள்,

"உ"என்ற உயிர்க்குறிலின் மாத்திரை ஒன்று. அது மெய்யெழுத்துகளில் ஏறி உயிர்மெய்யாக வருமிடத்தும் குறிலோசைக்குரிய ஒருமாத்திரையையே பெறுகிறது. எனவே முழுமையான ஒலியுடன் **முற்றியலுகரமாக வருகின்றபோதில் அதன் மாத்திரை ஒன்று எனவுணர்க.**

ஆனால் **குற்றியலுகரமாக அவை ஒலியளவிற் குறைந்தமையும்போது அவற்றின் மாத்திரை அரை என்பதாகிறது.**

இதேபோல் **"இ"கரத்தின் மாத்திரை ஒன்று எனவமைந்திருந்தாலும், குற்றியலுகரம் இகரமாகும்போது ஒலியளவு குறைவதால் குற்றியல் இகரத்தின் மாத்திரை அரை என்பதாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐகாரக் குறுக்கம்.

உயிரெழுத்து வரிசையில் எட்டாவதாக வருகின்ற "ஐ" என்ற எழுத்து நெடிலாகும். நெட்டெழுத்து என்றவகையில் இதன் ஒலிப்புநேரம் இரண்டுமாத்திரை அளவினதாக அமைகின்றது.
இந்தவிதி "ஐ" எழுத்தைத் தனித்து ஒலிக்கும்போது மட்டுந்தான் பொருந்துகிறது. ஆனால், சொற்களில் ஐகாரம் வருகின்றபோது அதன் ஒலிப்புநேரம் இரண்டு மாத்திரை அளவைவிடக் குறைந்து போவதை அனுபவத்திற் காணலாம். **இவ்வாறு ஐகாரம் தன்னோசையின் அளவைக் குறைத்துக் கொள்வதையே ஐகாரக்குறுக்கம் என்கிறோம்.**

ஐகாரம் ஒருசொல்லின் முதலிலோ, இடையிலோ, கடையிலோ வரக்கூடிய எழுத்தாகும்.
ஒரு மொழியில் ஐகாரம் வருமிடத்தைப் பொறுத்து மாத்திரையும் வேறுபாடடைவது அவ்வெழுத்தின் சிறப்பம்சமாகும்.

## மொழிக்கு முதலில்வரும் ஐகாரம்.

ஐயர், ஐவர், ஐந்து, வையகம், நைந்தது, பைந்தமிழ் போன்ற சொற்களில் ஐகாரஒலி முதலில் வருகின்றது. "ஐ" என்று தனித்து ஒலிக்கும் போது செலவிடப்படும் நேரம் மொழிக்கு முதலில் வருகின்ற ஐகார ஒலிக்குச் செலவிடப்படுவதில்லை என்பதை உற்று நோக்கிற் புரியும்.

இங்கே மொழிக்கு முதலில் வருகின்ற ஐகார ஓசையின் அளவு ஒன்றரை மாத்திரை என்பர் இலக்கண அறிஞர்.

## மொழிக்கு இடையில்வரும் ஐகாரம்.

தலைவன், கலைஞன், இணையம், நிலையம், விளைச்சல் போன்ற சொற்களில் ஐகாரவோசை இடையில் வருகின்றது.
இவ்விடத்தில் வரும் ஐகாரத்தின் ஒலிஅளவு ஒரு மாத்திரையாகும்.

## மொழிக்கு இறுதியில்வரும் ஐகாரம்.

நம்பிக்கை, இருக்கை, கலை, விலை, மமதை, ஆசை போன்ற சொற்களில் "ஐ" ஒலிப்பு மொழியின் இறுதியில் வருகின்றது. இதன் மாத்திரையும் ஒன்றாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே "ஐ"காரம் தனித்து ஒலிக்கும்போது இரண்டு மாத்திரையும், சொல்லின் முதலெழுத்தாக நின்று ஒலிக்கும்போது ஒன்றரை மாத்திரையும், சொல்லின் நடுவிலோ கடைசியிலோ வரும்போது ஒருமாத்திரையும் பெறுகிறது என்பதை மறவற்க.

## ஔகாரக் குறுக்கம்.

"ஔ" என்ற உயிரெழுத்து நெட்டெழுத்து வகையைச் சார்ந்ததால் நெடிலோசைக்குரிய இரண்டு மாத்திரை அளவுநேரமே ஒலிக்கப்பட வேண்டியதாகும். இதன்படி ஔகாரம் தனித்து நின்று ஒலிக்கும்போது இரண்டுமாத்திரை பெறுகிறது.

ஔ எழுத்து அல்லது அதனோசை, சொற்களின் முதலில்மட்டுமே வரக்கூடியது. சொற்களின் இடையிலோ, கடையிலோ வராது.

ஔவை, மௌவல், பௌராணிகர், பௌத்தம், கௌமாரம், கௌசிகர், சௌந்தரியம் என்பன சில எடுத்துக்காட்டுகளாகும்.

தனித்துநின்று இரண்டுமாத்திரை நேரம் ஒலிக்கும் ஔகாரம், சொற்களின் முதலெழுத்தாக நின்று ஒலிக்கும்போது அதன் ஒலிப்புநேரம் ஒன்றரை மாத்திரை அளவாகக் குறுகிவிடுகிறது. இதுவே இலக்கணத்தில் ஔகாரக்குறுக்கம் எனப்படுகிறது.

**எனவே, ஔகாரக்குறுக்கத்தின் மாத்திரை ஒன்றரையாகும்.**

## மகரக் குறுக்கம்.

மகர மெய், அதாவது "ம்" எழுத்துக்குரிய மாத்திரை ஏனைய மெய்களைப் போன்று அரையாகும். எனினும் சில இடங்களில் மகரமெய் தன் மாத்திரையிற் குறைந்து கால் மாத்திரையாகவும் ஒலிப்பதுண்டு. அவ்வாறு ஒலிக்கும்போது அது மகரக்குறுக்கம் எனப்படுகிறது.

இது செய்யுள்களிலும் உரைநடைகளிலும் நிகழ்வதுண்டு.

ஓசைநயங் கருதிச் செய்யுள்களில் சில சொற்கள் குறுக்கமடைவதுண்டு. அவ்வாறான சந்தர்ப்பங்களில் மகரக்குறுக்கம் தோன்றுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணமாக, போலும் என்றசொல் போல்ம் எனமாற்றம் பெற்றுப் பின்னர் போன்ம் எனச் செய்யுள்களில் வருவதுண்டு.

இதேபோல் மருளும் என்றபதம் மருள்ம் எனமாறி மருண்ம் எனச் சுருக்கம் பெறுவதுண்டு.

இவ்வாறு போன்ம், மருண்ம் ஆகிய பதங்களில் மகரமெய் தன்மாத்திரையிற் குறைந்து போகின்றது. ஒலித்துப் பார்த்தால் இக்குறைவு தெளிவாகத் தெரியும். இது மகரக்குறுக்கம் ஆகும்.

உரைநடையைப் பொறுத்தவரையில், வரும், போகும், செல்லும், நிற்கும் என்பன போன்ற மகரமெய்யை இறுதியாகக் கொண்ட பதங்களுடன் "வ"கர வரிசையை முதலெழுத்தாகக் கொண்ட சொற்கள் வந்து இணையும்போது, நிலைமொழியின் இறுதியில் நிற்கும் மகரமெய் ஓசையிற் குறைந்து போகின்றது. வரும்வண்டி, செல்லும்வழக்கம், விற்கப்படும்வீடு, நிற்கும்வரிசை போன்றவற்றை ஒலித்துப்பார்த்தால் மகரஓசை குறைவடைவதைத் தெரிந்து கொள்ளலாம். இது மகரக் குறுக்கம் எனப்படும்.

மகரக் குறுக்கத்தின் ஒலியளவு கால் மாத்திரையாகும்.

## ஆய்தக் குறுக்கம்.

ஒரு சொல் குற்றெழுத்தை யடுத்து லகர, ளகர மெய்களில் நிறைவடையும் போது, அச்சொல்லுடன் இணையவரும் சொல் தகர வரிசையைக் கொண்டிருக்குமாயின் அவ்விணைவின்போது ஆய்தக்குறுக்கம் தோன்றுகிறது.

நிலைமொழி இறுதி லகர மெய்யாகி வருமொழி தகரவரிசையைக் கொண்டிருக்குமாயின் அவ்விணைவில் ஆய்தத்துடன் றகரம் தோன்றும். நிலைமொழியிறுதி ளகர மெய்யானால் தகரவோசை சேருமிடத்து ஆய்தத்துடன் டகரம் தோன்றுகிறது.

பல எனும் நிலைமொழியுடன் துளி எனும் வருமொழி இணையும்போது பல, பல் எனமாறி பல் + துளி = பஃறுளி என்றாகிறது.

கல் எனும் நிலைமொழியுடன் தீது எனும் வருமொழி இணையின் கல் + தீது = கஃறீது என்றாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேபோல் முள் எனும் மொழியுடன் தீது எனும் மொழி இணையும் போது
முள் + தீது = முஃடீது என்றாகின்றது.

**ஆய்தக்குறுக்கத்தின் அளவு கால் மாத்திரையாகும்.**

தற்கால வழக்கில் ஆய்தக்குறுக்கத்தின் பயன்பாடு குறைவடைந்து வருகிறது.

முக்கிய குறிப்பு:

அது, இது எனவரும் சுட்டுப் பெயர்ச்சொற்களை யடுத்து உயிரோசையிற் தொடங்கும் பதம் வருமாயின் அது அஃது என்றும், இது இஃது என்றும் மாற்றமடைகின்றன.

உதாரணமாக, அது எனும் சொல்லையடுத்து ஒரு எனுஞ்சொல் வருமாயின் அஃதொரு என்றாகிறது. அது இலார்க்கு என்பது அஃதிலார்க்கு என மாற்றமடைகிறது.

**சாரியை.**

தமிழ் எழுத்தை ஒலிக்கும்போது அவ்வொலிக்குத் துணையாகவரும் ஓசையைச் சாரியை என்பர் இலக்கண அறிஞர்.

சாதாரண பேச்சுவழக்கில் எழுத்தொன்றைத் தனியாக ஒலிக்கும்போது அவ்வெழுத்து, குறிலாயின் அதை நெடிலாக்கி "னா" என்ற ஓசையையும் இணைத்தே ஒலிக்கிறோம்.

**அ, இ, க, ண, கி, மு** ஆகிய குறில் எழுத்துகளை முறையே **ஆனா, ஈனா, கானா, ணானா, கீனா, மூனா** என்றே ஒலிக்கிறோம். குறில்கள் அனைத்துக்கும் இது பொருந்தும்.

அதேபோன்று நெடில் எழுத்துகளுக்கு அவ்வெழுத்துடன் அன்னா என்ற ஓசையையும் சேர்த்தே ஒலிக்கிறோம்.

**ஆ, ஈ, ஊ, ஐ, ஔ, மா, சா, டீ** போன்றவற்றை முறையே **ஆஅன்னா — ஆவன்னா, ஈயன்னா, ஊவன்னா, ஐயன்னா, ஔவன்னா, மாவன்னா, சாவன்னா, டீயன்னா** என்றுதான் ஒலிக்கிறோம். இஃது அனைத்து நெடில்களுக்கும் பொருந்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்த எழுத்துக்கும் நெடிலின் துணையொலிப்பான் **"அன்னா"வைப்** பயன்படுத்துவதுண்டு. ஆய்தத்தை **அஃகன்னா அல்லது அக்கன்னா** என்பதும் வழக்கு.

எனவே, குறிலுக்குத் துணைவருகின்ற "ன"வும், நெடிலுக்கும் ஆய்தத்துக்கும் துணைவருகின்ற "அன்னா"வும் சாரியைகள் என நாம் கொள்ளலாம்.

ஆயினும் "உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டு" என்பதற்கிணங்க, இலக்கணநூலோர் பின்வருமாறு சாரியைகளை வகுத்துள்ளனர்.

**அ, இ, உ, க, ங,** போன்ற குற்றெழுத்து வரிசை **அகரச்சாரியை** பெறுகிறது. இதன்படி அவை முறையே **அகரம், இகரம், உகரம் ககரம், ஙகரம்** என வருகின்றன.

நெட்டெழுத்துகள் காரச்சாரியை பெறுகின்றன. இதற்கிசைவாக அவை ஆகாரம், ஈகாரம், ஐகாரம், காகாரம் என உச்சரிப்புப் பெறுகின்றன.

ஆய்தஎழுத்து ஏனச்சாரியை பெறுகிறது. இதற்கேற்ப, அஃகேனம் அல்லது அக்கேனம் எனப்படுகிறது.

இவற்றைவிட, "ஐ" எழுத்து, கான் சாரியைப் பெற்று "ஐகான்" எனப்படுவதுமுண்டு.

"ம" எழுத்து மகரம் என்பதோடு, மாகரம், மஃகான் எனவும் வழங்கப்படுகிறது.

## கவனத்திற் கொள்ளப்பட வேண்டியவை:

எல்லா எழுத்துகளுக்கும் தனித்தனி உச்சரிப்புகள் உளவெனினும் அவை பேச்சுவழக்கிலோ, இசையிலோ அவ்வப்போது தமது ஒலிப்பிலிருந்து சற்றே விலகி ஒலிப்பதுண்டு என்பதை மனத்திற் கொள்ளவேண்டும். காலங்காலமாக மொழிவழக்கு அவ்வாறுதான் அமைந்து வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்தின் அடிப்படைஒலி பிசகாமல் சொற்களை உச்சரிப்போமாயின் அது வேடிக்கை நிகழ்வாகிவிடும். குற்றியலுகரம் தொடக்கம் இதுவரை காட்டப்பட்ட ஆய்தக்குறுக்கம்வரை இலக்கணவாயிலாக இவ்வுண்மை யைத்தான் உணர்த்துகின்றன. இவற்றைவிட வேறு துல்லியமான எடுத்துக்காட்டுகளும் உள.

கானல், காணல் எனும்பதங்களை ஒலிக்கும்போது நடுஎழுத்தாக வருகின்ற ன, ண என்பவற்றுக்கேற்ப "கா" எழுத்தின் ஓசை வேறுபடுவதைக் காணலாம். பிடிவாதமாக "கா" எழுத்தை ஒரேமாதிரித்தான் ஒலிப்போம் எனப்புகுந்தால் தமிழ் கர்ணகடூரமாக இருக்கும்.

இவ்வாறே, வீசு – வீடு, பேன் -- பேண், சீலன் -- சீடன், வேலன் -- வேடன், கலை -- களை போன்ற சொற்களை ஒலிக்கும்போது சொற்களின் முதுலெழுத்துகள் தம் அயல் எழுத்துக்கேற்ப ஓசையில் மாறுபாடடைவதை உணரலாம்.

இவைபோன்று அப்பம் - கோபம், பட்டம் - படம் முதலான சொற்களிலும் பகர, டகர ஓசை மாறுபடுவதை அவதானிக்கலாம்.

இத்தகைய நுணுக்கமான அவதானிப்புகளே சிறந்தமுறையில் தமிழ்பேச உதவவல்லன என்பதை கருத்திற் கொள்க.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல்லியல் அல்லது பதவியல் – பகுதி 01

பதம், சொல், கிளவி, மொழி என்பன ஒரே பொருளைத் தருகின்ற சொற்களாகும்.
மனிதன் ஒலிகளை இணைத்து எண்ணங்களை வெளிப்படுத்த முனைந்தபோது சொல் பிறந்தது எனலாம். ஆ, ஊ என்று பேசிய மனிதன் அவ்வொலிகளை ஒழுங்கு படுத்துவதன் மூலம் சொற்களை ஆக்கிக் கொண்டது போலவே ஒலியன்களான எழுத்துகளையும் பயன்படுத்தி சொற்களுக்கு வரிவடிவம் கொடுத்தான்.

ஒலிகளால் ஆக்கப்பட்டு ஒலியன்களால் வரிவடிவம் கொடுக்கப்பட்ட சொற்கள் தொடர்பான விளக்கங்களே பதவியல் எனப்படுகிறது.

சொற்கள் ஓரெழுத்தாலோ ஒன்றுக்கும் மேற்பட்ட எழுத்துகளாலோ உருவாகின்றன.
நீ, வா, போ, கா, பா போன்றவை ஓரெழுத்தாலான சொற்களாகும். பதம், காண், மரம், வேர். நட, சிங்கம் என்பவை ஒன்றுக்கும் மேற்பட்ட எழுத்துகளாலான சொற்களாகும்.

**பதங்களை ஓசைவடிவில் பார்க்கும்போது அவற்றை ஓரசைச் சொற்கள், ஈரசைச் சொற்கள், மூவசைச் சொற்கள் எனவும் வகைப்படுத்தலாம்.**

மூவசைக்கும் மேற்பட்ட சொற்கள் பொதுவாக எந்தமொழியிலும் பேச்சுவழக்கில் அதிகமாகப் பயன்படுத்தப் படுவதில்லை. அருமையாக அவை இடம்பெறக்கூடும்.

**“அசையையும்” “எழுத்தையும்”** ஒன்றெனக் கொண்டு குழம்பிவிடக் கூடாது. அவை வெவ்வேறானவை.

**எழுத்து – வரிவடிவஞ் சார்ந்தது.**
**அசை – ஒலிவடிவஞ் சார்ந்தது.**

ஒலிவடிவத்தின் எழுகைகளை அசைகள் எனக் கொள்ளினும் அது ஓரளவு பொருந்தும் எனலாம். அசையைச் சரியாக விளங்கிக்கொண்ட கவிஞர்கள்தாம் படிப்போர் நெஞ்சில் நிலைத்திருக்கும் கவிதைகளைத் தருகிறார்கள் என்பதை ஈண்டுரைத்தல் தகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணமாக அவன் என்ற பதத்தில் மூன்றெழுத்துகள் காணப்படுகின்றன. ஆயினும், அ - வன் என இரண்டு அசைகளே காணப்படுகின்றன. இதேபோல் தம்-பி. அண்-ணன், சிங்-கம், அம்-மா, கர-டி, மா-மா, பூ-னை போன்ற சொற்களும் ஈரசைகளை உடையவையே.

உத்-தர-வு, பட்-ட-யம், ஒட்-ட-கம், செய-லா-ளர், மெய்ப்-பித்-தான் போன்றவை மூன்று அசைகளைக் கொண்ட சொற்களாகும். இதேபோன்று, கெட்-டிக்-கா-ரன் போன்ற நான்கசைச் சொற்களும் வழக்கத்தில் உள்ளன.
ஆகாயவிமானம் மூன்றுக்கும் மேற்பட்ட அசைகளைக் கொண்டிருப்பதாற்றான் நாம் பேசும்போது முழுமையான சொல்லைப் பயன்படுத்தாது விமா-னம் என்ற ஈரசைச் சொல்லைப் பயன்படுத்துகிறோம்.

நண்பர்களின் பெயர் எவ்வளவு நீளமாக இருந்தாலும் அவற்றை ஓரசை, ஈரசைச் சொல்லாகக் குறுக்கி அழைக்கும் வழக்கத்தையும் இங்கு நோக்கலாம்.

நான், நீ, வா, போ, தாய், செல், நில் போன்ற சொற்கள் ஓரசையுடன் நிறைவு பெறுவதையுங் காணலாம். தமிழ்மொழியில் ஓரெழுத்துச் சொற்கள் இருப்பதுபோல, ஓரசைச் சொற்கள் ஏராளமாக இருப்பதைக் காணலாம். தமிழ்மொழியில் என்றன்றி எல்லாமொழிகளிலும் அடிக்கடி பயன்படுத்தப்படும் சொற்கள் ஓரசை அல்லது ஈரசைச் சொற்களாக அமைந்திருப்பது கண்கூடு.

எனவே, ஓரெழுத்துச் சொல்லும் ஓரசைச் சொல்லும் ஒன்றன்று என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். **ஓரெழுத்துச்சொல் எப்போதும் ஓரசையாகவே இருக்கும். ஆனால் ஓரசைச் சொற்களெல்லாம் ஓரெழுத்துச் சொற்களாக இருக்கவேண்டும் என்பதில்லை.** தாய், தேன், மான், பார் என்பவை ஓரசைச் சொற்கள். ஆயினும் அவை இரண்டு எழுத்துகளால் உருவாகியுள்ளன என்பதை அறிந்து கொள்ளலாம்.

- **ஓரெழுத்துப்பதம்.**

தமிழில் ஓரெழுத்தாலான சொற்கள் நாற்பத்திரண்டு என்பர் நன்னூலார். அவற்றுள், ஆ, ஈ, மா, மை, தே, தை, பா, பூ, பை. நீ, நோ, கா, கை, வா, வீ, வை, சா ஆகிய சில சொற்களே இன்று நடைமுறையிற் காணப்படுகின்றன. ஏனையவை செய்யுள்களில் அரும்பதங்களாக வருகின்றன எனக் கொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதங்களின் வகை.

தமிழ்மொழியிற் பதங்கள் அனைத்தும் பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என்ற நான்கு பிரிவுகளுக்குள் அடங்கிவிடுகின்றன.

## பெயர்ச்சொற்கள்.

கண்ணன், மலை, நிலா, மாடு, வெண்மை, கருமை, வையம், மனிதன் என்பன பெயர்ச்சொல் வகைக்குள் வருகின்றன. பெயர்ச்சொல் எப்போதும் பொருட்களையோ, பண்புகளையோ, காலஞ்சார்ந்த பெயர்களையோ, நடைமுறை இயல்புகளையோ சுட்டி நிற்பனவாகின்றன.

## வினைச்சொற்கள்.

ஆடு, சிரி. நடி, பார்த்தான், விழுந்தது என்பன வினைச்சொற்கள் வகைக்குள் வருகின்றன. செய்கைகளை வினையடியாகவோ, ஏவல் வினையாகவோ அல்லது காலங்காட்டும் வினையாகவோ புலப்படு த்துவது வினைச்சொற்களாகும்.

## இடைச்சொற்கள்

பெயர், வினைச் சொற்களை மட்டும் வைத்துக்கொண்டு சொல்லவந்த கருத்தைத் தெளிவுறக் கூறிவிட முடியாது. கருத்துகள் தெளிவு பெறுவதற்கேற்ற தொடர்புகளை ஏற்படுத்தித் தருகின்ற சொற்கள் இடைச்சொற்கள் எனப்படுகின்றன.

அண்ணா, தம்பி, புத்தகம், கொடு என்ற நான்கு சொற்களையும் எடுத்துக்கொண்டால், எவ்விதத் தொடர்பும் அற்ற தனிச்சொற்களாகவே அவை காணப்படுகின்றன. அவை இணைந்து பொருள்தர வேண்டுமாயின் இடைச்சொற்களின் உதவி அவசியம். அண்ணா, தம்பி(க்குப்) புத்தக(ம்)த்தைக் கொடுக்(கின்றா)(ன்) (அண்ணா தம்பிக்குப் புத்தகத்தைக் கொடுக்கின்றான்.) எனவரும்போது பொருள் தெளிவாகப் புலப்படுகிறது.

இவ்வாக்கியத்தில் வருகின்ற அண்ணா என்றபதம் தனித்தே நின்று வாக்கியத்துடன் இணைந்திருக்கிறது. எந்தத் துணையையும் சேர்த்துக் கொள்ளவில்லை. எந்த இணைப்பையும் பெறாது ஒரு பெயர்ச்சொல் வாக்கியத்தில் தனித்து நிற்பது முதலாம் வேற்றுமை வகையைச் சாரும். முதலாம் வேற்றுமை என்பது வேற்றுமையுருபு அற்ற நிலையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பிக்கு எனவரும் இரண்டாவது சொல்லில், தம்பி என்ற பதத்துடன் "கு" என்ற உருபு சேர்ந்துள்ளது. "கு" உருபு இணைவதற்காக "க்" என்ற எழுத்தும் தோன்றுவதால் தம்பிக்கு என்பது உச்சரிப்புக்கேற்ப இயைபு பெறுகிறது. அத்துடன் புத்தகத்தைப் பெறுவன் தம்பி என்றாகிறது. இக்கருத்தைத் தருகின்ற "கு"எனுமுருபு நான்காம் வேற்றுமையைச் சார்ந்தது. இது ஓர் இடைச்சொல்லாகும்.

புத்தகத்தை என்ற மூன்றாம் பதத்தில் (புத்தகம்) "ம்" மறைந்து "த்" தோன்றி "ஐ" என்ற இரண்டாம் வேற்றுமையுருபு சேர்கிறது. இதன்மூலம் கொடுக்கப்பட்ட பொருள் எதுவென்ற தெளிவு கிடைக்கின்றது. இதுவும் இடைச்சொல் வகையைச் சார்ந்ததே.
கொடு என்ற வினைச் சொல் "கின்று" சேர்வதால் நிகழ்காலங் காட்டுகிறது. ஆன் என்ற இறுதியைக் கொண்டு முடிவதால் ஆண்பால் காட்டுகிறது. ஒருமை, உயர்திணை என்ற விபரங்களையும் தருகிறது. இங்கே கொடு என்ற வினையடிச் சொல்லுக்குச் சிறப்புச் சேர்க்கின்ற "கின்று" "ஆன்" என்பவையும் இடைச்சொற்களே.

நானும் அவனும் என எழுதினால் இருவரையும் இணைக்க வருகின்ற "உம்" கூட இடைச்சொல்லே. நான் என்ற பெயர்ச்சொல்லை நாங்கள் என மாற்றுதற்கும், விழுந்தான் என்ற வினைச்சொல்லை விழுந்தார்கள் எனப் பன்மைப்படுத்துதற்கும் துணைசெய்கின்ற "கள்" விகுதியும் இடைச்சொல்லாகும்.

பெயராகவோ வினையாகவோ அல்லாமல் பெயர்ச்சொற்களோடும் வினைச்சொற்களோடும், முன்னாகவோ பின்னாகவோ, தனித்தோ பலவாகவோ இணைந்து சொல்லவந்த கருத்தைச் சிறப்பாக வெளிப்படுத்துதற்கு உதவுகின்ற சொற்களே இடைச்சொற்களாகும்.
எனவே, பன்மைவிகுதிகள், காலஇடைநிலைகள், வேற்றுமையுருபுகள், பால்விகுதிகள், நிபந்தனைச் சொற்கள் என்பவையெல்லாம் இடைச்சொற்கள் என்ற வகுதிக்குள் அடங்குகின்றன எனவுணர்க.

## 1.4 உரிச்சொற்கள்.

கழி, நனி, தவ, சால, உறு, கடி, குழ, தட, கம போன்ற சொற்களே உரிச்சொற்கள் எனப்படுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிச்சொற்கள் பெயர்ச் சொல்லுடனோ வினைச் சொல்லுடனோ இணைந்து வருகின்றன. சாலச் சிறப்பு, கழிபேருவகை, நனி சிறந்தான் போன்றவற்றை உதாரணமாகக் கொள்க. உரிச் சொற்களின் கருத்து இதுவென அறுதியிட முடியாதெனினும், தான் சார்ந்து வருமிடத்துக்கேற்ப மிக, அதிக, சிறந்த, பொருத்தமான போன்ற கருத்துகளை அவை வலிமையுடன் தருகின்றன.

பொதுவாக, உரிச்சொற்கள் பெயரோடு அல்லது வினையோடு இணைந்து வருவதல்லால் தனித்து வரமாட்டா. இவை ஒருபொருளையோ பலபொருள்களையோ உணர்த்தும் வல்லமையுடையன. அதிகமாகச் செய்யுட்களில் பயன்படுத்தப்படுவன. அதிக, மிக போன்ற சொற்களும் உரிச்சொற்களே எனக்கொள்ளவும் இடமுண்டு.

## இடைச்சொற்களுக்கும், உரிச்சொற்களுக்குமிடையிலான வேறுபாடுகள்.

- **இடைச்சொற்கள்**

1. செய்யுளிலும் உலகவழக்கிலும் வரும்
2. பெயர் வினைகளைச் சார்ந்து பொருள் தருமேயன்றித் தனித்துப் பொருள் தரா
3. பொருளெதுவுமின்றி அசைநிலையாகவும் வரும்.

- **உரிச்சொற்கள்**

1. அதிகமாகச் செய்யுள்களிலேயே வரும்.
2. தனக்கெனப் பொருளைக் கொண்டிருக்கும்
3. பொருளோடு வருமேயன்றி அசைநிலையாக வரா.

(நன்றி.. அறிஞர் எல்.கே.அக்னிபுத்திரனின் புதிய நோக்கில் நன்னூல் காண்டிகையுரை பக் 196, 197)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2. பதங்கள் அல்லது சொற்கள்

ஓரெழுத்தாலோ ஒன்றுக்குமேற்பட்ட எழுத்துகளாலோ ஆக்கப்பட்டுப் பொருள் வெளிப்படுத்தி நிற்பவை பதங்கள் அல்லது சொற்கள் எனப்படுகின்றன. அவை பெயர், வினை, இடை, உரி என நான்கு வகையின.

**பகுபதம் : பகாப்பதம்**

பதங்கள் அனைத்தும் பிரிக்கப்படக் கூடியவை, பிரிக்கப்பட முடியாதவை என இரு வகைக்குள் அடங்குகின்றன.
பிரிக்கப்படக் கூடியவை அதாவது பகுக்கப்படக் கூடியவை பகுபதங்கள் எனவும்,
பகுக்கப்பட முடியாதவை பகாப்பதங்கள் எனவும் அழைக்கப் படுகின்றன.

**பகுபதம்:** ஒரு பதத்தைப் பகுத்தாலும் அச்சொல் பொருள்தரு மாயின், அது பகுபதம் எனப்படுகிறது. பொதுவாக பெயர்ச் சொற்களிலும் வினைச்சொற்களிலும் அநேகமானவை பகுபதங்களாகவே காணப்படுகின்றன.

**பகாப்பதங்கள் :** இடைச் சொற்களும் உரிச்சொற்களும் பகுக்கப்பட முடியாதவை. எனவே அவை பகாப்பதங்கள் வகுதிக்குள் நிற்கின்றன. அதேபோல் பெயர்ச்சொற்களிலும் வினைச் சொற்களிலும் பகாப்பதங்களும் இருக்கின்றன.

**பகுபதங்கள்** பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் என ஆறு உறுப்புகளில் இரண்டையேனும் இரண்டுக்கு மேற்பட்ட வற்றையேனும் அல்லது அனைத்தையேனும் கொண்டமைகின்றன.

கண்ணன் என்பது பெயர்ப் பகுபதம் ஆகும். பொன்னி என்பதும் பெயர்ப் பகுபதமே. இவை கண், பொன் என்பதன் அடிப்டையாக எழுந்த பெயர்ச் சொற்களிலிருந்து உருவானவை. பார்ப்பதற்குத் தனிச்சொற்கள் போன்று அவை தோற்றமளிப்பினும் இலக்கண நோக்கின்படி பகுதி, விகுதி ஆகிய ஈருறுப்புகளின் இணைப்புகளேயாம்.

கண்ணன் என்பது கண் என்ற பகுதியும் அன் என்ற ஆண்பால் விகுதியும் கொண்ட ஈருறுப்புச் சொல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேபோல் பொன்னி என்பது பொன் என்ற பகுதியும் இ என்ற பெண்பால் விகுதியும் இணைந்த பதம். பொன் என்ற பகுதியுடன் அன் எனும் ஆண்பால் விகுதி இணையின் அது பொன்னன் ஆகி ஆணைக் குறிக்கும் என்பதையும் மனதிற்கொள்க.

செய்தான் எனுஞ்சொல் வினையடியாகப் பிறந்த பகுபதம். செய்-த்-ஆன் அதாவது பகுதி, இடைநிலை, விகுதி என்ற மூன்றின் சேர்க்கையாகும்.

அதேபோல், தின்றனன் எனுஞ்சொல் தின்-ற்-அன்-அன் பகுதி, இடைநிலை, சாரியை, விகுதி என நான்கு உறுப்புகளால் ஆனது.

குடித்தனன் எனுஞ்சொல் குடி-த்-த்-அன்-அன் என, பகுதி, சந்தி, இடைநிலை, சாரியை, விகுதி ஆகிய ஐந்துறுப்புகளைக் கொண்டமைகிறது.
நடந்தனன் என வரும்போது, நட-த்-த்-அன்-அன் என ஐந்துறுப்புகளோடு த், ந் ஆகமாறி விகாரமடைவதால் விகாரம் என்ற ஆறாவது உறுப்பையும் கொண்டிருக்கிறது.

**இலக்கணநூலார்**, பதங்கள் ஈருறுப்பாலமையும்போது பகுதி, விகுதி என்றும் மூவுறுப்பெனின் பகுதி, விகுதி, இடைநிலை என்றும் நான்குறுப்புகள் வரின் பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை என்றும், ஐவகையுறுப்புகள் எனின் பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, எனவும் ஆறாவது உறுப்பை விகாரம் எனவும் இலகுவாக அடையாளப் படுத்திச் செல்வர்.

எனினும் இடைநிலை, சாரியை, சந்தி போன்றவற்றைத் தெளிவாக விளங்கிக் கொள்வதற்காக இலக்கணநூலாரின் ஒழுங்கு இங்கு மாற்றப்பட்டிருக்கிறது. ஆயினும் பகுபத உறுப்புகளை மனதிற்கொள்வதற்கு இலக்கணநூலாரின் ஒழுங்கே சிறப்பானதாகும்.

## பெயர், வினைப் பகுபதங்களும் பகாப்பதங்களும்.

**பெயர்ப்பகுபதம்:** பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் ஆகிய அறுவகை இயல்புகளின் அடியாகத் தோன்றும் சொற்களிலிருந்தும், சுட்டு, வினா என்பவற்றுடன் பிற, மற்று ஆகிய இடைச் சொற்கள் என்பவற்றிலிருந்தும் தோன்றுகின்றன என ஆறுமுகநாவலரவர்கள் உரைக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பொருளின் அடிப்படையில் — பொன்னன்,
- இடத்தின் அடிப்படையில் — இலங்கையன், இந்தியன்,
- காலத்தின் அடிப்படையில் — தையான், உதயன். மாரி,
- சினையின் அடிப்படையில் — கண்ணன், கொம்பன்,
- குணத்தின் (பண்பு) அடிப்படையில் — கரியன், இருளன், நெடியன்,
- தொழிலின் அடிப்படையில் — பாடகன், நடையன்

எனப் பகுபதங்கள் தோற்றம் பெறுகின்றன.

அதேபோல்,

அவன் (அ-அன்), இவள் (இ-அள்), உது (உ-து) என்பவை சுட்டெழுத்துகளை அடிப்படையாகக் கொண்டெழுந்த பகுபதங்கள். அவை முறையே அன் எனும் ஆண்பால் விகுதியையும், அள் எனும் பெண்பால் விகுதியையும், து எனும் அஃறிணை ஒன்றன்பால் விகுதியையும் கொண்டு அவன், அவள், உது என உருவாயின என்பதையும் காண்க. இவ்வாறே அவை, இவை, இது, அது, அவர், உவர் என்பவற்றையும் கொள்க.

எது(எ-து), எவை(எ-வை), யாவர்(யா-அர்) போன்றவை வினா எழுத்துகளின் அடிப்படையில் தோன்றிய பகுபதங்களாகும். முதலெழுத்து வினாவெழுத்தாகவும் அடுத்தவரும் விகுதிகள் முறையே அஃறிணை ஒன்றன்பால், அஃறிணை பலவின்பால், உயர்திணைப் பலர்பால் சார்ந்தும் இச் சொற்கள் ஆக்கப்பட்டிருக்கின்றன என்பது கண்கூடு.

பிறன் (பிற-அன்), மற்றவர் (மற்ற-அர்) ஆகியவை பிற, மற்று போன்ற இடைச் சொற்களிலிருந்து பிறந்த பகுபதங்களாகும்.

## வினைப் பகுபதம்.

வினைப்பகுபதம், தெரிநிலை வினைப்பகுபதம், குறிப்பு வினைப்பகுபதம் என இருவகைப்படும்.

## தெரிநிலை வினைப் பகுபதம்

வினைச் சொற்களிலிருந்து பிறந்து அதனைப் பகுதியாகக் கொண்டு விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் எனும் அறுவகை உறுப்புகளோடோ அல்லது குறைவான உறுப்புகளோடோ இணைந்து பொருள்தரும் சொல் தெரிநிலை வினைப் பகுபதம் எனப்படுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்தான், வருகின்றாள், சிரிக்கிறது, ஓடும் என்பவை தெரிநிலை வினைப் பகுபதங்களுக்கு உதாரணங்களாம். காலம், எண் திணை போன்றவற்றைத் தெளிவாகக் காட்டுந் தன்மை கொண்டவை இவை.

பெயர், இடை, உரிச் சொற்களை அடிப்படையாகக் கொண்டும் தெரிநிலைவினைப் பகுபதங்கள் தோன்றுகின்றன. எனினும் இவை வெகுகுறைவாகவே காணப்படுகின்றன.

பயணமானான் என்பது பயணம் என்ற பெயர்ச்சொல்லை அடித்தளமாகக் கொண்டு தோன்றிய தெரிநிலைவினைப் பகுபதமாகும். சித்திரித்தாள் என்பது சித்திரம் என்ற பெயரடியாகத் தோற்றம் பெற்ற பிறிதொரு தெரிநிலைவினைப் பகுபதம்.'பாவை போன்றாள்." எனுந்தொடரில் வருகின்ற போன்றாள் எனுந் தெரிநிலைவினைப் பகுபதம் போல் எனும் இடைச்சொல்லிலிருந்தும்,

புலி நிகர்த்தான் எனுந்தொடரில் வரும் நிகர்த்தான் என்பது நிகர் எனுமிடைச் சொல்லிலிருந்தும் பிறந்தன என்பதைக் கருத்திற் கொள்க.

அவ்வாறே, சால், மாண் ஆகிய உரிச்சொற்களிலிருந்து சான்றான், மாண்டான் போன்ற தெரிநிலைவினைப் பகுபதங்கள் தோன்றுமாற்றையும் தெரிந்துகொள்க.

## குறிப்பு வினைப்பகுபதம்

தெளிவாகக் காலங்காட்டாது, அவற்றைக் குறிப்பாலுணர்த்தி நிற்கும் சொற்களான, பெரியன், நெடியன், போன்றவை குறிப்பு வினைப்பகுபதங்கள் எனப்படுகின்றன. இவற்றை விரித்துரைக்கின் பெரியனாக அல்லது நெடியனாக இருந்தவன், இருக்கின்றவன், எதிர்காலத்திலும் அவ்வாறே இருக்கப்போகின்றவன் எனப் பொருள் தோன்றும்.

## பெயர்ப் பகுபதத்துக்கும், குறிப்புவினைப் பகுபதத்துக்கு மிடையிலான வேறுபாடுகள்.

பெயர்ப் பகுபதங்களும் குறிப்புவினைப் பகுபதங்களும் பெரும்பாலும் ஒன்று போலவே தெரிகின்றன. அதற்காகக் குழப்பமடைய வேண்டியதில்லை. பெரியன் என்ற பதத்தை எடுத்துக்கொண்டால். பெருமை-அன் பெரியன் என்றாகிறது. பெரியனுக்குத் தம்பி. பெரியனைத் தண்டி, பெரியனால் வழங்கப்பட்டது, பெரியனிடத்துச் சிறந்த பலவிதமான வேற்றுமையுருபுகளை ஏற்கிறது. இதேபோல் நெடியன் என்ற பதத்தையும் நோக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன்படி வேற்றுமையுருபு ஏற்கும் வண்ணம் அப்பதத்தைப் பயன்படுத்துமிடத்து அது பெயர்ச் சொல்லாகிறது. எனவே அது பண்பு எனக் கருத்துகள் கூறுமிடத்து பெரியன் பெயர்ச்சொல்லாகிப் பெயர்ப்பகுபதம் என்ற வகுதிக்குள் சேர்ந்து நிற்கிறது.

அவன் பெரியன், கணபதி நெடியன் என வாக்கியங்கள் அமையும்போது, சொல்லவந்த கருத்து நிறைவு பெறுவதால் பெரியன் நெடியன் என்பவை வினைமுற்றுக்குரிய பணிகளைச் செய்கின்றன. எனவே அவை காலங்காட்டாத குறிப்புவினைப் பகுபதங்களாகி விடுகின்றன.

இதேவேளை, நின்றான் அல்லது ஓடினான் எனும் காலம், எண், திணை, பால் என்பவற்றைத் தெளிவாகப் புலப்படுத்தும் பகுபத வினைமுற்று வேற்றுமை உருபுகளை ஏற்று வினையாலணையும் பெயராக மாற்றமடைகின்றன என்பதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது.

நின்றான் என்ற வினைமுற்றை நோக்குவோமாகில் அச்சொல் அவன் என்ற தோன்றா எழுவாயுடன் நின்று நிறைவான கருத்தைத் தருகிறது. அதேவேளை, நின்றான் என்ற வினைமுற்றுடன் "ஐ" எனும் வேற்றுமை யுருபை இணைத்து நின்றானைக் கண்டாயா எனக் கேட்குமிடத்து நின்றானை என்றபதம் (நின்ற எனும்) செயலாற்றிய ஒரு மனிதனை அடையாளப் படுத்துகிறது. வினையுடன் இணைத்து ஒரு மனிதனோ பொருளோ அடையாளப்படுத்த முயலுமிடத்து அவ்வினைச்சொல் வேற்றுமை உருபையேற்று **வினையாலணையும் பெயராகிறது.**

**"வந்தாரைக் காணல்லயே....**" என்ற திரைப்படப் பாடலிலும்,
**"அடித்தாரைச் சொல்லி அழு"** என்ற தாலாட்டுப் பாடலிலும்,
வருகின்ற வந்தாரை, அடித்தாரை ஆகிய சொற்கள் வினையாலணையும் பெயரை நினைவில் வைத்துக் கொள்வதற்குச் சிறந்த உதாரணங்களாகும்.

## பகாப்பதங்கள்.

பொதுவாக அடிச்சொற்கள் அல்லது வேர்ச்சொற்கள், இடுகுறியாக அமையும் சொற்கள் என்பவை பகாப்பதங்கள் எனலாம். இடுகுறி என்பது எக்காரணமும் கருதாது பொருள் புலப்படவோ அல்லது அடையாளப்படுத்தப்படவோ மாத்திரம் உருவாக்கப்பட்ட சொற்களாகும். உதாரணமாக, கல், மண், மலை, நிழல், மரம், கடல், வான், தீ, வளி, கிளி, காகம், நாய், சிங்கம், நான், நீ போன்ற சொற்கள் எவ்விதக் காரணமுமின்றி உருவானவை. எனவே பகுக்கப்பட முடியாத அவை அனைத்தும் பெயர்ப் பகாப்பதங்கள் ஆகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேபோல், நட, நடி, பார், விழு, ஓடு, பாய், சிரி போன்ற வினைச் சொற்களும் வினைப் பகாப்பதங்கள் என்ற வகைக்குள் வருகின்றன. வேர்ச்சொற்களான இவற்றைப் பிரித்தால் பொருளற்றுப் போய்விடுவதைக் காணலாம். எனவே, இவற்றுடன் பகுபத உறுப்புகளான விகுதி, இடைநிலை போன்றவை இணையும்போதுதான் இவை பகுபதங்களாக மாற்றமடைகின்றன என்பதை நினைவிற் கொள்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3. இடைச்சொற்கள்

இடைச்சொற்கள் பகுக்கப்பட முடியாதவை. எனவே அவை எப்போதும் பகாப்பதங்கள் என்ற வகுதிக்குள் அடங்கி விடுகின்றன.

இடைச்சொற்கள் பெயராகவோ வினையாகவோ அல்லாமல் அவற்றுடன் இணைந்துநின்று பெயர்ச் சொற்களதும், வினைச்சொற்களதும் வலிமையை அதிகப்படுத்திப் பொருள் விளங்க வைக்கும் பணிகளைச் செய்கின்றன. எனினும் இவை தனித்து நிற்கும்போது பொருள் தருவதில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

**இடைச்சொற்களின் பணி**

இடைச் சொற்கள் இல்லையேல் பெயர்ச் சொற்களும் வினைச் சொற்களும் ஏறத்தாழ, செயலற்றுப் போய்விடுகின்றன என்பது ஒப்புக் கொள்ளத்தக்க உண்மை.

பெயர் அல்லது வினைச் சொற்களைச் சொல்லவந்த கருத்துக்கேற்பத் தயார்படுத்துவதும், அவற்றுக்கு இடையிலான தொடர்புகளை மேம்படுத்துவதும் இடைச்சொற்களின் பணிகளாகின்றன. இதன்படி ஒரு சொல்லின் பகுதி தவிர்ந்த அனைத்து ஒட்டுகளும் இடைச்சொற்களே என்பது தெளிவான முடிவாகும்.

நடந்தான் என்ற வினைச்சொல்லை எடுத்துக்கொண்டால் நட என்ற வினையடியைத் தவிர்ந்த அனைத்து இணைவுகளும் இடைச்சொற்கள் சார்ந்தவையே.

கூனி என்ற பெயரை நோக்கின் கூன் எனும் அடிச் சொல்லுடன் இணைந்து வரும் விகுதி "இ" இடைச்சொல்லாகும். காலங்காட்டும் ஒட்டுகள் தொடர்புகளுக்கு வசதிசெய்யும் வேற்றுமைகள் எல்லாம் இடைச்சொற்களாகின்றன.

**பகுதி விகுதி**

ஒரு பதத்தைப் பிரிப்பதாற் பெறக்கூடிய மிகக்குறைந்த பிரிவுகள் பகுதி, விகுதி எனலாம். விகுதியை வைத்து உயர்திணை, அஃறிணை, ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் என்பவற்றைத் தெரிந்து கொள்ள முடிகிறது. அதாவது, இருதிணையையும் ஐம்பாலையும் விகுதியாக வருகின்ற இடைச்சொற்களே அடையாளங் காட்டுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விகுதி**
அவன் என்ற பதத்தை எடுத்தால் அப்பதம், அ-அன் எனவாகிறது. "அ" என்ற பகுதி இடத்தைச் சுட்டுகின்ற எழுத்து என்பதை அறிவோம். அன் எனும் விகுதி உயர்திணையைக் குறிக்கிறது. ஆண்பால் எனவும் காட்டுகிறது.

அவள் என்ற பதத்தின் பிரிவுகளான (அ-அள்) "அ" இடத்தையும், "அள்" பெண்பால் உயர்திணையையுங் காட்டுகிறது. நடந்தான் அல்லது நடந்தாள் என்ற வினைமுற்றில் வருகின்ற "ஆன்" "ஆள்" என்பவையும் இத்தகையனவே.

இவ்வாறே அவர் என்பதைக் கொண்டால் "அர்" என்பது உயர்திணை யையும் பலர்பாலையும் காட்டும் விகுதி. இன்றைய தமிழில் இவ்விகுதி பால்வெளிப்படுத்தாத உயர்திணையாகக் கொள்ளப்படுவதால், அவர் என்ற பதத்துடன் அஃறிணைப் பன்மை விகுதியான "கள்" சேர்த்து அவர்கள் என்கிறோம்.

இப்பதத்தில் அ-அர்-கள் (அவர்கள்) என ஒரு பகுதியும் இரு விகுதிகளும் காணப்படுகின்றன. முந்தைய நாள்களில் அவர் என்ற சொல் ஒன்றுக்கு மேற்பட்ட ஆண்களையோ, பெண்களையோ, அல்லது இருசாராரையுமோ புலப்படுத்தியது. காலப்போக்கில் "அர்" என்பது மதிப்புக்குரியவரைக் குறிக்கும் விகுதியாகக் கொள்ளப்பட, மதிப்புக்குரிய பலரை ஒருமித்து அடையாளப்படுத்துவதற்கு "கள்" விகுதி இணைக்கப்பட்டு அவர், அவர்கள் ஆயிற்று.

**எனினும் பெற்றோர், பெரியோர், மூத்தோர், தந்தையர், சென்றனர், நடந்தனர் போன்ற சொற்கள் "கள்" விகுதி பெறாமலேயே பன்மைத் தன்மையுடன் வழங்கப்படுகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.**

இதேபோல், "மார்" எனும் இடைச்சொல்லும் மரியாதை விகுதியாக வழங்கப்படுகிறது. தாய்மார், மந்திரிமார், மாமன்மார், அண்ணன்மார், ஆசிரியர்மார் எனப் பயன்படுத்தப்படுவதோடு, பிறமொழிச் சொற்களுடன் இணைக்கப்பட்டு டொக்டர்மார், எஞ்சினியர்மார், டெக்னிஷியன்மார் என்றும் பயன்படுத்தப்படுகிறது. இவ்விடைச்சொல் உயர்திணைக்குரிய பன்மைத்தன்மையைக் கொண்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"காரன்" என்ற விகுதி பிற்காலத்தில் உருவாக்கப்பட்டுப் பலவிதத்திலும் பயன்படுத்தப்படுகிறது. காரன் எனும்பதம் "அன்" என்ற துணைவிகுதியை உள்ளடக்கி இருப்பதால் அது ஆண்பால் உயர்திணையைக் குறிக்க, "இ" என்ற பெண்பால் விகுதி இணைக்கப்பட்டு "காரி" எனவாகிப் பெண்பால் உயர்திணையைக் குறிக்கப் பயன்படலாயிற்று. மற்றெல்லா விகுதிகளையும்விட, காரன், காரி விகுதிகள்தாம் அதிக சொற்களுடன் இணைகின்றன எனக் கொள்ளவும் இடமுண்டு.

காவற்காரன், சமையற்காரி, வேலைக்காரி, வீட்டுக்காரன், மீன்காரன், வெள்ளைக்காரன், இந்திக்காரன் எனத் தமிழ்ச்சொற்களிற் தொடங்கி, பொலிஸ்காரன், ஆமிக்காரன், நேவிக்காரன், டெலிபோன்காரன், கேபிள்காரன், றெயில்வேக்காரன் எனப் பிறமொழிச் சொற்களுடனும் தடங்கலின்றி "காரன், காரி" என்பவை இணைந்து செயற்படுவதைக் காணலாம். காரர் எனும் விகுதி பன்மை உயர்திணையைக் குறிக்கப் பயன்படுவதையும் கவனிக்கலாம்.

இதேபோல், தாய்க்காரி, தகப்பன்காரன், அண்ணன்காரன், தங்கைக்காரி, புருஷன்காரன், மாமன்காரன் போன்ற வேண்டாத இணைப்புகளும் விரவிக்கிடக்கின்றன. இவை தமிழுக்குத் தீங்கு தருபவையாகும். எனவே உறவு முறைகளுடன் காரன், காரி விகுதிகளின் இணைப்பைத் தவிர்த்தல் தமிழறிந்தோர் கடமையாகும்.

### அஃறிணை விகுதிகள்

அஃறிணை விகுதிகளான "து" ஒன்றன்பாலையும், "வை" "ன" என்பவை பலவின்பாலையும் சுட்டும் இடைச்சொற்களாகும். அது, இது, வந்தது, நின்றது போன்ற சொற்களையும், அவை, இவை, நின்றன, ஓடின போன்ற சொற்களையும் பிறவற்றையும் இவற்றுக்கு உதாரணமாகக் காட்டலாம்.

## விகுதிகளின் வகைகள்.

இலக்கணநூலார் கூற்றுப்படி,

1. **பெயர் விகுதிகளாக**, அன், ஆன், மன், மான், ன், அள், ஆள், இ, ள், அர், ஆர், மார், கள், ர், து, அர், வை, தை, கை, பி, முன், அல் என்பனவும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. **தொழிற்பெயர் விகுதிகளாக**, தல், அல், அம், ஐ, கை, வை, கு, பு, உ, வி, சி, தி, உள், காடு, பாடு, அரவு, ஆனை, மை, து என்பனவும்,

3. **பண்புப்பெயர் விகுதிகளாக**, மை, ஐ, சி, பு, உ, கு, றி, று, அம், நர் என்பனவும்,

4. **குறிப்பு வினைமுற்று விகுதிகளாக**, அன், ஆன், அள், ஆள், அர், ஆர், அ, டு, து, று, என், ஏன், அம், ஆம், எம், ஏம், ஓம், ஐ, ஆய், இ, இர், ஈர் என்பனவும்,

5. **தெரிநிலைவினைப் பெயரெச்ச விகுதிகளாக**, அ, உம் என்பனவும்,

6. **குறிப்புவினைப் பெயரெச்ச விகுதியாக** அ வும்,

7. **தெரிநிலை வினையெச்ச விகுதிகளாக**, இ, உ, பு, ஆ, ஊ, என, அ, இன், ஆல், கால், ஏல், எனின், ஆயின், ஏனும், கு, இய, இயர், வான், பான், பாக்கு, கடை, வழி, இடத்து, உம், மல், மை, மே என்பனவும்,

8. **குறிப்பு வினையெச்ச விகுதிகளாக**, அ, றி, து, ஆல், மல், கடை, வழி, இடத்து என்பனவும்,

9. **பிறவினை விகுதிகளாக**, வி, பி, கு, சு, டு, து, பு, று என்பனவும்,

இன்னும் பலவும் உளவென அறியலாம்.

எனினும், இவ்வாறு விகுதிகள் நூற்றுக்கணக்காக இருப்பதுபற்றித் தமிழ் மாணவர் எவரும் அஞ்சத் தேவையில்லை. ஏனெனில் இவற்றை நாம் பேச்சு வழக்கிலும் எழுத்துநடையிலும் எம்மையறியாமல் அன்றாடம் மிகச்சரியாகப் பயன்படுத்திக் கொண்டுதான் வருகிறோம். நாம் பிரித்து அடையாளம் காட்டாமற் பயன்படுத்துகிறோம்: இலக்கணநூலார் மொழிவளங்கருதி நுணுக்கமாக அவதானித்து அவற்றுக்கு அடையாளம் தந்திருக்கிறார்கள், அவ்வளவுதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இடைநிலை.**

ஒரு பகுபதத்தில் பகுதி, விகுதி என்பவற்றுக்கு அடுத்தபடியாக முக்கிய இடம் வகிப்பவை இடைநிலைகளாகும். விகுதியானது திணை, பால் எண், இடம் என்பவற்றைக் காட்டுவதுபோல் வினைச் சொற்களுடன் இணைந்துவருகின்ற இடைநிலைகள் காலத்தைக் காட்டுகின்றன. பெயர்ச்சொற்களிடையே வருகின்ற இடைநிலைகள் காலங்காட்டுவதில்லை.

இவற்றின் தன்மையைக் கொண்டு அறிஞர்கள் மூவகைப் படுத்தியுள்ளனர். அவை பெயர் இடைநிலை, வினை இடைநிலை, எதிர்மறை இடைநிலை என்பவையாம்.

**பெயர் இடைநிலைகள்:**

இவை பெயர்ச்சொற்களின் பகுதி, விகுதிகளுக்கு இடையே வருகின்றதெனினும் காலங்காட்டுவதில்லை. உதாரணமாக, அறிஞன், வலைஞன், சுவைஞன் என்பவற்றில் வருகின்ற "ஞ"கர மெய் இடைநிலை எனப்படுகிறது. அதேபோல் வலைச்சி என்ற பகுபதத்தில் வருகின்ற "ச்", குறத்தி, வண்ணாத்தி ஆகிய பகுபதங்களிடையே வருகின்ற "த்" என்பன இடைநிலைகளாகும்.

இவை உண்மையில் இடைநிலைச் சொற்கள்தாமா என்ற மயக்கம் எழுவதற்கும் வாய்ப்பு இல்லாமலில்லை. இவை தனியெழுத்தாக அமைவதும், உடம்படு மெய்போல் தோற்றமளிப்பதும் இத்தகைய மயக்கத்துக்கு ஏதுவாகின்றன. உடம்படு மெய் என்பது வேறு: இடைநிலை என்பது வேறு என்பதைத் தெளிவுற உணர்ந்தால் மயக்கம் தோன்றுதற்கு வாய்ப்பில்லை. இது புணரியல் தொடர்பான விதிகளைச் சார்ந்ததாகும்.

"அறி" எனும் பகுதியும் "அன்" எனும் ஆண்பால் விகுதியும் இணையுமாயின், இலக்கணநூல் விதிப்படி "ய"கர மெய்யே தோன்றும். இதன்படி அறியன் என்றே இணைவு உருவாகும். இதேபோல் ஏனைய சொற்களும் வலையன், கலையன், சுவையன் என்றே தோற்றம்பெறும். இதேவழியில் வலைச்சி, குறத்தி, வண்ணாத்தி போன்ற பதங்களை எடுத்துக்கொண்டால் பெண்பால் விகுதியான "இ" வந்து இணையுமிடத்து அச் சொற்கள் முறையே வலையி, குறவி வண்ணாயி என்றே மாற்றம் பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் பகுதியுடனோ விகுதியுடனோ எந்தத் தொடர்பும் இல்லாத ஞகரமெய், சகரமெய், தகரமெய் என்பவற்றை ஏற்று அவை இணைவதால், அவற்றால் ஏற்கப்படுகின்ற எழுத்துகளை இடைநிலைச் சொற்கள் என்பர் இலக்கணஅறிஞர்.

**வினை இடைநிலைகள்:**

வினை இடைநிலைகள் காலங்காட்டும் இயல்புடையன. இதற்கேற்ப இவற்றை இறந்தகாலவினை இடைநிலைகள், நிகழ்காலவினை இடைநிலைகள், எதிர்காலவினை இடைநிலைகள் என மூவகைப் படுத்தலாம்.

**இறந்தகாலவினை இடைநிலைகள்:**

இறந்தகால வினை இடைநிலைகளாக த், ட், ற், இன் என நான்கும் கொள்ளப்படுகின்றன. இவ்விடை நிலைகளை ஏற்பதனால் மட்டுமே வினைச்சொற்கள் இறந்தகாலத்தைத் தெரிவிக்கும் இயல்பைப் பெறுகின்றன.

**உதாரணமாக:**

செய் - த் - ஆன், கொய் - த் - ஆள் என்பவற்றை நோக்கினால், செய், கொய் என்பவை பகுதிகளாகவும், ஆன், ஆள் என்பவை ஆண்பால், பெண்பால் விகுதிகளாகவும் அமைய இவற்றை இணைத்துக் காலங்காட்டும் இடைநிலையாக "த்" செயற்பட்டிருக்கிறது.

உண் -ட் - ஆன், கண் - ட் - ஆன் ஆகிய சொற்கள் முறையே உண்டான், கண்டான் என உருவாகி இறந்தகாலத்தைத் தருவதற்கு "ட்" காலங்காட்டும் இடைநிலையாகச் செயற்பட்டிருக்கிறது.

இதேபோல், தின்றான் என்ற பகுபதத்தில் தின்-ற்-ஆன் என "ற்" இடைநிலையாகவும், பாடினான், ஓடினான் போன்ற சொற்களில் பாடு-இன்-ஆன், ஓடு-இன்-ஆன் என "இன்" இடைநிலையாகவும் நின்று காலங்காட்டுகின்றன.

போனான் (போ-ன்-ஆன்) என்ற பதத்தில் "இன்" இடைநிலைக்கு இகரம் குறைந்து "ன்" என்பது மட்டுமே இடைநிலையாகிறது. அதேபோல் போயது என்ற இறந்தகாலம் காட்டும் பதத்தில் "ய்" இடைநிலையாகச் செயல்படுவதையும் அவதானிக்கலாம். எனினும் இவை அரிதான நடைமுறைகள் என்பது கவனிக்கத்தக்கன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிகழ்கால வினை இடைநிலைகள்:

கின்று, கிறு, ஆநின்று எனமூன்றும் நிகழ்கால வினை இடைநிலைகளாம்.
வருகின்றான், போகின்றான், நிற்கின்றாள், செல்கின்றது, மேய்கின்றன போன்ற நிகழ்காலச் சொற்களில் "கின்று" இடைநிலையாக நிற்பதை உணரலாம். (வரு-கின்று-ஆன். போ-கின்று- ஆன்.)

வருகிறது, போகிறது, உணர்கிறாள், பாய்கிறான் ஆகிய பதங்களில் "கிறு" இடைநிலையாக நின்று நிகழ்காலங் காட்டுவதை அறியலாம். (வரு-கிறு-அது. உணர்-கிறு- ஆள்.)

நடவாநின்றான், செல்லாநின்றாள் ஆகிய பதங்களில் "ஆநின்று" இடைநிலைகளாக இயங்கி நிகழ்காலங் காட்டுவதைத் தெரிந்து கொள்ளலாம். (நட- ஆநின்று-ஆன். செல்-ஆநின்று-ஆள்.).

## எதிர்கால வினை இடைநிலைகள்:

"ப்" "வ்" ஆகிய இரண்டும் எதிர்கால வினைக்குரிய இடைநிலைகளாகச் செயற்படுகின்றன. நடப்பான், இருப்பான், செல்வாள், தருவான் எனுஞ் சொற்களைக் கொண்டு இதனை அறியலாம்.

நட-ப்-ப்-ஆன், தரு-வ்-ஆள் எனப் பிரித்தறிந்து எதிர்கால வினை இடைநிலைகளை உணரலாம்.

முக்கிய குறிப்பு: வருக, கொணர்க, செல்க, வருமின், கொணர்மின், செல்மின், எழுமின் ஆகியன எதிர்கால வினைகளாயினும் இவற்றில் இடைநிலைகள் காணப்படுவதில்லை. பகுதி, விகுதி ஆகிய இரண்டுமே இப்பகுபதங்களில் காணப்படுகின்றன. கொணர்-க, வரு-மின் என்பவற்றை நோக்குக. எனினும் இப்பதங்களில் காலங்காட்டும் பொறுப்பை விகுதிகளான "க", "மின்" என்பவை ஏற்றிருப்பது கவனிக்கத்தக்க அம்சமாகும்.

## எதிர்மறை இடைநிலைகள்:

"தனது கடமைகளை அவன் செய்யாது காலங்கடத்தினான்." எனவரும் வாக்கியத்தில் வருகின்ற செய்யாது என்ற பதம் செய்-ஆ-து என வகுக்கப்படுவதனால் "ஆ" எதிர்மறை இடைநிலையாகக் கொள்ளப்படுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேபோல் வரமாட்டாள், செய்யமாட்டாள் ஆகிய பதங்களில் வருகின்ற மாட்டு(-ஆள்) என்பதும் எதிர்மறை இடைநிலை என்பர் இலக்கண அறிஞர்.

**சாரியை:**

பகுபதமொன்றில் பகுதி, விகுதி, இடைநிலை என்பவற்றுக்கு அடுத்தடியாக முக்கியத்துவம் பெறுவது சாரியை ஆகும்.

பண்டைய தமிழ்வழக்கில் ஏறத்தாழ இருபது வகையான சாரியைகள் கையாளப்பட்டிருந்தன என்பர் அறிஞர். எனினும் இன்றைய வழக்கில் அன், அம், அத்து, அற்று, இன் எனக் குறைவான எண்ணிக்கைச் சாரியைகளே வழக்கிலிருக்கின்றன.

சாரியையை இலகுவாக அடையாளங் கண்டுகொள்ளலாம். புளி + பழம் = புளிப்பழம் என்றே இணைந்திருக்க வேண்டும். ஆனால் மரபுரீதியாக புளியம்பழம் என்றே சொல்கிறோம். புளிப்பழம் என்று சொன்னால் அது வேடிக்கையாகி விடும்.

ஆறு + கரை இணைவை ஆற்றுக்கரை என்று சொல்வதில்லை. ஆற்றங்கரை என்றே சொல்கிறோம்.

ஆற்றுக்கரை ஆற்றங்கரை (ஆறு-அம்-கரை ஆ-ற்-று-அம்-கரை) ஆவதற்கும், புளிப்பழம் புளியம்பழம் (புளி-அம்-பழம்) ஆவதற்குமான காரணம் இச்சொற்கள் இணையும்போது “அம்” என்பது இடையிற் புகுவதுதான். இதனைச் சாரியை என அழைப்பர்.

மரமை வெட்டினார்கள் என்று கூறாமல் மரத்தை (மரம்-அத்து-ஐ) வெட்டினார்கள் எனக் கூறுவதன் காரணம் “அத்து“ சாரியை இணைவதுதான்.

இதேபோல், குடத்தை உடைத்தாள், பணத்தை எடுத்தார், தனத்தைக் கொடுத்தான், சிரத்தைச் சீவினான், குணத்தால் உயர்ந்தவன் போன்றவற்றில் காணப்படும் குடத்தை, பணத்தை, தனத்தை, சிரத்தை, குணத்தால் என்பவையும் “அத்து” சாரியை பெற்ற சொற்களே.

சில-ஐ, சில-அற்று-ஐ ஆகி சிலவற்றை எனவாவதற்கும், பல-ஐ, பல-அற்று-ஐ ஆகிப் பலவற்றை என உருவாவதற்கும் “அற்று” சாரியை துணை நிற்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்தாள், வந்தான் ஆகிய சொற்கள் நடந்தனள், வந்தனள் என்றும் வழங்குமிடத்து "அன்" சாரியை உதவுகிறது. நட-ந்-த்-அன்-அள் என்பவற்றின் இணைவே நடந்தனள் என்ற பதத்தைத் தருகிறது என்பதைத் தெரிந்து கொண்டால் "அன்" சாரியையின் பயன் விளங்கும்.

வீடு-கு வீட்டுக்கு என வருவதுண்டு. அதேவேளை வீடு-இன்-கு என "இன்" சாரியை பெற்று வீட்டிற்கு என இணைவதுமுண்டு. சிறப்பு-ஐ சிறப்பை என அமையும். அதேபோல் சிறப்பு-இன்-ஐ எனவந்து சிறப்பினை எனவும் அமையும். இவை "இன்" சாரியையால் விளையும் மாற்றங்கள். இவ்வாறே, சிறப்புக்குரிய என்பது இன்சாரியை பெற்று சிறப்பிற்குரிய என்றும், கல்வியை என்பது கல்வியினை எனவும் எழுதப்படுவதுண்டு.

## சந்தி:

பகுதி, விகுதி, இடைநிலை ஆகிய உறுப்புகள் இணையும்போதும் இரு சொற்கள் இணையும்போதும் தோன்றுகின்ற எழுத்து சந்தி எனப்படும் எனப் பேராசிரியர் எம்.ஏ.நுஃமான் கூறுகிறார்.

ஆறுமுகநாவலர் அவர்களோ, சந்தி என்பது புணரியலிற் சொல்லப்படுவனவாகிய தோன்றல் முதலிய புணர்ச்சி விகாரங்களாம் என்கிறார்.

இகரத்துடன் ஐகாரம் இணையும்போது தோன்றும் யகரமும், (குருவி-ஐ-- குருவியை) உகரத்துடன் ஐகாரம் இணையுமிடத்துத் தோன்றும் வகரமும் (பசு-ஐ-பசுவை) வல்லினம் வருமொழியின் முதலெழுத்தாகு மிடத்துத் தோன்றும் வல்லின மெய்யும் (பாடி-ச்-செல், கை-ப்-பிடி) சந்திகளே என்கிறார் பேராசிரியர் எம்.ஏ.நுஃமான்.

பண்டைய அறிஞர்களின் கூற்றுப்படி (பிடி-த்-த்-அன்-அன்) பிடித்தனன் எனுஞ்சொல்லில் தகர மெய்களில் இரண்டாவதாக வருகின்ற தகரமெய் சந்தி எனப்படுகிறது. எனவே இவை அனைத்தையும் அறிந்திருப்பது தமிழிலக்கண வளத்துக்குச் சிறப்பாகும்.

## விகாரம்:

விகாரம் என்பது சொற்களின் இணைவின்போது நிலைமொழியின் எழுத்துகளில் ஏற்படுகின்ற மாற்றங்கள் எனலாம். இம்மாற்றம் தோன்றல், திரிதல், கெடுதல் என மூவகைப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தோன்றல்:

இரு பதங்கள் இணையும்போது இடையில் எழுத்து தோன்றுமாயின் அது தோன்றல்வகை விகாரமாகும்.
கடை-தெரு கடைத்தெரு எனவமையும்போது "த்" தோன்றுகிறது. புரட்சி-பெண் என்பது புரட்சிப்பெண் எனவாகுமிடத்து "ப்" தோன்றுகிறது.

## திரிதல்:

மொழிகள் இணையுமிடத்து ஓரெழுத்து வேறோர் எழுத்தாக மாறுமாயின் அது திரிதல் விகாரம் எனப்படுகிறது.
உதாரணம்: மரம் + கொத்தி புணரும்போது மகரமெய் ஙகரமெய்யாகத் திரிபடைந்து மரங்கொத்தி என்றாதலைக் காண்க. பனங்காய், மனங்கள், தீஞ்சுவை போன்ற சொற்களையும் எடுத்துக் கொள்ளலாம்.

## கெடுதல்:

மரம் + வேர் இணையும்போது மகரமெய் அற்றுப்போய் மரவேர் எனவாதலை உதாரணமாகக் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4. வேற்றுமை.

வாக்கியம் ஒன்றில் வருகின்ற பெயர்ச்சொற்களின் நிலையை அல்லது நோக்கத்தை வெளிப்படுத்துபவையாக வேற்றுமைகள் அமைகின்றன. வேற்றுமை உருபுகளைப் புறந்தள்ளின், சொல்ல வந்த கருத்துகள் முழுமையடையாமற் போய்விடவுங் கூடும்.

வேற்றுமைகள் எட்டு என்பர் இலக்கணநூலார். எட்டைவிட அதிகம் எனக் கூறுபவர்களும் உளர். மூன்றாம் வேற்றுமையை இரண்டாகக்கொள்ள இடமுண்டு என்பர் இவர்கள். எனினும், தொல்காப்பியம் நன்னூல் என்பவை வேற்றுமைகள் எட்டு என்கின்றன. ஆறுமுகநாவலர் அவர்களும் தமது இலக்கணச் சுருக்கத்தில் வேற்றுமைகள் எண்வகைத்தன என்பதையும் கருத்திற் கொள்வோம். இனி அவற்றைப் பார்ப்போம்.

## முதலாம் வேற்றுமை.

முதலாம் வேற்றுமைக்கு உருபுகள் எவையுங் கிடையா. இதனை எழுவாய் வேற்றுமை என்றும், பெயர் வேற்றுமை என்றும் அழைப்பர். வாக்கியத்தில் எழுவாயாக வருகின்ற பெயர்ச்சொல் எவ்வித மாற்றமுமின்றி அமைவது இதன் சிறப்பு.

**கணபதி வந்தான்.**
**சுந்தரன் பாடினான்.**

என்பவற்றில் வருகின்ற கணபதி, சுந்தரன் ஆகியவற்றை முதலாம் வேற்றுமைக்கு உதாரணமாகக் கொள்ளலாம்.

ஆயினும் கணபதியானவன் வந்தான், கணபதியென்பவன் வந்தான், என இவற்றைக் கையாள முடியுமெனினும் இவ்விணைப்புச் சொற்கள் வேற்றுமையின் பாற்படா என்கிறார் ஆறுமுகநாவலரவர்கள். இவ்வுருபுகள் கையாளப்படுவது மிகக் குறைவெனினும், அவை சிறுபான்மையாக ஐம்பாலுக்கும் பொருந்தி வருகின்றன என்பதை நினைவிற் கொளல் நன்று.

## இரண்டாம் வேற்றுமை.

இதன் உருபு "ஐ" ஆகும். பெயர்ச் சொல்லொன்றுடன் இவ்வுருபு இணைவதால் அச்சொல் செயப்படுபொருள் என்ற நிலையை எய்துகிறது. எனவே இதனைச் செயப்படுபொருள் வேற்றுமை எனவுங் கூறுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பி பாடத்தைப் படித்தான். இந்த வாக்கியத்தில் தம்பி எழுவாய் வேற்றுமையாக வருகிறது. தம்பி என்ற பெயர்ச்சொல் எந்த மாற்றத்துக்கும் உட்படவில்லை. பாடம் என்ற சொல் "ஐ" உருபு பெற்றுச் செயப்படு பொருளாகிறது.

யார் படித்தான் என்ற கேள்விக்கு தம்பி என்பது பதிலாக வருகிறது. எனவே தம்பி எழுவாய் எனப்படுகிறது. விரிவாகக்கூறின், தம்பி என்ற பெயர்ப்பதத்திலிருந்தே இவ்வாக்கியம் எழுகிறது எனலாம்.

எதைப் படித்தான் என்ற வினா எழுமாயின் பாடத்தைப் படித்தான் என்பது விடையாகிறது. எனவே இங்கு பாடத்தை என்பது செயப்படு பொருளாகிறது.

இரண்டாம் வேற்றுமையான "ஐ" உருபை ஏற்றுச் செயப்படுபொருள் என்ற நிலையைப் பெயர்ச்சொல் அடையுமிடத்து அது ஆக்கல், அழித்தல், அடைதல், நீத்தல், ஒத்தல், உடைமை ஆகிய ஆறுவகைக் கருத்துகளை வலியுறுத்தப் பயன்படுகிறது.

## ஆக்கப்படுபொருள்

குயவன் குடத்தை வனைந்தான், தம்பி பாடத்தைப் படித்தான் போன்ற வாக்கியங்களில் வருகின்ற "ஐ" உருபு பெற்ற பெயர்ச்சொற்களான குடத்தை. பாடத்தை என்பவை ஆக்கப்பணி நோக்கிய கருத்தில் அமைகின்றன. எனவே இவை ஆக்கப்படுபொருள் அல்லது ஆக்கற்பொருள் எனப்படுகின்றன.

## அழிக்கப்படுபொருள்.

குடத்தை உடைத்தான், படத்தைக் கிழித்தான், காட்டை அழித்தான், மரத்தை வெட்டினான் போன்ற வாக்கியங்களில் வருகின்ற செயப்படுபொருள்களான குடத்தை, படத்தை, காட்டை, மரத்தை ஆகியவை அழிவுநோக்கிய கருத்திற் பயன்படுத்தப்படுவதால் அழித்தற்பொருள் அல்லது அழிக்கப்படுபொருள் எனப்படுகின்றன.

## அடையப்படுபொருள்.

இலக்கை எய்தினான், பதக்கத்தை வென்றான், பாடசாலையை அடைந்தான், பதவியைப் பெற்றான் ஆகிய வாக்கியங்களில் வருகின்ற இலக்கை, பதக்கத்தை, பாடசாலையை, பதவியை போன்ற சொற்கள் அடையப்படுகின்ற நோக்கில் வருவதால் அவை அடைதற்பொருள் அல்லது அடையப்படுபொருள் எனப் பெயர்பெறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீக்கப்படுபொருள்.

கல்வியைத் தொடரமறுத்தான், ஊரை விட்டேகினான், நகரத்தை நீங்கினான், உலகைப் பிரிந்தான், ஆகிய வாக்கியங்களில் வருகின்ற கல்வியை, ஊரை, நகரத்தை, உலகை எனுஞ்சொற்கள் துறத்தல் அல்லது நீங்குதல் எனும் கருத்துக்காகப் பயன்படுத்தப்படுவதால் நீக்கப்படுபொருள் அல்லது துறத்தற்பொருள் எனவழைக்கப்படுகின்றன.

## ஒக்கப்படுபொருள்.

பொன்னை ஒத்த வண்ணத்தாள், புலியை நிகர்த்த வீரன், மானைப் போன்ற விழியாள், மேகத்தையொத்த கூந்தல் போன்ற வாக்கியங்களில் வருகின்ற செயப்படு பொருள்களான பொன்னை, புலியை, மானை, மேகத்தை ஆகியன ஒப்புமைகாட்டும் நோக்கில் பயன்படுவதால் ஒத்தல் அல்லது ஒக்கப்படுபொருள் எனவிவை பெயர்பெறுகின்றன.

## உடைமைப்பொருள்.

கல்வியை உடையோன். பணத்தைக் கொண்டிருப்பவன். நாட்டை ஆள்கின்றான் ஆகிய வாக்கியங்களில் வரும் கல்வியை, பணத்தை, நாட்டை போன்ற செயப்படுபொருட் பதங்கள் உடைமையைக் குறிக்கப் பயன்படுவதால் அவை உடைமைப்பொருள் எனப்படுகின்றன.

## சிறப்புக்குறிப்பு:

இரண்டாம் வேற்றமையேற்று வருகின்ற பெயர்ச்சொற்களைப் பேராசிரியர் எம்.ஏ.நுஃமான் வேறோரு விதத்திலும் பகுத்துக் காட்டுகிறார். குறிப்புப்பெயர், குறிப்பிலாப்பெயர் என்பவையே அவை.

## குறிப்புப் பெயர்:

நான் கண்ணனைக் கண்டேன்.
மாலா அம்மாவை அழைத்தாள்.
வீட்டுக்குப் பின்னால் நின்ற தென்னையை வெட்டினேன்.

ஆகிய வாக்கியங்களில் சந்தேகத்துக்கு இடமில்லாமல் இரண்டாம் வேற்றுமை ஏற்கும்பதம் அடையாளப்படுத்தப்படுகிறது. அதாவது சிறப்பாக ஒன்றைக் குறித்துப் பேசுகிறது. கண்ணனை, அம்மாவை, (பின்னால் நின்ற) தென்னையை ஆகியபதங்கள் தெளிவான ஒன்றைச் சுட்டிநிற்கின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறிப்பிலாப்பெயர்.

கந்தசாமி மரம் (மரத்தை) வெட்டினான்.
தங்கை நகையைத் தொலைத்தாள்.
பொலிசார் குற்றவாளிகளைக் கைது செய்வர்.
ஆகிய வாக்கியங்களில் எந்த மரம், எந்த நகை, எந்தக் குற்றவாளி என்பதற்குத் தெளிவான விளக்கம் இல்லை. எனவே இவை குறிப்பிலாப்பெயர்கள் எனப்படுகின்றன.

பொதுவாகக் குறிப்பிலாப்பெயர்கள் அஃறிணையாக அமையுமிடத்து "ஐ"உருபை வெளிப்படையாக ஏற்காது போகவுங்கூடும். உ-ம்: கந்தசாமி மரம் வெட்டினான், தம்பி பாடம் படித்தான். இவற்றில் மரத்தை, பாடத்தை என வரவேண்டிய செயப்படுபொருள் மரம் என்றும் பாடம் என்றும் வருவதைக் கவனிக்கலாம்.

எவ்வாறெனினும், குறிப்புப்பெயர், குறிப்பிலாப்பெயர் என்பவற்றையும் தெரிந்து வைத்திருப்பது மொழித்திறனுக்குச் சிறப்பைத் தரும்.

## மூன்றாம் வேற்றுமை.

ஆல், ஆன், ஒடு, ஓடு, உடன் என்பவை மூன்றாம் வேற்றுமை உருபுகளாகக் கொள்ளப்படுகின்றன.
ஆல், ஆன் இரண்டும் கருத்தாப்பொருளிலும் கருவிப்பொருளிலும் பயன்படுத்தப்படுகின்றன. கருத்தாப் பொருளில் **வருகையில் இயற்றுதற் கருத்தா, ஏவுதற்கருத்தா என இருவகைப்பட்டும், கருவிப் பொருளில் வரும்போது முதற்கருவி, துணைக்கருவி என இருவகைப்பட்டும் பொருள் தருகின்றன.** .

தற்காலத்தில் ஆன் உருபு பொதுவாகப் பயன்பாட்டினின்றும் அருகிப் போய்விட்டதால் ஆல் உருபு மாத்திரமே நான்குவகைத்தும் செயற்படுகின்றன.
உதாரணங்கள்:

## கருத்தாப்பொருள்.

இது இயற்றுதற் கருத்தா, ஏவுதற் கருத்தா என இருவகைப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயற்றுதற்கருத்தா

தச்சனால் கட்டப்பட்ட வீடு, கணபதியால் செய்யப்பட்ட பொம்மை, திருக்குறள் திருவள்ளுவரால் இயற்றப்பட்டது ஆகிய வாக்கியங்களில் தச்சன், கணபதி, திருவள்ளுவர் ஆகிய கருத்தாக்கள் நேரடியாகச் செயற்பட்டிருப்பதால், ஆல் உருபு இயற்றுதற் கருத்தாப் பொருளைக் கொண்டிருக்கிறது என்பர் இலக்கணநூலோர்.

## ஏவுதற்கருத்தா.

இராஜராஜசோழனால் கட்டப்பட்ட பெருங்கோயில், அரசால் வகுக்கப்பட்ட திட்டம், ஆகிய வாக்கியங்களில் மன்னனோ அரசோ பொருள்வழாங்கப் பிறராற் பணி நிறைவேற்றப்படுவதால், அவை ஏவுதற்கருத்தா எனப்படுகின்றன.

## கருவிப்பொருள்

## முதற்கருவி.

மண்ணாலான பாத்திரம், தங்கத்தாலான காப்பு, மரத்தாற் செய்த கதவு என்பவற்றை நோக்கின், மண், தங்கம் மரம் என்பவையே பொருள் தோன்றுவதற்கு முதற்பொருளாக அமைந்ததனால் அவை முதற்கருவி எனப்படுகின்றன.

## துணைக்கருவி.

இயந்திரத்தால் செய்யப்பட்ட நகை, வாளால் அறுக்கப்பட்ட மரம் என்பவற்றில் ஆல் உருபு பெறுகின்ற இயந்திரம், வாள் என்பவை துணையுபகரணங்களாகச் செயற்படுவதனால் துணைக்கருவி எனப்படுகின்றன.

வாள் கொண்டு மரத்தை வெட்டினான், இயந்திரத்தின் மூலம் செய்யப்பட்ட நகை என வாக்கியங்கள் அமைகின்றபோதில் கொண்டு. மூலம் ஆகிய சொற்கள் ஆல் உருபுக்குரிய பணிகளைச் செய்கின்றன. எனவே இவையும் மூன்றாம் வேற்றுமை உருபு சார்ந்தவையே என்பர் அறிஞர்.

அவன் சந்தோஷத்தால் துள்ளிக்குதித்தான், மாலா கவலையால் சோர்ந்து போனாள் ஆகிய வசனங்களில் வருகின்ற ஆல்உருபு உணர்வுப்பொருளிலும்,அவன் வேலையால் இப்போதுதான் வந்தான், நான் கொழும்பால் வருகிறேன் ஆகிய வசனங்களில் ஆல் உருபு நீங்கற்பொருளிலும் வருகின்றன என்பதை அறிந்து கொள்வது சிறப்புச்சேர்க்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாம் வேற்றுமையின் மற்றைய உருபுகளான **ஒடு, ஓடு, உடன்** என்பவை உடனிகழ்வுக் கருத்துகளை முன்வைக்க உதவகின்றன.

கணவனொடு மனைவி சென்றாள். (ஒடு)
நண்பனோடு அவன் விளையாடினான். (ஓடு)
இராமுவுடன் சோமன் வந்தான். (உடன்)

சில இடங்களில் இவ்வுருபுகள் **அடைமொழிப் பொருளாகவும்** பயன்படுத்தப்படுவதுண்டு.

அன்போடு பார்த்தான்.
பசியொடு அலைந்தான்.
கோபத்துடன் எழுந்தான். போன்றவற்றை உதாரணங்களாகக் கொள்ளலாம்.

**கலப்புறுப்பொருள் நிலைக்கும்** இவ்வுருபுகள் பயன்படுத்தப்படுகின்றன.

பாலொடு தேன்கலந்தாற் போல.
பயிரோடு களையும் வளர்ந்தது.

சிரிப்புடன் அழுகையும் வந்தது. போன்றவற்றை உதாரணங்களாகக் கொள்ளலாம்.

**கூட்டல் அல்லது சேர்த்தற்** பொருளிலும் இவ்வுருபுகள் பயன்படுவதுண்டு.

பத்தொடு பதினொன்றாய்...
ஐந்தோடு மூன்றைக் கூட்டு...
சம்பலுடன் தோசை சாப்பிட்டேன். என்பவற்றை எடுத்துக்காட்டுகளாகக் கொள்ளலாம்.

**இடந்தொடர்பான தெளிவுப்பொருளிலும்** இவ்வுருபுகள் பயன்படுகின்றன.

அவர் இடமாற்றம் பெற்று ஊரொடு போய்விட்டார்.
ஓய்வுபெற்ற அப்பா இப்போது வீட்டோடுதான் இருக்கிறார்.
அவர் பொழுது வயலுடன்தான் கழிகிறது. என்பவற்றை நோக்கலாம்.

**வரையறைப்பொருளிலும்** இவ்வுருபுகள் செயற்படுவதுண்டு.

வருகிற சித்திரையோடு மாமா ஓய்வுபெறுகிறார்.
கடந்த ஆண்டுடன் படிப்பு முடிந்துவிட்டது.
ஐந்து இடியப்பத்துடன் அவர் திருப்தியடைந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றுடன், இரவோடுஇரவாக, காதோடுகாதாக, கதையோடு கதையாக, தோளோடுதோளாக, பணத்துடன்பணமாக என வருகின்ற இடங்களிலும் மூன்றாம் வேற்றுமை உருபுகளான ஓடு, உடன் என்பவை பயன்படும் விதங்களையும் தெரிந்து கொள்வது தமிழறிவை மேம்படுத்தும் எனலாம்.

## நான்காம் வேற்றுமை.

நான்காம் வேற்றுமை உருபு "கு" என்பதாகும். கொடை நோக்கத்துக்காக இவ்வுருபு அதிகம் பயன்படுத்தப்படுவதால் இதனைக் கொடைவேற்றுமை எனவும் அழைப்பர்.

**கொடை, பகை, நட்பு, தகவு, அதுவாதல், காரணம்** முதலிய கருத்துகளுக்கு நான்காம்வேற்றுமை உருபு பயன்படுகிறது.

இவ்வுருபு **இன், அன், அக்(கு), உக்(கு) ஆகிய சாரியைகளைப் பெற்றும், சாரியையெதுவும் பெறாமலும்** தன்பணியைச் செய்யுமியல்புடையது.

- வீட்டிற்கு, காட்டிற்கு என்பவற்றில் இன் சாரியை பெற்று வருகிறது.
- எதற்கு, அதற்கு, இதற்கு என்பவற்றில் அன் சாரியை பெற்று நிற்கிறது.
- நமக்கு, எமக்கு உனக்கு போன்ற இடங்களில் அக்(கு) சாரியை ஏற்கிறது
- அண்ணாவுக்கு, மாமாவுக்கு, தாத்தாவுக்கு என வருமிடத்து உக்(கு) சாரியை பெறுகிறது.
- வீட்டுக்கு, காட்டுக்கு, எதுக்கு, அதுக்கு, இதுக்கு என்பவற்றில் சாரியை ஏற்காமல் கருத்தைத் தருகிறது.

இனி நான்காம் வேற்றுமையுருபு எவ்வெப் பொருள்களில் பயன்படுகின்றது என்பதைப் பார்ப்போம்.

### கொடைப்பொருள்:

- அம்மா குழந்தைக்குப் பால் கொடுத்தார்.
- செல்வந்தர் ஏழைகளுக்கு உணவிட்டார்.
- அரசு மக்களுக்கு வசதிகளைச் செய்து கொடுத்தது.

### பகைப்பொருள்:

- பாம்புக்குக் கீரி எதிரி.
- அண்ணனுக்குத் தம்பியைப் பிடிக்காது.
- அவனுக்கு உன்மீது கோபம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நட்புப்பெருள்: அல்லது நேர்ச்சிப்பொருள்:

- மாமாவுக்கு மணி உதவினான்.
- எனக்கு நவசோதிராசா நண்பன்.
- அவனுக்கு மகள்மேல் அதிகபாசம்.

### முறைப்பொருள்:

- அவர் என் அம்மாவுக்குத் தம்பி.
- அப்பாவுக்குப் பிள்ளையாக நடந்துகொள்கிறான்.
- அண்ணாவுக்கு மனைவியெனில் அவர் எனக்கு அண்ணி.

### தகுதிப்பெருள்:

- கற்றோர்க்கு அழகு பண்பு பேணல்.
- அரசருக்கு உரிய சிம்மாசனம்.
- படிப்புக்கு ஏற்ற வேலை கிடைப்பது முயற் கொம்பாகிற்று.

### முதற்காரணப்பொருள் அல்லது அதுவாதல்நிலை:

- தாலிக்குப் பொன் உருக்கினார்கள்.
- கறிக்கு வாங்கப்பட்ட மீன்.
- சிற்பத்துக்கு ஏற்ற பாறை.

### துணைக்காரணப்பொருள்:

- கூலிக்கு வேலை செய்தான்.
- குழந்தைக்குப் பால் வாங்கினாள்.
- சுவருக்கு வர்ணம் பூசினர்.

இவற்றுடன் மேலதிகமாகப் பின்வரும் பொருள்களிலும் பயன்படுகின்றது.

### எல்லைப்பொருள்:

- இந்தியாவுக்குத் தெற்கே இலங்கை அமைந்துள்ளது.
- காணிக்கு வெளியே நில்லுங்கள்.
- காட்டுக்கு அப்பால் ஊர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இடநகர்வுப்பொருள்:

- நேற்று கொழும்புக்குப் போனேன்.
- நண்பனின் வீட்டுக்குச் செல்வோம்.
- இன்று மாதங்கி பாடசாலைக்கு வரவில்லை.

### அனுபவப்பொருள்:

- அவனுக்கு மாம்பழம் பிடிக்கும்.
- கணபதிக்கு இருக்கும் முதிர்ச்சி உன்னிடமில்லை.
- சித்திரத்தில் அவளுக்குத் தேர்ச்சி அதிகம்.

### காலவரையறைப்பொருள்:

- புதியவர்கள் இருவாரகாலத்துக்குப் பயிற்சி பெறவேண்டும்.
- மாலை நான்கு மணிக்கு வந்துவிடுவேன்.
- ஒருநாளைக்கு மூன்றுவேளை மாத்திரை போடவேண்டும்.

### வீதப்பொருள்:

- நாலுக்கு மூன்றுபங்கு தரவேண்டும்.
- ஆறுக்கு ஒன்று எனக் கலவை போடு.
- நூற்றுக்குப் பத்துப்பேர் கூடத் தேறவில்லை.

இவற்றைவிட, பேச்சுக்குப்பேச்சு, பாட்டுக்குப்பாட்டு, அடிக்குஅடி, வீட்டுக்குவீடு, ஊருக்குஊர், ஒருவனுக்குஒருத்தி என்ற தொடர்களிலும் நான்காம்வேற்றுமை உருபு சிறப்புடன் செயலாற்றுகிறது.

## ஐந்தாம் வேற்றுமை.

இன் (நின்று), இல் (இருந்து) ஆகிய உருபுகள் ஐந்தாம்வேற்றுமைக்கு உரியவையாம். இவ்வுருபுகள், நீக்கப்பொருள், ஒப்புப்பொருள், எல்லைப்பொருள், ஏதுப்பொருள் ஆகிய கருத்துகளைத் தரவல்லனவாக அமைகின்றன. அவற்றைப் பார்ப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நீக்கப்பொருள்:**

> **"தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்
> நிலையின் இழிந்த கடை."**

எனுந் திருக்குறள் நீக்கப்பொருளுக்குச் சிறந்த உதாரணமாகும். இங்கு தலையின், நிலையின் என ஈரிடங்களில் இன் உருபு பயன்படுத்தப்பட்டிருக்கிறது. எனினும் தற்காலத் தமிழ்வழக்கில் இன் உருபின் பயன்பாடு அருகி விட்டதெனலாம்.

எனவே இல் உருபே பயன்பாட்டில் அதிகமாக வருகிறது என்பதுடன், **"இல்" உடன் இணைந்து "இருந்து"** எனும் பதமும் **"இன்" வருங்கால் அதனுடன் இணைந்து "நின்று"** என்ற பதமும் வருகின்றன என்பதையம் புரிந்துவைத்தல் நலம்.

நீக்கப்பொருள் இருவகையில் அமையலாம் எனப் பேராசிரியர் எம்.ஏ.நுஃமான் கூறுகிறார். அதன்படி **நீக்கப்பொருள். பருப்பொருள் சார்ந்தநீக்கம், பருப்பொருள் சாராநீக்கம்** என வகைப்படுகின்றன.

**பருப்பொருள் சார்ந்த நீக்கப்பொருள்.**

- கொழும்பிலிருந்து தம்பி வந்தான். (கொழும்பு-இல்-இருந்து).
- மரத்திலிருந்து விழுந்தவனை மாடேறி மிதித்தாற்போல. (மரம்-(அத்துசாரியை)-இல்-இருந்து).
- வில்லிலிருந்து புறப்பட்ட அம்பு. (வில்-இல்-இருந்து). இதனை, "வில்லினின்று புறப்பட்ட அம்பு" எனவும் எழுதலாம். (இதில் "இன்" உருபுடன் "நின்று" எனும்பதமும் இணைந்து வருகிறது.)

**பருப்பொருள்சாரா நீக்கப் பொருள்.**

- துக்கத்தினின்று விடுதலை பெற்றான். (துக்கம்-(அத்துசாரியை)-இன்- நின்று).
- தூக்கத்திலிருந்து விழித்தாள். (தூக்கம்-(அத்துசாரியை)-இல்-இருந்து)
- கவலையிலிருந்து மீண்டனர். (கவலை-இல்-இருந்து)

**"இருந்து" எனுமுருபு மேலிருந்து, கீழிருந்து, உயரத்திலிருந்து, அங்கிருந்து, எங்கிருந்து என வருதலையும்,**
**"இடமிருந்து" எனுமுருபு அப்பாவிடமிருந்து பணம் பெற்றேன், பாம்பிடமிருந்து தவளை தப்பியது, பூனையிடமிருந்து எலி விடுபட்டது, என வருதலையும் அவதானிக்கலாம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை, இன், இல் ஆகிய உருபுகளுக்குப் பதிலாக தற்காலத் தமிழிற் பயன்படுகின்றதன் காரணமாக இவையும் ஐந்தாம்வேற்றுமை உருபுகளாகக் கொள்ளப்படுகின்றன.

### ஒப்புப் பொருள்:

- பொன்னனின் வலியன் கணபதி. (இல் உருபு)
- அவனிற் பெரியன் இவன். (இல் உருபு)
- பாலின் வெளிது கொக்கு. (இன் உருபு)

### எல்லைப்பொருள்:

- வீட்டின் பின்னே தென்னை. (இன் உருபு)
- வவுனியா மாவட்டத்தின் வடக்கே கிளிநொச்சி அமைந்திருக்கிறது.

(இன் உருபு) **இதனை, "வவுனியா மாவட்டத்துக்கு வடக்கே கிளிநொச்சி அமைந்திருக்கிறது."எனவும் எழுதலாம். இங்கே இன் உருபுக்குப்பதிலாக நான்காம் வேற்றுமை உருபான "கு" பயன்படுவதைக் காணலாம்.**

### ஏதுப்பொருள் அல்லது காரணப்பொருள்.

- கல்வியிற் பெரியன் கம்பன். (இல்உருபு).
- வில்லிற் சிறந்தோன் அருச்சுனன். (இல்உருபு).
- அறிவிற் பெரியோரைக் கனம் பண்ணுவோம். (இல்உருபு).

## ஆறாம்வேற்றுமை.

இதனை **உடைமைவேற்றுமை** எனவும் அழைப்பர். இதன் உருபுகள் **அது, இன், ஆது, அ, உடைய** என்பவையாம்.
எனினும் ஆது, அ ஆகிய உருபுகள் தற்காலப் பயன்பாட்டனின்றும் நீங்கிவிட்டன எனலாம். அது, இன், உடைய ஆகிய உருபுகளே உடைமைக் கருத்திற் பயன்படுத்தப்படுகின்றன.

- அவனது திறமை, வேலனது கைவேல், (அது)
- கம்பனின் பெருமை, அம்மாவின் மகிழ்ச்சி. (இன்)
- தம்பியுடைய இயல்பு, பாலனுடைய புத்தகம். (உடைய)

என்பவற்றை உதாரணங்களாகக் கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலே தரப்பட்ட வாக்கியங்களை, **வேலனினது கைவேல், (இன்-அது) தம்பியினுடைய இயல்பு (இன்-உடைய) எனவும் எழுதலாம்.**

"இன்" உருபு இணைக்கப்படாமல், அது, உடைய உருபுகள் இவ்வாக்கியங்களில் முழுமையான பொருளைத் தருவதால், இவ்விடங்களில் இன் உருபாகப் பயன்படாமல் சாரியையாக அமைகிறது என்பர் இலக்கண அறிஞர்.

## ஏழாம்வேற்றுமை:

ஏழாம் வேற்றுமை, இடந்தொடர்பான தெளிவுகளைத் தருவதால் இதனை இடவேற்றுமை எனவும் அழைப்பர். இதன் உருபுகள் **இல், இன்** என்பவையாம். இவை **பருப்பொருள் சார்ந்த இடத்தையும் பருப்பொருள்சாரா இடத்தையும் சுட்ட உதவுகின்றன.**

### பருப்பொருள்சார் இடம்:

- காகம் மரத்தில் நிற்கின்றது. (மரத்தில்)
- குழந்தை தொட்டிலில் நித்திரை செய்கிறது. (தொட்டிலில்)
- புத்தகம் மேசையில் இருக்கிறது. (மேசையில்)

### பருப்பொருள்சாரா இடம்:

- கவலைகள் நிறைந்த மனதில் மகிழ்ச்சி ஏது? (மனதில்)
- மனதின் துயரங்களை மறந்து விடவேண்டும். (மனதின்)
- அது வாழ்வில் மறக்கக் கூடிய சம்பவமன்று. (வாழ்வில்)
- இசையில் மயங்காதாரும் உளரோ? (இசையில்)

## எட்டாம் வேற்றுமை:

எட்டாம் வேற்றுமை படர்க்கைப் பெயரை விளித்துப் பேசுவதால் **இதனை விளிவேற்றுமை** எனவும் அழைப்பர்.

ஒன்று தொடக்கம் ஏழு வரையிலான வேற்றுமைசார்ந்த பெயர்ச்சொற்கள் எழுவாயாகவோ, செயப்படு பொருளாகவோ வசனத்தில் அமைவதை அவதானித்திருக்கலாம். ஆனால், எட்டாம்வேற்றுமைப் பெயர்ச்சொல் எப்போதும் வசனத்தின் வெளியேதான் நின்று செயல்படும். அது எழுவாயாகவோ, செயப்படு பொருளாகவோ ஒருபோதும் மாற்றமடையாது. இது எட்டாம் வேற்றுமைக்குரிய சிறப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படர்க்கைப் பெயரை முன்னிலைப்படுத்திச் செயல்படும் ஆற்றல் இவ்வேற்றுமைக்கு உண்டு. நான், நாங்கள், நீ, நீங்கள், போன்ற தன்மை முன்னிலைப் பெயர்களையும் அவன், அவர்கள் ஆகிய படர்க்கைப் பெயர்களையும் எட்டாம்வேற்றுமையின் ஆளுகைக்கு உட்படுத்த முடியாது. ஆயினும் இவை எட்டாம் வேற்றுமையைத் தாங்கி வருகின்ற வாக்கியங்களில் எழுவாயாகச் செயற்படுகின்றன என்பதையும் அவதானிக்கலாம்.

இவ்வேற்றுமைக்கு உருபுகளென எவையும் இல்லாதபோதிலும் விளிப்பதற்குப் பயன்படுத்தப்படும் அசைநிலை, திரிபு என்பவற்றை இதனுருபுகளாகக் கொள்ளமுடியம். எனினும் இலக்கண அறிஞர்களின் கூற்றுப்படி இதற்கு உருபுகள் இல்லையென்பதே முடிபு.

பெயர்ச்சொல் எட்டாம்வேற்றுமைக்கு உட்படும்போது அல்லது விளிப்புக்கு உள்ளாகும்போது. இயல்பு கெடாமலும், அதன் ஈற்றெழுத்து மிகுந்தும், ஈற்றெழுத்து குறைந்தும், ஈற்றயலெழுத்து திரிபடைந்தும் வருவதுண்டு.

### இயல்பு கெடாமல்.

- அம்மா, நீங்கள் எங்கே போயிருந்தீர்கள்?
- அண்ணா, என்னுடன் விளையாட வரமாட்டீர்களா?
- அய்யா, மெதுவாக எழுந்திருங்கள்.

மேலே தரப்பட்ட வாக்கியங்களில் வருகின்ற விளிப்புப் பெயர்களான அம்மா, அண்ணா, அய்யா ஆகியவை எவ்வித மாறுதலுக்கும் உள்ளாகவில்லை என்பது கவனிக்கத்தக்கது. முதல் வசனத்தில் எழுவாய் (நீங்கள்) தெளிவாகத் தெரிகின்றது. அடுத்துவரும் வசனங்களில் எழுவாய் (நீங்கள்) மறைந்து நிற்கிறது.

### ஈற்றெழுத்து மிகுதல்:

- தம்பீ, உன்னை நம்பித்தான் நான் காரியங்களில் துணிவுடன் இறங்குகிறேன்.
- மகளே, அம்மாவுக்கு உதவி செய்வாயாக.
- எந்தையே, சிவனே, நின் பாத பங்கயங்கள் போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாக்கியங்களில் தம்பி, மகள், எந்தை, சிவன் ஆகிய சொற்கள், முறையே தம்பீ, மகளே, எந்தையே, சிவனே என ஈற்றெழுத்து அசைபெற்று மிகுந்தன.

### ஈற்றெழுத்து குறைதல்:

- ஐய, உங்களை நம்பித்தான் வந்தோம்.
- தோழ, நின் துணை எனக்குத் தேவை.
- நண்ப, உன் நட்பே நட்பு

இவற்றில் ஐயன், தோழன், நண்பன் என்பவை ஈறுகுறைந்து ஐய, தோழ, நண்ப என வருதலைக் காணலாம்.

### ஈற்றயல் திரிபடைதல்:

- மன்னா, கேள்.
- புலவீர்காள், உயர்ந்த இலக்கியங்களைப் படைப்பீர்களாக.
- மக்காள், நான் சொல்வதைக் கேளுங்கள்.

இவ்வசனங்களில் மன்னன் என்பது மன்னா என்றும், புலவர்கள் என்பது புலவீர்காள் எனவும், மக்கள் என்பது மக்காள் எனவும் மாறுபட்டிருப்பதைக் காணலாம்.

## முக்கிய குறிப்பு:

**வேற்றுமைகளையும் அவற்றின் உருபுகளையும் கண்டு யாரும் மலைக்க வேண்டியதில்லை. தமிழில் பெயர்ச்சொல் ஒன்றை வாக்கியத்திற் சேர்க்கும்போது எட்டுவகையாக அதனைக் கையாளலாம் என்பதன் விளக்கமே இவை. ஒரே உருபு வெவ்வேறு வேற்றுமைகளுள் வருவதும், இங்கே காட்டப்படாத பல உருபுகள் ஊர்வழக்கில் இருப்பதையும் எண்ணிக் குழம்பவேண்டியதில்லை. உருபு எதுவாயினும், அது எந்த வேற்றுமைக்குரிய பொருளைக் கொள்ளப் பயன்படுகிறதோ, அவ்வுருபு அந்த வேற்றுமையைச் சார்ந்துவிடும் என்பதை மனதிற்கொள்க.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5. சொல் இலக்கணம் கூறுதல்.

## திணை.

திணை என்பது வகுப்பு அல்லது பிரிவு எனப் பொருள்படும். இலக்கணநூலார், மனிதர்களையும் மனிதர்களுக்கு மேம்பட்டவர்கள் எனக் கருதப்பட்ட தேவர், அசுரர், கடவுளர் என்பவர்களையும் உயர் திணையாகவும், ஏனையவற்றை உயர்திணை அல்லாதனவாகவும் பிரித்துள்ளனர். உயர்திணை அல்லாதவை அஃறிணை எனப்படுகின்றன.

உயர்திணையின் நடவடிக்கைகளைக் குறிக்கும் வினைச்சொற்கள் உயர்திணை சார்ந்தும். அஃறிணைக்குரிய வினைகள் அஃறிணை சார்ந்தும் இருப்பது தமிழ்வழக்கு.

மனிதன் ஓடினான். பூனை ஓடியது, அவர்கள் வந்தனர், அவை வந்தன போன்ற வாக்கியங்களை எடுத்துக் கொண்டால், மனிதன், அவர்கள் என்பவை உயர்திணை வினைச்சொற்களிலும், பூனை, அவை போன்றவை அஃறிணை வினைச்சொற்களிலும் நிறைவு பெறுவதை அவதானிக்கலாம்.

எனினும் சிலஇடங்களில் இவ்விதி குழப்பமடைவதுமுண்டு. எடுத்துக்காட்டாக, குழந்தை, தெய்வம் என்பவை உயர்திணை வகுதிக்குள் வருகின்ற பெயர்கள். ஆனால் அவை வினைச்சொல் பெறும்போது. குழந்தை விளையாடுகிறது, தெய்வம் எம்மைக் காக்கின்றது என அஃறிணை விகுதி பெறுகின்ற வினைகளையே ஏற்கின்றன. அதேபோல் சூரியன் உதித்தது சூரியன் உதித்தான் என்பதில் இருவகை வினைகளும் ஏற்கப்படுவதைக் காணலாம். சந்திரனுக்கும் இது பொருந்தும்.

## பால்.

உயர்திணைப் பெயர்ச் சொற்களும் வினைச்சொற்களும் ஆண்பால், பெண்பால், பலர்பால் என மூவகைப் படுகின்றன. அஃறிணைச் சொற்கள் ஒன்றன்பால், பலவின்பால் என இருவகைப்படுகின்றன.

### ஆண்பால்

அப்பா, அண்ணா, தம்பி, தலைவன், அரசன், இளவரசன், பேரன் போன்ற பெயர்ச்சொற்களும் நின்றான், படித்தான், விளையாடினான் போன்ற வினைச்சொற்களும் ஆண்களைக் குறிப்பதால் அவை ஆண்பால் எனப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண்பால்.

அம்மா, அக்கா, தங்கை, தலைவி, அரசி, இளவரசி, மகள், பேர்த்தி போன்ற பெயர்ச்சொற்களும் நின்றாள், படித்தாள், விளையாடினாள் போன்ற வினைச்சொற்களும் பெண்பால் வகுதிக்குள் வருகின்றன.

ஆண்பால், பெண்பால் என்பவை எப்போதும் ஆண் அல்லது பெண் எனத் தனி ஆளைச் சுட்டுவதாகவே அமையும் என்பதை மனதிற் கொள்க.

## பலர்பால்.

ஆண் ஒருவர் அல்லது பெண் ஒருவர் அல்லாமல், ஆண்கள் பலரை அல்லது பெண்கள் பலரை அன்றேல் இருசாராரையும் உள்ளடக்கிய மக்கள்கூட்டம் பலர்பால் எனப்படும். அவர்கள் வந்தார்கள், நாங்கள் பேசினோம், நீங்கள் உணவருந்தினீர்கள் போன்ற வசனங்களில் எழுவாய், பயனிலை இரண்டுமே பலர்பால் வகுதிக்குள் வருகின்றன.

## ஒன்றன்பால்.

அஃறிணை ஒன்றைப்பற்றிப் பேசும்போது அது ஒன்றன்பால் எனப்படுகிறது. நாய் ஓடியது, கல் விழுந்தது என்பவை எடுத்துக்காட்டுகளாம்.

## பலவின்பால்.

நாய்கள் ஓடின, கற்கள் விழுந்தன ஆகிய வசனங்களில் ஒன்றுக்கும் மேற்பட்ட நாய்கள் பற்றியும் கற்கள் பற்றியும் பேசப்படுகின்றன. அவற்றுடன் இணைகின்ற வினைச்சொற்களும் அஃறிணை பலவற்றைக் குறிக்கும் வகையில் அமைந்துள்ளமையையும் அவதானிக்கலாம். எனவே இவை பலவின்பால் என அழைக்கப் படுகின்றன.

## முக்கிய குறிப்பு.

**ஆண்பால், பெண்பால் என்பவற்றுள் அடங்காத உயர்திணைச் சொற்களும் உள.**
**அமைச்சர், அலுவலர், வைத்தியர், தொழிலாளி, முதலாளி, உரிமையாளர், அறிஞர், விவேகி, ஏதிலி, எதிரி என்பவற்றை இவற்றுக்கான எடுத்துக்காட்டுகளாகக் கொள்ளலாம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான், நீ ஆகிய பதங்களும் பேசுபவரதும் கேட்பவரதும் நிலையைப் பொறுத்தே ஆண்பால், பெண்பால் பண்புகளைப் பெறுகின்றன. பேசுபவர் பெண்ணாயின் நான் என்பது பெண்பாலாகவும், பேசுபவர் ஆணாயின் ஆண்பாலாகவும் கொள்ளப்படும். அதேபோல் கேட்பவர் ஆணாயின் நீ ஆண்பாலாகவும். பெண்ணாயின் பெண்பாலாகவும் கொள்ளப்படலாம்.

எவ்வாறெனினும் நான், நீ ஆகிய பதங்கள் தன்னளவில் பால்நிலை பெறாதவையாகவே என்பதை மனதிற் கொள்க.

## மூவிடம்.

நாங்கள் பேசுகின்ற அல்லது எழுதுகின்ற மொழி மூன்று வகைக்குள் மட்டுப்படுத்தப்படுகின்றன. இதனைத் தமிழ் இலக்கணநூலோர் மூவிடம் என அழைக்கின்றனர். அவை தன்மை, முன்னிலை, படர்க்கை என்பனவாம்.

## தன்மை.

பேசுபவர் அல்லது பேசுவர்கள் தன்னைப் பற்றியோ தம்மைப்பற்றியோ பேச முனையும்போது அப்பேச்சு தன்மையின்பாற் படுகிறது. "நான் வந்தேன்." என்பது தன்மைப் பெயராகிய நான் என்பதையும் தன்மை வினையாகிய வந்தேன் என்பதையும் குறிப்பிடுகின்றது. "நாங்கள் வந்தோம்." என்ற வசனத்தில் தன்மைப் பெயரும் வினையும் பன்மை பெற்றுவருகின்றன.

எனவே நான் யான், நாங்கள், நாம் என்பவை தன்மைப் பெயர்களாகவும். வந்தோம், படிக்கின்றோம், சிரிக்கின்றேன், என்பவை தன்மை வினைகளாகவும் வருவதைக் காணலாம்.

## முன்னிலை.

நாம் எதிரே நிற்பவரை விளித்துப் பேசும்போது அப்பேச்சு முன்னிலைச் சொற்களைக் கொண்டமைகிறது.

நீ வந்தாயா? நீங்கள் விளையாடுங்கள், போன்ற வாக்கியங்கள் முன்னிலைப் பெயரையும். முன்னிலை வினையையும் கெண்டிருக்கின்றன.
ஆகவே நீ, நீவிர், நீங்கள், தாங்கள் என்பவை முன்னிலைப் பெயர்களாகவும், வந்தாயா, விளையாடுங்கள், பேசுங்கள், பாடுங்கள் என்பவை முன்னிலை வினைகளாகவும் அறியப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### படர்க்கை.

தன்மை, முன்னிலை தவிர்ந்த அனைத்துக் கருத்துப் பரிமாற்றங்களும் படர்க்கை எனப்படும்.

நண்பன், குரு, பெற்றோர், தெய்வம், அலுவலகம், பாடசாலை ஆலயம் அனைத்தும் படர்க்கை வகுதிக்குள் வருகின்றன.

பாடசாலை தொடங்கிற்று, நண்பர்கள் உதவுகிறார்கள், பெற்றோரும் குருவும் தெய்வத்துக்குச் சமமானவர்கள், ஆலயம் தொழுவது சாலவும் நன்று ஆகிய வாக்கியங்கள் படர்க்கைத்தன்மை உடையன.

### எடுத்துக்காட்டுகள்.

நாங்கள் விளையாடுகிறோம். (தன்மை வாக்கியம்)
நீங்கள் விளையாடுகிறீர்கள். (முன்னிலை வாக்கியம்)
அவர்கள் விளையாடுகிறார்கள். (படர்க்கை வாக்கியம்)

நாங்கள் எல்லேமும் (எல்லாரும்) செல்கின்றோம். (தன்மை)
நீவிர் (நீங்கள்) எல்லீரும் (எல்லாரும்) பார்த்தீர்கள். (முன்னிலை)
அவர்கள் எல்லாரும் வந்தார்கள். (படர்க்கை)

இன்றைய தமிழில் "எல்லாரும்" அல்லது "எல்லோரும்" என்ற சொல்லை மூவிடத்தும் பயன்படுத்துகிறோம். அஃது இலக்கண வழுவற்றதாகவும் கொள்ளப்படுகிறது. நாங்கள் எல்லாரும், நீங்கள் எல்லாரும், அவர்கள் எல்லோரும் என்றே பயன்படுத்துகிறோம். ஆயினும் வினைச் சொற்களை இடத்துக்கேற்றாற்போல் வேறுபடுத்துகிறோம். இதன்மூலம் வினைச்சொற்களைக் கொண்டும் தன்மை, முன்னிலை, படர்க்கை என்பவற்றைத் தீர்மானிக்க முடிகிறது.

எடுத்துக்காட்டாக, நாங்கள் எல்லாரும் வந்தோம், நீங்கள் எல்லாரும் வந்தீர்கள், அவர்கள் எல்லாரும் வந்தார்கள் என்றே வழங்குகிறோம். இங்கே வினைச்சொற்கள் மாறுபாடடைவதைக் காணலாம்.

ஆனால், பண்டைய வழக்கின்படி நாங்கள் எல்லோமும் (அல்லது எல்லேமும்) வந்தோம் (அல்லது வந்தேம்). நீங்கள் எல்லீரும் வந்தீர்கள். அவர்கள் எல்லாரும் வந்தார்கள் என்றே எழுதப்பட்டன. இப்போது அவ்வழக்கம் அருகிவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்.

ஒரு வசனம் கருத்துடையதாக அமைய வேண்டுமானால் அவ்வசனம் ஆகக்குறைந்தது எழுவாய், பயனிலை ஆகிய இரண்டையும் கொண்டதாக இருக்கவேண்டும். இவற்றுள் எழுவாய் வெளிப்பட்டோ வெளிப்படாமலோ நிற்றலுங்கூடும். சில வசனங்கள் முழுமை பெறுவதற்கு செயப்படுபொருளும் அமையவேண்டியுள்ளது. அவற்றைப் பார்ப்போம்.

### எழுவாய்.

ஒரு கருத்து எதற்காகத் தோற்றுவிக்கப்படுகிறதோ, ஒரு வசனம் எதைத் தோற்றுவாயாகக் கொண்டெழுகிறதோ அது எழுவாய் எனப்படும்.

கண்ணன் விளையாடினான், நாய் குரைத்தது போன்ற வசனங்களை எடுத்துக்கொண்டால் முதலாவது வசனம் கண்ணன் என்பவனைப்பற்றியும், அடுத்த வசனம் நாயைப் பற்றியும் பேசுகின்றன. எனவே கண்ணன். நாய் என்பவை எழுவாய் எனப்படுகின்றன.

### தோன்றா எழுவாய்.

வந்தான். பேசினேன், சென்றாய் போன்றவை தனிச் சொற்களாயினும் நிறைவான கருத்தைத் தருகின்றன. அவ்வாறு நிறைவான கருத்து வருவதற்குக் காரணம் வசனத்தின் எழுவாய்ச் சொற்கள் வெளிப்படையாக வராவிடினும் மறைந்துநின்று செயல்படுகின்றமையாகும்.

வசனங்களை முழுமையாகச் சொல்வதானால், அவன் வந்தான், நான் பேசினேன், நீ சென்றாய் எனச் சொல்ல வேண்டும். எனவே மறைந்துநின்றும் வசனத்தின் கருத்தை நிறைவு செய்கின்ற எழுவாய்களைத் தோன்றாஎழுவாய் என்பர். வெளிப்படையாகத் தெரியாவிடினும் பேசுபொருளாக அவை அமைகின்றன என்பதே இதன் பொருள்.

ஒரு சொற்றொடரின் பயனிலையை வைத்து யார்? அல்லது எது? என்ற வினாவை எழுப்புவோமாயின் அதற்கு விடையாக வருவது எழுவாய் என்பது தெளிவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயனிலை.

ஒரு வசனத்தின் பொருளை நிறைவுபடுத்துகின்ற வினைச்சொல் பயனிலை எனப்படுகிறது. எழுவாய் தோன்றியதன் பயன்தருநிலை என்பதே பயனிலையாகும்.

கண்ணன் விளையாடினான் என்ற வசனத்தில் விளையாடினான் என்ற வினைமுற்றும், நாய் குரைத்தது என்பதில் குரைத்தது எனும் வினைமுற்றும் பயனிலைகள் எனப்படுகின்றன.

## செயப்படுபொருள்.

அப்பா வேலை செய்தார், தம்பி பாடம் படித்தான், அண்ணா மிதிவண்டி ஓட்டினார், அக்கா துணி துவைத்தாள், அம்மா பலகாரம் சுட்டார் ஆகிய வசனங்களை எடுத்துக் கொண்டால் அப்பா, தம்பி, அண்ணா, அக்கா, அம்மா ஆகிய சொற்கள் எழுவாய்களாகவும், செய்தார், படித்தான், ஓட்டினார், துவைத்தாள், சுட்டார் ஆகியவை பயனிலைகளாகவும் கொள்ளப்படுகின்றன.

இவ்வெழுவாய்களும் பயனிலைகளும் வசனங்களின் கருத்தை முழுமையாகப் புலப்படுத்தப் போதுமானவையாக அமையவில்லை என்பது தெளிவு.

எனவே பொருள் நிறைவாக வரவேண்டுமெனில் அப்பா எதைச் செய்தார் என்றொரு வினா உருவாகிறது. அதற்கு விடையாக வேலை செய்தார் என்பது பெறப்படுகிறது. இங்கே வேலை என்பது செயப்படு பொருளாகிறது. இதன்படி பாடம், மிதிவண்டி, துணி, பலகாரம் என்பவை செயப்படுபொருள் எனப்படுகின்றன.

இரண்டாம் வேற்றுமை உருபான "ஐ" செயப்படுபொருளில் வெளிப்பட்டும் மறைந்தும் வருவதுண்டு. மேற்போந்த வசனங்கள், அப்பா வேலையைச் செய்தார், தம்பி பாடத்தைப் படித்தான், அண்ணா சைக்கிளை ஓட்டினார், அக்கா துணியைத் துவைத்தார், அம்மா பலகாரத்தைச் சுட்டார் என "ஐ" உருபு வெளிப்பட்டு வருவதும் வழக்கம்.

## கவனத்திற் கொள்ளவேண்டியவை :

பயனிலை எப்போதும் வசனம் சொல்லவந்த கருத்தை நிறைவு செய்யும் சொல்லாகவே அமையும். வழக்கமாக அது இறுதிச்சொல்லாகவும் இருக்கும். அத்துடன் குறிப்புவினை முற்றாகவோ, தெரிநிலை வினைமுற்றாகவோதான் வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பி பாடம் படித்தான், எனவரும் சொற்றொடரில் "படித்தான்" பயனிலையாகிறது. இச்சொல் காலங்காட்டுவதால் தெரிநிலை வினைமுற்று எனப்படுகிறது.

அவன் நல்லன் எனுந்தொடரில், "நல்லன்" பயனிலை, காலங்காட்டாதபடியால் குறிப்பு வினைமுற்றைச் சார்கிறது.

## எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆகியவை விசேடநிலை பெறுதல் அல்லது அடைமொழிகளை ஏற்றல்.

"சின்னத் தம்பி புதிய மிதிவண்டியை அழகாக ஒட்டினான்." என்ற தொடரை எடுத்துக் கொண்டால்,
ஓட்டினான் என்பது பயனிலை.
எவ்வாறு ஓட்டினான் என்ற கேள்வி எழுமிடத்து, "அழகாக" எனும் விடை வருகிறது. இச்சொல் மிதிவண்டி செலுத்தப்பட்ட முறையை விபரிக்கின்றது.
எனவே "அழகாக" என்றபதம் பயனிலை விசேடணம் அல்லது பயனிலை அடைமொழி எனப்படுகிறது.

யார் ஓட்டினான் என்ற கேள்விக்குத் தம்பி என்பதே விடை. எனவே இச்சொற்றொடரில் "தம்பி" எழுவாய் ஆகிறது.
எந்தத் தம்பி அல்லது எத்தகைய தம்பி எனப் பார்க்கின் சின்னத் தம்பி என்பது தெரிகிறது. எனவே, சின்ன எனுஞ்சொல் தம்பியைச் சிறப்பித்துச் சொல்வதால் அது எழுவாய் விசேடணம் அல்லது அடைமொழி எனப்படுகிறது.

எதனை ஓட்டினான் என்ற கேள்விக்கு மிதிவண்டியை என்பது விடையாகிறது. அவ்விடையே செயப்படுபொருள் எனப்படுகிறது. அதற்குரிய விசேடணமாக அல்லது அடைமொழியாக புதிய எனும்பதம் கொள்ளப்படுகிறது.

எனவே, ஒரு கருத்தைக் கூறவரும் வாக்கியம், பயனிலையுடனோ (தோன்றா எழுவாய்), எழுவாய் பயனிலை என்பவற்றுடனோ, எழுவாய் பயனிலை செயப்படுபொருள் ஆகியவற்றுடனோ நிறைவுபெறலாம். இவற்றுக்குமப்பால், எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆகியவற்றுள் ஒன்றுடனோ இரண்டுடனோ அல்லது மூன்றுடனுமோ அடைமொழிகளும் இணைந்திருக்கலாம் என்பதும் பெறப்படுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6. தமிழ்ச் சொற்களின் வகைகள்

தமிழ்ச் சொற்களை இயற்சொல், திரிசொல், வடசொல், திசைச்சொல் என நான்கு வகையாகவும் பிரிப்பர் அறிஞர்.

## இயற்சொல்.

தமிழ்மொழி பேசுகின்ற அனைவரும் விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் நாம் அன்றாடம் பயன்படுத்தும் சொற்கள் இயற்சொற்கள் எனப்படுகின்றன. ஆழமான முயற்சிகள் எதுவுமின்றிப் பாமரனும் படித்தவனும் இயற்சொற்களை விளங்கிக் கொள்ள இயலும்.

"நான் வந்தேன்." "அவன் போனான்." "அம்மா என்னை அழைத்தார்." போன்ற வசனங்களில் வருகின்ற சொற்கள் அனைத்தும் எல்லோராலும் விளங்கிக் கொள்ளத்தக்கனவாக அமைந்துள்ளன. எனவே இவை இயற்சொற்கள் எனப்படுகின்றன.

ஆடு, மாடு, கோழி, தம்பி, அண்ணா, வானம், பூமி, காற்று ஆகிய பெயர்ச்சொற்களும், வா, நின்றான், படிப்பாள், சாப்பிடு, ஓடு, நட போன்ற வினைச்சொற்களும் இவ்வகையைச் சார்ந்தன. பயன்படுத்தப்படும் இடங்களில் சொல்லவந்த கருத்தை மயக்கமின்றித் தெளிவாகச் சொல்கின்ற தன்மை இயற்சொற்களுக்கு உண்டு.

## திரிசொல்.

சாதாரண மக்களன்றிக் கல்வி அறிவுடைய மக்களால் மட்டும் விளங்கிக் கொள்ளக்கூடிய தமிழ்ச்சொற்கள் திரிசொல் எனும் பிரிவுக்குள் வருகின்றன.

"பேசினான்." எனும் இயற்சொல்லை "நவின்றான், பகன்றான், செப்பினான், உரைத்தான், விளம்பினான்." என ஒருவர் சொல்வாராயின் அவை திரிசொற்கள் ஆகின்றன. ஏனெனில் இப்பதங்களின் பொருளைப் படித்தவர்களால் மட்டுமே விளங்கிக் கொள்ளமுடியும்.

அதேபோல், கிளி எனும் சொல்லை தத்தை, அஞ்சுகம், கிள்ளை எனப் பகருமிடத்து, அவையும் திரிசொற்கள் எனப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரிசொற்களை மொழியியல் அறிஞர்கள் இருவகைப்படுத்துவர். ஒன்று: ஒருசொல் பலபொருளைத் தருவது. மற்றது: பல சொற்கள் ஒரு பொருளைத் தருவது.
எடுத்துக்காட்டாக, கவி எனுஞ் சொல்லை எடுத்துக் கொண்டால் கவிதை, கவிஞர், குரங்கு, கவிதல் எனப் பலபொருளை அது தருகிறது. இது ஒருவகை.

தத்தை, அஞ்சுகம், கிள்ளை ஆகிய பலசொற்கள் கிளி எனும் ஒருபொருளையே கொண்டிருப்பது இரண்டாவது வகை.

## வடசொல்.

வடமொழியிலிருந்து தமிழ்மொழி பெற்றுக்கொண்ட சொற்கள் வடசொற்கள் எனப்படுகின்றன. பண்டைக் கலந்தொட்டு வடமொழியும் தமிழ்மொழியும் நெருங்கிய உறவைக் கொண்டிருந்ததால் வடமொழிச் சொற்கள் தமிழில் தனியிடம் பெறுகின்றன.

தமிழ்மொழியுடன் வடமொழி கலந்து எழுதுகின்ற முறைமைகூட ஒருகாலத்திற் காணப்பட்டது. இம்முறைமைக்கு மணிப்பிரவாளம் எனப் பெயரிட்டனர். இது பெருமைமிக்க வசனநடையாகவும், எழுதுபவரின் மொழியாற்றலை மேம்படுத்திக் காட்டும் உத்தியாகவும் கருதப்பட்ட காலமும் இருந்தது. எவ்வாறெனினும் அந்நிலை இன்று அருகிவிட்டது.

எனினும் வடசொற்கள் தமிழில் நிலைத்து நிற்கின்றன. அடையாளங் காணத் தக்கனவாகவும், அடையாளங் காண முடியாதனவாகவும் அவை தமிழ்மொழியில் வழங்கி வருகின்றன.

**இவற்றை மொழிநூலார் இருவகையாகக் காட்டுவர்**. வடமொழிக்குரிய எழுத்துகளைத் தமிழ்மொழிக்கேற்ப எழுதுமிடத்து அது **தற்பவம்** எனவும், இயல்பாகத் தமிழ்எழுத்துகளால் எழுதத்தக்கனவாக வடமொழியில் அமையும் சொற்களைத் தமிழில் எழுதுமிடத்து தற்சமம் எனவும் உரைப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக் காட்டுகள்:

**தற்பவம்.**

பங்கஜம் --- பங்கயம்
ரிஷபம் ---- இடபம்
ஜடம் ---- சடம்
ஸரஸ்வதி --- சரசுவதி

**தற்சமம்**

நியாயம், அசுத்தம், வியாக்கியானம், கமலம் என்பவை தற்சம் வகையைச் சாரும்.
வடமொழி உச்சரிப்பை அப்படியே தமிழில் எழுதும்முறை இது.

## திசைச்சொற்கள்.

வடமொழி தவிர்ந்த ஏனைய மொழிகளிலிருந்து தமிழ்மொழியாற் பெற்றுக்கொள்ளப்பட்ட அனைத்துச் சொற்களும் திசைச்சொற்கள் எனப்படுகின்றன.

அசல் (முதல்), அண்டா (பெரிய பாத்திரம்), அந்தஸ்து, அமுல், ஆசாமி, இனாம், உஷார், கலால், கில்லாடி, கசாப்புக்கடை, கஜானா, குஷி, சிப்பாய், தரப்பு, மஹால், மிட்டாய் போன்ற இந்துஸ்தானி (இந்தியும் உருதும் கலந்த)ச் சொற்களும்,

அச்சாறு, அட்டாளை (காவற் கோபுரம்), அலுமாரி, இலேஞ்சு, குசினி, கோப்பை, சக்கிடுத்தார் (செயலர்), வரோணிக்கம் (பதக்கம்) போன்ற போர்த்துக்கீசச் சொற்களும்,

சிங்களம் உட்படத் தமிழுக்கு அயல்மொழிகளான தென்னிந்திய மொழிச்சொற்களும் வியாபாரமுறையிற் கலந்த அரேபியச்சொற்களும், அறிவியல் வழியிற்கலந்த ஆங்கிலமொழிச் சொற்களும் திசைச்சொற்களாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடுகுறிச்சொற்கள், காரணச்சொற்கள், காரணஇடுகுறிச் சொற்கள்.

சொற்கள் தோற்றம் பெறுவதனடிப்படையில் இடுகுறிச்சொற்கள், காரணச்சொற்கள், காரண இடுகுறிச்சொற்கள் என மூவகைப்படுகின்றன.

## இடுகுறிச் சொற்கள்.

இவ்வகைச் சொற்கள் எவ்வித காரணமுமின்றித் தோற்றம் பெறுகின்றன. மனிதர்கள் தங்கள் எண்ணத்தை அல்லது கருத்தை வெளிப்படுத்துவதற்காக ஏற்படுத்திக்கொண்ட அடையாள ஒலிக்கூட்டே இடுகுறிகளாகின்றன. மரம், மண், வானம், நாய், பூனை போன்ற சொற்கள் இவ்வகையைச் சாரும். இப்பெயர்கள் சூட்டப்பட்டதற்கு அடையாளப்படுத்தல் ஒன்றைத் தவிர வேறு காரணங்கள் இல்லை எனலாம்.

எனவே இவை **இடுகுறிச்சொற்கள் அல்லது இடுகுறிப்பெயர்கள்** எனப்படுகின்றன.

இடுகுறிச் சொற்களில் **பொது**, **சிறப்பு** என இருவகையை நாம் அவதானிக்கலாம்.

## இடுகுறிப் பொதுச்சொற்கள்.

மரம், விலங்கு, நிலம், மலை என்பவை பொதுவான இடுகுறிச் சொற்களாகும். இவை அனைத்து மரங்களுக்கும், விலங்குகளுக்கும், நிலப்பகுதிக்கும், மலைகளுக்கும் பொருந்துவன.

## இடுகுறிச் சிறப்புச்சொற்கள்.

மா, பலா, விளா, தென்னை, பனை, முதிரை, தேக்கு என்பவையும் மரங்களையே குறிப்பனவாயினும், அவை மரங்களிற் சில வகையைச் சிறப்பித்து அடையாளப்படுத்துகின்றன.

நாய், கழுதை, பசு, மான், மரை, புலி, கரடி, சிங்கம் ஆகியவை யாவும் விலங்குகளையே சுட்டுவனவாயினும் விலங்குகளில் வெவ்வேறு வகையை அடையாளப்படுத்துவதற்கான சிறப்புச் சொற்களாக அவை அமைகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடு, நகரம், காடு, ஊர், மேடு, பள்ளம், என்பவை நிலத்தையே சுட்டுகின்றனவாயினும், நில அமைப்பிற் தெரிகின்ற வேறுபாடுகளைச் சிறப்பித்துக் குறிக்கப் பயன்படுவதால் அவை இடுகுறிச் சிறப்பு களாகின்றன.

குன்று, பாறை, சிகரம், வரை, விந்தியம், பொதிகை, சிவனொளிபாதம் என்பவை மலைகளின் இயல்புகளையும் இடஅமைவுகளையும் வேறுபடுத்தி அடையாளங்காண உதவுவதால் இவையும் இடுகுறிச் சிறப்புப் பெயர்களாகின்றன.

## காரணப்பெயர்.

மைனா, குருவி, காகம் என்பவை இடுகுறிப்பெயர்களாயினும் பறக்கும் இயல்புடையனவாக அவை காணப்பட்டதால் பறவை எனப் பெயர் பெற்றன. எனவே பறவை என்பது காரணப்பெயராகும்.

பாம்பு, மரவட்டை, பல்லி போன்றவை நிலத்தில் ஊர்ந்து செல்வதன் காரணமாக ஊர்வன எனக் காரணப்பெயரைப் பெறுகின்றன. இவற்றுள் பாம்பு, பல்லி என்பவை இடுகுறிப் பெயர்களேயாயினும், மரங்களில் ஊர்ந்து திரிவதன் காரணமாக மரவட்டை என்பதும் காரணப்பெயர் என்பதை அறிக.

இவ்வாறே, மூன்று கால்களையுடையது முக்காலி எனவும், நான்கு கால்களைக் கொண்டிருப்பதால் நாற்காலி எனவும் புகையைக் கக்கிக்கொண்டு செல்வதால் புகையிரதம் எனவும், மூன்று கண்களை உடையவர் முக்கண்ணன் எனவும், ஒட்டகம் போன்று உயர்ந்து காணப்பட்டதால் அம்மிருகம் ஒட்டகச்சிவிங்கி எனவும், பொன்னை நிகர்த்தவன் என்பதால் பொன்னன் எனவும், கரிய வண்ணத்திலிருப்பதால் கறுவல் எனவும், திண்ணியனாக அமைந்ததால் திண்ணன் எனவும் காரணப் பெயர்கள் அமைகின்றன என்பதை உணர்க.

## காரணஇடுகுறிப் பெயர்.

நாவலர் எனுங் காரணப்பெயர் நாவன்மை நிறைந்த அனைவருக்கும் பொதுவானதெனினும் எமது நினைவுக்குச் சட்டென வருபவர் ஆறுமுக நாவலர். எனவே நாவன்மை காரணமாகத் தோன்றிய காரணப்பெயர், அன்னாரைக் குறிக்கும் இடுகுறிப்பெயர் போன்றமைவதால் அது காரணஇடுகுறிப் பெயர் எனப்படுகிறது. இதன் கருத்து யாதெனில் காரணப்பெயரான போதிலும் சிறப்பாக ஒருவரை அடையாளங் காட்டும் இயல்பு பெற்றிருக்கிறது என்பதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதேபோல், முள்ளி என்பது அனைத்து முள் மரங்களையும் குறிக்கின்ற போதிலும் தனியொரு தாவரத்துக்கும் பெயராக அமைவதால் அத்தாவரத்தைக் குறிக்குமிடத்து காரணஇடுகுறிப் பெயராகின்றது.

மூன்று கண்களையுடையவர் முக்கண்ணன் என்றான போதிலும் சிவனை மாத்திரம் சுட்டிநிற்பதால் அது காரணஇடுகுறிப் பெயர் எனப்படுகிறது.

ஆறுமுகம் என்ற பெயரை எடுத்துக்கொண்டால், அது முருகனைக் குறிக்கையில் காரணப்பெயராகின்றது. ஆனால் அப்பெயரைச் சூடியுள்ள ஒரு மனிதனைக் குறிக்கையில் இடுகுறிப்பெயர் எனப்படுகிறது என்பதையும் மனதிற் கொள்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8. தமிழ் இலக்கண வழக்கு

நாம் பேசும்போதும் எழுதும்போதும் பலவிடயங்களை வெளிப்படையாகப் புலப்படுத்துகிறோம். சிலவற்றைப் பண்பாடு கருதியோ, மரியாதை கருதியோ வெளிப்படையாகக் குறிப்பிடாமல் அவற்றுக்குப் பதிலாக வேறு உத்திகளைக் கையாளுகிறோம். இந்த நடைமுறை மொழிமரபின் பாற்பட்டதாகும். அதுமாத்திரமன்றி, நாம் பயன்படுத்தும் சொற்கள் அனைத்தையும் அச்சொட்டான இலக்கணரீதியாகப் பயன்படுத்துவதுமில்லை. இவ்வாறான நடைமுறைகளை இலக்கணநூலார் வழக்கு என அழைப்பர்.

வழக்கு என்பது இயல்புவழக்கு, தகுதிவழக்கு என இவை இருவகைப்படும்.

**இயல்பு வழக்கானது, இலக்கணமுடையது, இலக்கணப்போலி, மரூஉ** என மூவகைப்படுகின்றது. அதேபோல் **தகுதிவழக்கும், இடக்கரடக்கல், மங்கலம், குழூஉக்குறி** என மூவகைப்படுகின்றது.

## இயல்புவழக்கு.

நாம் இயல்பாகப் பயன்படுத்துகின்ற சொற்கள் இயல்புவழக்கு எனப்படுகின்றன. "பட்"டென்று போட்டு உடைத்துவிடும் வழக்கு எனவும் இதனைக்கூறலாம். இவ்வாறு சொற்களைக் கையாளும்போது இலக்கணச் சொற்களாகவோ, இலக்கணப் போலிகளாகவோ, மரூஉச் சொற்களாகவோ அவை அமைகின்றன.

## இலக்கணமுடைமை.

இந்த வகைக்குள் உரையாடலோ, எழுத்துருக்களோ அமையும்போது யாரும் மொழியாளுகையிற் தவறு காணமுடியாது. மொழியாற்றல் உடையவர்களால் மட்டுமே இதனைச் சிறப்பாகப் பேணமுடியும். அதேபோல் மொழியாற்றல் உடையவர்களால் மட்டுமே இவற்றை முழுமையாக விளங்கிக் கொள்ளவும் முடியும். மொழியாற்றல் குறைந்தவர்கள் சிலசமயம் இலக்கணப்போலிக்குள் சிக்கிக் கொள்ள வாய்ப்புண்டு.

"நான் நன்றாகப் பாடுவேன்." "தம்பி எங்கே போகிறான்?" "அவர்கள் என்னை அழைத்திருக்கிறார்கள்." ஆகிய வசனங்களிலோ, அவற்றில் அமைந்திருக்கும் சொற்களிலோ எந்த இலக்கணப் பிழையும் காணப்படவில்லை. எனவே இவை இலக்கணமுடைமை என்ற பிரிவுக்குள் வருகின்றன. இச்சொற்கள் தொன்று தொட்டு வழங்கப்பட்டு வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலக்கணப்போலி.

இலக்கணச் செம்மை பெறாவிடினும் சான்றோரால் தகையுடையவை என ஏற்றுக் கொள்ளப்பட்டு இலக்கணத் தன்மையுடன் வழங்கப்படும் சொற்கள் இலக்கணப்போலி எனப்படுகின்றன.

எடுத்துக்காட்டுகள்-

1. முன்றில் (முற்றம் எனத் தற்போது வழங்கப்படுகிறது. இல்லத்தின் முன்னால் அமைந்த நிலப்பரப்பு என்ற பொருளில் இல்-முன் என்றசொல் முன்றில் என மாற்றமடைந்துள்ளது.)

2. வாய்க்கால் (கால்-வாய் எனவமைந்த சொல்.)

3. புறநகர் (நகரத்துக்கு வெளியே அமைந்த ஊர் என்ற பொருளில் நகர்ப்புறம் என வரவேண்டியது.)

4. கோயில் ( இலக்கணத்தின்படி கோ-இல் இணையும்போது கோவில் என அமையும்.)

5. துவக்கம் (தொடு-அக்கம் இணைந்து தொடக்கம் என அமைவது. இலங்கையில் தொடக்கம் என்ற பதமே பயன்பாட்டில் இருக்கிறது)

## மரூஉ

எழுதும்போதோ, பேசும்போதோ சில சொற்கள் மருவிப் புதியதோற்றம் பெற்றுவிடுகின்றன. இவற்றையே இலக்கண அறிஞர் மரூஉ என்பர்.

உதாரணங்கள்:
அருமந்த (பையன்) (அரிய மருந்து போல என்ற பொருளில் அருமருந்தன்ன எனவமைந்த சொல்.)
திருச்சி (திருச்சிராப்பள்ளி என்பதே அவ்வூரின் பண்டையபெயர்.)

## தகுதி வழக்கு.

### இடக்கரடக்கல்:

பண்பாடு கருதியோ, எதிரே நிற்பவர்மேற் கொண்ட மரியாதை கருதியோ சில சொற்களை நேரடியாக நாம் பயன்படுத்துவதில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலங்கழித்தல் என்பதற்குக் கால்கழுவுதல் என்றோ, காட்டுப்பக்கம் போதல் என்றோ, வெளிக்கு அல்லது வெட்டைக்குச் செல்லல் என்றோ மரியாதைச் சொற்களாற் குறிப்பிடுவதை இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம்.

## மங்கலம்:

சில துக்ககரமான நிகழ்வுகளை நல்ல வார்த்தைகளாற் குறிப்பிடுவதை மங்கல வழக்கு என்பர்.

இறந்தார் என்பதைத் துஞ்சினார், மறைந்தார், மீளாத்துயிலானார், சிவப்பேறடைந்தார், காலமானார், தவறிப்போனார் என்பன போன்ற சொற்களாற் குறிப்பிடுவதை எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.

முள்ளிவாய்க்கால் முற்றம், மாவீரர் துயிலும்இல்லம் என்பவையும் இவ்வகையைச் சார்ந்த சொற்களே.

## குழூஉக்குறி

சில குழுக்களிடையே மாத்திரம் பரிமாறப்படும் சொற்கள் குழூஉக்குறி எனும் வகைக்குள் வருகின்றன. விவசாயிகள், மீனவர்கள், தொழிலாளர்கள், மாணவர்கள் போன்றோரிடையே குழூஉக்குறிச் சொற்கள் வழங்கப்பெறுகின்றன.

வேலைக்காரன்கம்பு, பொலி, நடையன், வாரியன் போன்ற குழூஉக்குறிச் சொற்கள் விவசாயிகள் மத்தியிலும், கம்பான், மன்றாடி, சம்மட்டியார், பறி, அணியம், பாடு போன்ற சொற்கள் கடற்றொழிலாளர் மத்தியிலும் பரவலாக வழங்கி வருதலை எவரும் அறிந்துகொள்ளலாம்.

இளைஞர்களிடையே காணப்படும் அவர்களின் நடவடிக்கை சார்ந்த சொற்களும், ஆசிரியர்கள், பெரியோர்கள் பற்றி மாணவர்கள் தமக்குள் உரையாடும்போது பிறரறியா வண்ணம் தமக்குட் பயன்படுத்தும் சொற்களும் இவ்வகையைச் சார்ந்தனவே. இச்சொற்களின் பொருளை அந்தந்தக் குழாம் சார்ந்தவர்களன்றி வேறெவரும் அறிய வாய்ப்பில்லை. எவ்வாறெனினும், இயல்பு வழக்காயினும் தகுதிவழக்காயினும் அவை இலக்கண நெறிமுறைக்குள் அடங்கிவிடுகின்றன என்பதை மறத்தலாகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9. தொடர்மொழி

ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டதாகவும் கருத்துப் புலப்படுமாறும் அமைந்திருக்கின்ற இரண்டோ அல்லது அதற்கும் மேற்பட்ட சொற்களைக் கொண்ட கூட்டே தொடர்மொழி எனப்படுகின்றது.

தொடர்மொழியானது தொகைநிலைத் தொடர், தொகாநிலைத் தொடர் என இருவகைப்படுகின்றது.

## தொகைநிலைத் தொடர்:

தொகைநிலைத் தொடர் என்பது உருபுகள் வெளிப்படாமல் மறைந்து நிற்கின்ற நிலையில், இரண்டு அல்லது அவற்றுக்கும் மேற்பட்ட சொற்கள் இணைந்து இலக்கணரீதியாகப் பொருள் தருவது எனலாம். தொகை என்றால் தொக்கிநிற்கிறது அல்லது மறைந்து நிற்கிறது என்று பொருள்.

இத்தொகைநிலைத் தொடர் **வேற்றுமைத்தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகை, அன்மொழித்தொகை** என அறுவகைப்படுகின்றது.

## வேற்றுமைத்தொகை:

வேற்றுமை உருபுகள் வெளிப்படையாகத் தெரியாமல் மறைந்துநின்று பொருள் தருகின்றபோது அது வேற்றுமைத்தொகை எனப்படுகிறது.

வேற்றுமைகள் எட்டு என்கிறது இலக்கணம். இவற்றுள் முதல்வேற்றுமையும் எட்டாம்வேற்றுமையாகிய விளிவேற்றுமையும் உருபுகள் அற்றன. அதாவது எந்த உருபுகளையும் தம்முடன் இணைத்து மொழிநடையில் மாற்றத்தை ஏற்படுத்தாமல் உருபுகள் அற்றநிலையிலேயே பொருளைத் தருகின்றன என்பதை மனத்திருத்தல் அவசியம். இரண்டு தொடக்கம் ஏழு வரைக்குமான வேற்றுமைகளுக்கே உருபுகள் அமைந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி வேற்றுமைத்தொகை பற்றிப் பார்ப்போம்.

## • இரண்டாம் வேற்றுமைத்தொகை.

பாடம் படித்தான், உரை நிகழ்த்தினார், விளக்கேற்றினாள் ஆகிய சொற்றொடர்களில் இரண்டாம் வேற்றுமை உருபான "ஐ" வெளிப்படையாகத் தெரியாதபோதும் அதன் பொருளை உள்வாங்கியே மொழியை நாம் விளங்கிக் கொள்கிறோம்.

பாடத்தைப் படித்தான், உரையை நிகழ்த்தினார், விளக்கை ஏற்றினாள் எனத் தெளிவாக வராமல் உருபு மறைந்து (தொக்கி) நிற்பதால் இவை இரண்டாம் வேற்றுமைத்தொகையின் பாற்படுகிறது.

## • மூன்றாம் வேற்றுமைத்தொகை.

மூன்றாம் வேற்றுமை உருபு "**ஆல்**". தலை வணங்கினான் எனுந்தொடரில் வேற்றுமைஉருபு "ஆல்" வெளிப்படையாகவன்றி தொக்கிநிற்கும் நிலை காணப்படுகிறது. இதன் வெளிப்படையான வடிவம் தலையால் வணங்கினான் என்பதாகும்.

எனவே மூன்றாம்வேற்றுமை உருபு மறைந்து நிற்பதால் இத்தொடர் மூன்றாம் வேற்றுமைத்தொகை எனப்படுகிறது.

இதேபோன்று, பொன்னால் (ஆன) மணி என்ற பொருளில் வருகின்ற பொன்மணியும் மூன்றாம் வேற்றுமைத்தொகையாம். மட்குடம், தங்கமாலை போன்ற தொடர்களும் இவ்வகைத்தே.

## • நான்காம் வேற்றுமைத்தொகை:

இதன் உருபு "கு" என்பதாகும். சிவகுமாரன், பார்வதிமைந்தன், இராமன்தம்பி, சீதைமணாளன், மாட்டுத்தீவனம், கோழித்தீன், போன்ற சொற்றொடர்கள் "கு" உருபை மறைத்து நிற்பதால் இவை நான்காம் வேற்றுமைத்தொகை எனப்படுகின்றன. இவற்றின் முழுவடிவங்கள் சிவனுக்குக் குமாரன், பார்வதிக்கு மைந்தன், இராமனுக்குத் தம்பி, சீதைக்கு மணாளன், மாட்டுக்குத் தீவனம், கோழிக்குத் தீன் என்பவையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ### ஐந்தாம் வேற்றுமைத்தொகை:

ஐந்தாம் வேற்றுமையுருபுகள் "**இன், இல்**" என்பவையாம். கவிதைச்சாரம், மலையருவி. போன்ற சொற்றொடர்கள் ஐந்தாம் வேற்றுமைத்தொகையாம். இவற்றை விரித்துரைக்கின் மலையில் அருவி, கவிதையின் சாரம் எனவமையும்.

- ### ஆறாம் வேற்றுமைத்தொகை:

ஆறாம் வேற்றுமைஉருபு "**அது, உடைய**" என்பவையாம். தமிழர்பெருமை, கிராமத்துப்பண்பு, அவன்சாதனை என்பவற்றை ஆறாம் வேற்றுமைத் தொகையாகக் குறிப்பிடலாம். .தமிழரது பெருமை, கிராமத்தவருடைய பண்பு, அவனுடைய சாதனை என இவற்றைத் விரித்தும் கூறலாம்.

- ### ஏழாம் வேற்றுமைத்தொகை:

ஏழாம் வேற்றுமையுருபு "**கண்**" என்பதாகும். மணியோசை, காட்டுத்தீ போன்ற சொற்கள் ஏழாம் வேற்றுமைத் தொகைக்கு எடுத்துக்காட்டுகளாகும். இவை முறையே மணியின்கண் ஓசை, காட்டின்கண் தீ என விரித்துரைக்கத் தக்கவை.

## வினைத்தொகை:

வினைத்தொகை என்பது ஒரு வினைச் சொல்லின் பகுதியும் அதனைத் தொடர்ந்து இணையும் ஒரு பெயர்ச் சொல்லினதும் கூட்டு எனலாம். இதில் வினைச் சொல்லானது பெயரெச்சத்துக்குரிய விகுதியையோ காலங்காட்டுகின்ற இடைநிலைகளையோ கொண்டிருப்பதில்லை என்பது சிறப்பு.

வினைத்தொகை உருவாகும்போது வினைச்சொற் பகுதியை யடுத்து இணையும் பெயர்ச்சொல்லின் முதலெழுத்து மிகுவதில்லை என்பதை மனத்திருத்தல் அவசியம்.
வினைச் சொல்லின் பகுதி மூன்றுகாலங்களையும் காட்டும் இடைநிலைகளுடனும் இணையத்தக்கதாக இருப்பதுடன் அவை தொக்கி நிற்கின்ற நிலை காணப்படுவதால் வினைத்தொகை எனப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக்காட்டுகள்:

1. சுடுசோறு. இது (தொட்டால்) சுடும் சோறு, சுடுகின்ற சோறு. சுட்ட சோறு என முக்காலத்துக்கும் பொருந்தத்தக்க வினைச் சொல்லைக் கொண்டிருக்கிறது.

2. ஊறுகாய் - ஊறிய காய், ஊறுகின்ற காய், ஊறும் காய் என முக்காலமும் காட்டுகிறது.

3. எழுகதிர் - நேற்று எழுந்த கதிர், இன்று எழுகின்ற கதிர், நாளை எழும் கதிர் எனக் கொள்ளலாம்.

இதேபோன்று, படுபொழுது, விடிகாலை, வருதுயர், எழுதுகோல், உதயநிலா, கொல்களம், வதைகூடம், சுடுசொல், எறிகணை, வீழ்புனல், விடுகதை, எரிதழல், புனைபெயர், இடுகாடு, புதைகுழி, ஆடுகளம், விடுகதை எனப் பல வினைத்தொகைச் சொற்களைத் தெரிந்து கொள்ளலாம்.

இவற்றை எழுதுக்கோல், விடிக்காலை, சுடுச்சொல் என வருமொழியின் வல்லினம் மிகத்தக்கதாக எழுதுவதோ உச்சரிப்பதோ தவறு என்பது கவனிக்கப்பட வேண்டியது.

## பண்புத்தொகை:

நிறம், வடிவம், குணம், சுவை, இயல்பு என்பவற்றின் அடிப்படையில் தோன்றுவது பண்புத்தொகை எனப்படும்.

வெண்புறா, கருமுகில், சேவடி போன்றவை நிறஞ்சார்ந்த பண்புத்தொகைக்கு எடுத்துக்காட்டுகள்.
இச்சொற்கள் வெள்ளை நிறத்தையுடைய புறா என்றும், கருமை வண்ணமுடை முகில் என்றும், சிவந்த அடி என்றும் விரியும்.

வட்டநிலா, சதுரமுகி போன்ற சொற்கள் வடிவம் சார்ந்த பண்புத் தொகைகளாகும்.
இவை விரியின் வட்டவடிவமுள்ள நிலா எனவும் சதுரவடிவிலான முகம் எனவும் விரியும்.

நல்லமனிதன், கோபக்காரன், சிரித்தமுகம் என்பவை குணம்சார் பண்புத் தொகைகளாகும்.
நல்ல இயல்புடைய மனிதன், கோபத்தைக் கொண்டிருப்பவன், சிரிக்கின்ற இயல்புடைய முகம் என இவை விரியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இருபெயரொட்டுப் பண்புத்தொகை:

இருபெயர்ச்சொற்கள் இணைந்து பண்பை உணர்த்துகின்ற நிலையில் அவை இருபெயர் ஒட்டிவரும் தொகைச் சொல் எனும் பொருளில் இருபெயரொட்டுப் பண்புத்தொகை எனப்படுகின்றன.
இந்தியநாடு, வேற்படை, கற்கோவில், பனைமரம், பிறைநிலா என்பவை இதற்கு உதாரணங்களாம்.
இந்தியா எனும் நாடு, வேல்கள் தாங்கிய படை, கற்களால் அமைந்த கோவில், பனை இனத்தைச் சார்ந்த மரம், பிறை வடிவிலான நிலா என இவற்றின் பொருள் விரியுந் தன்மையடையன.

## உவமைத்தொகை:

ஒரு பொருளை பிறிதொரு பொருளோடு இணைத்து இதற்கு அது நிகர் என ஒப்பிடுவது உவமையாகும். இவ்வுவமைகளை விரித்துக் கூறும்போது போல, போன்ற, அன்ன, ஒப்ப, நிகர்த்த ஆகிய இடைச்சொற்கள் சேர்ந்து அவை தெளிவாக வெளிப்படும். இச்சொற்கள் வெளிப்படாவிடத்து அதாவது தொக்கி அல்லது மறைவாக நிற்குமிடத்து அது உவமைத்தொகை எனப் பெயர் பெறுகிறது.

ஒப்பீடு செய்யும்போது இரு பொருட்கள் தேவைப்படுகின்றன. ஒரு பெண்ணின் முகம் நிலாவைப்போல் இருப்பதாகக் கொண்டால் நிலாவைப் போன்ற முகம் என்றோ மதியை நிகர்த்த வதனம் என்றோ குறிப்பிடுவதுண்டு.

இங்கு உவமேயம். உவமானம் என இருவகைச் சொற்கள் காணப்படுகின்றன. முதன்மைப் பொருள் உவமேயம் எனவும் ஒப்பீட்டுக்குப் பயன்படும் பொருள் உவமானம் எனவும் பெயர் பெறுகின்றன.

மேற்சொன்ன உதாரணத்தில் முதற்பொருள் பெண்ணின் முகம் அல்லது வதனம். எனவே இவை உவமேயம் எனப்படுகின்றன. ஒப்பீட்டுப்பொருள் நிலா அல்லது மதி. இவை உவமானம் எனப்படுகின்றன.
தேன்மொழி (தேன்போன்ற மொழி), மலர்ப்பாதம் (மலரையொத்த பாதம்), பானை வயிறோன் (பானை போன்ற வயிற்றை உடையவன்), ஆந்தைக் கண்ணன் (ஆந்தையின் கண்களையொத்த கண்களை உடையவன்), போன்றவற்றையும், பால்நிலா, தேன்நிலா, பொன்வதனம் போன்றவற்றையும் உவமைத்தொகைக்கு உதாரணங்களாக நோக்கலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உம்மைத்தொகை:

இருசொற்கள் இணையும்போது "உம்" எனும் இடைச்சொல் தோன்றுவதுண்டு. அவ்வாறு தோன்றும் "உம்" மறைந்து நின்று செயற்படுமிடத்து அது உம்மைத்தொகை எனப்படுகிறது.

"அவன் இராப்பகல் உழைத்து முன்னேறினான்." என்ற வாக்கியத்தின் பொருள், அவன் இரவும் பகலும் உழைத்து முன்னேறினான் என்பதாகும். இங்கே, இரவும் பகலும் என்பதன் உம்மை தொக்கி நிற்க இராப்பகல் என்றாயிற்று. எனவே இராப்பகல் உம்மைத்தொகை எனப் பெயர் பெறுகிறது.

இதேபோல் பிறவற்றையும் நோக்கலாம். அண்ணன்தம்பி (அண்ணனும் தம்பியும்), சுகதுக்கம் (சுகமும் துக்கமும்), மாலைமரியாதை ( மாலையும் மரியாதையும்), மானஅவமானம் (மானமும்அவமானமும்), ஏற்றம்இறக்கம் (ஏற்றமும் இறக்கமும்), கூன்குருடு (கூனும் குருடும்), காலநேரம் ( காலமும் நேரமும்), பட்டம்பதவி (பட்டமும் பதவியும்), உருட்டுப்புரட்டு (உருட்டும் புரட்டும்) எனபவை உம்மைத் தொகை உதாரணங்களுட் சிலவாம்.

## அன்மொழித்தொகை:

அன்மொழித்தொகை என்பது அன்மொழித்தொகை மொழிக்கூட்டில் வருகின்ற சொற்களின் பொருளைச் சுட்டி நில்லாதவை என்பதையும், அவை வேறுபொருளைச் சுட்டுவதற்காக எழுந்தவை என்பதையும் விளங்கிக் கொளஸ் நலம்.

ஆயிழை --- அழகாகப் பின்னப்பட்ட நகை என்பதே பொருள். ஆயினும் அப்பொருளுக்கும் அப்பாற் சென்று அழகான நகையணிந்த பெண்ணைக் குறிக்குமாயின் அது அன்மொழித் தொகையாகும்.

நேரிழை ---- நேர்த்தியாக இழைக்கப்பட்ட அணிகலன்.
ஏந்திழை ---- இழைக்கப்பட்ட நகைகளை ஏந்தி நிற்பது. ஆயினும் இவையிரண்டும் நகையையோ நேர்த்தி அல்லது ஏந்தியிருத்தலையோ கருதாது பெண்ணைச் சுட்டி நிற்குமிடத்து அன்மொழித்தொகை ஆகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூங்கொடி --- பூவைஏந்திய கொடியைக் குறிக்காமல் பூங்கொடிபோன்ற பெண்ணைக் குறிக்குமிடத்து அதுவும் அன்மொழித்தொகை எனப்படுகிறது.
இதேபோல் வேல்விழி (வேல் போன்ற விழி எனக் கருதுமிடத்து உவமைத்தொகை எனப்படும்), கயல்விழி, மீன்விழி, மான்விழி என்பவையும் ( கயலொத்த, மீன்நிகர்த்த, மான்போன்ற விழி என) நேரடிக் கருத்தைக் கொள்ளுமிடத்து உவமைத்தொகையாக வருகின்ற போதிலும் பெண்ணைக் குறிக்குமிடத்து அன்மொழித்தொகை எனப்படுகின்றன.

இவ்வாறே, கார்குழல் என்பது கருமையான கூந்தல் எனப் பொருள் கொள்ளுமிடத்து பண்புத்தொகையாக அமையும். எனினும் கரியகூந்தலையுடைய பெண்ணைக் குறிக்குமிடத்து அது அன்மொழித்தொகை எனப்படும்.

பொதுவாக, அன்மொழித்தொகை பேச்சுவழக்கிலோ வசனநடையிலோ வருவதில்லை. இலக்கியத்தரம் வாய்ந்தசொல் என்பதால் கவிதைகளிலேயே பெரும்பாலும் கையாளப்படுகின்றன என்பதை மனதிற் கொண்டால் கருத்துமயக்கம் ஏற்பட வாய்ப்பிருக்காது.

## தொகாநிலைத்தொடர்.

**தொகாநிலைத் தொடர்** என்பது வேற்றுமையுருபு முதலிய இடைச்சொற்கள் வெளிப்பட்டு நிற்கும் இயல்புடைய சொற்களின் கூட்டாகும்.

தொகைநிலைத் தொடர் எனப்படுமிடத்து வேற்றுமையுருபு முதலாக உருபுகள் மறைந்துநின்று பொருள் தருகின்ற அதேவேளையில் தொகாநிலைத் தொடரில் வெளிப்பட்டு நிற்கின்றன. தொகாநிலை என்பதன் பொருள் மறைவற்றநிலை அல்லது வெளிப்படையான தன்மை எனலாம்.

தொகாநிலைத் தொடரானது எழுவாய்த்தொடர், விளித்தொடர், வேற்றுமைத்தொடர், பெயரெச்சத்தொடர், வினையெச்சத்தொடர், தெரிநிலை வினைமுற்றுத்தொடர், குறிப்புமுற்றுத்தொடர், இடைச்சொற்றொடர், உரிச்சொற்றொடர், அடுக்குத்தொடர் எனப் பத்து வகைப்படுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுவாய்த்தொடர்:

எழுவாய்த் தொடரை முதல்வேற்றுமைத் தொடர் எனவும் குறிப்பிடலாம். முதல்வேற்றுமைக்கு உருபுகள் எவையுங் கிடையா. எனவே முதலாம் வேற்றுமையாகிய எழுவாய் பிறிதொரு பதத்துடன் இணையும்போது இத்தொடர் தோன்றுகிறது.

முதல்வேற்றுமை அல்லது எழுவாய்ச் சொற்கள்: கணபதி, மரம், ஆறு என்பன.
இதன்படி, கணபதி வந்தான். மரம் வீழ்ந்தது. ஆறு பெருகியது. என இணையும்போது எழுவாய்த்தொடர் தோன்றுகிறது.

## விளித்தொடர்.

விளித்தொடரை எட்டாம் வேற்றுமைத் தொடர் எனவும் அழைக்கலாம். ஒருவரை விளித்துப் பேசுவது அல்லது ஏவல் இடுவது என்பவை இதன் பண்புகளாகும்.

எட்டாம்வேற்றுமை அல்லது விளிவேற்றுமை எப்போதும் முன்னிலை எழுவாயையே கொண்டிருக்கும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வேற்றுமைக்கும் உருபுகள் கிடையா. எனினும் பெயர்ச்சொல்லின் ஈற்றெழுத்துக் கெடுந்தன்மையும், ஈற்றயல் எழுத்து நீட்சிபெறுந்தன்மையும் இதற்குண்டு. உதாரணமாக, முருகன் என்ற எழுவாய்ப்பெயர் ஈற்றெழுத்து (ன்) கெட்டு ஈற்றயல் எழுத்தான "க" "கா" என நீட்சி பெறுதலையும் காண்க.

அதேபோல, ஈற்றெழுத்து நீட்சிபெறுதலும் உண்டு. உதாரணம், தம்பி என்ற எழுவாயின் ஈற்றெழுத்து நீண்டு தம்பீ என வருதலை நோக்குக.
முருகா வா, தம்பீ ஓடு, பக்தா உனை மெச்சினேன். போன்ற தொடர்கள் விளித்தொடருக்கு உதாரணங்களாம்.

## வேற்றுமைத்தொடர்.

இரண்டு தொடக்கம் ஏழு வரையிலான வேற்றுமைகள் வெளிப்பட்டுநிற்க அமையுந்தொடர்கள் வேற்றுமைத் தொடர்கள் எனப்படுகின்றன. முதல்வேற்றுமை எழுவாய்த்தொடர் எனவும் எட்டாம்வேற்றுமை விளித்தொடர் எனவும் அடையாளம் பெற்றுள்ளதை மேலே பார்த்தோம். எனவே. வேற்றுமைத்தொடர் எனப் பொது அடையாளம்பெறும் ஏனைய தொடர்களைப் பார்ப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **இரண்டாம் வேற்றுமை (உருபு – ஐ)**

எதிரியை வீழ்த்தினான், கடிதத்தைப் படித்தான் போன்ற தொடர்களில் எதிரி-ஐ, கடிதம்(அத்து)-ஐ என இரண்டாம் வேற்றுமையுருபு வெளிப்பட்டு நிற்பதனால் இவை இரண்டாம் வேற்றுமைத்தொடர்கள் எனப்படுகின்றன.

- **மூன்றாம் வேற்றுமை(உருபு - ஆல்).**

பேனாவால் எழுதினாள், வாளால் அரிந்தான் எனுந்தொடர்களில் பேனா-ஆல், வாள்-ஆல் என மூன்றாம் வேற்றுமையுருபு வெளிப்பட்டு நிற்பதனால் இவை மூன்றாம் வேற்றுமைத்தொடர்கள் எனப்படுகின்றன.

- **நான்காம் வேற்றுமை (உருபு – கு)**

வறியவர்க்கு உதவினார்கள், சீடனுக்கு வழிகாட்டினார் போன்ற தொடர்களில் வறியவர்-கு, சீடன்-கு என வேற்றுமையுருபு தெளிவாகத் தெரிவதனால் இவை நான்காம் வேற்றுமைத் தொடர்கள் எனப்படுகின்றன.

- **ஐந்தாம் வேற்றுமை (உருபு இன், இல், நின்று, இருந்து).**

மலையின் அருவி, ஊரினின்று புறப்பட்டான், துன்பத்திலிருந்து விடுபட்டான் ஆகிய தொடர்களில் வேற்றுமையுருபுகள் வெளிப்பட்டு நிற்கின்றன.

மலை-இன்-அருவி --- மலையின் அருவி.

ஊர்-இன்-நின்று புறப்பட்டான்.-----ஊரினின்று புறப்பட்டான்.

துன்பம் (அத்து)-இல்-இருந்து ------ துன்பத்திலிருந்து விடுபட்டான். என வருதலால் இவை ஐந்தாம் வேற்றுமைசார்ந்த தொகாநிலைத் தொடராகின்றன.

- **ஆறாம் வேற்றுமை. (உருபு அது, உடைய)**

அவனது திறமை, கம்பனது பெருமை, கண்ணனுடைய பொருள், ஆகிய வாக்கியங்களில் ஆறாம் வேற்றுமையுருபுகள் தெள்ளெனத் தெரிகின்றன. எனவே இவை ஆறாம் வேற்றுமைசார் தொகாநிலைத் தொடர்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஏழாம் வேற்றுமை. (உருபு கண்)

காட்டின்கண் தீ. மணியின்கண் ஓசை எனவருந் தொடர்கள் ஏழாம் வேற்றுமைத் தொடர்களாகும். இரு வாக்கியங்களிலும் வேற்றுமையுருபு தெளிவாக வெளிப்படுகின்றமை கண்கூடு.

## பெயரெச்சத் தொடர்.

பெயரெச்சத்தை யடுத்து பெயர்ச்சொல்லொன்று பொருள்பட இணையும்போது பெயரெச்சத் தொடர் தோன்றுகிறது. வந்த மாடு, நடந்த மனிதன், காய்ந்த சருகு போன்ற தொடர்களில் பெயரெச்சமும் அதனையடுத்து பெயர்ச்சொல்லும் இணைந்திருப்பதால் இவை பெயரெச்சத்தொடர் எனப்படுகின்றன.

## வினையெச்சத் தொடர்.

வினையெச்சத்தை யடுத்துப் வினைச்சொல் பொருளுடன் இணையும்போது வினையெச்சத் தொடர் தோன்றுகிறது.
உதாரணமாக,
வந்து சென்றான், நிலைத்து நின்றது, போய்ப் பேசினாள் முதலான தொடர்களைக் கொள்ளலாம்.

## தெரிநிலை வினைமுற்றுத்தொடர்.

தெரிநிலை வினைமுற்றைத் (காலத்தைத் தெளிவாகக் காட்டுகின்ற வினைமுற்று. உதாரணம் வந்தான், சென்றாள்.) தொடக்கமாகக் கொண்டு உருவாகும் தொடர் தெரிநிலை வினைமுற்றுத் தொடர் எனப் பெயர் பெறுகிறது.

- வந்தான் கணபதி,
- ஆடினாள் நர்த்தகி,
- சிரித்தாள் தங்கப்பதுமை போன்றவை உதாரணங்களாம்.

## குறிப்புமுற்றுத் தொடர்.

குறிப்பு முற்றுகளைக் கொண்டு தொடங்கும் தொடர் குறிப்புமுற்றுத் தொடர் எனப்படுகிறது. (குறிப்பு(வினை)முற்று என்பது காலத்தை வெளிப்படையாக உணர்த்தாது முக்காலத்துக்கும் பொருந்திவரும் வினைமுற்று என்பதை மனதிற் கொள்க.)

- பொன்னன் வந்தான்,
- பெரியன் மகிழ்ந்தான். என்பவை பொருத்தமான எடுத்துக் காட்டுகளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இடைச்சொற்றொடர்.

இடைச்சொற்கள் வேறு பதங்களுடன் இணையும்போது இடைச்சொற்றொடர் உருவாகிறது.
மற்றொன்று, இன்னபிற போன்றவை இடைச்சொற்றொடருக்கு உதாரணங்களாம்.

## உரிச்சொற்றொடர்.

உரிச்சொற்கள் வேறுசொற்களுடன் இணைந்து உருவாகும் சொற்றொடரே உரிச்சொற்றொடர் எனப்படுகிறது.
நனிபேதை, மாமுனி போன்றவற்றை உரிச்சொற்றொடருக்கான உதாரணமாகக் கொள்ளலாம்.

## அடுக்குத்தொடர்.

உணர்ச்சி மேலீட்டால் சில சொற்களை இருதடவைகள் தொடர்ந்து ஒலிக்கும்போது அது அடுக்குத்தொடர் எனப்படுகிறது.
"பாம்பு பாம்பு", "ஆபத்து ஆபத்து" என்பவை உதாரணங்களாம்.

## அடுக்கிடுக்குத் தொடர்

அடுக்குத் தொடரில் சில இடங்களில் முதன்மொழி சற்றே மாற்றமடைந்து சொல்லவந்த கருத்துக்கு மேலதிக வலுச்சேர்ப்பதுண்டு. அவ்வாறு மாற்றமடையுமிடத்து அவை அடுக்கிடுக்குத் தொடர் எனப்பெயர் பெறுகின்றன.

கன்னங்கரிய, பென்னம்பெரிய, செக்கச்சிவந்த, சின்னஞ்சிறிய என்பவை எடுத்துக் காட்டுகளாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10. ஆகுபெயர்.

ஒரு பெயர்ச்சொல் தான் தாங்கிவரும் பொருளை உணர்த்துவதற்குப் பதிலாகத் தன்னோடு தொடர்புடைய பிறிதொரு பொருளைத் தருமிடத்து அது ஆகுபெயர் எனப்படுகிறது.

வெள்ளைப் பசு பாய்ந்து வந்தது என்ற வாக்கியத்தை எடுத்துக் கொண்டால் வெள்ளை என்பது நிறத்தைக் குறிக்கிறது. அப் பெயர்ச் சொல்லின் நோக்கமும் அதுதான். ஆனால் வீட்டுக்கு வெள்ளை யடித்தனர் என்ற வாக்கியத்தில் வருகின்ற வெள்ளை எனும்பதம் நிறத்தைக் குறிப்பதன்று. பதிலாக வெள்ளை நிறமுடைய சுண்ணாம்பையே குறிக்கிறது. வண்ணச் சுண்ணாம்பு பூசினாலும் வெள்ளையடித்தல் என்பதற்குள் அடங்கி விடுகிறது.

இங்கு, பசுவின் வண்ணத்தைக் குறிக்கும் வெள்ளை பண்புப் பெயர் அல்லது குணப்பெயர் என்ற வகுதிக்குள் வருகின்றது. சுண்ணாம்பைக் குறிக்கும் வெள்ளை தன் பண்பைச் சுட்டாமல் அந்நிறத்தைக் கொண்டிருக்கும் சுண்ணாம்பைச் சுட்டுகின்றது. அதாவது கட்டடத்துக்குப் பூசப்படுகின்ற சுண்ணாம்புக்கு ஆகி வருவதால் அது ஆகுபெயர் எனப்படுகிறது. வெண்மை என்ற நிறத்தொடர்பு காரணமாக வெள்ளைநிறம் சுண்ணாம்புக்கு ஆகி சுண்ணாம்பு பூசுகின்ற செயலுக்கும் ஆகி நிற்கின்றது.
இதனடிப்படையிலேயே எல்லா ஆகுபெயர்களும் அமைகின்றன.

இவ்வாறான ஆகுபெயர்களை இலக்கண அறிஞர்கள் பதினாறு வகைப்படுத்தியுள்ளனர்.

**அவையாவன:**

பொருளாகுபெயர், இடவாகுபெயர், காலவாகுபெயர், சினையாகுபெயர், குணவாகுபெயர் (அல்லது பண்பாகுபெயர்), தொழிலாகுபெயர், நீட்டலளவையாகுபெயர், நிறுத்தலளவையாகுபெயர், முகத்தலள வாகுபெயர், எண்ணளவாகுபெயர், கருவியாகுபெயர், காரியவாகுபெயர், கருத்தாவாகுபெயர், தானியாகுபெயர், சொல்லாகுபெயர், உவமையாகுபெயர் என்பனவாம்.

எவ்வாறு ஆகுபெயர்கள் அடையாளம் பெறுகின்றன எனப் பார்ப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1. பொருளாகு பெயர்.

ஒரு முழுப்பொருள் அதன் பகுதிக்கும் பொருந்திவரும் வகையில் வாக்கியம் அமைந்தால் அதற்காகப் பயன்படுத்தப்படும் பெயர்ச்சொல் பொருளாகு பெயர் எனப்படுகிறது.

1. மல்லிகை சூடி மங்கை வந்தாள்.
2. தாமரையில் உணவு பரிமாறப்பட்டது.
3. தாமரை சொரிந்து இறைவனை வழிபட்டாள்.
4. வில்வத்தால் சிவனை அர்ச்சனை செய்தாள்

இவ்வாக்கியங்களை எடுத்துக்கொண்டால், மல்லிகை என்பது ஒரு பூச்செடியின் பெயர் என்பதை நன்கறிந்திருந்தும், மங்கை பூச்செடியைச் சூடி வந்ததாக யாரும் பொருள் கொள்வதில்லை. மாறாக அச்செடியிற் பூக்கும் மலரைத் தலையில் அணிந்துவந்தாள் என்றே பொருள் கொள்ளப்படுகிறது. எனவே மல்லிகைச்செடி எனும் (முழுப்) பொருள் அதன் ஒருபகுதியான பூவுக்கு ஆகி நிற்பதால் பொருளாகு பெயர் எனப்படுகிறது.

அதேபோல், தாமரை என்பது நீரில் வளரும் கொடித்தாவரம். எனினும் இரண்டாவது சொற்றொடரில் அச்சொல் தாமரை இலையை மட்டுமே குறிக்கிறது. மூன்றாவது தொடரில் வருகின்ற தாமரை எனுஞ்சொல் கொடியையோ அதன் இலையையோ குறிக்கவில்லை. மாறாக மலரைக்குறிக்கிறது. நான்காவது வாக்கியத்தில் வரும் வில்வம் என்றசொல் வளர்ந்துநிற்கும் மரத்தையோ அதன் கனியையோ குறிப்பிடாமல் இலையையே குறிப்பிடுகிறது. எனவே இவை தமது முழுமையைச் சுட்டாமல் யாதாயினும் ஒருபகுதியைச் சுட்டி நிற்பதால் பொருளாகு பெயர் எனப்படுகிறது. முழுமையான பொருள் (அதன் பகுதிக்கு உரித்து)ஆகி நிற்கிறது என்பதை மனத்திருத்தினால் விளங்கிக் கொள்வது இலகுவாக அமையும்.

## 2. இடவாகு பெயர்.

1. எல்லையில் இந்தியாவும் பாகிஸ்தானும் பயங்கரமாக மோதிக்கொண்டன.
2. இன்று இலங்கையை எதிர்த்து இந்தியா களமிறங்குகிறது.
3. தன் மைந்தர்களால் திருக்கோணமலைமண் பெருமையடைந்தது.
4. இந்துவும் வளனாரும் இறுதிச் சுற்றுக்குத் தயாராகி வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவது வாக்கியத்தில் இந்தியா பாகிஸ்தான் என்ற சொற்கள் அவற்றின் இராணுவத்தைக் குறிப்பிடுகின்றன.

இரண்டாவது வாக்கியத்தில் இலங்கை, இந்தியா என்பவை அந்தந்த நாட்டின் சார்பாக விளையாட்டுப் போட்டியிற் கலந்து கொள்கின்ற வீரர்களையோ அணிகளையோதாம் குறிப்பிடுகின்றன.

மூன்றாவது தொடரில் திருக்கோணமலை மண் என்பது உண்மையான மண்ணைக் குறிப்பிடவில்லை. மாறாக, அங்கு வாழ்கின்ற மக்களைத் தான் குறிக்கிறது.

நான்காவது வசனத்தில் இந்து, வளனார் என்பவை பாடசாலைகளைக் குறிக்கும் சொற்களாக இருந்தபோதிலும், பாடசாலைகளின் சார்பாகப் போட்டிக்குத் தயாராகும் மாணவர்களையே சுட்டுகின்றன.

**எனவே**, இடப்பெயர்களைக் கொண்டிருந்தும் அவை தம்மைச் சுட்டாது தம்மிடத்தைச் சேர்ந்த இராணுவத்தையும், விளையாட்டு வீரர்களையும், மண்ணில் வாழ்கின்ற மக்களையும், கல்வி பயில்கின்ற மாணவர்களையும் சுட்டி நிற்பதால் இவை இடவாகு பெயர் எனப் பெயர் பெறுகின்றன.

ஊர் வாயை மூடமுடியாது, ஊர் சிரிக்க வாழாதே, நாடு சோகத்தில் மூழ்கியது ஆகிய வாக்கியங்களையும் கருத்திற் கொள்க.

## 3. காலவாகு பெயர்.

காலத்தின் பெயர் அக்காலத்தை யொட்டிய பிறிதொன்றுக்காகப் பயன்படுத்தப்படுமிடத்து அது காலவாகு பெயர் எனப்படுகிறது.

கார் அறுத்தான், மானாவாரி செய்தனர் போன்ற வாக்கியங்களில் வருகின்ற கார், மானாவாரி போன்ற சொற்கள் மழையையோ அக்காலத்தையோ குறிப்பிடாது அதன்போது விளையும் பயிரைக் குறிப்பதால் காலவாகு பெயராகின்றது.

"பதினொன்றான் வந்து போயிற்றா?" என்ற கேள்வியில் பதினொன்று என்பது நேரத்தைக் குறிக்காமல் அந்த நேரத்துக்கு வருகின்ற பேருந்தைக் குறிப்பதால் அதுவும் காலவாகு பெயராகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் அமாவாசை பிடிக்கிறான் என்ற வசனத்தில் வருகின்ற அமாவாசை காலத்தைக் குறிப்பிடாமல் அக்காலத்தில் இறந்த தந்தைக்காகக் கடைப்பிடிக்கப்படும் விரதத்தைக் குறிப்பதால் இது காலவாகு பெயர் எனப்படுகிறது.

## 4. சினையாகு பெயர்.

ஒரு முழுப்பொருள் அதன் பகுதிக்காகி வருவது பொருளாகு பெயர் என்பதுபோல், பொருளொன்றின் பகுதி (அல்லது சினை) முழுப்பொருளுக்கும் ஆகிவரும்போது அது சினையாகு பெயர் எனப்படுகிறது.

"தலைக்கு ஐந்துரூபா கொடுத்தாற்றான் உள்ளே போக முடியும்." என்ற வசனத்தில் தலைக்கு என்பது ஓராளுக்கு எனப் பொருள்தருகிறது. எனவே அது சினையாகு பெயர் எனப்படுகிறது.

பாண்டியன் முடி சாய்ந்தது என்ற வசனத்தில் முடி என்பது அரசர் தலையிலணியும் கௌரவ அலங்காரமெனினும் இவ்விடத்தில் முடியைக் கருதாமல் ஆட்சியைக் குறிப்பதால் அச்சொல் சினையாகு பெயர் என்ற வகுதிக்குள் வருகிறது.

வெற்றிலை நட்டான், நெல் விளைந்தது போன்ற வாக்கியங்களில் வெற்றிலை இலையைக் குறிக்காமல் கொடியைக் குறிப்பதுபோல், நெல் என்பதும் நெல்மணியைக் குறிக்காமல் அதுசார்ந்த பயிரைக் குறிப்பதால் இவையிரண்டும் சினையாகு பெயர் எனப்படுகின்றன.

அதேபோல் ஆறுவிரல் வந்தான். எனும்போது அது விரல்களைக் குறிப்பிடாது ஆறுவிரல்களைக் கொண்ட மனிதனைக் குறிப்பதால் அதுவும் சினையாகு பெயர் ஆகிறது.

## 5. குணவாகு பெயர் அல்லது பண்பாகு பெயர்.

ஒரு குணத்தை அல்லது பண்பைத் தாங்கி நிற்கும் பொருள் அக்குணத்தின் பேரால் அல்லது பண்பின் பேரால் சுட்டப்படுகையில் அது குணவாகு பெயர் அல்லது பண்பாகு பெயர் எனப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சத்தம் போடாதே. சிடுமூஞ்சி வருகிறது. முரடு இன்று சிரிக்கிறது. வெண்கலக்கடை யானை போகிறது." ஆகிய வாக்கியங்கள் சில பண்புகளை அல்லது குணங்களைச் சுட்டுவதன்மூலம் அப் பண்புகளைத் தாங்கிய மனிதர்களை எமக்குணர்த்துவதால் அவை பண்பாகு பெயர் அல்லது குணவாகு பெயர் எனப்படுகிறது.

சிடுமூஞ்சி என்பது எப்போது நோக்கினும் இறுக்கமாக முகத்தை வைத்துக் கொண்டிருக்கும் ஒரு மனிதனைக் குறிப்பிடுகிறது. முரடு என்பது முரட்டுத்தனமாகப் பழகும் ஒருவரைக் குறிக்கிறது. வெண்கலக்கடை யானை என்ற பதம், ஒழுங்கு முறைமைகளைக் குழப்பிவிடக்கூடிய மனிதரைச் சுட்டுகிறது.

அதேபோல், ஆசிரியர் ஒருவர் பிள்ளைகளை விளித்து சதுரத்தை வலக்கையிலும் செவ்வகத்தை இடக்கையிலும் எடுத்து உயர்த்தும்படி கேட்குமிடத்து சதுரம், செவ்வகம் ஆகிய பண்புகளைக் (வடிவங்களை) கொண்டிருக்கும் பொருள்களை குறிப்பதால் அவையும் பண்பாகு பெயர் எனப்படுகின்றன.

"முள்முருங்கையுடன் வெள்ளையைச் சேர்த்துக் கசக்கிக் கட்டு." எனவருகின்ற வாக்கியத்தில் (முள்முருங்கை என்றசொல் மரத்தைக் குறிக்காமல் அதன் இலையையே குறிப்பிடுவதால் பொருளாகு பெயராகிறது.) வெள்ளை எனுஞ்சொல் வெள்ளை நிறமுடைய சுண்ணாம்பைச் சுட்டுவதால் குணவாகு பெயராகிறது. "வீட்டுக்கு வெள்ளையடித்தேன்." எனும்போதும் வெள்ளை குணவாகு பெயரின் பாற்படுகிறது.

"மஞ்சள் அரைத்தாள்." எனுமிடத்து அச்சொல் மஞ்சள் நிறமுடைய கிழங்கைச் சுட்டுவதால் மஞ்சள் குணவாகு பெயர் எனப்படுகிறது.

### 6. தொழிலாகு பெயர்.

கிழங்கைப் பதப்படுத்தி விற்கின்ற ஒருவனிடம் சென்று ஐம்பது ரூபாய்க்குப் பொரியல் தா எனக் கேட்டால் அவன் பொரித்த கிழங்கைப் பொதி செய்து தருவான். அதே போல் அவியல் தா என்று கேட்டால் அவித்த கிழங்கைத் தருவான்.

இங்கு பொரியல் என்பதும் அவியல் என்பதும் தொழிற்பெயர்கள். ஆயினும் அப்பெயர்கள் இவ்விடத்தில் கிழங்குக்கு ஆகி நிற்பதால் தொழிலாகுபெயர் எனப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதேபோல் "வறுவல் சுவையாக இருந்தது. கரைசலைக் கொண்டுவா, பொங்கல் முடிந்ததா? " என்பவைபோன்ற வாக்கியங்களில் வருகின்ற வறுவல், கரைசல், பொங்கல் என்பவையும் தொழிலாகு பெயர்களே.

## 7. நீட்டலளவாகுபெயர்.

புடைவைக் கடைக்குச் செல்லும் ஒருவர், தனக்குரிய துணியைத் தேர்வு செய்துவிட்டு "மீற்றர்" என்னவிலை? என்று கேட்பாராகில் கடைக்காரர் வைத்திருக்கும் மீற்றர்ச் சட்டத்தைக் கேட்பதாக யாரும் கருத மாட்டார்கள். துணியைக் கேட்கிறார் என்றே பொருள் கொள்ளப்படும்.

அதேபோல் கயிறு வாங்க வருகின்ற ஒருவரும் கடைக்காரரிடம் "மீற்றர் என்ன விலை?" எனக் கேட்கக் கூடும். இங்கும் மீற்றர் எனுஞ்சொல் அளவைத்தடியைக் குறிக்காது. மாறாக கயிற்றைக் குறிக்கிறது.

எனவே, மீற்றர் எனும் நீளத்துக்கான அளவு தன்னைக் குறிக்காமல் துணி, கயிறு என்பவற்றுக்கு ஆகிவருவதால் நீட்டலளவாகு பெயர் எனப்படுகிறது.

தம்பி நூறு மீற்றரைக் குறுகிய காலத்துள் ஓடிமுடித்தான் எனும் வாக்கியத்தில் நூறுமீற்றர் என்பது ஓடுதளத்தைக் குறிப்பதால் அதுவும் நீட்டலளவாகு பெயராகிறது.

இந்தியத் தமிழகத்தையும் ஈழத்தமிழகத்தையும் பதினெட்டு மைல் பிரித்திருக்கிறது என்று கூறின் அது நீரிணையின் குறுக்களவைக் கூறுவதால் அது நீட்டலளவாகு பெயர் எனப்படுகிறது.

எனவே, நீளத்தைக் குறிக்கின்ற அளவீடுகள் மீற்றர், கிலோமீற்றராய் இருந்தாலென்ன, அங்குலம், அடி, யார், சங்கிலி, பர்லாங்கு, மைல் எனப் பழையமுறையில் அமைந்தாலென்ன, சாண், முழம், பாகம் என நம்மவர் முறையிற் கொண்டாலென்ன, அவை தம்மைக் குறிப்பிடாமல் தம்மைப் பயன்படுத்தி அளவீடு செய்யப்படும் பொருள்களைக் குறிக்குமாயின் அவையெல்லாம் நீட்டலளவாகு பெயர் எனப்படும் என்பதை மனதிற் கொள்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8. நிறுத்தலளவாகு பெயர்.

மீன் விற்பவரிடம், அரைக்கிலோ தாருங்கள் எனக் கேட்டாலோ, வெங்காய வியாபாரியிடம் கிலோ என்ன விலை என்று வினவினாலோ, அவை மீனையும் வெங்காயத்தையும் குறிக்கின்றனவே யன்றி நிறுத்தல்அளவான கிலோவைக் குறிப்பதில்லை என்பது வெளிப்படை. கிலோ எனப்படும் நிறுத்தலுக்கான அளவு நிறுக்கப்படுகின்ற பொருட்களுக்கு ஆகி வருவதால் நிறுத்தல் அளவாகு பெயர் எனப்படுகிறது.

"நாட்டின் அரிசித் தட்டுப்பாட்டை உடனடியாக நீக்கும் பொருட்டு பத்தாயிரம் மெட்ரிக்தொன் இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறது." என்ற செய்தியில் இறக்குமதியான பத்தாயிரம் மெட்ரிக்தொன் என்ற நிறுத்தல் அளவு அரிசிக்கு ஆகி வருவதால் அது நிறுத்தலளவாகு பெயராகிறது.

கிராம் தொடங்கி மெட்ரிக்தொன் வரையிலான புதிய அளவீடுகளும், அவுன்ஸ் தொடங்கி தொன் வரையிலான பழைய அளவீடுகளும், மஞ்சாடியில் தொடங்கும் தமிழர்களின் நுண்பொருள்களுக்கான நிறுவை அளவீடுகளும் தம்மைக் குறிப்பிடாமல் தம்முதவியாற் கணிக்கப்படும் பொருள்களைக் குறிப்பிடுமிடத்து அவை அனைத்தும் நிறுத்தலளவாகு பெயராகின்றன.

## 9. முகத்தலளவாகு பெயர்.

அரிசி, பருப்புப் போன்ற தானியங்களும், பால், நெய், தயிர், எண்ணெய் போன்ற திரவவகைகளும் அள்ளி அளக்கப்படுகின்ற முகத்தல் அளவையாற் கணிக்கப்பட்டு வந்தன. எனினும் தற்காலத்தில் தானியவகையும் மாவகையும் நிறுத்தல் அளவைக்கு மாற்றப்பட்டபோதும் கிராமங்களில் மரபுவழியான முகத்தலளவையே பெரிதும் பேணப்பட்டுவருகின்றன என்பதையும் நினைவு படுத்தி முகத்தலளவாகு பெயருக்கான எடுத்துக்காட்டுகளைப் பார்க்கலாம்.

"எத்தனை மூடை விளைச்சல் கிடைத்தது? என ஒருவர் விவசாயியைப் பார்த்துக் கேட்பாராகில் மூடை என்ற சொல் குறிப்பிட்ட கொள்ளளவைக் கொண்ட நெல்லைக் குறிக்கிறது எனலாம். எனவே இங்கு மூடை அளக்கின்ற சாக்குப்பையைக் குறிக்காது நெல்லுக்காகி வருவதால் அது முகத்தலளவாகு பெயர் எனப்படுகிறது.

"வயலில் வேலை செய்தவர்களுக்கு இன்று எத்தனை படி தந்தார்கள்?" எனக் கேட்குமிடத்து படி என்ற அளவை நெல்லுக்காகி வருவதால் அது முகத்தலளவாகு பெயராகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாற்கடைக்குச் சென்று இரண்டு "பக்கட்" தாருங்கள், எனக் கேட்டாலோ, எண்ணெய் விற்குமிடத்தில், ஒரு "போத்தல்" தாருங்கள், அல்லது இரண்டு லிற்றர் தாருங்கள். எனக் கேட்டாலோ அவை பாலையும் எண்ணெயையும் குறிப்பிடுவதால் முகத்தலளவாகு பெயர் எனப்படுகிறது.

எனவே, கொள்ளளவைக் குறிக்கின்ற லிற்றர், போத்தல், கலன், சிறங்கை(கையின் கொள்ளளவு) கொத்து, படி, சேர், பறை, வீசம், அவணம் போன்ற அளவீடுகள் தம்மைச் சுட்டாது தம்மால் அளக்கப்படும் பொருளைச் சுட்டுமிடத்து அவை அனைத்தும் முகத்தலளவாகு பெயராகின்றன என்பது கவனிக்கத்தக்கது.

## 10. எண்ணளவாகு பெயர்.

"அவன் மிகவும் குழப்படிகாரனாக இருக்கிறான்: இரண்டு போட்டுத்தான் வழிக்குக் கொண்டுவந்தேன்" "தெருச் சண்டியர்களுக்குக் காவல்துறை வந்து நாலு போட்டால் ஊர் அமைதியாக இருக்கும்."

இந்த வசனங்களிற் காணப்படுகின்ற இரண்டும் நான்கும் எண்களைக் குறிக்காமல் "அடி"யைக் குறிக்கின்றன என்பது வெளிப்படை. இரண்டு, நாலு ஆகிய பதங்கள் தமக்குரிய எண்களைக் குறிப்பிடாது அடியின் எண்ணிக்கைக்கு ஆகிவருவதால் எண்ணளவாகு பெயர் எனப்படுகிறது.

"நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி." என்ற வரியில் வருகின்ற நாலும் இரண்டும் தம்மைச் சுட்டாது நாலடியார்.(நாலடிப்பாடல்) திருக்குறள் (இரண்டுவரி வெண்பா) ஆகிய நூல்களையே சுட்டுவதால், அதாவது அந்த நூல்களின் பாடல்வரி எண்ணிக்கையின் அடிப்படையில் அவை ஆகிவருவதால் எண்ணளவாகு பெயர் எனப்படுகின்றன.
தேங்காய் வியாபாரியிடம் ஒருவர் "ஒன்று என்னவிலை?" என்பாராகில் அந்த "ஒன்று" தேங்காய்க்கு ஆகி வருவதால் எண்ணளவாகு பெயராகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11. கருவியாகு பெயர்.

"அவரது தவில் என்னை மயக்கியது."
"நாதஸ்வரத்தை இரசிக்கத் தெரியாதவன் இசைமூடன்."
"நேற்று நடந்த நிகழ்ச்சியில் வயலின் மிக அருமையாக இருந்தது."
"அவனது வாள்முன்னே எவனால்தான் நிற்க முடியும்?"
"முருகனின் சிலம்பம் எதிர்கொள்ள இயலாதது."
"வாளோடு முன்தோன்றிய மூத்தகுடி."
"கண்ணனின் புல்லாங்குழலில் மெய்ம்மறக்காதார் யாருளர்?"

மேற்காணப்படும் வாக்கியங்களில் வருகின்ற தவில், நாதஸ்வரம், வயலின், புல்லாங்குழல் போன்ற இசைக்கருவிகள் அனைத்தும் தம்மைச் சுட்டாமற் தம்மால் பிறப்பிக்கப்படும் இசைச்சிறப்பைச் சுட்டிநிற்பதால் கருவியாகு பெயர் எனப்படுகின்றன.

இதேபோல், வாள், சிலம்பம் ஆகிய சொற்களும் தம்மைச் சுட்டாது தம்மைக் கொண்டிருப்பவரின் திறமையை வெளிப்படுத்துவதால் இவையும் கருவியாகு பெயர் எனப்படுகின்றன.

## 12. காரியவாகு பெயர்.

ஒரு காரியம் அல்லது செயன்முறை அதனோடு தொடர்புடைய பிறிதொன்றுக்கு ஆகிவருமிடத்து அது காரியவாகு பெயர் எனப்படுகிறது.

"தம்பி, மருத்துவம் படிக்கிறான்."
"குமார், பொறியியலுக்கு எடுபட்டிருக்கிறான்."
"தங்கை ஒப்பனை தெரிந்தவள்."

இங்கே மருத்துவம், பொறியியல், ஒப்பனை என்பவை நடைமுறைச் செயல்களால் நிரம்பப்பெற்ற காரியங்களாகும்.
மருத்துவம் படிக்கிறான் எனும்போது அச்செயன்முறைகளைப் பயிற்றுவிக்கும் நூல்களைப் படிக்கிறான் என்பதுதான் பொருள். மருத்துவம் தொடர்பான கற்கைநெறி அல்லது நூல்கள் மருத்துவம் எனும் காரியத்துக்கு ஆகிவருவதால் காரியவாகு பெயர் எனப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறிமுறைகள் தொடர்பான அறிவைத் தருகின்ற கற்கையைத் தொடர்வதற்கு குமார் தகுதி பெற்றிருக்கின்றமை இரண்டாம் வாக்கியத்தின் பொருள். எனவே பொறியியல் அறிவைத் தருகின்ற கற்கைநெறி பொறியியல் என்ற காரியத்துக்கு ஆகி நிற்பதால் காரியவாகு பெயராகிறது.

ஒப்பனை என்பது ஒரு செயன்முறை. தங்கை அச்செயன்முறைக்கான அறிவைக் கொண்டிருக்கிறாள் என்பதே வாக்கியத்தின் கருத்து. ஒப்பனை எனும் காரியம் அது சார்ந்த அறிவுக்கு ஆகிவருவதால் அது காரியவாகு பெயர் எனப்படுகிறது.

## 13. கருத்தாவாகு பெயர்.

ஒரு படைப்பு அதன் கருத்தாவால் குறிப்பிடப்படும்போது அது கருத்தாவாகு பெயராகின்றது. இதை இன்னொரு விதமாகச் சொல்வதானால் கருத்தா தனது படைப்புக்கு ஆகி நிற்பதே கருத்தாவாகு பெயராகின்றது எனலாம்.

1. கம்பனைப் படித்துப்பார்: தமிழின் சுவை தெரியும்.
2. பாரதியை அறியாதான் தமிழை அறியாதானே.
3. கார்ள்மாக்ஸைப் படிக்காமல் அரசியல் பேசாதே.
4. திருவள்ளுவரை உணர்ந்தவன் உலகையே உணர்ந்தவனாகிறான்.

மேற்போந்த வாக்கியங்களில், கம்பனைப் படித்தல் என்பது அவரது ஆக்கமான கம்பராமாயணத்தையும் பிற தனிப்பாடல்களையும் படித்துக் கவிச்சுவையை உணர்தல் என்பது பொருளாகிறது:

பாரதியை அறியாதான் என்பதற்கு அவரது கவிதைகளை அறிந்திருக்காதவன் என்பதே கருத்தாகிறது:

கார்ள்மாக்ஸைப் படித்தல் என்பது அவரது அரசியற் தத்துவங்களைத் தெளிவாக அறிதல் எனப் பொருள்படுகிறது:

திருவள்ளுவரை உணர்தல் என்பது அவரது கருத்துகளைக் கூறுகின்ற திருக்குறளை உணர்ந்து படித்தல் என்பது விளக்கமாகிறது.

எனவே கருத்தா ஒருவரால் ஆக்கப்பட்ட படைப்புகள் அவற்றின் சிறப்புக்கருதிக் கருத்தாவால் அடையாளம் பெறுகின்ற நிலையே கருத்தாவாகு பெயர் என்பதை உணர்க.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 14. தானியாகு பெயர்.

ஒரு பொருள் தன்னைத் தாங்கிநிற்கின்ற பொருளுக்கு ஆகி வருமிடத்து அது தானியாகு பெயராகிறது. தானி என்பது ஸ்தானம் அல்லது தானம் என்ற சொல்லிலிருந்து வந்தது. தானம் அல்லது தானி என்பதன் பொருள் இடம் என்பதைப் புரிந்துகொண்டால் தானியாகு பெயரை விளங்கிக் கொள்தல் எளிதாகும்.

1. விளக்கு முறிந்தது.
2. கையிலிருந்த எண்ணெய் தவறி விழுந்தது.
3. சோறு பொங்கிவரும் வேளையிற் கவிழ்ந்தது.
4. அடுப்பிலிருந்து பாலை இறக்கி வை.

இங்கே முதலாவது வாக்கியத்தில் விளக்கு என்பது வெளிச்சத்தைக் குறிக்கும் பதமாக இருந்தும் அந்த வெளிச்சத்தைத் தாங்கி நிற்கின்ற பொருளைக் குறிக்கின்றமை தெளிவு. விளக்கு முறிந்தது என்பதன் பொருள் ஒளியைத் தாங்கி நிற்கின்ற தானி முறிந்தது என்பதுதான்.

எண்ணெய் தவறி விழுந்தது என்பது எண்ணெய் வைத்திருந்த பாத்திரம் தவறி விழுந்தமையையே குறிப்பிடுகிறது. சோறு கவிழ்ந்தது என்பதும் சோற்றைத் தாங்கிநிற்கும் பானை கவிழ்ந்தது என்பதையே சுட்டுகிறது.

அடுப்பிலிருந்து பாலை இறக்கிவை என்ற வாக்கியத்தில் இறக்கப்படுவது பாலைக் கொண்டிருக்கும் பாத்திரத்தை என்பது தெளிவாக விளங்குகிறது.

எனவே, ஒருபொருள் தன்னைக் குறிப்பிடாமல் தான் சார்ந்திருக்கும் அல்லது தங்கியிருக்கும் தானியைச் சுட்டுமிடத்து அது தானியாகு பெயர் எனப்படுகிறது.

## 15. சொல்லாகு பெயர்.

1. வள்ளுவன் சொல் வாழ்க்கைக்கு உறுதி.
2. குருவின் சொல் கேட்டு நடப்பது நன்மாணாக்கனின் பண்பாகும்.
3. தாய் சொல்லைத் தட்டாதே.
4. தந்தைசொல் மிக்க மந்திரமில்லை.

மேலே காட்டப்பட்டிருக்கும் வாக்கியங்களில் சொல் என்ற பதம் அதன் நேர்ப்பொருளைக் கொண்டிராமல் வேறு கருத்துகளைக் கொண்டிருப்பதால் அது சொல்லாகு பெயர் எனப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளுவன் சொல் என்பது அவரது நூற்கருத்துகளைக் குறிக்கிறது. குருவின் சொல் என்பது அவரின் வழிநடத்தலைச் சுட்டுகிறது. தாய் சொல் எனும்பதம் தாயின் விருப்பம், எண்ணம் என்பவற்றைக் குறிக்கிறது. தந்தை சொல் என்பதும் அவரது எண்ணம், ஆணை, வழிகாட்டல் என்பவற்றைப் புலப்படுத்துகின்றது என்பதை மனதிற் கொள்க.

## 16. உவமையாகுபெயர்.

சில சமயங்களில் ஒருவரின் இயல்புகருதி உவமைகளை அவரது அடையாளமாகக் கொள்கிறோம். அவ்வாறாகக் கொள்ளப்படும் உவமைகள் உவமையாகுபெயர் எனப்படுகிறது.

நண்பர்களிடையே கலகமூட்டும் ஒருநண்பன் வரும்போது, "அதோ நாரதன் வருகிறான்." எனக் கூறுமிடத்து நாரதரின் இயல்பு நமது நண்பனுக்கு உவமையாகி வருவதால் அது உவமையாகு பெயராகிறது.

"இளங்காளை செருக்களத்தில் எதிரிகளைப் பந்தாடியது." என்ற வாக்கியத்தில் இளங்காளையின் இயல்புகள் இளையவீரனுக்கு உவமைஆகி வருவதால் அதுவும் உவமையாகு பெயர் எனப்படுகிறது.

"சாலையோரம் சோலையொன்று ஆடும்: சந்தோசம் பாடும்." என்ற கவிதைவரியில் சோலை என்றபதம் அதன் இயல்புகளான அழகு, மென்மை, மனதைக் கவருந்தன்மை என்பவற்றை இளம்பெண்ணுக்கு உவமையாக்கி வெளிப்படுவதால் அது உவமையாகு பெயராகின்றது.

### ஆகுபெயர் பற்றிய சில குறிப்புகள்.:

ஆகுபெயர்கள் பன்னெடுங்காலமாகப் பேச்சுவழக்கில் அமைந்தவை. எல்லா மொழிகளிலும் ஆகுபெயர்கள் அன்றாட வாழ்வில் இடம் பெறுகின்றன.

ஆட்டோவை அல்லது டாக்ஸியை ஒருவர் அழைக்கும்போது ஆட்டோ என்றோ டாக்ஸி என்றோதான் அழைக்கிறார்கள். ஆட்டோவுக்கோ டாக்ஸிக்கோ கேட்குந்திறன் இல்லை என்பது அழைப்பவருக்குத் தெரியாமலில்லை. ஆனாலும் அவர் அவ்வாறு அழைக்கிறாரெனில் அவ்வழைப்பு ஓட்டுநருக்கானது என்பது தெளிவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே ஆட்டோவின் பெயர் அல்லது டாக்ஸியின் பெயர் ஓட்டுநருக்கு ஆகி நிற்கிறது என்பதைப் புரிந்து கொண்டால் ஆகுபெயரின் பயன்பாடு தெளிவாகும்.

**இடவாகு பெயரும், தானியாகு பெயரும் ஒன்றுக்கொன்று மறுதலையானவை என்பதையும் விளங்குதல் நன்று.** "இலங்கை பதக்கம் வென்றது." என்பது இடவாகு பெயர். அதாவது இலங்கையில் வாழ்கின்ற வீரர்களையே இலங்கை என்ற இடப்பெயர் குறிப்பிடுகிறது.

ஆனால் "பாலை இறக்கு." எனும்போது பால் என்றபதம் தன்னைத் தாங்கி நிற்கின்ற பாத்திரத்தைக் குறிப்பிடுகிறது. அதனால் அது தானியாகு பெயர். இடவாகுபெயர் தான் தாங்கிநிற்கின்ற பொருளைக் குறிக்கையில் தானியாகு பெயர் தன்னைத் தாங்கிநிற்கின்ற பொருளைச் சுட்டுகிறது என்பதை நினைவிற் கொள்ளின் தெளிவு கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11. வினாவும் விடையும்

## வினாவகை.

வினா அதன் தன்மைகருதி **அறிவினா, அறியாவினா, ஐயவினா, கொளல்வினா, கொடைவினா, ஏவல்வினா** என ஆறுவகைப்படுவதாக இலக்கண அறிஞர் கூறுவர்.

- **அறிவினா**: விடையை நன்கு தெரிந்திருந்தும் எதிராளியிடம் வினாத் தொடுப்பது அறிவினா எனப்படுகிறது. ஆசிரியர் தன் மாணாக்கனிடம் கேட்கும் கேள்விகள் இவ்வகையைச் சாரும்.

  இவ் வினாக்களின் நோக்கம் வினாவை எதிர்கொள்பவர் சரியான விடையை அறிந்திருக்கிறாரா என உறுதி செய்வதேயாகும்.

  "ஐம்பெருங் காப்பியங்கள் எனப்படுபவை யாவை? இலங்கைத் தீவின் சுற்றளவு எத்தனை கிலோமீற்றர்?" என்பவை இவற்றுக்கான எடுத்துக்காட்டுகளாம்.

- **அறியாவினா**: வினாத் தொடுப்பவர் விடையை அறிந்திராத நிலையிலுண்டாகும் கேள்வி அறியாவினா எனப்படுகிறது.

"இந்த வேலையை யார் செய்தார்கள்? கடவுச்சீட்டு எடுப்பதற்கு என்னென்ன ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்?" என்பவை போன்ற வினாக்கள் அறியாவினாவின் பாற்படும்.

இதேபோல், மாணவனொருவன் தன் ஆசிரியரிடம் ஐம்பெருங் காப்பியங்கள் பற்றியோ, இலங்கையின் சுற்றளவு பற்றியோ வினவுவானாயின் அவையும் அறியாவினா வகைக்குள் வந்துவிடுகின்றன என்பதையும் நோக்குக.

- **ஐயவினா**: சந்தேகங்களை நிவர்த்தி செய்வதற்காக எழுப்பப்படும் வினாக்கள் ஐயவினா வகையைச் சாரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இவனா அவனா வயதில் மூத்தவன்?, நீங்கள் மாலை நான்குமணிக்கா அல்லது ஐந்துமணிக்கா அவரைச் சந்திக்க உள்ளீர்கள்? அவன் சொன்னபடி வருவானா?" என்பவை போன்ற சந்தேக நிவர்த்திக்காகக் கேட்கப்படும் வினா ஐயவினா எனப்படும்.

- **கொளல்வினா**: ஒரு பொருளைப் பெற்றுக் கொள்வதற்காகக் கேட்கப்படும் வினா கொளல்வினா எனப்படுகிறது.

"பருப்பு என்ன விலை? உனது பேனாவைச் சற்றுத் தருகிறாயா? இந்தப் படத்தை நான் வைத்துக் கொள்ளவா?" ஆகிய வினாக்கள் கொளல்வினா வகையைச் சாரும்.

- **கொடைவினா**: பொருளொன்றைக் கொடுக்கும் நோக்கில் கேட்கப்படுகின்ற வினா கொடைவினா வகையைச் சாரும்.

"மாணவர்களே! அனைவரும் சீருடை பெற்றுக் கொண்டீர்களா?", எல்லோரும் தேநீர் அருந்தினீர்களா?" போன்றவை கொடைவினாவுக்கு எடுத்துக்காட்டுகளாகும்.

- **ஏவல்வினா**. ஒரு செயலைச் செய்வதற்கான தூண்டுதலை வினாமூலம் வழங்க முயலுமிடத்து அது ஏவல்வினாவாகிறது.

"தம்பீ, இவ்வளவு நேரமும் விளையாடிக் கொண்டிருக்கிறாயே.. வீட்டுப்பாடங்களைச் செய்து முடித்துவிட்டாயா?" "நான் சொன்ன இடத்துக்கு இன்னும் போகவில்லையா?" என்பவை போன்ற வினாக்கள் ஒரு வேலையைச் செய்யும்படி ஏவல் செய்வதனால் அவை ஏவல்வினாக்கள் எனப்படுகின்றன.

## விடைவகை.

வினாவுக்கு அளிக்கப்படும் விடைகளும், **சுட்டுவிடை, மறைவிடை, நேர்விடை, ஏவல்விடை, வினாவெதிர்விடை, உற்றது ரைத்தல்விடை, உறுவதுஉரைத்தல்விடை, இனமொழிவிடை** என எட்டு வகைப் படுவதாக இலக்கண அறிஞர்கள் கூறுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **சுட்டுவிடை:** பாதைபற்றிய ஐயவினாவோ அறியாவினாவோ ஒருவரிடம் கேட்கப்படும்போது அவர் பாதையைச் சுட்டிக்காட்டி "இதுதான் நீங்கள் செல்ல வேண்டிய பாதை." எனப் பதில் கிடைக்குமாயின் அவ்விடை சுட்டுவிடை எனப்படுகிறது. படிக்கவேண்டிய பாடங்களை ஒரு மாணவனுக்கு உணர்த்தவதும் இவ்வகை சார்ந்த விடையே.

- **மறைவிடை:** "வீட்டுப்பாடங்களைச் செய்தாயா?" என ஆசிரியர் மாணவனிடத்தில் வினவும்போது, இல்லை என மறுதலையாக விடை வருமாயின் அது மறைவிடை எனப்படும். "இவ்வாண்டு கதிர்காமத்துக்குச் சென்றாயா?" என்ற கேள்விக்குப் போகவில்லை என்பது விடையாக வருமாயின் அதுவும் மறைவிடை வகையைச் சேர்ந்ததுதான்.

- **நேர்விடை** : "பாடசாலைக்குப் போகிறாயா?" என்ற கேள்விக்கு "ஆம், போகிறேன்."என விடையிறுப்பதும், "தம்பீ, எனக்கு உதவுவாயா?" எனக் கேட்குமிடத்து, "நிச்சயமாக உதவுவேன்." எனப் பதில் வருவதும் நேர்விடைக்கு உதாரணங்களாகும்.

- **ஏவல்விடை** : "கடைக்குச் சென்று பொருளை வாங்கி வருகிறாயா?" என்ற வினாவுக்கு "முடியாது: வேண்டுமானால் நீயே போய் வாங்கிக்கொள்." என்பது விடையாக வருமாயின் அது ஏவல்விடை எனப்படும். விடையில் ஏவல் தொனி அமைவதால் இவ்வாறு பெயர் பெறுகிறது.

- **வினாவெதிர்விடை:** "அதைச் செய்து முடித்து விட்டாயா?"என்ற வினாவுக்கு, "செய்து முடிக்காமல் உங்கள்முன் வருவேனா?" "என்னை யாரென்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்?" "நான் ஒரு பொறுப்பை ஏற்றால் முடிக்காமல் விடமாட்டேன் என்பது உங்களுக்குத் தெரியாதா?" என்பவை போன்ற கேள்விகளே விடையாக வருமாயின் அது வினாவெதிர்விடை வகையைச் சாரும்.

- **உற்றதுரைத்தல்விடை:** "அவரைச் சந்தித்தாயா?" என்ற வகையிலான கேள்விகளுக்கு நேரடியாகப் பதில்கூறாமல், தனக்குச் சுகமில்லையென்றோ, தன் நண்பனொருவன் விபத்தில் சிக்கிக் கொண்டான் என்றோ வீட்டுக்கு விருந்தினர்கள் வந்து விட்டார்கள் என்றோ தான் சந்திக்காமல் விட்டதற்குத் தடையாக நேர்ந்த காரணங்களை முன்வைப்பது உற்றதுஉரைத்தல் என்ற விடைவகையைச் சாரும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **உறுவதுகூறல்விடை:** இவ்வகை விடைகள் குழந்தைகளிடமிருந்து அதிகமாக வருவதை உணரலாம். "இதைக் கொண்டுபோய் அம்மாவிடம் கொடுக்கிறாயா?" எனும் கேள்விக்கு "ஊ..கும் கை வலிக்கும்." என்பதாக வரும் மழலைப்பதில் உறுவதுகூறல் விடைக்குச் சிறந்த உதாரணமாகும். "மருந்து குடிக்கிறாயா?" என்ற தாயின் கேள்விக்கு "கசக்கும்..." எனக் குழந்தை சொல்வதும் இவ்வகையைச் சார்ந்ததே.

- **இனமொழிவிடை:** கேள்வி ஒன்று கேட்கப்படுகையில் அதற்கு நேரடியாக விடை கூறாமல் கேள்விக்கு மிகநெருக்கமான இன்னொரு மொழியைப் பதிலாக முன்வைத்தல் இனமொழி விடை எனப்படுகிறது.

  உதாரணமாக "நன்றாகப் பாடுவாயா?" என்ற வினாவுக்கு "நன்றாக ஆடுவேனே.." எனப் பதிலிறுப்பதைக் கொள்ளலாம். "உனக்கு மேடைப்பேச்சு வருமா?" என்ற கேள்விக்கு "கட்டுரைகள் என்றால் நன்றாக எழுதுவேன்." என்ற பதிலும் இவ்வகைத்தே. இங்கே ஆடல், பாடல், பேச்சு, கட்டுரை என்பவை ஒன்றுக்கொன்று தொடர்புள்ளவை என்பதைக் கருத்திற் கொள்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புணரியல்

இரண்டோ அல்லது அதற்கும் மேற்பட்ட சொற்களோ ஒன்றோடொன்று இணைந்து கொள்வதைப் பற்றிய தெளிவைத் தருவது புணரியல் ஆகும்.

## நிலைமொழி – வருமொழி.

சொற்கள் ஒன்றோடொன்று இணையும்போது **இணைப்பை எதிர் பார்த்திருக்கும் சொல் நிலைமொழி என்றும் வந்து இணைகின்ற சொல் வருமொழி** என்றும் இலக்கணநூல் இயம்பும். மரம் - வேர் ஆகிய சொற்களை எடுத்துக்கொண்டால் மரம் என்பது இணைப்பை எதிர்பார்த்திருக்கும் சொல்லாகையால் அது நிலைமொழி என்றாகிறது. வேர் இணைகின்ற சொல்லாகையால் வருமொழி எனவாகிறது.

## இயல்புப் புணர்ச்சி.

இவ்வாறு இணையும் சொற்கள் இயல்பாக இணைவதுண்டு. இத்தகைய புணர்ச்சி இயல்புப் புணர்ச்சி என்று பெயர் பெறுகிறது. தம்பி வந்தான் ஆகிய இரு சொற்களையும் எடுத்துக்கொண்டால் அவை இணையும் போது எந்தவித மாற்றத்தையும் பெறுவதில்லை. தம்பி வந்தான் என்றே எழுத வேண்டியிருக்கிறது. எனவே இது இயல்புப் புணர்ச்சியின் பாற்படுகிறது. பூமரம், கலைவளம், கடல்வழி, பனைவெல்லம் என்பவையும் இயல்புப் புணர்ச்சியைச் சார்ந்தனவே.

இயல்புப் புணர்ச்சியில், நிலைமொழி ஈற்றில் மெய்யெழுத்து அமைந்து வருமொழியின் தொடக்க எழுத்து உயிராக வருமாயின் இரண்டின் இணைவால் உயிர்மெய் தோன்றும்.

ஆண் - உரிமை - ஆணுரிமை. ("ண்" 'உ' என்பன இணைந்து "ணு"கரம் தோன்றிற்று.)

தேன் - இனிமை - தேனினிமை. ( ன்-இ இணைந்து "னி"கரம் தோன்றிற்று.).

நோய் - உற்ற - நோயுற்ற (ய்-உ இணைந்து "யு"கரம் தோன்றுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகல் - இரவு - பகலிரவு. (ல்-இ இணைந்து "லி"கரம் தோன்றுகிறது)

மணம் - அற்றது - மணமற்றது. ( ம்-அ இணைந்து "ம"கரம் தோன்றிற்று).

இதேபோல் அவனில்லை, மனமொத்து, விருப்பமில்லை, நேரொத்த முதலான புணர்பதங்களையும் உற்று நோக்கலாம்.

## விகாரப் புணர்ச்சி.

பனை - ஓலை ஆகிய சொற்கள் இணையும்போது இடையில் "ய"கரம் தோன்றி "ஓ" "யோ"வாக மாறிப் பனையோலை எனப் புணர்கிறது. எனவே மாற்றத்துடன் புணர்ச்சி நிகழ்வதால் இது விகாரப் புணர்ச்சி எனப்படுகிறது.

விகாரப் புணர்ச்சி **தோன்றல், திரிதல், கெடுதல்** என மூன்று வகையின. தோன்றல், திரிதல், கெடுதல் ஆகிய இயல்புகள் தனித்தும் வரலாம்: ஒன்றுக்கும் மேற்பட்டவையாக சேர்ந்தும் வரலாம்.

## தோன்றல்.

சில சொற்கள் இணையும்போது புதிய எழுத்துகள் தோற்றம் பெறுகின்றன. அப்புதிய எழுத்துகள் மூலமாகத்தான் இணைப்பு வளம் பெறுகிறது.

பட்டு + பாதை இணைகையில் "ப்" தோன்றி பட்டுப்பாதை ஆகிறது. இதேபோல் வாழை + காய் வாழைக்காய் ஆவதற்கு "க்" உதவுகிறது. மூளை + சலவை மூளைச்சலவை எனவருவதற்கு "ச்" துணை நிற்கின்றது.

இவ்வாறு புதிய எழுத்துகள் தோன்றுவதால் இவ்வகைப் புணர்ச்சி தோன்றல் என்று வகைப்படுத்தப் படுகிறது.

அப்பகுதி, இந்தப்பெண், சுட்டிக்குழந்தை, பொதுச்சந்தை என்பவை தோன்றற் புணர்ச்சிக்குரிய எடுத்துக் காட்டுகளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுட்டெழுத்துகளுடனும், "எ" வினாவெழுத்துடனும் வருமொழியின் உயிர்மெய் புணர்தல்.

சுட்டெழுத்துகளுடனும் "எ" வினாவெழுத்துடனும் வருமொழியின் உயிர்மெய் புணரின் அதற்குரிய மெய் மிகுந்து தோன்றும்.

அ + பெண் = அப்பெண், அ + மாடு = அம்மாடு, அ + சிலை = அச்சிலை

இ + புத்தகம் = இப்புத்தகம், இ + சந்தர்ப்பம் = இச்சந்தர்ப்பம்,
இ + வறுமை = இவ்வறுமை.

உ + நிலை = உந்நிலை, உ + வாழ்வு = உவ்வாழ்வு, உ + மலை = உம்மலை. ("உ"கரச் சுட்டுப் பயன்பாடு அருகி வருவதால் இச்சொற்கள் வித்தியாசமாகத் தோன்றக்கூடும். எனினும் இலக்கண மாணவர்கள் இவற்றையும் தெரிந்து கொள்ளல் நன்று)

எ + பக்கம் = எப்பக்கம்? எ + நிலம் = எந்நிலம்? எ + வழக்கம் = எவ்வழக்கம்?

**சுட்டெழுத்துகளுடனும் "எ" வினாஎழுத்துடனும் வருமொழியின் "ய"கரம் புணர்தல்.**

சுட்டெழுத்துகளான அ, இ, உ என்பவற்றுடனும் வினாவெழுத்தான "எ"கரத்துடனும் "ய"கர உயிர்மெய் வருமொழியின் முதவெழுத்தாகிப் புணருமிடத்து அ, இ, உ, எ ஆகிய நிலைமொழி எழுத்துகளை வருமொழியின் முதலெழுத்தான "ய"கரத்துடன் இணைப்பதற்கு "வ"கரம் தோன்றுகிறது.

இவ்வாறு தோன்றும் "வ"கரம் **நிலைமொழியின் ஈற்றெழுத்துக்கும் வருமொழியின் முதலெழுத்துக்கும் இடையில் உடன்பாட்டைத் தோற்றுவிப்பதால் இது உடம்படுமெய்** என இலக்கண நூலோரால் அழைக்கப்படுகிறது.

அ + யானை = அவ்யானை (தற்கால வழக்கு) அவ்வியானை (பண்டைய வழக்கு)

இ + யுத்தம் = இவ்யுத்தம் (தற்கால வழக்கு) இவ்வியுத்தம் ( பண்டைய வழக்கு )

எ + யாழ் = எவ்யாழ் ( தற்கால வழக்கு ) எவ்வியாழ் ( பண்டைய வழக்கு )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குறிலைத் தொடக்கமாகக் கொண்டு மெய்யெழுத்தில் நிறைவுறும் ஈரெழுத்துச் சொற்களுடன் உயிர் எழுத்துகள் புணர்தல்.**

ஈரெழுத்துகளைக் கொண்டிருக்கும் நிலைமொழியின் முதலெழுத்துக் குறிலாகவும் ஈற்றெழுத்து மெய்யெழுத்தாகவும் அமைந்து, வருமொழியின் முதலெழுத்து உயிர்எழுத்தைக் கொண்டிருப்பின், நிலைமொழியின் ஈற்றெழுத்தின் வரிசையெழுத்துத் தோன்றும்.

பெண் - அழகு ---- பெண்ணழகு. ("ண"கரம் தோன்றிற்று)

கண் - இமை ---- கண்ணிமை.

பொன் - ஆபரணம் ---- பொன்னாபரணம்.

மின் - ஓட்டம் ---- மின்னோட்டம்

இம் - என்றால் ---- இம்மென்றால்

மெய் - எழுத்து ---- மெய்யெழுத்து

பொய் - உரைத்தான் ---- பொய்யுரைத்தான்.

கல் - எறிந்தான் ---- கல்லெறிந்தான்.

வில் - உடைந்தது ---- வில்லுடைந்தது.

முள் - இல்லை ---- முள்ளில்லை. எனவமைவதைக் காணலாம்.

**திரிதல்.**

நிலைமொழியின் ஈற்றெழுத்தும் வருமொழியின் முதலெழுத்தும் இணையும்போது அவை திரிபடைந்து புதிய எழுத்து உருவாகி புணர்ச்சி ஏற்படுகிறது. இது திரிதல் வகையைச்சாரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடல் - கரை இணைகையில் நிலைமொழியின் ஈற்றெழுத்தான "ல்", வருமொழியின் முதலெழுத்தான "க"வுடன் இணைகையில் "ற்" ஆக மாற்றமடைந்து கடற்கரை ஆகிறது. இதேபோல் மண்-குடம், பொன்-பானை, கல்-பாறை, தன்-பெருமை, முள்-புதர் என்பவை புணருமிடத்து அவை முறையே மட்குடம், பொற்பானை, கற்பாறை, தற்பெருமை, முட்புதர் எனப் புணர்வதைக் காணலாம்.

தன்-துணிபு, கல்-தூண் பொன்-தகடு, முள்-தனை, எள்-துணை என்பவை புணரும்போது தற்றுணிபு, கற்றூண், பொற்றகடு, முட்டனை, எட்டுணை எனவமைவதை நோக்குக. இங்கு நிலைமொழியின் ஈற்றெழுத்தும் வருமொழியின் முதலெழுத்தும் திரிபடைகின்றன.

**"ண"கர "ள"கர மெய் நிலைமொழியின் ஈற்றெழுத்தாக அமையுமிடத்து வருமொழியின் முதலெழுத்து வல்லினமாக வரின் "ண்" "ள்" என்பவை "ட்" ஆகவும்,**

**"ல"கர, "ன"கர மெய்கள் நிலைமொழியின் ஈற்றெழுத்தாகி வரு மொழியின் முதலெழுத்து வல்லினமாக அமையின் "ல்" "ன்" என்பவை "ற்" ஆகவும் மாற்றமடைகின்றன** என்பதை நினைவிற் கொள்ளல் நன்று.

### கெடுதல்.

சில இடங்களில் வருமொழி இணையும்போது நிலைமொழியின் ஈறு கெட்டுப்போவதுண்டு. மனம்-நோய், அகம்-வளம், மறம்-வினை, நிலம்-வேம்பு, மரம்-வேர், மரம்-வேலை ஆகிய சொற்கள் இணையும்போது நிலைமொழி ஈறான மகரமெய் கெட்டு, அவை முறையே மனநோய், அகவளம், மறவினை, நிலவேம்பு, மரவேர், மரவேலை என அமைகின்றன. இங்கு நிலைமொழியின் ஈற்றெழுத்தான் "ம"கர மெய் கெட்டுப் புணர்ச்சி நிகழ்கிறது. இந்நிலை கெடுதல் விகாரப் புணர்ச்சி எனப்படுகின்றது.

### கெடுதல், தோன்றல்.

சொற்கள் இணையும்போது நிலைமொழியின் ஈற்றெழுத்து கெட்டு வருமொழியின் வல்லெழுத்து இடையே தோன்றுவதுமுண்டு.

மரம் + பலகை. = மரப்பலகை (இங்கே நிலைமொழியின் ஈறு "ம"கரம் கெட்டு வருமொழி முதலெழுத்து வல்லினமெய் தோன்றுகிறது.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதேபோல் நிலம் + சரிவு = நிலச்சரிவு, வலம் + பக்கம் = வலப்பக்கம், குணம் + சிறப்பு = குணச்சிறப்பு, பலம் + பரீட்சை = பலப்பரீட்சை என்பவற்றையும் நோக்கலாம்.

**(வலதுபக்கம், இடதுபக்கம் என்றோ, வலதுபுறம், இடதுபுறம் என்றோ எழுதுதல் முறையன்று. வலப்பக்கம், இடப்புறம் என எழுதுவதே சரியான முறையாகும்.)**

## கெடுதல், தோன்றல், திரிதல்.

வேம்பு - காய், புளி - பழம், தெங்கு - காய், கரும்பு - சாறு, பனை - காய் ஆகிய சொற்கள் புணரும்போது முறையே வேப்பங்காய், புளியம்பழம், தேங்காய், கருப்பஞ்சாறு, பனங்காய் என வருகின்றன. இதன்போது கெடுதல், தோன்றல், திரிதல் ஆகிய மூவகை விகாரங்களும் இடம்பெற்றிருப்பதைக் காணலாம்.

வேப்பங்காய் என்பதில் "ம"கரமெய் கெடுகிறது: "அம்" சாரியை தோன்றுகிறது: சாரியையின் "ம"கரமெய், "ங"கர மெய்யாகத் திரிகிறது.

தேங்காய் என்பதில் "கு"கரம் கெடுகிறது: "தெ"கரம் "தே"காரமாகத் திரிகிறது.

கருப்பஞ்சாறு என்பதில் "ம"கரம் கெடுகிறது: "அம்" சாரிகை தோன்றுகிறது: சாரியையின் "ம"கரமெய் "ஞ"கர மெய்யாகிறது.

பனங்காய் என்பதில் "னை"காரம் "ன"கரமாகிறது: "அம்" சாரியை தோன்றுகிறது: சாரியையின் "ம"கரமெய் "ங"கர மெய்யாகிறது.

## பல-பல, சில-சில.

பல - பல, சில - சில ஆகிய சொற்கள் புணரும்போது,

பலபல சிலசில என்று இயல்பாகவும்,

பலப்பல சிலச்சில என்று தோன்றல் விகாரத்துடனும்,

பற்பல சிற்சில என்று கெடுதல் திரிதல் விகாரத்துடனும் புணரும் என்பதை நினைவிலிருத்தல் நன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வல்லினம் மிகும் இடங்கள்.**

**அந்த, இந்த, எப்படி, அப்படி, இப்படி** ஆகியவற்றுள் யாதாகிலுமொன்று நிலைமொழியாக அமையுமிடத்து வருமொழி வல்லின எழுத்திற் தொடங்குமாயின் அவ்வல்லினம் மிகுந்து வரும்.

1. அந்த + பையன் = அந்தப்பையன்.
2. அந்த + சுனை = அந்தச்சுனை.
3. இந்த + சிறுமி = இந்தச்சிறுமி.
4. இந்த + கட்டடம் = இந்தக்கட்டடம்.
5. எப்படி + போனான்? = எப்படிப்போனான்?
6. எப்படி + சிக்கியது? = எப்படிச்சிக்கியது?
7. அப்படி + சென்றது. = அப்படிச்சென்றது.
8. அப்படி + கொடு. = அப்படிக்கொடு.
9. இப்படி + தந்தாள். = இப்படித்தந்தாள்.
10. இப்படி + பாடு. = இப்படிப்பாடு.

**அ, இ, உ,** ஆகிய சுட்டெழுத்துகளையும், எ வினவெழுத்தையும் நிலைமொழி கொண்டிருக்குமாயின் வருமொழியின் வல்லெழுத்து மிகும்.

அ + குதிரை = அக்குதிரை

இ + பெண் = இப்பெண்.

உ + சட்டி = உச்சட்டி.

எ + செயல் = எச்செயல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இரண்டாம், நான்காம் வேற்றுமை உருபுகள் நிலைமொழியில் வெளிப்படையாக வருமிடத்து** வருமொழி வல்லெழுத்தை முதலாகக் கொண்டிருக்குமாயின் அவ்வல்லினம் மிகும்.

**இரண்டாம் வேற்றுமை உருபு "ஐ" வெளிப்படையாக வருதல்:**

புத்தகத்தை + கொண்டுவா = புத்தகத்தைக் கொண்டுவா.

பாடத்தை + படி. = பாடத்தைப்படி.

தம்பியை + கூப்பிடு = தம்பியைக்கூப்பிடு.

(புத்தகம் + ஐ = புத்தகம் + அத்து(சாரியை) + ஐ. = புத்தகத்தை எனவரும். அதேபோல் பாடம் + ஐ = பாடத்தை எனவரும் என்பதை ஏற்கனவே அறிந்திருப்பீர்கள்.)

**நான்காம் வேற்றுமை உருபு "கு" வெளிப்படையாக நிற்றல்.**

அண்ணனுக்கு + கொடு = அண்ணனுக்குக்கொடு.

தம்பிக்கு + பரிசு = தம்பிக்குப்பரிசு.

நாட்டுக்கு + செல். = நாட்டுக்குச்செல்.

**ஆய், போய், ஆகி, ஆக** போன்ற ஈறுகளில் நிலைமொழி நிறைவுறுமாயின் வருமொழி வல்லினத்தில் தொடங்குமிடத்து அவ்வல்லெழுத்து மிகும்.

தானாய் + செய்தான். = தானாய்ச்செய்தான்.

பேயாய் + கணங்களாய் = பேயாய்க்கணங்களாய்.

போய் + சேர்ந்தான் = போய்ச்சேர்ந்தான்.

புல்லாகி + பூடாய் = புல்லாகிப்பூடாய்.

வீணாகி + போனது = வீணாகிப்போனது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனாக + படித்தான் = அவனாகப்படித்தான்.

அதிகமாக + பெற்றான் = அதிகமாகப்பெற்றான்.

**சால, தவ, மிக** ஆகிய உரிச்சொற்களின் பின்னே வருமொழி வல்லினம் மிகும்.

சால + சிறந்தது. = சாலச்சிறந்தது.

தவ + பெரிது = தவப்பெரிது.

மிக + சிறிது = மிகச்சிறிது

மெத்த + படித்த = மெத்தப்படித்த

**ஓரெழுத்துச் சொல் நிலைமொழியாயின்** வருமொழி வல்லெழுத்து மிகும்.

பூ + கொய்தான் = பூக்கொய்தான்.

(பூங்கொத்து, பூஞ்சோலை, மாங்கனி, பூந்தொட்டி போன்றவற்றில் வல்லினம் மிகுவதற்குப் பதிலாக அதற்கினமான மெல்லினம் தோன்றுவதையும் கருத்திற் கொள்ள வேண்டும்.)

தீ + பற்றியது = தீப்பற்றியது.

பா + சிறப்பு = பாச்சிறப்பு.

கோ + பெருமை = கோப்பெருமை

**ஈறுகெட்ட எதிர்நிலைப் பெயரெச்சம் நிலைமொழியாயின்** வருமொழியின் வல்லினம் மிகும்.

முடிவுறா + செய்கை = முடிவுறாச்செய்கை (முடிவுறாத என ஈறுகெடாமல் வருமாயின் வல்லினம் மிகாது)

குலையா + பண்பு = குலையாப்பண்பு. (குலையாத எனவரின் வல்லினம் மிகாது.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடில்லா + கடமை = ஈடில்லாக்கடமை. (ஈடில்லாத எனவமையின் ஈடில்லாதகடமை என்றே வரும்.)

**உயிரீற்றின் பின்னே வருமொழி வல்லினப் பெயர்ச்சொல்** எனின் வல்லினம் மிகும்.

கிளி + பேச்சு = கிளிப்பேச்சு. (கிளி + பேசும் = கிளிபேசும். இங்கே வருமொழி வினையென்பதால் மிகவில்லை.)

குருவி + கூடு = குருவிக்கூடு. (குருவி + பறந்தது = குருவிபறந்தது. வருமொழி வினையாதலால் மிகாது.)

படகு + துறை = படகுத்துறை (படகு + புரண்டது = படகுபுரண்டது: வருமொழி வினையாதலால் மிகாது.)

கலை + செல்வம் = கலைச்செல்வம். கவிதை + புனல் = கவிதைப்புனல்.

மடு + கோவில் = மடுக்கோவில். புது + கட்டடம் = புதுக்கட்டடம்.

**வன்றொடர்க் குற்றியலுகரத்தையடுத்து வருமொழி வல்லெழுத்திற் தொடங்குமாயின்** வல்லினம் மிகும்.

கொக்கு + தீவு = கொக்குத்தீவு. திக்கு + பாலகர் = திக்குப்பாலகர்

அச்சு + கலை = அச்சுக்கலை. முத்து + சிப்பி = முத்துச்சிப்பி

சிறப்பு + பயிற்சி = சிறப்புப்பயிற்சி. கருத்து + செறிவு = கருத்துச்செறிவு.

கொக்குப் பறந்தது, திக்குப் பெருமையுற்றது, அச்சுக் கோத்தனர், (கோர்த்தனர் என்பது பிழை), சிறப்புப் பெற்றனர், கருத்துக் கூறினர் என வருமொழி வினையாகுமிடத்தும் வல்லினம் மிகும் என்பதை உணர்க.

**மென்றொடர்க் குற்றியலுகரத்தையடுத்து வருமொழி பெயர்ச் சொல்லாகி** வல்லெழுத்தைத் தொடக்கமாகக் கொண்டிருப்பின் அவ்வல்லெழுத்து மிகும்.

சங்கு + பொதி = சங்குப்பொதி நுங்கு + குலை = நுங்குக்குலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்டு + குஞ்சு = நண்டுக்குஞ்சு கன்று + குட்டி = கன்றுக்குட்டி.

வண்டு + கால் = வண்டுக்கால் தும்பு + கட்டு = தும்புக்கட்டு.

**குற்றியலுகரங்களில்....**

**நெடிற்றொடர்க் குற்றியலுகரம் சில இடங்களில் வல்லினம் மிகும்.**

ஆறு + தலை = ஆறுதலை. (இங்கு ஆறு எண்ணைக் குறிக்குமிடத்து வல்லினம் மிகுவதில்லை.)

ஆறு + கால் = ஆறுகால். (ஆறு எண்ணைக் குறிக்கிறது. வல்லினம் மிகாது.)

பேசு + பொருள் = பேசுபொருள். (வினைத்தொகையில் வல்லினம் மிகாது.)

வீசு + தென்றல் = வீசுதென்றல் (வினைத்தொகை)

ஆறு + பெருகியது = ஆறுபெருகியது. (வருமொழி வினைச் சொல்லாகின் வல்லினம் மிகாது.)

சோறு + பொலிந்தது. = சோறுபொலிந்தது. (வருமொழி வினைச்சொல். வல்லினம் மிகவில்லை.)

மாது + தீது = மாதுதீது. மாது + தோழி = மாதுதோழி. (பண்பு அல்லது இயல்புத் தன்மை. அதுவாதல் எனவும் அடையாளங் காணலாம்.)

**இவைதவிர்ந்த ஏனைய நெடிற்றொடர்க் குற்றியலுகரங்களின் பின்னே வல்லினம் மிகும்.**

ஆறு + படுகை = ஆற்றுப்படுகை. ஆறு + பெருக்கு = ஆற்றுப்பெருக்கு.

சோறு + பருக்கை = சோற்றுப்பருக்கை. நீறு + கட்டி = நீற்றுக்கட்டி.

காசு + பண்டம் = காசுப்பண்டம். வீடு + பொருள். = வீட்டுப்பொருள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடு + பற்று = நாட்டுப்பற்று. மாது + தலைமை = மாதுத்தலைமை.

**குற்றியல் உகரங்களுடன் "கள்" பன்மைவிகுதி இணையும்போது வல்லினம் மிகாது என்பதை நினைவிற் கொளல் நன்று.**

**நெடிற்றொடர்க் குற்றியலுகரத்துடன் "கள்" விகுதி:**

ஆடு + கள் = ஆடுகள்.

காசு + கள் = காசுகள்

தூசு + கள் = தூசுகள்

**உயிர்த்தொடர்க் குற்றியலுகரத்துடன் "கள்" விகுதி:**

படகு + கள் = படகுகள்.

வரைபு + கள் = வரைபுகள்.

பவிசு + கள் = பவிசுகள்.

**வன்றொடர்க் குற்றியலுகரத்துடன் "கள்" விகுதி.**

சிறப்பு + கள் = சிறப்புகள். ( சிறப்புக்கள் எனின் சிறப்பான மது என்ற பொருளைத் தரும்.)

வாழ்த்து + கள் = வாழ்த்துகள்

எழுத்து + கள் = எழுத்துகள்.

விருப்பு + கள் = விருப்புகள்.

கட்டு + கள் = கட்டுகள்.

**மென்றொடர்க் குற்றியலுகரத்துடன் "கள்" விகுதி:**

குஞ்சு + கள் = குஞ்சுகள்.

நுங்கு + கள் = நுங்குகள்.

குன்று + கள் = குன்றுகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இடைத்தொடர், ஆய்தத்தொடர்க் குற்றியலுகரங்களுக்கும் இவ்விதி பொருந்துமாயினும் அவற்றடன் "கள்" விகுதி இணைவதற்கான வாய்ப்புகள் குறைவாகக் காணப்படுகின்றமையால் அவை விடப்படுகின்றன.**

**முற்றியலுகரத்துடன் "கள்" பன்மை விகுதி இணையுமிடத்து "க்"** எழுத்துத் தோன்றும்.

**(முற்றியலுகரம் என்பது கு, சு, டு, து, பு, று ஆகிய வல்லின மெய்யேறிய உகரங்கள் குற்றெழுத்தை முதலெழுத்தாகக் கொண்டு இரண்டெழுத்துச் சொல்லாக அமைவது.)**

கொசு + கள் = கொசுக்கள்.

மடு + கள் = மடுக்கள்.

வடு + கள் = வடுக்கள்.

மறு + கள் = மறுக்கள்

**சில குறிப்புகள்.**

அக்கரை + பச்சை = அக்கரைபச்சை.

இக்கரை + சேனை = இக்கரைசேனை.

அக்கரை + பச்சை = அக்கரைப்பச்சை.

இக்கரை + சேனை = இக்கரைச்சேனை

**அக்கரைபச்சை, இக்கரைசேனை எனவரும் இணைவில் அந்தக் கரை பசுமையாக இருக்கின்றதென்றும் இந்தக் கரை சேனையாக அமைந்துள்ளது என்றும் பொருள் வெளிப்படும். இவற்றில் அந்தக்கரையும் இந்தக்கரையும் முதன்மை பெறுகின்றன.**

**அக்கரைப்பச்சை, இக்கரைச்சேனை என வல்லொற்று மிகுந்துவரும் இணைவில் அக்கரையிலுள்ள பசுமை பற்றியும் இக்கரையிலுள்ள சேனை பற்றியும் பேசப்படுகிறது. இவற்றில் அக்கரையின் பசுமையும் இக்கரையின் சேனையும் பேசுபொருள்களாகின்றன.**

**இத்தகைய நுணுக்கங்களைப் புரிந்திருத்தல் தமிழைப் பிழையற எழுதுவதற்கு இலகுவாக அமையும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"அ"கர, "இ"கர வீற்று வினையெச்சங்களை யடுத்து வருமொழி வல்லின எழுத்திற் தொடங்குமாயின் அங்கே வல்லினமெய் தோன்றும்.**

| | | |
|---|---|---|
| பாட + சொன்னான். | = | பாடச்சொன்னான். |
| பாடி + காட்டினான் | = | பாடிக்காட்டினான். |
| நாட + கண்டான் | = | நாடக்கண்டான் |
| நாடி + செய்தான் | = | நாடிச்செய்தான். |
| மேய + சென்றது | = | மேயச்சென்றது |
| பாய + பயந்தது | = | பாயப்பயந்தது. |
| தேட + கண்டான் | = | தேடக்கண்டான். |
| தேடி + சென்றான் | = | தேடிச்சென்றான். |
| மோத + பார்த்தான் | = | மோதப்பார்த்தான் |
| மோதி + பார்த்தான் | = | மோதிப்பார்த்தான். |

**எட்டு பத்து போன்ற எண்ணுப் பெயர்கள் நிலைமொழியாயின் வருமொழியின் வல்லினம் மிகும்.**

| | | |
|---|---|---|
| எட்டு + கால் | = | எட்டுக்கால் |
| பத்து + பாட்டு | = | பத்துப்பாட்டு. |
| எட்டு + குதிரை | = | எட்டுக்குதிரை |
| பத்து + குடும்பங்கள் | = | பத்துக்குடும்பங்கள். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நிலைமொழி "ல"கர, "ள"கர, "ன"கர, "ண"கர மெய்யீற்றில் நிறைவுறுமிடத்து வல்லினத்தில் வருமொழி தொடங்குமாயின்,**

**வேற்றுமைப் புணர்ச்சியில் "ல"கர "ன"கரங்கள் "ற" கரமாகவும், "ள"கர "ண"கரங்கள் "ட"கரமாகவும் மாற்றம் பெறும்.**

| | | |
|---|---|---|
| சொல் + சிலம்பம் | = | சொற்சிலம்பம். |
| வில் + போர் | = | விற்போர். (லகரம் றகரம் ஆயிற்று) |
| கள் + குடம் | = | கட்குடம் |
| முள் + புதர் | = | முட்புதர். (ளகரம் டகரம் ஆயிற்று) |
| மக்கள் + பண்பு | = | மக்கட்பண்பு |
| திங்கள் + குடை | = | திங்கட்குடை |
| பொன் + காப்பு | = | பொற்காப்பு |
| மகன் + கு | = | மகற்கு (னகரம் றகரமாயிற்று) |
| கண் + செவி | = | கட்செவி |
| மண் + பானை | = | மட்பானை (ணகரம் டகரம் ஆயிற்று.) |

**"ன"கர மெய்யீற்று நிலைமொழி வல்லெழுத்து வருமொழியுடன் இணையும்போது சில இடங்களில் "ன"கர மெய்யீற்றில் மாற்றம் ஏற்படாமல் வருமொழி முதலெழுத்து மாற்றமடையும்.**

| | | |
|---|---|---|
| வன் + தொண்டர் | = | வன்றொண்டர் |
| மென் + தொடர் | = | மென்றொடர். |
| மின் + தகடு | = | மின்றகடு. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அல்வழிப் புணர்ச்சியில் வருமொழி வல்லெழுத்திற் தொடங்கினும் மாற்றம் நிகழ்வதில்லை.**

பொன் + பெரிது = பொன்பெரிது

மண் + சிறிது = மண்சிறிது

பொன் + சிதைந்தது = பொன்சிதைந்தது.

**சுட்டுப் பெயர்களின் பின்னால் வரும் வருமொழியின் வல்லின எழுத்துகள் மிகா.**

அது + சரி = அதுசரி

இது + பறவை = இதுபறவை

அவை + காட்சிகள் = அவைகாட்சிகள் (அவை என்பது சுட்டுப்பெயரைக் குறிக்காமல் மேடை என்ற கருத்தில் வருமாயின் அவைக்காட்சிகள் என்றே புணரும்.)

இவை + சிறந்தவை = இவைசிறந்தவை

**எது, எவை போன்ற வினாச் சொற்களையடுத்தும் வருமொழியின் வல்லினம் மிகுவதில்லை.**

எது + கவிதை? = எதுகவிதை?

எவை + சிரித்தன? = எவைசிரித்தன.?

**ஆ, ஏ, ஓ, ஆகியவற்றில் நிறைவுறும் வினாச் சொற்களையடுத்தும் வல்லினம் மிகுவதில்லை.**

அவனா + செய்தான்? = அவனாசெய்தான்?

அவர்களா + சிரித்தார்கள்? = அவர்களாசிரித்தார்கள்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| அவளே | + | படித்தாள்? | = | அவளே படித்தாள்? |
| எங்கே | + | பறந்தது? | = | எங்கேபறந்தது? |
| அவனோ | + | கடிந்தான்? | = | அவனோகடிந்தான்? |
| அவளோ | + | பேசினாள்? | = | அவளோபேசினாள்? |

**அன்று, இன்று, என்று ஆகிய சொற்களையடுத்தும் வருமொழியின் வல்லினம் மிகாது.**

அன்று + கண்டேன் = அன்றுகண்டேன்.

இன்று + பிறந்தது = இன்றுபிறந்நது.

என்று + போனான்? = என்றுபோனான்?

**படி, மாறு, ஆறு ஆகிய ஈறுகளைக் கொண்டமையும் வினையெச்சங்களை யடுத்தும், "உ"கரத்தில் நிறைவுறும் வினையெச்சங்களை யடுத்தும் வருமொழியின் வல்லினம் மிகுவதில்லை.**

கூறும்படி + கேட்டான் = கூறும்படிகேட்டான். (படி)

செய்யுமாறு + பணித்தான் = செய்யுமாறுபணித்தான். (மாறு)

சொன்னவாறு + செய்தான் = சொன்னவாறுசெய்தான். (ஆறு)

வந்து + பிடித்தாள் = வந்துபிடித்தாள்.

நின்று + கொள் = நின்றுகொள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அங்கு, இங்கு, எங்கு போன்றவற்றுடன் இணையும் வல்லினத்திற் தொடங்கும் வருமொழியின் வல்லினம் தற்காலத்தில் மிகுவதில்லை.**

அங்கு + கண்டேன் = அங்குகண்டேன்

இங்கு + பிறந்தது = இங்குபிறந்தது

எங்கு + போயினன்? = எங்குபோயினன்?

(இவை அங்குக்கண்டேன், இங்குப்பிறந்தது, எங்குப்போயினன் என்று வருவதுதான் முறை என்கிறது இலக்கணம். ஆயினும் தற்கால வழக்கில் இந்நடைமுறை கைக்கொள்ளப்படுவதில்லை.)

**குற்றெழுத்தையடுத்து யகர மெய்யில் நிறைவுறும் நிலைமொழிகளுடன் வல்லின, மெல்லின உயிர்மெய்யில் தொடங்கும் வருமொழி இணையும்போது வருமொழியின் முதலெழுத்துக்குரிய மெய்யெழுத்துத் தோன்றும்.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பொய் | + | சாட்சி | = | பொய்ச்சாட்சி | (வல்லினம் தோன்றியது) |
| மெய் | + | பதம் | = | மெய்ப்பதம் | (வல்லினம் தோன்றியது) |
| நெய் | + | சட்டி | = | நெய்ச்சட்டி | (வல்லினம் தோன்றியது) |
| செய் | + | மதி | = | செய்ம்மதி | (மெல்லினம் தோன்றியது) |
| செய் | + | நன்றி | = | செய்ந்நன்றி | (மெல்லினம் தோன்றியது) |
| மெய் | + | நிலை | = | மெய்ந்நிலை | (மெல்லினம் தோன்றியது) |
| பொய் | + | மை | = | பொய்ம்மை | (மெல்லினம் தோன்றியது) |
| மெய் | + | மை | = | மெய்ம்மை | (மெல்லினம் தோன்றியது) |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இன எழுத்துத் தோன்றுமிடங்கள்.

சில நிலைமொழிகளை யடுத்து வருகின்ற வருமொழியின் முதலெழுத்துக்குரிய மெய் தோன்றுதற்குப் பதிலாக அவ்வெழுத்தின் இனஎழுத்து தோன்றுவதுண்டு.

| | | | | |
|---|---|---|---|---|
| பூ | + | பொழில் | = | பூம்பொழில் |
| வேய் | + | குழல் | = | வேய்ங்குழல் |
| பூ | + | தோட்டம் | = | பூந்தோட்டம் |
| பாழ் | + | கிணறு | = | பாழ்ங்கிணறு |

**முக்கிய குறிப்பு:**

**பசு + பால் ஆகிய சொற்கள் இணையும்போது பசுப்பால் எனவரும். இதனைப் பசும்பால் என எழுதுதல் சரியன்று. பசுமை + பால் என்பதே பசும்பால் எனப் புணரும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உயிரீற்று நிலைமொழியுடன் உயிரெழுத்திற் தொடங்கும் வருமொழி இணைதல்.**

**நிலைமொழியின் ஈற்றெழுத்து அ, ஆ, உ, ஊ, ஒ, ஓ ஔ ஆகிய ஏழு உயிரோசைகளில் எதனையேனும் கொண்டிருக்குமாயின் வருமொழி உயிரெழுத்திற் தொடங்குமிடத்து "வ" கரம் உடம்படு மெய்யாகத் தோன்றி இருமொழிகளையும் இணைக்கும்.**

| | | |
|---|---|---|
| தகதக + என | = | தகதகவென. |
| பல + அணி | = | பலவணி. |
| விழா + ஆரம்பம் | = | விழாவாரம்பம். |
| நிலா +அழகு | = | நிலாவழகு. |
| குபுகுபு + என்று | = | குபுகுபுவென்று. |
| திரு + ஓடு | = | திருவோடு. |
| பூ + ஆரம் | = | பூவாரம். |
| கூ + என்றான் | = | கூவென்றான். |
| நொ +அழகு | = | நொவ்வழகு. |
| போ + என்றாள் | = | போவென்றாள். |
| நோ + எல்லாம் | = | நோவெல்லாம். |
| கௌ +அழகு | = | கௌவ்வழகு. |

**இ, ஈ ,ஐ ஆகிய மூன்று உயிரோசைகளில் எதுவேனும் நிலைமொழியின் ஈற்றோசையாக வருமிடத்து உயிரெழுத்திற் தொடங்கும் வருமொழி இணையும்போது "ய" கரம் உடம்படு மெய்யாகத் தோன்றும்.**

| | | |
|---|---|---|
| பசி + இன்மை | = | பசியின்மை |
| நடுநிசி + ஆனது | = | நடுநிசியானது. |
| தீ + அணைந்தது | = | தீயணைந்தது. |
| நீ + அல்லன் | = | நீயல்லன். |
| புகை +இலை | = | புகையிலை |
| கலை + உள்ளம் | = | கலையுள்ளம். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஏகாரத்தில் முடிவுறும் சொற்களையடுத்து உயிரோசைச் சொற்கள் இணையுமாயினும் உடம்படு மெய்யாக யகரமே தோன்றும்.**

| | | |
|---|---|---|
| அவனே + அவன் | = | அவனேயவன் |
| அதுவே + ஆயிற்று | = | அதுவேயாயிற்று |
| பகலே + இருண்டது | = | பகலேயிருண்டது. |
| இரக்கமே + இல்லான் | = | இரக்கமேயில்லான். |

**கோ + இல் = கோயில் என்றும் கோவில் என்றும் இணைவதை இலக்கணம் ஏற்கிறது**

கோயில் என இணையும்போது "ய" கரம் உடம்படு மெய்யாகவும், கோவில் எனவிணையும்போது "வ" கரம் உடம்படு மெய்யாகவும் தோன்றுகின்றன என்பதையும் கருத்திற் கொள்க.

**நெடிற்றொடர்க் குற்றியலுகரத்துடன் உருபு புணர்தல்.**

நெடிற்றொடர்க் குற்றியலுகரத்துடன் வேற்றுமையுருபு புணருமிடத்து "இன்" சாரியை தோன்றாது.

| | | |
|---|---|---|
| நாடு + ஐ | = | நாட்டை |
| காடு + கு | = | காட்டுக்கு |
| வீடு + ஒடு | = | வீட்டோடு |

இவற்றை முறையே நாட்டினை, காட்டிற்கு, வீட்டினோடு என எழுதுவது தவறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**டு, று ஆகியவற்றை ஈற்றெழுத்தாகக் கொண்ட நெடிற்றொடர் குற்றியலுகரத்துடன் வருமொழி புணர்தல்.**

நெடிற்றொடர்க் குற்றியலுகரத்தின் இறுதியில் டு, று என்பவை வருமாயின் அவ்வெழுத்து இரட்டித்து இடையில் அதன் மெய் தோன்றும். வருமொழி வல்லினத்திற் தொடங்குமாயின் வல்லினம் மிகும்.

காடு + பாதை = காட்டுப்பாதை (டகரத்தின் மெய் தோன்றியது. வருமொழி வல்லினம் மிகுந்தது.)
சேறு + நிலம் = சேற்றுநிலம்
சேறு + பாதை = சேற்றுப்பாதை
ஆறு + மணல் = ஆற்றுமணல்
ஆறு + பகுதி = ஆற்றுப்பகுதி

**குற்றியலுகரத்தையடுத்து வருமொழி "ய"கரத்திற் தொடங்குமாயின் குற்றியலுகரத்தின் இறுதிஎழுத்து இ"கரவோசை பெறும்.**

நாடு +யாது? = நாடியாது?

பட்டு + யாது? = பட்டியாது?

படகு + யாது? = படகியாது

**முற்றியலுகரம் சிலவற்றுக்கும் இவ்விதி பொருந்தும்.**

கதவு + யாது? = கதவியாது?

மகவு +யாரோ = மகவியாரோ?

ஒரு + யானை = ஓரியானை (ஒரு என்பது ஓர் எனத் திரிந்து இகரம் தோன்றிது. எனினும் ஒருயானை என்றே தற்காலத்தில் எழுதப்படுகிறது.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குற்றியலுகரத்தினையடுத்து வருமொழி உயிரோசையிற் தோன்றுமிடத்து நிலைமொழியின் உகரம் விலகி வருமொழியின் உயிரேறும்.**

| | | |
|---|---|---|
| காடு + இல்லை | = | காடில்லை |
| படகு + ஆடியது | = | படகாடியது |
| அழகு + அமைந்தது | = | அழகமைந்தது. |
| கொக்கு + ஓடுகிறது | = | கொக்கோடுகிறது. |

**ஐகார ஒலியில் நிறைவுறும் பண்புப் பெயர்கள் புணர்தல்.**

**பொதுவாகப் பண்புப்பெயர்கள் நிலைமொழியாகிப் புணரும்போது அதன் ஈறு (மை) கெட்டு வருமொழியுடன் இணையும்.**

| | | |
|---|---|---|
| கூர்மை + வேல் | = | கூர்வேல். |
| நன்மை + மனம் | = | நன்மனம். |
| நுண்மை + அறிவு | = | நுண்ணறிவு |
| புதுமை + மணம் | = | புதுமணம் |
| சிறுமை + மதி | = | சிறுமதி. |
| இனிமை + சொல் | = | இன்சொல் |

**நிலைமொழியின் ஈற்றெழுத்துக் கெட்டு முதலெழுத்து நெடிலாதல்.**

| | | |
|---|---|---|
| முதுமை + உரை | = | மூதுரை |
| முதுமை + ஊர் | = | மூதூர் |
| பெருமை + ஆற்றல் | = | பேராற்றல் |

**நிலைமொழியின இறுதி ஐகாரம் விலகி அதன் மெய்யெழுத்தாகவோ அல்லது நிலைமொழியின் இனவெழுத்தாகவோ மாற்றமடைதல்.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அருமை + தவம் | = | அருந்தவம். | பசுமை + பால் | = | பசும்பால் |
| பசுமை + தளிர் | = | பசுந்தளிர் | அருமை + புகழ் | = | அரும்புகழ். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திசைப்பெயர்கள் புணரும்போது வடக்கு, தெற்கு என்பவையே நிலைமொழியாக அமைவது வழக்கு.**

வடக்கு + கிழக்கு = வடகிழக்கு.

வடக்கு + மேற்கு = வடமேற்கு

தெற்கு + கிழக்கு = தென்கிழக்கு

தெற்கு + மேற்கு = தென்மேற்கு

வடக்கு + திசை = வடதிசை

தெற்கு + திசை = தென்றிசை

கிழக்கு + திசை = கீழ்த்திசை

மேற்கு + திசை = மேற்றிசை

வடக்கு + நாடு = வடநாடு

தெற்கு + நாடு = தென்னாடு

கிழக்கு + நாடு = கீழ்நாடு

மேற்கு + நாடு = மேனாடு

வடக்கு + தேசம் = வடதேசம்

தெற்கு + தேசம் = தென்றேசம்

கிழக்கு + தேசம் = கீழைத்தேசம்

மேற்கு + தேசம்= மேற்றேசம் மேலைத்தேசம்.

**வடசொற்கள் புணர்தல்.** (நன்றி: அறிஞர் அக்னிபுத்திரன்)

தமிழில் வழங்கும் வடசொற்கள் தம்முள் புணரும்போது தீர்க்கசந்தி, குணசந்தி, விருத்திசந்தி என மூன்றுவகையாகப் புணர்கின்றன.

**தீர்க்கசந்தி.**

நிலைமொழி ஈறு அ, ஆவிலும் வருமொழி தொடக்கம் அ, ஆவிலும் அமையினும்,

நிலைமொழி ஈறு இ, ஈயில் அமைந்து வருமொழி இ, ஈயில் தொடங்குமாயினும்,

நிலைமொழி ஈறு உ, ஊவிலும் வருமொழி முதலெழுத்து உ, ஊவில் இருப்பினும், அவ்வவ் எழுத்துச் சார்ந்த நெட்டெழுத்துத் தோன்றி இணையும். இது தீர்க்கசந்தி எனப்படுகிறது.

பாத + அரவிந்தம் = பாதாரவிந்தம்

கணேச + ஆலயம் = கணேசாலயம்

துவஜ + ஆரோகணம் = துவஜாரோகணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரி + ஈசன் = கிரீசன்

மகீ + இந்திரன் = மகீந்திரன்

குரு + உபதேசம் = குரூபதேசம்

**குணசந்தி.**

அ, ஆ முன் இ. ஈ வரின் இரண்டும் கெட ஏகாரம் தோன்றும்.

நர + இந்திரன் = நரேந்திரன்

மகா + ஈசன் = மகேசன்

அ, ஆ முன் உ, ஊ வரின் இரண்டும்கெட ஓகாரம் தோன்றும்.

அமல + உற்பவம் = அமலோற்பவம்

சூர்ய + உதயம் = சூர்யோதயம்.

மந்திர + உச்சாடனம் = மந்திரோச்சாடனம்

மகா + ஔதாரியம் = மகௌதாரியம்

**விருத்தசந்தி.**

அ, ஆ முன் எ, ஏ வரின் இரண்டும் கெட்டு ஐகாரம் தோன்றும்.

அ, ஆ முன் உ, ஊ வரின் ஔ காரம் தோன்றும்.

மகா + ஐசுவரியம் = மகைசுவரியம்

கலச + ஓதனம் = கலசௌதனம்

மகா + ஔதாரியம் = மகௌதாரியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடரியல் - 01

தொடரியல் என்பது சொற்களை ஒன்றுக்கொன்று முறைப்படி தொடர்புபடுத்தி நேர்த்தியான கருத்துடையதும் இலக்கணப் பிழையற்றதுமான வசனங்களை அமைத்தல்பற்றிப் பேசும் பகுதி எனலாம். தொடரியலை வாக்கியவியல் அல்லது வசனவியல் என்றும் அழைக்கலாம்

எவ்வளவு சொற்களை நாம் அறிந்திருந்தாலும், சொற்களின் நான்கு பிரதான பகுப்புகளான பெயர், வினை, இடை, உரி என்பவற்றை அடையாளப்படுத்தக் கூடியவர்களாக இருந்தாலும், அச்சொற்களைச் சரியான வகையில் ஒன்றோடொன்று இணைக்கும் முறையைத் தெரிந்திராவிட்டால் நாம் கருத்து எதனையும் தெரிவிக்க முடியாதவர்களாகவே இருப்போம்.

சொற்குவியல்கள் ஒருபோதும் வாக்கியமாவதில்லை. வாக்கியமாகாத எதுவும் நாம் நினைக்கும் கருத்தையும் வெளிப்படுத்தப் போவதில்லை. எனவே நாம் சொல்லவந்த கருத்தைத் தெளிவாகச் சொல்ல வேண்டுமானால் சரியான முறையிற் சொற்களைக் கையாண்டு வசனங்களை அமைக்கத் தெரிந்தவர்களாக இருக்கவேண்டும்.

அதற்காக, வாக்கியமமைத்தல் என்பது ஏதோ கடினமான செயலென்று முடிவுகட்ட வேண்டியதில்லை. சாதாரணமாக நாம் எல்லோரும் பேச்சவழக்கில் தினமும் பல்வேறு விதமான வாக்கியங்களை அமைத்துக் கொண்டுதான் இருக்கிறோம். சொல்லவந்த கருத்தையும் முடிந்தவரை சொல்லிக் கொண்டுதான் இருக்கிறோம்.

ஆயினும் உன்னிப்பாகக் கவனிப்போமானால், சிலர் சொல்லவந்த கருத்துகளைத் தெளிவாகச் சொல்லும்போது, பலர் அதனையே தடுமாற்றத்துடன் சரியாகக் கோவைப்படுத்தாமற் சொல்லிக் கேட்போரை அல்லது படிப்போரைத் திணறடிப்பதையும் காணலாம். இக்குறைபாடு களையப்பட வேண்டுமானால் சரியான முறையில் வாக்கியங்களை அமைக்க நாம் தெரிந்து கொள்ளவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்.

ஒரு சிறிய வாக்கியத்தில், எழுவாய் பயனிலை ஆகிய இருபகுதிகள் இருப்பதைக் காணலாம். அவ்வாறு அமையும்நிலையில் சில வாக்கியங்களில் எழுவாய் வெளிப்படையாகத் தெரியாமல் மறைந்தும் வருவதுண்டு. இதனைத் தோன்றா எழுவாய் என்பர். சில வாக்கியங்களில் பயனிலை வெளிப்படாமல் குறிப்பால் உணர்த்துவதுமுண்டு. எனினும் இலக்கணநூலார் இதனைத் தோன்றாப் பயனிலை எனச் சொல்வதில்லை என்பதையும் மனத்திருத்தல் நலம்.

இதேபோல் எழுவாய் பயனிலை என்பவற்றுடன் செயப்படுபொருள் எனும் பகுதியும் சேர்ந்து வருவதுண்டு. இச் செயப்படுபொருளும் வசனத்தில் மறைந்து நிற்கும் சந்தர்ப்பங்களும் உள. இந்நிலையில் இதனை தோன்றாச் செயப்படுபொருள் என இலக்கணம் சொல்வதில்லை
.
எனவே தோன்றா எழுவாய்க்குக் கொடுக்கும் இலக்கண முக்கியத்துவம் தோன்றாப் பயனிலைக்கோ, தோன்றாச் செயப்படுபொருளுக்கோ கொடுக்கப்படுவதில்லை என்பது தெளிவு. ஆயினும் இத்தகைய தோன்றாப் பயனிலை, தோன்றாச் செயப்படுபொருள் என்பவை வருகின்ற சந்தர்ப்பங்களையும் நுணுக்கமாக அறிந்திருத்தல் தமிழறிவு மேம்பட வழிசமைக்கும்.
முதலில் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்றால் என்ன என்பது பற்றி நோக்குவோம்.

## எழுவாய்.

ஒருவர் ஒரு கருத்தைச் சொல்ல விழைவாராயின் அதற்கு யாதாகினுமோர் அடிப்படை தேவைப்படுகிறது. அதாவது, தோற்றுவாய் அல்லது எழுவாய் தேவைப்படுகிறது. தோற்றுவாய் அல்லது எழுவாய் இன்றி யாரும் கருத்துச் சொல்வதில்லை.

எனவே, ஒருவர் எதனைப்பற்றிக் கருத்துச் சொல்ல முன்வருகிறாரோ அதுவே எழுவாய் ஆகிறது.

தம்பி நன்றாகப் படித்தான்.

வேணி நடனமாடுகிறாள்.

நான் அவனைச் சந்திக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த மூன்று வாக்கியங்களையும் நோக்கினால் முதலாவது வாக்கியம் "தம்பி" பற்றியும், இரண்டாவது வாக்கியம் "வேணி" எனும் பெண்பற்றியும், மூன்றாவது வாக்கியம் "நான்" எனப் பேசுபவர் பற்றியும் கருத்தைச் சொல்ல முன்வருகின்றன. எனவே, இவ்வாக்கியங்களின் தோற்றத்துக்குக் காரணமாக இவை அமைந்திருப்பதால் இவை எழுவாய் எனப்படுகின்றன.

இவ்வாக்கியங்களில் எழுவாய்கள் தெளிவாகவே புலப்படுகின்றன. முதலாவது வாக்கியத்தில் "தம்பி" என்பதும், இரண்டாவது வாக்கியத்தில் "வேணி" என்பதும், மூன்றாவது வாக்கியத்தில் "நான்" என்பதும் வெளிப்டையாகவே நிற்கின்றன.

## பயனிலை.

ஓர் எழுவாயிலிருந்து தோன்றும் வாக்கியத்தின் பயன்நிலையைத் தீர்மானிக்கும் சொல்லைப் பயனிலை என்கிறோம். தமிழ் வாக்கிய அமைப்பின்படி இச்சொல் அநேகமாக வாக்கியத்தின் இறுதியிலேயே வருவதால் பயனிலை என்பது பொதுவாக வாக்கியத்தின் முடிவுச் சொல்லாகவே வருகிறது.

பயனிலையாக வருகின்ற சொல் வினைச்சொல்லாகவோ வினை தொக்கிநிற்கும் (மறைந்துநிற்கும்) சொல்லாகவோ அமையும். பயனிலையாக வருகின்ற சொல்லுக்கு முன்னால் யார் அல்லது எது என்ற கேள்வியைக் கேட்டு எழுவாயை விடையாகப் பெறலாம் என்பது இலக்கணமுறைமை.

தம்பி ஓடினான்.

நாய் குரைத்தது.

அவன் நல்லவன்.

ஆகிய வசனங்களை எடுத்துக்கொண்டால், ஓடினான், குரைத்தது, நல்லவன் என்பன பயனிலையாகின்றன. இதன்படி, யார் ஓடினான் என்ற கேள்விக்குத் தம்பி என்பது விடையாக வருகிறது. எது குரைத்தது என்ற கேள்விக்கு நாய் என்பது பதிலாகிறது. அதேபோல் யார் நல்லவன் எனும்போது அவன் என்பது விடையாகிறது. எனவே, தம்பி, நாய்,அவன் என்பவை எழுவாய்கள் ஆகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடினான், குரைத்தது என்பவை வினைமுற்றுகளாக அமைந்திருக்க ,நல்லவன் என்பது பெயர்ச்சொல்லாக (வினையாலணையும் பெயர்) வருவதைக் காண்கிறோம். எனினும் ஆழமாகப் பார்வையைச் செலுத்தினால் அவ்வசனம் "அவன் நல்லவன் ஆவான்."என நிறைவுறுவதை உணரலாம். இங்கே ஆவான் என்கின்ற வினைமுற்று மறைந்து நிற்கிறது. எனவே இவ்வகை வசனங்களில் வரும் பயனிலைகள் வினைச்சொற்கள் தொக்கிநிற்கும் பயனிலைகள் எனப்படுகின்றன.

## செயப்படுபொருள்.

தம்பி பானையை உடைத்தான்.

அக்கா பாடத்தைப் படித்தாள்.

அம்மா வீட்டைப் பெருக்கினார்.

பொய்யன் நல்லவனை ஏமாற்றினான்.

மேற்கண்ட வசனங்களை எடுத்துக்கொண்டால் உடைத்தான், படித்தாள், பெருக்கினார், ஏமாற்றினான் என்பவை பயனிலைகள் எனப்படுகின்றன. இவையனைத்தும் உயர்திணை வினைமுற்றுகளாக இருப்பதால் "யார்?" என்ற கேள்வியுடன் பயனிலைச் சொற்களை இணைக்கும்போது தம்பி, அக்கா, அம்மா, பொய்யன் என்பவை விடையாக வருகின்றன. இவற்றை நாம் எழுவாய்கள் எனவும் இனங்காண்கிறோம்.

அதேபோல் யாரை அல்லது எதனை என்ற வினாக்களைப் பயனிலைச் சொல்லுக்கு முன் இணைத்தால் அவற்றின் விடைகளாக வருபவை செயப்படுபொருள்கள் ஆகின்றன. இதன்படி தம்பி எதை உடைத்தான் எனில் குடத்தை உடைத்தான் என்பது பதிலாகிறது. எனவே, குடத்தை என்பது செயப்படுபொருள்.

எதைப் படித்தாள் என்ற கேள்விக்கு பாடத்தை என்பதும், எதைப் பெருக்கினார் என்பதற்கு வீட்டை என்பதும் விடையாக வருகின்றன. "பொய்யன் யாரை ஏமாற்றினான்?" என்ற கேள்விக்கு நல்லவனை என்பது விடையாகிறது. எனவே குடத்தை, பாடத்தை, வீட்டை, நல்லவனை என்பவை செயப்படுபொருள்கள் எனப்படுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றிலிருந்து செயப்படுபொருள் எப்போதும் இரண்டாம் வேற்றுமைஉருபான "ஐ" உச்சரிப்பை இறுதியில் பெற்றிருக்கும் என்பது வெளிப்படை.

எனினும் தற்கால நடைமுறையில் வேற்றுமை உருபு வெளிப்படையாக இல்லாமலும் வசனங்கள் அமைகின்றன. வேற்றுமை உருபு வெளிப்டையாகத் தெரியாவிடினும் "ஐ" உருபு நிச்சயம் செயப்படுபொருளில் மறைந்து நிற்கின்றது என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும்.

தம்பி பாடம் படித்தான்.

அம்மா வீடு பெருக்கினார்.

மணப்பெண் நகை அணிந்தாள்.

ஆகிய வசனங்களில் செயப்படுபொருள்களான பாடம், வீடு, நகை என்பவை வெளிப்டையாக "ஐ"உருபைக் கொண்டிராத போதிலும் எதை என்ற கேள்வி எழும்போது பாடத்தை, வீட்டை, நகையை என்பவையே முறையான விடைகளாக வருவதால் "ஐ"உருபு தொக்கி நிற்பதை உணரலாம்.

## தோன்றா எழுவாய்.

நாளை வருகிறேன்.

மீண்டும் சந்திப்போம்.

என் பின்னால் வா.

அதை எடு.

நன்றாகப் படித்தால் மட்டுமே சமூகத்துக்குப் பயனுள்ள மனிதர்களாக வரமுடியும்.

இவ்வைந்து வாக்கியங்களும் தாம் சொல்லவந்த கருத்தைத் தெளிவாகவே சொல்கின்றன. எனினும் இவற்றின் எழுவாய்கள் வெளிப்படையாக அல்லாமல் மறைந்தே நிற்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலிரண்டு வாக்கியங்களை எடுத்துக் கொண்டால் முதலாவது வாக்கியம் தன்மை, ஒருமை, உயர்திணை, வினைமுற்றைப் பயனிலையாகக் கொண்டிருப்பதால் நான் எனுஞ் சொல்லை எழுவாயாகக் கொள்ள முடிகிறது.

"நான் நாளை வருகிறேன்" எனும்போது எழுவாய் வெளிப்டையாகவே வருகிறது. எனவே "நாளை வருகிறேன்." என்ற வாக்கியத்தில் நான் மறைந்து நின்று பொருள் தருவதால் அது தோன்றா எழுவாய் எனப்படுகிறது.

இரண்டாவது வாக்கியம் தன்மைப், பன்மை உயர்திணை வினைமுற்றான "சந்திப்போம்" என்ற சொல்லைக் கொண்டு நிறைவுறுவதால் மறைந்திருக்கும் எழுவாய் நாம், நாங்கள், நீயும்நானும் என்ற சொற்களில் யாதாகிலும் ஒன்றாய் இருப்பின் மட்டுமே பொருந்திவரும் என்பது வெளிப்படை.

இதன்படி,

நாம் (யாம்) மீண்டும் சந்திப்போம்.

நாங்கள் மீண்டும் சந்திப்போம்.

நீயும் நானும் (அல்லது நீங்களும் நானும்) மீண்டும் சந்திப்போம்.

என எழுவாய் அமைய வாய்ப்புண்டு.

எனவே வாக்கியத்துக்குப் பொருந்தி வருகின்ற எழுவாய் மறைந்து நிற்பதன் காரணமாக அது தோன்றா எழுவாய் எனப்படுகின்றது.

மூன்றாம் நான்காம் வாக்கியங்களின் எழுவாய் ஒருமை முன்னிலைச் சொல்லாகவே வருகிறது என்பதை உணர்ந்து கொள்ள முடிகிறது. இரண்டினதும் பயனிலைகள் ஏவல் வினைகளிலேயே வருவதால் படர்க்கைச் சொல் அவ்வாக்கியங்களின் எழுவாயாவதற்கு எவ்வகையாலும் வாய்ப்பில்லை என்பதும் தெரிகிறது.

இவ்வகை வசனங்களில் தம்பீ அல்லது தங்காய் என்ற சொல்லை எழுவாயாகக் கொள்ளின் வசனம் நிறைவு பெறுவதைக் காணலாம். இங்கே நீ எனும் முன்னிலைச் சொல்லுடன் தம்பீ , தங்காய், அக்கா, அண்ணா போன்ற எட்டாம் வேற்றுமை விளிச்சொற்கள் (விளிவேற்றுமைகளும் முன்னிலைச் சொற்களே) அனைத்தும் பொருந்திவருவதை அவதானிக்கலாம். இவற்றைப்போல் பெயர்களையும் விளிவேற்றுமையாக்கி எழுவாயாகப் பயன்படுத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன்படி,

அக்கா, என்பின்னால் வா. அக்கா, அதை எடு

தம்பீ என் பின்னால் வா. தம்பீ அதை எடு

பாலா, என் பின்னால் வா. பாலா, அதை எடு

நீ என் பின்னால் வா நீ அதை எடு.

என வரக்கூடிய எழுவாய்ச் சொற்கள் மறைந்து நின்று பொருள் தருவதால் அவை தோன்றா எழுவாய்கள் எனப்படுகின்றன.

ஐந்தாவது வாக்கியமான, "நன்றாகப் படித்தால் மட்டுமே சமூகத்துக்குப் பயனுள்ள மனிதர்களாக வரமுடியும்." என்பதிலும் எழுவாய் மறைந்தே நிற்கிறது. இதன் பயனிலையான "வரமுடியும்" என்ற வினைமுற்று தன்மை முன்னிலை படர்க்கை ஆகிய மூவிடங்களுக்கும் பொருந்திவருவதால் தோன்றாமல் மறைந்து நிற்கும் எழுவாய்,

நாங்கள் நன்றாகப் படித்தால் மட்டுமே சமூகத்துக்குப் பயனுள்ள மனிதர்களாக வரமுடியும்.

நீங்கள் நன்றாகப் படித்தால் மட்டுமே சமூகத்துக்குப் பயனுள்ள மனிதர்களாக வரமுடியும்.

அவர்கள் நன்றாகப் படித்தால் மட்டுமே சமூகத்துக்குப் பயனுள்ள மனிதர்களாக வரமுடியும்.

மாணவர்கள் நன்றாகப் படித்தால் மட்டுமே சமூகத்துக்குப் பயனுள்ள மனிதர்களாக வரமுடியும்.

ஆகிய வசனங்களில் நாங்கள், நீங்கள், அவர்கள் மாணவர்கள் என மூவிடச் சொற்களைக் கொண்டு அமைவதைக் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தோன்றாப் பயனிலையும் செயப்படுபொருளும்.

ஒரு வகுப்பில் ஆசிரியரின் கட்டளைப்படி மாணவர்கள் ஒவ்வொருவரும் தாம் எழுதிவந்த கட்டுரைகளை வாசிப்பதாகக் கொள்வோம். சில மாணவர்கள் வாசித்து முடித்துவிட்ட நிலையில் ஆசிரியர் ஒரு மாணவரைச் சுட்டி : "நீ" என உத்தரவிடுகிறார்.

இந்த உத்தரவில் நீ என்ற எழுவாய் மாத்திரமே வெளிப்பட்டு நிற்கிறது. எனினும் அதன் கருத்து "நீ உன் கட்டுரையைப் படி." என்பதாகவே அமையும். இங்கே படி என்ற பயனிலையோ, கட்டுரையை என்ற செயப்படுபொருளோ வாக்கியத்தில் வெளிப்படையாக உள்ளடக்கப்படாத போதிலும், நீ என்கின்ற தோன்றும் எழுவாயின் பின்னால் அவை தோன்றாமல் மறைந்து நிற்கின்றன என்பது தெளிவு. இவைபோன்ற பல தோன்றாப் பயனிலைகளும் தோன்றாச் செயப்படுபொருள்களும் வாக்கியங்களில் தாராளமாகப் பயன்படுவதை நடைமுறையிற் காணலாம்.

எனவே இலக்கணத்தில் இவற்றுக்கு முக்கியத்துவம் வழங்கப்படாத போதிலும் சூழலுக்கு அமைவாக இவை தோன்றாப் பயனிலையாகவும் தோன்றாச் செயப்படுபொருளாகவும் செயற்படுகின்றன என்பதையும் மாணவர்கள் புரிந்து கொள்ளல் தமிழறிவு மேம்பட உதவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடரியல் 2

## ஒற்றைச் சொல்லில் வாக்கியம்.

ஒரு வாக்கியம் தனக்குரிய அத்தனை பிரிவுகளையும் வெளிப்படையாகக் கொண்டிருந்தால்தான் அது நிறைவான பொருளைத் தரும் என்பதில்லை. சில தனிச் சொற்கள்கூட நிறைவான பொருளைத் தருகின்ற வாக்கியங்களாக அமைவதுண்டு.

உதாரணமாக, ஒருவரைத் தெருவில் சந்திக்கும்போது, "எங்கிருந்து?" "எங்கே?" என்றோ அல்லது அக் கருத்துப்பட பேச்சுவழக்கிற் பயன்படும் ஒற்றைச் சொல்லாலோ ஒரு வினாவைத் தொடுக்குமிடத்து அவ்வினா நிறைவான பொருளைக் கொண்ட வாக்கியமாகவே அமைகிறது. இவ்வினாக்களின் கருத்து "எங்கே இருந்து வருகிறீர்கள்?" "எங்கே சென்று கொண்டிருக்கிறீர்கள்?" என்ற நிறைவான வசனமே என்பது கேட்பவருக்கும் பதிலளிக்க வேண்டியவருக்கும் தெளிவாகப் புரிகிறது.

அதேபோல் "கடையிலிருந்து." என்றோ "கொழும்புக்கு." என்றோ ஒற்றைச் சொல்லிற் பதில்கள் கிடைக்குமானால் அவையும் முழு வாக்கியங்களாகின்றன. ஏனெனில் வினா தொடுத்தவருக்கு அப்பதில்கள் திருப்தியையும் தெளிவையும் தருகின்றன. அப்பதில்கள் "நான் கடையிலிருந்து வருகின்றேன்." "நான் கொழும்புக்குப் போகின்றேன்." என்ற முழுவடிவங்களைக் கொண்டிருப்பது கண்கூடு.

எனவே, ஒற்றைச்சொல்கூட வாக்கியத் தன்மையைப் பெற்றுவிடுகிறது என்பதை நினைவிற் கொளல் சிறப்பு. எனினும் இவ்வகை வாக்கியங்கள் தன்மை, முன்னிலை ஆகிய நிலைகளில் மட்டுமே தோற்றம் பெறக்கூடியன. பொதுவாகப் படர்க்கையில் இவை தோன்றுவதில்லை.

## வாக்கியங்களின் தன்மை.

ஒரு நிறைவு பெறுகின்ற வாக்கியமானது எழுவாய், பயனிலை மற்றும் செயப்படுபொருள் என்பவற்றை வெளிப்படையாகவோ மறைமுகமாகவோ கொண்டிருக்கும். செயப்படுபொருள் இல்லாமலும் வாக்கியங்கள் நிறைவாக அமைவதுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தம்பி விழுந்தான்." என்ற வாக்கியத்தில் எழுவாயும் பயனிலையும் இருக்கின்றன. "யார் விழுந்தான்?" என்ற கேள்விக்குத் தம்பி எனும் எழுவாய் விடையாகிறது. தம்பியை எழுவாயாகக் கொள்ளும் கூற்று எழுந்தற்கான காரணம் "விழுந்தான்." என்ற செய்தி வெளிப்படுதற்காகும். எனவே "விழுந்தான்" பயனிலையாகிறது. இவ்வாக்கியத்தில் செயப்படுபொருள் இடம்பெறவில்லை. இவ்வகை வாக்கியங்களைச் செயப்படுபொருள் குன்றிய வாக்கியங்கள் என்பர்.

"அக்கா அழுதாள்." "நாய் குரைத்தது." "அண்ணா நீந்துகிறான்." "பூனை ஓடியது." போன்றவை செயப்படுபொருள் குன்றிய வாக்கியங்களுக்கு உதாரணங்களாகின்றன.

"அக்கா பாடத்தைப் படித்தாள்." என்றோ "அக்கா பாடம் படித்தாள்." என்றோ அமைகின்ற வாக்கியங்களில் செயப்படுபொருளும் காணப்படுகிறது. அக்கா எதைப் படித்தாள் என்ற கேள்விக்குப் "பாடத்தை" என்பது பதிலாகிறது. முதலாவது வாக்கியத்தில் "பாடத்தை" என்றும் இரண்டாவது வாக்கியத்தில் "பாடம்" என்றும் செயப்படுபொருள் அமைந்திருந்தாலும் அவற்றின் உண்மையான வடிவம் "பாடத்தை" என்பதுதான். ஏனெனில் செயப்படுபொருள் என்பது "ஐ" வேற்றுமையுருபை வெளிப்படையாகவோ, மறைமுகமாகவோ ஏற்றிருக்கும் ஒரு பெயர்ச்சொல் ஆகும்.

**எழுவாய் அற்ற வாக்கியங்கள்.**

இன்றைய தமிழில் எழுவாய் இல்லாமலும் வாக்கியங்கள் அமைவதுண்டு.

"உனக்கு அவனைத் தெரியாது."

"எனக்குக் கண்ணனைப் பிடிக்காது."

போன்ற வாக்கியங்களை எடுத்துக் கொண்டால் இவ்வாக்கியங்கள் அமைக்கப்பட்ட விதத்திலோ, அவை சொல்லவந்த கருத்துப் புலப்படலிலோ எவ்விதக் குறையும் காணமுடியாது. எனினும் வாக்கியத்தில் எழுவாயை அடையாளப்படுத்த முடியாதிருப்பதைக் காணலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாக்கியங்களின் பயனிலை "தெரியாது" "பிடிக்காது" என்பவையாகும். இவற்றைப் பயன்படுத்தி "யாரைத் தெரியாது?" "யாரைப் பிடிக்காது?" என்ற செயப்படுபொருளை அறிவதற்கான கேள்விகளை முன்வைப்போமானால், முதலாவது வாக்கியத்தில் "அவனை" என்பது பதிலாக வரும். இரண்டாவது வாக்கியத்தில் "கண்ணனை" என்பது தெளிவாகும். எனவே, இவை செயப்படுபொருள்களாம்.

ஆனால், எழுவாயை அறியும்நோக்கில் "யார் தெரியாது?" "யார் பிடிக்காது?" போன்ற கேள்விகளை முன்வைத்தால் பதில் எதுவும் கிடைக்கப் போவதில்லை.

எனினும் "உனக்கு அவனைத் தெரியாது." என்பதை "நீ அவனை அறியாய்." என்று திருத்தமாக வாக்கியம் அமைத்தால் "நீ" என்பது எழுவாயாக நிற்பதை உணரலாம்.

அதுபோல் "எனக்குக் கண்ணனைப் பிடிக்காது." என்பதை "நான் கண்ணனை விரும்புபவனல்லன்." என்றோ "நான் கண்ணனை ஏற்பவனல்லன்" என்றோ மாற்றியமைத்தால் "நான்" என்பது எழுவாயாக அமைகிறது.

இத்தகைய இடர்பாடுகள் காரணமாக , "எழுவாய் உருபுகளை ஏற்பதில்லை." என்ற விதியைத் தளர்த்தி, "எழுவாய் சிலசமயங்களில் உருபுகளை ஏற்பதுண்டு." என்ற கொள்கையைத் தமிழறிஞர்கள் முன்வைக்கத் தலைப்படுகின்றனர்.

இதன்படி "யார்?" என்ற எழுவாய்க்கான கேள்வியும், "கு"உருபை ஏற்று "யாருக்கு" என மாற்றமடையம்போது "உனக்கு" "எனக்கு" என உருபுகளை ஏற்ற "நீ" "நான்" ஆகிய எழுவாய்கள் விடையாகக் கிடைக்கின்றன.

## வாக்கியங்கள் விரிவடைதல்.

எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆகிய பகுதிகளைச் செம்மையாக இணைப்பதன் மூலம் உருவாகும் வாக்கியங்கள், சொல்லவந்த கருத்தைத் தெளிவுபடுத்தவும், விளக்கம் கொடுக்கவும் சில அடைமொழிகளையும் ஏற்பதுண்டு. இவ்வாறு ஏற்கப்படும் அடைமொழிகள் கருத்துச் செறிவைத் தருவதுடன் மொழிநடைக்கும் அழகூட்டுகின்றன.

"தம்பி பாடம் படித்தான்." என்பது எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆகிய மூன்றையும் கொண்டுள்ள ஒரு நிறைவான வாக்கியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் கருத்தை மேலும் சிறப்புறக் கூறுமிடத்து. "சின்னத் தம்பி தமிழ்ப் பாடத்தை ஆர்வமாகப் படித்தான்." என விரிவுபடுத்தலாம்..

சின்னத்தம்பி எனும்போது எழுவாயான "தம்பி" பற்றி ஒரு கருத்தைத் தருகின்றது. தமிழ்ப்பாடத்தை எனுமிடத்து செயப்படுபொருளான "பாடம்" என்ன வகையைச் சார்ந்தது என்பதை விளக்குகிறது. அதேபோல் தம்பி எவ்வாறு படித்தான் என்பது "ஆர்வமாகப் படித்தான்." எனத் தெளிவு படுத்தப்படுகிறது.

இவை அடைமொழிகள் எனப்படுகின்றன. எழுவாய்க்கு முன்னும் பயனிலைக்கு முன்னும் செயப்படு பொருளுக்கு முன்னும் இவை வாக்கியத்தில் இடம்பெறுகின்றன.

மேற்கண்ட வாக்கியத்தில் மேலும் அடைமொழிகளை இணைப்பதன்மூலம் வாக்கியத்தை மிக அழகானதாகவும் பொருட்செறிவு உடையதாகவும் அமைக்க முடியும்.

"அழகான சின்னத்தம்பி இனிமையான தமிழ்ப்பாடத்தை மிகவும் ஆர்வமாகப் படித்தான்."

இதேபோல் "மாலா பந்தை வீசினாள்." என்ற சாதாரண வாக்கியத்தை, " மேல் வகுப்பு மாலா, எதிரே வந்த பந்தைப் பிடித்து இலக்குத் தவறாமல் வேகமாக வீசினாள்." என்று பொருள் விரித்தலுடன் அழகூட்டவும் முடியும்.

மேல் வகுப்பு என்பது எழுவாய்க்குரிய அடைமொழியாகவும், எதிரே வந்த என்ற தொடர் செயப்படு பொருளுக்குரிய அடைமொழியாகவும், இலக்குத் தவறாமல் வேகமாக என்பது பயனிலைக்குரிய அடைமொழியாகவும் இவ்வாக்கியத்தில் அமைந்திருப்பதை நோக்கலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வழுவற்ற வாக்கிய அமைப்பு.

வாக்கியங்கள் அமைக்கப்படும்போது அவை வழுவற்றவையாக இருப்பது சிறப்பாகும். **திணைவழு, பால்வழு, காலவழு, எண்வழு, இடவழு** என்பவையின்றி அமையும் வாக்கியங்களே கருத்தைத் துல்லியமாக வெளிப்படுத்த வல்லன என்பதை மறந்துவிடக்கூடாது.

## திணைவழு.

எழுவாய் உயர்திணையாக வருமிடத்துப் பயனிலையும் உயர்திணையாக அமைதல்வேண்டும். அதேபோல் எழுவாய் அஃறிணையாயின் பயனிலையும் அஃறிணைத் தன்மை கொண்டிருத்தலே முறை.

உதாரணமாக.

அவன் நல்லன் அல்லது அவன் நல்லவன் (உயர்திணை)

அது நல்லது (அஃறிணை).

இவற்றை மாற்றி அவன் என்ற உயர்திணை எழுவாயுடன் நல்லது என்ற அஃறிணைப் பயனிலையையோ.

அது என்ற அஃறிணை எழுவாயுடன் நல்லவன் என்ற உயர்திணைப் பயனிலையையோ இணைத்து வாக்கியம் அமைக்க முயல்வது நகைப்புக்கிடமாகும்.

## ஏற்கத்தக்க திணைவழுக்கள்.

எவ்வாறெனினும் சில திணைவழுக்கள் நடைமுறையில் ஏற்கப்பட்டிருக்கின்றன என்பதையும் நாம் தெரிந்துகொளஎல் நன்று.

உதாரணமாக:

குழந்தை அழுகிறது. (குழந்தை உயர்திணைச் சொல் அழுகிறது அஃறிணை வினைமுற்று.)

தெய்வம் காக்கிறது. (தெய்வம் உயர்திணை: காக்கிறது அஃறிணை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தை. பிள்ளை, சிசு, தெய்வம் என்பவை உயர்திணைச் சொற்களாயினும் மனநெகிழ்வு காரணமாகவோ என்னவோ அவற்றுடன் அஃறிணை வினைமுற்றுகளை இணைத்துப் கூறுவது மரபாகிவிட்டது. அவற்றை மக்கள் தங்கள் உடைமைகளாகக் கருதும் மனோபாவமாகவும் இருக்கலாம்.

**பப்பி நன்றாக விளையாடுகிறான்.** (பப்பி - நாய் - அஃறிணை: விளையாடுகிறான், உயர்திணை).

**இலட்சுமி வீடு திரும்பிவிட்டாள்.** (லட்சுமி - பசு - அஃறிணை: திரும்பிவிட்டாள், உயர்திணை).

இங்கே அன்பின் காரணமாகப் பப்பி என்ற நாயும் இலட்சுமி என்ற பசுவும் உயர்திணை வினைமுற்றுகளைப் (பயனிலை) பெற்றிருக்கின்றன.

**காளையும் விவசாயியும் மாலையில் களைத்து வீடு திரும்பினர்.**

இவ்வாக்கியத்தில் உழைப்பின் பெருமை காரணமாக விவசாயிக்கு உதவிய காளையும் உயர்திணை வினைமுற்றைப் பெறுகின்றது.

மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா.

இவ்வாக்கியத்தில் செய்கையின் இழிவுத்தன்மை காரணமாக மூர்க்கன் முதலையுடன் இணைக்கப்பட்டு அஃறிணை நிலைக்குத் தள்ளப்படுகிறான். எனவே இவ்வாக்கியம் அஃறிணைப் பன்மை வினைமுற்றான "விடா" என்ற பயனிலையில் நிறைவு பெறுகிறது.

**பால்வழு.**

தமிழ்ச் சொற்களைப் பொறுத்தவரையில் வினைமுற்றுகளைக் கொண்டு பால், திணை, எண், இடம், காலம் என்பவற்றைத் துல்லியமாகக் கூறிவிடமுடியும். அது எமது மொழிக்குள்ள சிறப்புகளில் ஒன்று.

உதாரணமாக, வென்றான் என்ற வினைமுற்றை நோக்குவோமானால் அது ஆண்பால், உயர்திணை, ஒற்றைமனிதன், படர்க்கை, இறந்தகாலம் என்பவற்றைத் தன்னகத்தே கொண்டிருக்கிறது என்பது இலக்கணம் கல்லார்க்கும் தெரிந்த உண்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே பால்வழு நேராமல் எழுதுதல் மொழிக்குச் சிறப்புத் தரும்.

**"அக்கா வந்தாள்: தம்பி விளையாடுகிறான்."** என எழுதவேண்டிய வாக்கியங்களை,

"அக்கா வந்தான்." என்றோ "தம்பி விளையாடுகிறாள்." என்றோ.

எழுதுதல் தகாது என்பதை மனதிற் கொள்ள வேண்டும்.

ஆயினும், சிலபகுதிகளில் பேச்சுமொழியிலும், பேச்சைச் சுட்டுகின்ற எழுத்து மொழியிலும் பால்வழு ஏற்கத்தக்க வகையில் கையாளப்படுகின்றது என்பதை அறிந்திருத்தல் பயனுடைத்தாகும்.

பல வீடுகளிற் பெரியவர்கள் ஆண்பிள்ளைகளுக்கு "கெதியாக வாடி." "ஓடிப்போடி". "அதை எடடி." "கவனமாகப் படியடீ." என்றெல்லாம் பெண்பால் சொற்களைப் பயன்படுத்துவதும், பெண்கள் விடயத்தில் மறுதலையாக "கெதியாக வாடா." ஓடிப்போடா." என ஆண்பாற் சொற்களைப் பயன்படுத்துவதும் கண்கூடு. இவை அன்பின் வெளிப்பாடுகளாகக் கொள்ளப்படுகின்றன.

அநேகமாக இத்தகைய வாக்கியங்கள் முன்னிலை ஏவல்களாகவே அமைகின்றன.

இலக்கணநூலார் இவற்றை ஏற்கும் காலம்வரை இப்பேச்சுவழக்கு நடைமுறை பால்வழுக்களின் பாற்படும் என்பதை மறவற்க.

"அப்பா இப்போதுதான் எங்கோ போயிருக்குது: அது அரைமணி நேரத்துக்குப் பிறகுதான் வீட்டுக்கு வரும்."

"அம்மா பாவம்..சுகமில்லாத நேரத்திலும் சமைக்குது..."

போன்ற வாக்கியங்கள் பேச்சுமொழியில் அஃறிணை ஒன்றன்பாற் சொற்களில் நிறைவு பெறுகின்றன என்பதையும் நடைமுறையில் அவதானிக்கலாம்.

இவ்விரு வாக்கியங்களும் இலக்கணமுறையிற் திணைவழு, பால்வழு என்பவற்றைக் கொண்டிருக்கின்ற போதிலும் பேச்சுவழக்கில் அவை சரியென ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலவழு.

காலவழு பொதுவாகக் குழந்தைகளின் பேச்சுமொழியில் வரும்போது அதைக் கேட்கும் பெரியவர்கள் மகிழ்ச்சியடைவது இயல்பு.

குழந்தை, "அப்பா நாளைக்கு வந்தார்." என்றோ "அப்பா நேற்று வருவார்." என்றோ மழலை மொழியிற் பேசிவிட முடியும். பெரியவர்களும் அவற்றை இரசித்துப் பொருளை விளங்கிக் கொள்வார்கள். பிள்ளையின் பேச்சுத் திறனையும் வளர்ப்பார்கள்.

ஆனால் வளர்ந்தவர்கள் இத்தகைய வழுக்களை விட்டால் அவை நகைப்புக்குரியனவாகிவிடும். எனவே பெரியவர்கள் காலவழுவின்றி பேசுதலும் எழுதுதலும் மொழியில் முக்கியத்துவம் பெறுகின்றன.

## இறந்தகால நிறை வாக்கிங்கள்:

**தம்பி சாப்பிட்டான்.**

**நான் நேற்று வந்தேன்.**

**அவன் பந்து விளையாடினான்.**

இவ்வாக்கியங்கள் மூன்றும் நிறைவான பொருளைத் தருகின்றன. வாக்கியம் தோன்றியதன் பணியும் நிறைவுற்று விட்டது. சொல்லப்படவேண்டியவை தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

இவ்வகை வாக்கிங்கள் இலகுவானவை. பிழையற அமைப்பதும் எளிது.

## இறந்தகாலத் தொடர்நிலை வாக்கியங்கள்

**தம்பி சாப்பிட்டுக் கொண்டு இருந்தான்.**

**நான் நேற்று வந்து கொண்டிருந்தேன்.**

**அவன் பந்து விளையாடிக் கொண்டிருந்தான்.**

இவ்வாக்கியங்கள் நிறைவானவைபோற் தோற்றமளித்தாலும் ஏதோ ஒரு செய்தியை அவை மறைத்துக் கொண்டிருக்கின்றன என்பது உன்னிப்பாக நோக்கின் புரியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“தம்பி நேற்றுச் சாப்பிட்டான்.” என்று அமையத்தக்க வசனம் “தம்பி சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.” எனவமைவதன் காரணத்தை விளங்கிக் கொள்ள வேண்டும்.

“தம்பி சாப்பிட்டான்.” என்பதுடன் வேறெச்செயலும் தொடர்புபட வாய்ப்பில்லை. ஆனால், "தம்பி சாப்பிட்டுக் கொண்டிருந்தான்." எனுமிடத்து “நான் வரும்போது தம்பி சாப்பிட்டுக் கொண்டிருந்தான் . ” என்றோ, “நேற்றுக்காலை எட்டு மணிக்குத் தம்பி சாப்பிட்டுக் கொண்டிருந்தான் . என்றோ சொல்வதற்கு வாய்ப்பிருக்கிறது.

எனவே, வினைச்சொல் வினைமுற்றாகி நிறைவுறாமல், வந்து, விளையாடி என வினையெச்சச் சொற்களாகி “கொண்டு” என்ற துணைவினையையும் சேர்த்து வாக்கியத்துக்குப் புதுவடிவம் தருகின்றன. வேறொரு நிகழ்வுடன் தொடர்பு படும்போது இத்தகைய வாக்கியங்கள் உருவாவது இயல்பு.

## நிகழ்கால நிறை வாக்கியங்கள்.

மாலா படிக்கிறாள்.

அம்மா உணவு சமைக்கிறாள்.

அப்பா வேலைக்குப் போகிறார்.

இந்த மூன்று வாக்கியங்களும் நிகழ்காலத்தைக் குறிப்பனவாயினும் செயல் இப்போது நடைபெறுகிறது என்பதற்கான அழுத்தங்களைக் கொண்டிருக்கவில்லை. இவை வழமையான செயலைக் குறிக்கவும் பயன்படுகின்றன என்பது தெளிவு.

## நிகழ்காலத் தொடர்நிலை வாக்கியம்..

மாலா படித்துக் கொண்டிருக்கிறாள்.

அம்மா உணவு சமைத்துக் கொண்டிருக்கிறாள்.

அப்பா வேலைக்குப் போய்க் கொண்டிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாக்கியங்கள் நிகழ்காலத்தில் அச்செயல் நடைபெற்றுக் கொண்டிருப்பதைக் குறிக்கின்றன. செயல்கள் இடம்பெறுகின்றன: ஆனால் நிறைவு பெறவில்லை என்ற கருத்து இவற்றில் மேலோங்கி நிற்கின்றன.

எவ்வாறெனினும் இவ்விருவகை வாக்கியங்களிலும் ஒருவித காலமயக்கத்தை நடைமுறையில் அவதானிக்க முடிகிறது என்பதையும் அறிந்து வைத்திருத்தல் நலம்.

உதாரணமாக, "மாலா படிக்கிறாள்." என்ற வசனம் மாலா பாடசாலைக்குச் செல்பவள் என்ற கருத்தைச் சிறப்பான நிலையிலும் "அவளை இப்போது அழைக்காதீர்கள்: அவள் படிக்கிறாள்." என்ற கருத்தைப் பொதுவான நிலையிலும் தருவதை அவதானிக்கலாம்.

"மாலா படித்துக் கொண்டிருக்கிறாள்." என்ற வாக்கியத்தை எடுப்போமானால், "இப்போது அவள் படித்துக் கொண்டிருக்கிறாள்." என்ற பொருளிலும், "(தயவுசெய்து நீங்கள் கொடுத்த புத்தகத்தை உடனே திருப்பிக் கேட்டுவிடாதீர்கள்: பரீட்சை முடியும்வரை அவளிடமே இருக்கட்டும். ஏனெனில், அவள் (அதைப் பரீட்சைக்காகப்) படித்துக் கொண்டிருக்கிறாள்.") என்ற பொருளிலும் பயன்படுத்த முடிவதை அவதானிக்கலாம்.

இவ்வாறே அநேகமான நிகழ்கால நிறைவாக்கியங்களும் தொடர்வாக்கியங்களும் சாதாரணமாகப் பயன்படுத்தப்படும் முறைமையை உன்னிப்பாக நோக்குவது தமிழறிவு வளம்பெற உதவும்.

## எதிர்கால நிறை வாக்கியங்கள்.

மாலா படிப்பாள். (மாலா நளைக்காலை படிப்பாள்.)

அம்மா உணவு சமைப்பார். (அம்மா இன்னும் சற்றுநேரத்தில் உணவு சமைப்பார்.)

அப்பா வேலைக்குப் போவார். (அப்பா உடல்நிலை தேறியதும் வேலைக்குப் போவார்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எதிர்காலத் தொடர்நிலை வாக்கியங்கள்.

மாலா படித்துக் கொண்டிருப்பாள்.

(நீங்கள் இரண்டாண்டுகள் கழித்து ஊருக்கு வரும்போது மாலா ஐந்தாம் ஆண்டு படித்துக் கொண்டிருப்பாள்.)

அம்மா உணவு சமைத்துக் கொண்டிருப்பாள்.

(காலையில் நான் குளித்துவிட்டு வரும்போது அம்மா அடுப்படியில் உணவு சமைத்துக் கொண்டிருப்பாள்.)

அப்பா வேலைக்குப் போய்க் கொண்டிருப்பார்.

(நாளை இந்நேரம் அப்பா வேலைக்குப் போய்க்கொண்டிருப்பார்.)

எவ்வாறெனினும் வாக்கியங்கள் தாம் சொல்லவந்த கருத்தைத் தெளிவாக உணர்த்துவதையே நோக்கமாகக் கொண்டவை என்பதை நாம்மறந்து விடலாகாது. குறிப்பாகக் காலவழு விடயத்தில் வாக்கியங்கள் சற்று நெகிழ்ச்சித்தன்மையைக் கொண்டிருக்கின்றன என்பதைப் புரிந்துகொள்ளல் நன்மை பயக்கவல்லது.

"நான் எதிர்வரும் ஞாயிறன்று கொழும்புக்குப் போகிறேன்: நீயும் வருகிறாயா?" என்ற வாக்கியம் தற்காலத்தில் இலக்கணப் பிழையற்ற தாகவும் எதிர்கால நிகழ்வைக் கூறுவதாகவும் அமைந் திருப்பதை அவதானிக்கலாம்.

இவ்வாக்கியம் "போகிறேன்" என்ற வினைமுற்றுக்குப் பதிலாகப் "போகவுள்ளேன்" என்ற வினைமுற்றையும், "வருகிறாயா?" என்ற வினாச்சொல்லுக்குப் பதிலாக "வருவாயா?" என்ற வினாவமைப்பையும் கொண்டிருத்தலே முறையானதாகும்.

எனினும் மொழியின் வளர்ச்சி கருதித் தற்கால நடைமுறைகளும் ஏற்கத்தக்கனவாக அமைந்திருக்கின்றன என்பது நோக்கத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொடரியல் 3

### எண்வழு.

எண்வழுவற்ற வாக்கியம் அமைத்தல் என்பது ஒருமை, பன்மை என்பவற்றிற் கவனமெடுத்து வாக்கியம் அமைத்தலாகும். அவ்வாறு வாக்கியம் அமைக்கும்போது ஒருமையிற் தொடங்கும் வாக்கியத்தின் நிறைவு ஒருமைப் பயனிலையாகவும் பன்மையிற் தொடங்கும் வாக்கிய நிறைவு பன்மைப் பயனிலையாகவும் இருத்தல் அவசியம். இவ்விதி தவறின் அஃது எண்வழுவின் பாற்படும்.

**தம்பி வந்தான்**

**மாடு மேய்கிறது.**

**வேணி அழகாக நடனமாடினாள்.**

இவ்வாக்கியங்கள் எண்வழு அற்ற முறையில் அமைந்துள்ளன. எழுவாய், பயனிலை இரண்டும் ஒருமையில் அமைந்துள்ளமை கவனிக்கத்தக்கது.

அதேபோல்,

**தம்பியும் தங்கையும் வந்தனர்.**

**மாடுகள் மேய்கின்றன.**

**வேணியும் இலக்கியாவும் நடனமாடினர்.**

ஆகிய வாக்கியங்களில் எழுவாய்களும் பயனிலைகளும் பன்மைத் தன்மையுடன் பொருத்தமாக இணைந்துள்ளமையால் இவை வழுவற்றுக் காணப்படுகின்றன.

இத்தகைய வாக்கியங்கள் இலகுவானவை. பொதுவாகப் எல்லோராலும் பிழையற அமைக்கக் கூடியவை.

பின்வரும் வாக்கிய அமைப்பகளை நோக்குவோம்.

**நான் அவளுடன் சென்றேன். (அவளுடன் நான் சென்றேன்.)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாக்கியத்தில் "நான்" என்பது எழுவாயாக இருப்பதனால் "சென்றேன்" என்ற தன்மை ஒருமை வினைமுற்றில் அது நிறைவுறுகிறது.

**நானும் அவளும் சென்றோம். (அவளும் நானும் சென்றோம்.)**

இவ்வாக்கியத்தில் எழுவாய் "நானும் அவளும்" என்பதாகும். எனவே, வாக்கியம் தன்மைப் பன்மை வினைமுற்றில் முடிவுறுகிறது.

**அவள் என்னுடன் வந்தாள் (என்னுடன் அவள் வந்தாள்)**

இதன் எழுவாய் "அவள்" என்பதால் வாக்கியம் "வந்தாள்" என்கின்ற படர்க்கை ஒருமை வினைமுற்றில் நிறைவடைகிறது.

**அவளும் நானும் அட்சயாவும் வந்தோம்.**

இதில் எழுவாயாக அமைவது "அவளும் நானும் அட்சயாவும்" என்ற மூவர். எழுவாயிலுள்ள மூவருள் நானும் என்ற தன்மைச்சொல்லும் (பேசுபவர்) உள்ளடங்கியுள்ளது. எனவே வாக்கிய நிறைவு தன்மைப் பன்மை வினைமுற்றில் முடிகிறது.

**நீயும் அவளும் நன்றாகப் பாடினீர்கள்.**

**நீங்கள் இருவரும் நன்றாகப் பாடினீர்கள்.**

இவ்விரு வாக்கியங்களினதும் எழுவாயாக "நீயும் அவளும்" அல்லது "நீங்கள் இருவரும்" என முன்னிலைச் சொற்கள் வருவதால் "பாடினீர்கள்" என்ற முன்னிலைப் பன்மை வினைமுற்றில் அவை நிறைவடைகின்றன.

**சோழன் அணியுடன் சேரன் அணி மோதிக்கொண்டது.**

**சோழன் அணியும் சேரன் அணியும் மோதிக்கொண்டன.**

**சோழன் அணியினர் சேரன் அணியினருடன் மோதிக்கொண்டனர்.**

**சோழன் அணியினரும் சேரன் அணியினரும் மோதிக்கொண்டனர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்காட்டப்பட்ட நான்கு வாக்கியங்களில்,

முதலாவது வாக்கியத்தின் எழுவாய் சேரன் அணி எனவருவதால் ஒருமைக்குரிய வினைச்சொல்லைக் கொண்டு அவ்வாக்கியம் முடிவடைகிறது. (அணி என்பது அஃறிணை ஒருமைச்சொல் என்பது கருத்திற் கொள்ளத்தக்கது)

இரண்டாவது வாக்கியத்தின் எழுவாய், சோழன் அணியும் சேரன் அணியும் என அஃறிணைப் பன்மையில் வருவதால், மோதிக்கொண்டன என்ற அஃறிணை வினைமுற்றில் அது நிறைவுறுகிறது.

மூன்றாவது வாக்கியத்தின் எழுவாயாக, சோழன் அணியினர் என்ற சொல் வருவதால் அணியினர் என்ற உயர்திணைப் பன்மைக்கேற்ப நிறைவுச்சொல்லும் உயர்திணைப் பன்மையிலேயே அமைந்துள்ளது.

நான்காவது வாக்கியத்தின் எழுவாயும் உயர்திணைப் பன்மையில் உள்ளதால் நிறைவுச் சொல்லும் உயர்திணைப் பன்மையில் அமைகிறது.

அணி என்ற சொல் பலர்கூடிய ஓரமைப்பைக் குறிப்பதால் அது அஃறிணையின் பாற்படுகிறது. படை, கூட்டம், குழு, வகுப்பு என்பவையும் இவ்வகையினவே. எனினும் அணியினர் , படையினர், கூட்டத்தினர், குழுவினர், வகுப்பினர் என இவற்றை மாற்றியமைக்குமிடத்து அவை மனிதர்களையே குறிப்பிடுவதால் உயர்திணைச் சொற்களாகவும் பன்மைத்தன்மை கொண்டவையாகவும் மாற்றமடைகின்றன.

இவற்றைக் கவனித்து வாக்கியங்களை அமைக்குமிடத்து எண்வழுவற்ற வாக்கியங்கள் தோன்றுகின்றன.

**இடவழு .**

இடம் என்பது **தன்மை, முன்னிலை, படர்க்கை** என மூவகைப்படும்.

தன்னை அல்லது தம்மைக் குறித்துப் பேச்சு எழும்போது அது தன்மை எனப்படும். தன்மைச் சொல் எழுவாயாக அமையின் பயனிலை வினைச்சொல்லும் தன்மையாகவே அமையும்.

எதிரே நிற்பவரை அல்லது நிற்பவர்களை நோக்கி வசனம் அமையும்போது அது முன்னிலை எனப்படும். முன்னிலை எழுவாயிற் தோன்றும் வசனம் முன்னிலை வினைச்சொல்லில் நிறைவடைதலே முறையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான், நீ, அல்லாத பிறஎழுவாய்கள் அனைத்தும் படர்க்கை வகையைச் சாரும் இவற்றின் பயனிலைகளும் படர்க்கையில் அமைவதே நேர்த்தியான வசனத்தின் அடிப்படையாகும்..

நானும் அவனும் சென்றோம்.

இவ் வாக்கியத்தின் எழுவாய் "நானும் அவனும்" என்பதாகும். எழுவாய் பன்மையைக் குறிக்கிறது. எனவே வாக்கியம் பன்மையில் முடிந்திருக்கிறது. "நான்" என்ற தன்மைச்சொல் எழுவாயில் வருவதால் முடிவுச்சொல் தன்மையில் அமையவேண்டியது நியதி.

வாக்கியம் "நானும் நீயும்" என்பதை எழுவாயாகக் கொண்டிருப்பினும் "நான்" என்ற தன்மைச் சொல் வந்திருப்பதால் பயனிலை தன்மையிலேயே "நானும் நீயும் சென்றோம்". என்றவாறாக அமைந்திருக்கும்.

"நான் அவனுடன் சென்றேன்." "நான்" எழுவாயாக அமைந்திருப்பதால் பயனிலை தன்மையிலேயே அமைகிறது.

"நாம் இருவரும் சென்றோம்." (நானும் அவனும் அல்லது நானும் நீயும் எனவும் வரலாம்)

இவ்வாக்கியத்தின் எழுவாய் "நாம் இருவரும்" என்பதற்குப் பதிலாக "நானும் அவனும்" என்றோ அல்லது "நானும் நீயும்" என்றோ அமையினுங்கூட தன்மைச்சொல் எழுவாயில் வருவதால் பயனிலையும் தன்மையிலேயே நிறைவுறுகிறது.

"கண்ணனோடு நானும் அவனும் விளையாடினோம்."

இவ்வாக்கியத்தில், "நானும் அவனும்" என்பதே எழுவாயாக அமைவதால் "நான்" என்ற தன்மை எழுவாய்க்கு முக்கியத்துவம் கொடுத்துப் பயனிலை தன்மைப் பன்மையில் அமைகிறது.

"நீ அவனுடன் சென்றாய்."

"நீயும் அவனும் சென்றீர்கள்."

"உன்னுடன் அவன் வந்தான்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்காணப்படும் வாக்கியங்களில்,

முதலாவது வசனத்தில் "நீ" என்பதே எழுவாயாக வருகிறது. எனவே பயனிலை "சென்றாய்" என்ற முன்னிலை வினையில் அமைந்துள்ளது.

இரண்டாவது வாக்கியத்தில் "நீயும் அவனும்" எழுவாயாக வருவதால் "சென்றீர்கள்" என்ற முன்னிலைப் பன்மையில் வசனம் நிறைவுறுகிறது. இவ்வாக்கியத்தில் "அவனும்" என்பதைவிட "நீயும்" என்பதே எழுவாய்க்குள் சிறப்பிடம் பெறுகிறது. எனவேதான் வாக்கியம் முன்னிலையில் அமைகிறது.

"உன்னுடன் அவன் வந்தான்." என்ற வாக்கியத்தின் எழுவாயாக "அவன்" என்பதே வருவதால் வசனமும் படர்க்கை வினைமுற்றான "வந்தான் என்பதில் நிறைவாகிறது.

இந்த நுணுக்கங்களில் சற்றுக் கவனம் செலுத்தினால் இடவழு நேராத வாக்கியங்களை அமைப்பதில் மயக்கங்கள் உண்டாகா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடரியல் 4

## வினா வாக்கியம் அமைத்தல்.

வினாவாக்கியங்கள் பொதுவாக இருவகையின.

ஒருவகை: ஆம் அல்லது இல்லை என்ற விடையை எதிர்பார்த்து நிற்குமியல்பின.

மற்றவகை: விளக்கங்கள் கோரி நிற்பன.

இவ்வாக்கியங்களைத் தெளிவுறவும் வழுவறவும் அமைத்தல் சிறப்பாம்.

## ஆம் அல்லது இல்லை என்ற பதிலை எதிர்பார்க்கும் வினா வாக்கியங்கள்.

இவை இலகுவானவை. "ஆ" அல்லது "ஓ" என்ற எழுத்தைப் பொருத்தமான சொல்லின் இறுதியில் சேர்ப்பதன்மூலம் இவ்வகை வாக்கியங்கள் அமைக்கப்படுகின்றன.

**அவன் வந்தானா? (விடை: "ஆம்." அல்லது, "ஆம் அவன் வந்தான்.")**

**அவனா வந்தான்? (விடை: "ஆம்." அல்லது, "ஆம்,அவனேதான் வந்தான்.)**

**அவன் வந்தானோ?**

**அவனோ வந்தான்?**

இவற்றுள் "அவன் வந்தானா?" "அவன் வந்தானோ? ஆகிய இருவாக்கியங்களும் ஒரே தன்மையின. இவ்வகை வாக்கியங்கள் செயலுக்கு முன்னுரிமை கொடுக்கும் வினாவாகின்றன. இவற்றின் எதிர்பார்ப்பு "அவன்" எனக் குறிப்பிடப்படும் மனிதன், "வந்தானா அல்லனா?" (தற்கால மொழிநடையில், "வந்தானா இல்லையா?") என்பதாகும். இவ்வகை வினாக்களுக்கு "ஆம்" அல்லது "இல்லை" என்றுதான் விடை கூறப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவனா வந்தான்?" "அவனோ வந்தான்?" ஆகிய இருவினாக்களும் செயலைவிடக் கருத்தாவுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் தொனியைக் கொண்டுள்ளன. இவற்றில் "வந்தான்" என்ற செயல் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. வந்தவன் "அவனா?" அல்லது "அவனோ?" என்பதே வினாத்தன்மை பெறுகிறது. இதைக் கிட்டத்தட்ட "யார் வந்தான்?" என்ற வினாவின் பொருளைக் கொண்டிருப்பதாகவும் கொள்ள முடியும்.

வந்தவன் அவனா, அல்லது வேறு மனிதனா என்ற கருத்து வினாவில் உயர்ந்து நிற்பதால் வந்தவன் அவன்தானெனில் "ஆம்" என்றும் அல்லன் எனில் "இல்லை" என்றுமே விடை வழங்கப்பட வேண்டும்.

பின்வரும் வினாக்களையும் நோக்கலாம்:

**அவள் குடத்தை உடைத்தாளா?**

**அவள் குடத்தையா உடைத்தாள்?**

**அவளா குடத்தை உடைத்தாள்?**

இம்மூன்று வினாக்களுக்கும் "ஆம்.", அல்லது "இல்லை." என்பவையே விடையாக அமையும். எனினும் வினாக்களின் காரணம் வெவ்வேறு தன்மையில் அமைந்திருக்கின்றது.

இவ்வினாக்களைப் பின்வரும் முறையிலும் அமைக்கலாம்.

**அவள் குடத்தை உடைத்தாளோ?**

**அவள் குடத்தையோ உடைத்தாள்?**

**அவளோ குடத்தை உடைத்தாள்?**

இவற்றுள், முதலாவதுவகை வினாவில் "உடைத்தல்" முக்கியத்துவம் பெறுகிறது. இரண்டாவதில் "உடைக்கப்பட்ட பொருள்" சிறப்பிடம் பெறகிறது. மூன்றாவதில் "குடத்தை உடைத்தவர்" பற்றிய அறிதலே மேலோங்கி நிற்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆ" அல்லது "ஓ" எழுத்து, சொற்களின் இறுதியில் பொருத்தமாக இணைத்து இத்தகைய வினாக்களைப் பெறுகின்றோம். இவ் வெழுத்துகள் முதல் வினாவில் பயனிலையுடனும், இரண்டாவது வினாவில் செயப்படுபொருளுடனும் மூன்றாவதில் எழுவாயுடனும் இணைந்து வினாக்களைத் தருகின்றன என்பது கவனத்திற் கொள்ளத்தக்கது.

**எவ்வாறெனினும், இன்றைய மொழிநடைமுறையில் "ஓ" எழுத்து வினாக்களிற் பயன்படுவது குறைந்து வருகின்றது.**

## விளக்கமான பதிலை எதிர்பார்க்கும் வினாக்கள்.

இவ்வகை வினாக்களுக்கு வெறுமனே "ஆம்" அல்லது "இல்லை" என்ற விடைகள் பொருத்தமானவையாக அமைவதில்லை. விடைகள் விளக்கங்களைத் தருவதை நோக்காகக் கொண்டிருத்தலே முறையாகும்.

**இவ்வினாக்கள் ஏன், என்ன, எப்படி, எங்கே, எவ்வாறு, யாது, யார், எப்போது அல்லது எப்பொழுது ,எதற்காக, எதற்கு போன்ற சொற்களை உள்ளடக்கித் தோன்றுகின்றன.**

"அவன் ஏன் வந்தான்?" அல்லது "ஏன் அவன் வந்தான்?"

இதற்கு விடையாக "ஆம்" அல்லது "இல்லை" என்ற பதங்களை முன்வைக்க முடியாது. அவன் வந்ததன் காரணத்தைத் தெளிவாகக் கூறினால் மட்டுமே விடை திருப்தியாக அமையும். எனவே, "அவன் படிக்க வந்தான்." என்றோ "அவன் விளையாட வந்தான்." என்றோ விளக்கமாக விடை சொல்லப்பட வேண்டும்.

## பின்வரும் வினாக்களையும் நோக்குக:

என்னைப்பற்றி என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய்?

திருடன் எப்படி வீட்டுக்குள் நுழைந்தான்? (அல்லது, எப்படித் திருடன் வீட்டுக்குள் நுழைந்தான்?)

நேற்றிரவு எங்கே சென்றாய்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறர் விடயத்தில் எவ்வாறு நீ தலையிட முடியம்? (எவ்வாறு நீ பிறர் விடயத்தில் தலையிட முடியம்?)

யாது காரணத்தினால் அவன் அங்கே செல்ல மறுக்கிறான்?

யார் அந்தப் பையன்?

எப்போது நீ அவனைச் சந்தித்தாய்?

எப்பொழுது அவன் வருவதாகச் சொன்னான்?

எதற்காக (எதுக்காக) வரமறுக்கிறாய்?

இவற்றுள் எதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும்?

இவர்களில் யாருக்கு உதவிகள் வழங்கப்பட வேண்டும்?

இவ்வாறெல்லாம் விளக்கத்தேவையின் அடிப்படையில் பலவித முறைமைகளில் வினாக்கள் தோற்றம் பெறுகின்றன. வினாக்கள் அமையும் விதத்தைப் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் உற்றுநோக்கி வருவோமாயின் சிறந்த முறையில் வினாக்களை உருவாக்குவது இலகுவானதாக அமையும்

.

கேட்கப்படும் வினாக்களுக்குத் தெளிவான விடைகளை அளிப்பது மாத்திரம் புத்திசாலித்தனம் என்று கொள்ளமுடியாது : ஆரோக்கியமானதும் ஆழமானதுமான கேள்விகளை உருவாக்குவதும்கூட புத்திசாலித்தனம்தான் என்பர் அறிஞர். இக்கூற்றை மனத்திருத்தி கேள்விகளை ஆக்கப் பழகிக் கொள்ள வேண்டும்.

## நேர்கூற்று அல்லது உடன்பாட்டு வாக்கியமும் அதற்கெதிரான எதிர்க்கூற்று அல்லது மறுப்பு வாக்கியமும்.

சாதாரணமான வாக்கியங்கள் மொழியில் எத்துணை முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கின்றனவோ அத்துணை முக்கியத்துவத்தை எதிர்க்கூற்று வாக்கியங்களும் கொண்டிருக்கின்றன. எனவே உடன்பாடு, எதிர்க்கூற்று ஆகிய இருவகைகளையும் சரிவரக் கையாளத் தெரிந்திருப்பது நன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழே சில உதாரணங்கள் தரப்படுகின்றன. மறுப்பு வாக்கியத்தின் இலக்கண நடைமுறையும் தற்கால இலகுதமிழ் நடைமுறையும் அவ்வவ் வாக்கியங்களுடன் இணைக்கப்பட்டுள்ளன. தற்கால நடைமுறையும் இலக்கணத் தகைமை உடையதே என்பதை மறவாதிருத்தல் நலம்.

## இறந்தகால வாக்கியங்கள்:

அவன் வந்தான். (உடன்பாடு) (ஆண்பால்)

அவன் வந்திலன். - அவன் வந்தானல்லன். (மறுப்பு -- இலக்கண வழக்கு)

அவன் வரவில்லை. (மறுப்பு - தற்கால வழக்கு)

அவள் சென்றாள். (உடன்பாடு) (பெண்பால்)

அவள் சென்றிலள். -அவள் சென்றாளல்லள் (மறுப்பு --இலக்கண வழக்கு)

அவள் செல்லவில்லை. (மறுப்பு -தற்கால வழக்கு)

அவர்கள் நின்றனர். (உடன்பாடு) (பலர்பால்)

அவர்கள் நின்றிலர். (மறுப்பு -- இலக்கண வழக்கு.)

அவர்கள் நிற்கவில்லை. (மறுப்பு -- தற்கால வழக்கு)

பழம் விழுந்தது. (உடன்பாடு) (ஒன்றன்பால்)

பழம் விழுந்திலது. (மறுப்பு -- இலக்கண வழக்கு)

பழம் விழவில்லை. (மறுப்பு - தற்கால வழக்கு)

பசுக்கள் மேய்ந்தன. (உடன்பாடு) (பலவின்பால்)

பசுக்கள் மேய்ந்தில. (மறுப்பு -- இலக்கண வழக்கு)

பசுக்கள் மேயவில்லை. (மறுப்பு - தற்கால வழக்கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நிகழ்கால வாக்கியங்கள்:**

அவன் வருகின்றான். (உடன்பாடு)

அவன் வருகின்றிலன். (மறுப்பு இலக்கண வழக்கு)

அவன் வரவில்லை. (மறுப்பு - தற்கால வழக்கு)

அவள் பாடுகின்றாள். (உடன்பாடு)

அவள் பாடுகின்றிலள் (மறுப்பு - இலக்கண வழக்கு)

அவள் பாடவில்லை. (மறுப்பு - தற்கால வழக்கு)

அவர்கள் நடக்கின்றனர். (உடன்பாடு)

அவர்கள் நடக்கின்றிலர். (மறுப்பு -இலக்கண வழக்கு)

அவர்கள் நடக்கவில்லை. (மறுப்பு - தற்கால வழக்கு)

நாய் குரைக்கின்றது. (உடன்பாடு)

நாய் குரைக்கின்றிலது. (மறுப்பு - இலக்கண வழக்கு)

நாய் குரைக்கவில்லை. (மறுப்பு - தற்கால வழக்கு)

பறவைகள் பறக்கின்றன. (உடன்பாடு)

பறவைகள் பறக்கின்றில. (மறுப்பு - இலக்கண வழக்கு)

பறவைகள் பறக்கவில்லை. (மறுப்பு - தற்கால வழக்கு)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எதிர்கால வாக்கியங்கள்:**

அவன் வருவான். (உடன்பாடு)

அவன் வரான். (மறுப்பு - இலக்கண வழக்கு)

அவன் வரமாட்டான். (மறுப்பு - தற்கால வழக்கு)

அவள் சிரிப்பாள். (உடன்பாடு)

அவள் சிரியாள். (மறுப்பு - இலக்கண வழக்கு)

அவள் சிரிக்கமாட்டாள். (மறுப்பு – தற்கால வழக்கு)

அவர்கள் விளையாடுவார்கள். (உடன்பாடு)

அவர்கள் விளையாடார். (மறுப்பு - இலக்கண வழக்கு)

அவர்கள் விளையாடமாட்டார்கள். (மறுப்பு - தற்கால வழக்கு)

அது வரும். (உடன்பாடு)

அது வராது (மறுப்பு - இலக்கண வழக்கும் தற்கால வழக்கும்)

அது வரமாட்டாது (பேச்சு வழக்கு)

அவை வரும். (உடன்பாடு)

அவை வரா. (மறுப்பு - இலக்கண வழக்கும் தற்கால வழக்கும்)

அவை வரமாட்டாது. (பேச்சு வழக்கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பின்வரும் எடுத்துக்காட்டுகளையும் கருத்திற் கொள்க:**

தம்பி விளையாடிக் கொண்டிருந்தான். (உடன்பாடு)

தம்பி விளையாடிக் கொண்டிருந்திலன். (எதிர்நிலை)

தம்பி விளையாடிக் கொண்டிருக்கவில்லை. (தற்கால எதிர்நிலை)

இவற்றை மேலும் விளங்கிக் கொள்ளவும் சிறப்பாக எதிர்மறை வாக்கியங்களை ஆக்கவும் தொடர்ந்து நூல்களை வாசித்தறிதல் பெரும் துணையாயமையும் என்பதை மனதிற் கொள்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடரியல் 5

## நீளமான வசனங்களை ஆக்குதல்.

நாம் அமைக்கும் வாக்கியங்கள் சிறியவையாக இருப்பின் பிழைகள் ஏற்படும் வாய்ப்புகள் குறைவாகவே காணப்படும். ஆனால் அவற்றை நெடிய அல்லது நீண்ட வசனங்களாக அமைக்க முயலுமிடத்துச் சரியாக அக்கறை எடுக்காவிட்டால் எம்மை அறியாமலே பலவித வழுக்கள் அவ்வசனத்திற் கலந்துவிடும் சந்தர்ப்பங்கள் உள. எனவே நாம் நீண்ட வசனங்களை அமைக்கும்போது கவனமாக இலக்கண விதிகளை அனுசரித்தல் வேண்டும்.

## சிறிய வாக்கியங்கள்.

நான் வந்தேன்.

தம்பி வந்தான்

தங்கை வந்தாள்.

இவை மூன்றுந் தனித்தனி வாக்கியங்களாகின்றன. இவை ஒன்றோடொன்று தொடர்பற்றன. கால விடயத்தைப் பொறுத்த அளவில் "நான் இன்று வந்தேன்." "தம்பி நேற்று வந்தான்." "தங்கை முந்தையதினத்தில் வந்தாள்." என்று கூறினும் பொருந்தும்.

காரண விடயத்தைப் பொறுத்தமட்டில், "நான் படிக்க வந்தேன்." "தம்பி விளையாட வந்தான்." "தங்கை ஊஞ்சலாட வந்தாள்." என்று வேறுபடக் கூறினும் ஏற்கத்தக்கனவாக அமையும்.

ஆனால், இவற்றை ஒரே வாக்கியமாக அமைக்கும்போது காலத்தையும் காரணத்தையும் தெளிவாகச் சொன்னாலன்றி வேறுபாடுகள் தோன்ற இடமிருக்கா.

மேற்கண்ட வசனங்களை நாம் ஒரே வசனமாகக் கொண்டுவரும்போது, " நானும் தம்பியும் தங்கையும் வந்தோம்." என எழுத முடிகிறது. பொருள் விரித்துச் சொன்னாலன்றி இவ்வசனத்தின்படி காலமும் காரணமும் ஏறத்தாழ ஒன்றாகவே அமைந்துவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசன இணைப்பின்போது நானும், தம்பியும், தங்கையும் என "உம்" எனும் இடைச்சொல்லால் மூவரும் இணைக்கப்பட்டிருத்தல் நோக்கத்தக்கது. அத்துடன் பயனிலையானது "நான்" எனும் தன்மைச்சொல் (நானும், தம்பியும், தங்கையும்) எழுவாய்க்குள் வந்ததனால் வாக்கியம் தன்மைப் பன்மையில் நிறைவுபெறுகிறது.

"வந்தேன்." "வந்தான்." "வந்தாள்." என்று தனித்தனியாகப் பால்காட்டி, தன்மை, முன்னிலை, படர்க்கை என இடம்காட்டித் திணையும் காட்டி ஒருமையில் அமைந்த பயனிலையானது வசனங்கள் இணைக்கப்படுகையில், தன்மைப் பன்மையில் நிறைவுறவதும் இங்கு கவனிக்கத்தக்கது.

இவ்வசனத்தைப் பொருள் பெரிதும் மாறுபடாமற் பின்வரும் முறைகளிலும் அமைக்கலாம்.

"நான் தம்பியோடும் தங்கையோடும் வந்தேன்."

"நான், தம்பி தங்கையுடன் வந்தேன்."

"தம்பி, என்னோடும் தங்கையோடும் வந்தான்."

"தங்கை, என்னோடும் தம்பியோடும் வந்தாள்."

"தம்பியும் தங்கையும் என்னுடன் வந்தனர்."

"நான், தம்பி, தங்கை ஆகிய மூவரும் வந்தோம்."

இவ்வாக்கியங்களில் எழுவாய்கள் மாற்றமுறுவதையும் அவற்றுக்கிசைவாகப் பயனிலையாக வருகின்ற வினைமுற்றுகள் தம்மை மாற்றிக் கொள்வதையும் காணலாம்.

இவ்வசனங்களில் "ஓடு, உடன், உம்" என்பன இடைச்சொற்களாகப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன.

"ஆயினும்" என்ற இடைச்சொல்லைப் பயன்படுத்துவதன்மூலம் இவற்றை வேறுவகையிலும் வேறு பொருள்படவும் இணைக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தங்கை காலையிலேயே வந்தாளாயினும் நானும் தம்பியும் இப்போதுதான் வந்தோம்."

"தம்பியும் நானும் நேரத்துக்கு வந்தோமாயினும் தங்கை பிந்தியே வந்தாள்."

"தங்கையும் தம்பியும் நிகழ்வில் கலந்து கொண்டார்களாயினும் அந்நிகழ்வுக்கு என்னால் வரமுடியவில்லை."

"நான் விழாவுக்கு வரவிருந்தேனாயினும் தங்கையும் தம்பியும் அங்கே வரவிரும்பவில்லை."

"தம்பி வருவானாயின் அவ்விடத்துக்கு நான் வரமாட்டேன்."

"அவன் சொன்னானாயின் நிச்சயம் செய்வான்."

"நேற்று, நான் விழாவுக்கும், தம்பி பாடசாலைக்கும், தங்கை கோயிலுக்கும் சென்றிருந்தோம்."

மேற்கண்ட வசனங்கள் போன்று மேலும் பலவிதமான கருத்துகளுடனமைந்த வாக்கியங்களை "ஆயினும் அல்லது ஆயின்" ஆகிய இடைச்சொற்களைச் சரியானவகையில் கையாளுவதன்மூலம் அமைத்துக் கொள்ளலாம்.

இதேபோல் "எனினும்" என்ற இடைச்சொல்லும் பலவித கருத்துகள் வரப் பயன்படுத்தப்படுகிறது.

"நான் அவ்விடத்துக்கு வரவில்லையெனினும் தம்பி வந்திருந்தான்."

"தம்பி உங்களைச் சந்திப்பானெனினும் நானும் சேர்ந்து வருவது கூடிய பலனைத் தரும்."

"அவன் வருவதாக வாக்களித்திருந்தானெனினும் தான் சொன்னது போல் நடக்கத் தவறிவிட்டான்."

இவ்வாறே, "ஆ, ஓ, அல்லது, இல்லையாயின், ஆவது, ஆனால், ஆகவே " ஆகிய இடைச்சொற்களும் வசன இணைப்புகளுக்குப் பெரிதும் துணைநிற்கின்றன. வசன அமைப்புகளைக் கவனிப்பதன்மூலம் சிறந்த நெடிய வசனங்கள் ஆக்குந்திறனை வளர்த்துக் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடரியல் 6

## மரபுச் சொற்றொடர்களும் அவற்றை வாக்கியங்களிற் பயன்படுத்தும் முறைமைகளும்.

அழகிய தமிழ் வசனநடைகளுக்கு மரபுச் சொற்றொடர்கள் பெரிதும் துணைசெய்கின்றன. தமிழ் வசனங்களை அழகாகவும் பொருள் செறிந்ததாகவும் அமைக்க வேண்டுமாயின் மரபுச் சொற்றொடர்களையும் அவற்றை வசனங்களிற் பயன்படுத்துகின்ற முறையையும் அறிந்திருத்தல் அவசியம்.

நம் முன்னோர்கள் பேசுகின்ற அல்லது எழுதுகின்ற வசனங்கள் பொருட்செறிவுடையதாக இருப்பதற்காக அவற்றுடன் இணையக்கூடிய பல்வேறுவிதமான மரபுச் சொற்றொடர்களை உருவாக்கித் தந்துள்ளனர். மரபுச் சொற்றொடர்கள் என்பதன் பொருள் மரபுவழியாகப் பலதலைமுறையினரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு எம் தலைமுறையினரிடம் ஒப்படைக்கப்பட்ட கருத்துமிக்க சொற்றொடர்கள் என்பதாகும். இவற்றை நாம் சரியாகப் பயன்படுத்துவதன்மூலம் மொழிவளத்தைப் பாதுகாப்பதோடு எமது ஆற்றலையும் வளர்த்துக் கொள்கிறோம்.

மரபுச் சொற்றொடர் ஒன்றில் பயன்படுத்தப்படும் சொற்கள் எவையும் தமது இயல்பான கருத்தைக் கொண்டிருப்பதில்லை என்பதை நினைவில் வைத்திருக்க வேண்டும். சொற்களின் கருத்து ஒருவிதமாக இருக்க மரபுச் சொற்றொடரால் உண்டாகும் கருத்து பிறிதொன்றாக இருப்பது கண்கூடு.

உதாரணமாக, முந்தைய வசனத்தின் நிறைவுச் சொல்லாகப் பயன்படுத்தப்பட்டிருக்கும் "கண்கூடு" என்ற பதம் ஒரு மரபுச்சொற்றொடர் ஆகும். இதில் கண் என்ற சொல்லும் கூடு என்ற சொல்லும் காணப்படுகின்றன. இதன்படி சொற்களுக்குரிய நேரடிக் கருத்தைக் காண முயல்வோமாயின் கண்கள் கூடியிருத்தல் அல்லது கண்ணுக்குரிய கூடு (புறாக்கூடு போல என்றுங் கொள்ளலாம்.) என்றாகிறது. ஆனால் இத்தொடரின் கருத்தாகக் கொள்ளப்படுவது "தெளிவாகத் தெரிகின்ற நடைமுறைச் செய்தி" என்பதாகும்.

இதேபோல், "சந்திக்கு இழுத்தல்" என்பதன் பொருள் தெருக்கள்கூடும் சந்தியைநோக்கி ஒருவரை இழுத்துச் செல்வது என்பதன்று. அவமதித்தல் அல்லது மானக்கேடான சம்பவங்களைப் பிறரறிய வெளிப்படுத்தல் என்பதே அதன் சரியான பொருளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"காலை வாரிவிடல்" என்பதன் பொருள் கால்களை இழுத்து வீழ்த்துதல் என்பதாகவன்றி பொருத்தமான சந்தர்ப்பம் பார்த்து ஒருவருக்குக் கேடு சூழும்படி செய்தல் என்பதாகும்.

இவற்றை மனதிற்கொண்டு மரபுச்சொற்றொடர்கள் வசனங்களிற் பொருந்தும் வகையைக் காண்போம்.

அடிகோலல் - மாணவர்களின் கல்வியை மேம்படுத்துவதற்கான அமைப்பொன்றுக்கு ஊர்ப்பெரியவர்கள் இன்று அடிகோலினர். (தொடக்க ஏற்பாடுகளைச் செய்தனர்)

அடிபணிதல் - அரசின் நியாயமான வேண்டுகோளுக்கு அடிபணிதல் நல்ல பிரசையின் பண்பாகும். (ஏற்றொழுகுதல்)

அடிபிடித்தல் - சரியாக அடிபிடித்த வேலன், தனக்கு நேர்ந்த துன்பத்துக்குக் காரணமானவர்களைக் கண்டறிந்தான். (மூலத்தைக் கண்டறிதற்கான நுண்ணிய முயற்சி)

அடிப்பிடித்தல் - வீட்டுக்கு வந்தவருடன் அம்மா பேசிக் கொண்டிருந்ததால் அடுப்பிலிருந்த சோறு அடிப்பிடித்து விட்டது. (கருகிப் போய்விட்டது)

(அடிபிடித்தல், அடிப்பிடித்தல் ஆகிய இரு மரபுச்சொற்றொடர்களின் பொருள் மாறுபடுவதற்கு "ப்" என்ற ஓரெழுத்தே காரணம் என்பதைப் புரிந்து கொள்ளல் நன்று.)

அடிப்படுதல் - நியாயமான விடயங்களுக்கன்றி என்னை அடிப்படுத்த எவருக்கும் இடங்கொடேன். (கீழ்ப்படிந்து ஒழுகுதல்)

அணைகோலல் - அவன் தன் பிற்கால வாழ்க்கை சீர்கெட்டுப் போகாமலிருக்க உழைக்கும் காலத்திலேயே அணைகோலி வைத்திருந்தான். (போதிய முன்னேற்பாடுகளைச் செய்து தீங்கு வராமற் காத்துக்கொள்ளல்)

அந்தரத்தில் நிற்றல் - உழைக்கும் போதே சேமித்து வைக்காவிடின் பிற்காலத்தில் அந்தரத்தில் நிற்க வேண்டியேற்படலாம். (உதவிகளின்றித் தவித்தல்)

மேலும் சில மரபுச் சொற்றொடர்களும் அவற்றின் கருத்துகளும் இணைக்கப்பட்டுள்ளன. இவைபோல் ஆயிரக்கணக்கான மரபுச்சொற்றொடர்கள் தமிழில் உள. வசதிகருதி மிகச்சிலவே இங்கு காட்டப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கிடுதத்தி (உறுதியான நிலைப்பாடு எதுவுமின்றி அங்குமிங்கும் அலைபவன்.)

ஆசாரக்கள்ளன் (ஒழுக்கசீலன்போலும் நேர்மையானவன்போலும் உலகுக்கு முன்னால் நடிப்பவன்)

இரண்டு தோணியிற் கால்வைத்தல் (ஒன்றுக்கும் மேற்பட்ட காரியங்களில் சக்தியைமீறிச் செயல்பட்டு எதிலும் வெற்றிகாண முடியாத நிலை.)

இலைமறைகாய் (விளம்பரப்படுத்தப்படாமல் மறைவாக இருக்கின்ற திறமைசாலிகள்)

உலைவைத்தல் (பிறருக்குத் தீங்கு விளைவிக்கும் செயல்களில் ஈடுபடுதல்)

ஊமைக்கோட்டான் (உரிய இடத்தில் தன் நியாயங்களை எடுத்துச் சொல்லும் திறனற்றவன்)

எடுத்தெறிதல் (அலட்சியம் காட்டுதல்)

ஏட்டுப்படிப்பு (உலக அனுபவம் இல்லாமல் கல்வியை மாத்திரம் நம்பியிருத்தல்)

ஓட்டைவாயன் (இரகசியங்களைக் காப்பாற்ற மாட்டாதவன்)

கட்டிக்கொடுத்தல் (வயதுவந்த பெண்ணுக்குச் சரியான இடத்தில் திருமணம் செய்துவைத்தல்)

கட்டுப்பெட்டி (பழமைவாதியாக இருத்தல்)

கடைகட்டுதல் (காரியங்களை முடித்துக்கொண்டு வெளியேறல்)
கண்திறத்தல் (அறிவு பெறல்)

கண்மூடுதல் (இறத்தல்)

கரையேற்றுதல் (துன்பத்திலிருந்து ஒருவரை மீட்டெடுத்தல்.... பெண்ணுக்குத் திருமணம் செய்வித்தல்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைபிடுங்குதல் (ஒருவரிடமிருந்து அவர் வாய்மூலமாகவே இரகசியங்களைச் பெற்றுக் கொள்ளல்)

கம்பிநீட்டுதல் (காரியமானதும் தலைமறைவாகிவிடல்)

கரைத்துக் குடித்தல் (ஒரு துறையை முற்றாக அறிந்து வைத்திருத்தல்)

காக்காய் பிடித்தல் (ஒருவரிடமிருந்து காரியம் சாதிப்பதற்காக அவர்நலனில் அக்கறை காட்டுதல்போல நடித்தல்)

காலில் விழுதல் (சரணடைதல்)

குதிரைக்கொம்பு (இல்லாப்பெருள்)

கும்பிடுகள்ளன் (சரணடைந்தேனும் காரியம் பெற்றதும் விலகிவிடுபவன்)

கேள்விச்செவியன் (கேட்பவற்றையெல்லாம் நம்புபவன்)

கைகழுவுதல் (தொடர்புகளை முறித்துக் கொள்ளல் .... பொறுப்பிலிருந்து முற்றாக விலகுதல்)

(தற்காலத்தில் "கைகழுவும்தினம்" என்றொரு நாள் கைக்கொள்ளப்படுகிறது. இது கைகளைச் சுத்தமாக வைத்திருத்தல் என்ற தொனிப்பொருளில் கைக்கொள்ளப் படுகின்றதெனினும் மரபுச் சொற்றொடரின்படி (ஏதோ ஒன்றிலிருந்து) முற்றாக விலகுதல் என்பதே அதன் பொருளாகும். எனவே மரபுத்தொடரை மீறாதவகையில் தொனிப்பொருளுக்கிணையான நேர்த்தியான பதமொன்றைத் தேர்வுசெய்து அறிமுகப்படுத்த வேண்டியது அறிஞர் கடனாகும்)

கைமோசம் போதல் (பிறரால் ஏமாற்றப்படுதல்)

கைவிரித்தல் (இயலாமையை வெளிப்படுத்தல்)

சிண்டுமுடித்தல் (சண்டை உருவாக்கல்)

சுணைகெட்டுப் போதல் (மான அவமானங்களுக்கு அஞ்சாமல் வாழ்தல்)

சூடுபோடுதல் (மனம் நோகப் பேசுதல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தட்டிக்கொடுத்தல் (உற்சாகப்படுத்துதல்)

தலைகவிழ்தல் (அவமானப்பட்டு நிற்றல்)

தலைகீழாய் நிற்றல் (பெருமுயற்சி செய்தல்)

தலையெடுத்தல் (வளர்ச்சியடைதல் .. இழந்த நிலையை மீள அடைதல்)

திரிசங்கு சொர்க்கம் (இரண்டுங்கெட்டான் நிலை .... அந்தரத்தில் நிற்றல்)

தூபம்போடுதல் (தூண்டி விடுதல்)

நடுத்தெருவில் விடல் (ஆதரவின்றிக் கைவிட்டுப் போதல்)

நாக்குப்புரளுதல் (சொன்னசொல் தவறுதல்)

நெட்டுருப் பண்ணுதல் (மனப்பாடம் செய்தல்)

பந்தம்பிடித்தல் (தன் காரியமாவதற்காகப் பிறரைப் புகழ்ந்து அவர் பின்னால் நிற்றல்)

பல்லுக்காட்டுதல் - பல்லிளித்தல் (பிறரிடம் கெஞ்சி நிற்றல்)

பல்லைப்பிடுங்குதல் (ஒருவரின் வல்லமையைக் குறைத்தல்)

பூசிமெழுகுதல் ( குற்றங்குறைகளை மறைத்தல்)

பூசிப்புணர்த்துதல் (மிகையாக அலங்கரித்தல்)

முகத்திலடித்தல் (முகத்துக்கு நேரே கடுஞ்சொற்கள் கூறல்)

முகம்கொடுத்தல் (எதிர் கொள்ளல் ... இனிமையாகப் பழகுதல்)

வயிற்றிலடித்தல் (ஒருவரது வருமானத்தைக் கெடுத்தல்)

வயிற்றைக் கட்டுதல் (உணவைக் குறைத்து மிச்சம் பிடித்தல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லடி வழக்கு (நியாயமின்றிப் பலத்தைப் பயன்படுத்தி வம்புக்கிழுத்தல்)

வாயில் மண்போடுதல் (தீமை விளைவித்தல்)

வாலாட்டுதல் (தேவையற்ற சச்சரவுகளை வலிந்து உருவாக்கல்)
விழலுக்கிறைத்தல் (பயனற்ற முயற்சி)

இவற்றைத் தெளிவாக விளங்கிப் பேச்சுமொழியிலும் எழுத்துமொழியிலும் பொருத்தமான இடத்திற் பயன்படுத்துமிடத்து வசனங்கள் கருத்துச்செறிவு மிக்கவையாகவும் கேட்போரை அல்லது படிப்போரை ஈர்ப்பனவாகவும் அமையும் என்பதிற் சந்தேகமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொடரியல் 7

### உவமைத் தொடர்களும் அவற்றை வாக்கியங்களிற் பயன்படுத்தும் வகையும்.

நம் முன்னோர் மரபுச்சொற்றொடரைப் பயன்படுத்தித் தமது பேச்சுவன்மையையும் எழுத்துவன்மையையும் மேம்படச் செய்தமை போன்றே உவமைத் தொடர்களையும் பொருத்தமான இடங்களிற் பயன்படுத்தித் தாம் சொல்லவந்த கருத்துகளுக்கு வலுவூட்டினர்.

மரபுத்தொடரைப் பொறுத்தமட்டில் அத்தொடரிற் கையாளப்படும் சொற்களின் நேர்க்கருத்துகள் தொடரின் கருத்தாக அமையா என்பது ஏற்கனவே அறிந்தவிடயம். அத்தொடரின் பொருள் மரபுவழியாகப் பேணப்பட்டு வருவதால் அதில் மாற்றம் செய்யும் உரிமையும் எமக்கு இல்லை. இதனால் மரபுச்சொற்றொடர்களை நாம் புதிதாக ஆக்கிவிடவும் முடியாது என்பது வெள்ளிடைமலை.

ஆனால் உவமைச் சொற்றொடர்கள் அவ்வாறல்ல. அவற்றின் கருத்துகள் தெளிவானவை. நாம் சொல்லவரும் கருத்துக்கு ஏற்ற உவமானங்களாக அவை செயற்படுபவை. "ஏற்கனவே நடந்த சம்பவம்போல் நாம் சொல்லவரும் சம்பவமும் அமைகிறது." என்ற எண்ணத்தை வலியுறுத்தும் வகையிலமைபவை. எனவே, உவமைச் சொற்றொடர்கள் புதிதாகத் தோன்றுதற்குச் சந்தர்ப்பங்களுள.

"காகம் இருக்கப் பனம்பழம் விழுந்ததுபோல" என்ற உவமைச் சொற்றொடரை எடுத்துக் கொள்வோம். இது ஏதோ ஒருநாள் தற்செயலாக நடந்த நிகழ்வாக இருக்கலாம். பழங்கள் நிறைந்த பனையொன்றில் காகம் வந்து அமர்கின்ற அதே கணத்தில், பழமொன்று இயல்பாக மரத்தினின்று நீங்கிவிட, அந்நிகழ்வு காகம் இருந்ததனாற்றான் இடம்பெற்றது எனக் கொள்வது சரியன்று என்பதைக் காட்டவே இச்சொற்றொடர் தோன்றிற்று எனலாம்.

"வேலியே பயிரை மேய்ந்தாற் போல" என்ற சொற்றொடரை நோக்கினால். வேலியிடுவது பயிரின் பாதுகாப்புக்கே என்றிருக்க பாதுகாப்புக் கடமையைச் செய்யவேண்டிய வேலியே பயிரை யழிக்க விழைந்தால் யாரை நம்புவது என்பதுடன், பயிரின் ஆபத்தான நிலையையும் வெளிப்படுத்துகிறது. எனவே தீங்குவராமற் காக்க வேண்டிய கடமைக்குப் பொறுப்பானவரே பாதுகாக்கப்படவேண்டிய பொருளுக்கு அல்லது உயிருக்குத் தீங்கு செய்ய முனையும்போது, அதை விளக்க இச்சொற்றொடர் பயன்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகழ்பெற்ற பெண்பிரதமர் ஒருவர் தன் பாதுகாப்பு அதிகாரிகளாலேயே சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் "வேலியே பயிரை மேய்ந்தாற்போல" என்ற உவமைச் சொற்றொடருக்குச் சிறந்த உதாரணமாகும்.

இதனை வாக்கியத்தில் அமைக்குமிடத்து, "பிரதமரின் பாதுகாப்பு அதிகாரிகளே தங்கடமையினின்றுந் தவறி "வேலியே பயிரை மேய்ந்தாற்போல" நடந்து கொண்டதால் துணிச்சலான பிரதமரை நாடு இழந்தது." என எழுத இடமுண்டு.

"நாடு பிரதமரைப் பறிகொடுத்தது: பயிரை மேய்ந்த வேலியானார்கள் பாதுகாப்பு அதிகாரிகள்" எனச் செய்தித் தலைப்பும் அமைக்கலாம்.

சில சொற்றொடர்களையும் அவற்றை வசனங்களிற் பயன்படுத்தும் முறைகளையும் பார்ப்போம்:

அணிலை ஏறவிட்ட நாய்போல.

தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட பணியைச் செவ்வனே நிறைவேற்றாமல் "அணிலை ஏறவிட்ட நாய்போல" அவன் ஏமாற்றத்துடன் திரும்பி வந்தான்.

அம்பு பட்ட மான்போல.

தன் கணவனின் கடுஞ்சொல்லைத் தாங்கமாட்டாத மனைவி " அம்புபட்ட மான்போல" துடித்துப் போனாள்.

அறுத்தகோழி துடிக்குமாப்போல.

களத்திற் புதல்வன் வீழ்ந்தான் என்ற செய்தி கேட்ட தாய் "அறுத்தகோழி துடிக்குமாப்போலத்" தவித்தாள்.

இலவுகாத்த கிளிபோல.

இன்று கிடைக்கும்: நாளை கிடைக்கும் என்று காத்திருந்தவன் தன் எதிர்பார்பபு நிறைவேறாததால் "இலவுகாத்த கிளிபோல" ஏமாற்றமடைந்தான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளங்கை நெல்லிக்கனிபோல.

அவன் கூறியவை "உள்ளங்கை நெல்லிக்கனிபோலத்" தெளிவாயிருந்தும் அவற்றை நம்ப மறுப்பது ஏற்கத் தக்கதன்று.

ஊமைகண்ட கனாப்போல.

பல ஏழைகளின் நியாயமான ஆசைகள் கூட "ஊமைகண்ட கனாப்போலப்" பிறரறியாமல் மறைந்தே போய்விடுகின்றன.

எருமைமாட்டின் மேல் மழைபெய்தாற் போல.

திருந்துவதில்லை என்று முடிவெடுத்த சிலரை ஊரார் எவ்வளவுதான் திட்டினாலும் அவையெல்லாம் "எருமைமாட்டின் மேல் மழைபெய்தாற்போலப்" பயனற்றுப் போய்விடுகின்றன.

ஒருநாள் கூத்துக்கு மீசையைச் சிரைத்தாற் போல.

சிறுகச்சிறுகச் சேமித்தவற்றை ஒருநாள் வீண்களியாட்டத்துக்காகச் செலவிடுவதென்பது "ஒருநாள் கூத்துக்கு மீசையைச் சிரைத்தாற்போன்ற" மடைமை என்பதில் சந்தேகம் கொள்ளலாகாது.

கல்லிலே நார் உரித்தாற்போல.

கஞ்சப்பிரபு ஏழைகளுக்கு உதவுவார் என்ற எதிர்பார்ப்பு "கல்லிலே நாருரித்தாற் போன்ற" கற்பனையாகவே முடியும்.

கிணற்றுத் தவளைபோல

ஊருடன் இணைந்துவாழ மறுப்போமாயின் நாளடைவில் நாமும் "கிணற்றுத் தவளைகள் போலாகி" விடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடத்துள் இட்ட விளக்குப்போல.

பல மனிதர்களது திறமைகள் "குடத்துள் இட்ட விளக்குப்போலப்" பிறரறியாமலேயே போய்விடுகின்றன.

சிலையில் எழுத்துப்போல.

சிறுவயதிற் பெறுகின்ற கல்வியும் அனுபவங்களும் "சிலையில் எழுத்துப்போல" பிள்ளைகள் மனங்களிற் பதிந்து விடுகின்றன.

சூரியனைக் கண்ட பனிபோல.

துணிவுடையான்முன் தோன்றுந்துன்பங்கள் "சூரியனைக்கண்ட பனிபோலத்" தாமாகவே விலகிவிடுகின்றன.

பசுமரத்தாணி போல.

பெரியோரின் வார்த்தைகள் குழந்தைகளின் மனதிற் "பசுமரத்தாணிபோற்" பதிந்து விடுகின்றன.

பாம்புக்குப் பால்வார்த்தாற் போல.

தீயோருக்குச் செய்கின்ற உதவிகள் "பாம்புக்குப்பால் வார்த்தாற்போன்று" பயனற்றுப் போவதுடன் உதவியோருக்கும் கேடாய் முடியலாம்.

வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவதுபோல.

சில மனிதர்கள் புத்திசாதுரியத்தால் "வாழைப்பழத்தில் ஊசிஏற்றுவதுபோல்" எவ்வித சிரமமுமின்றித் தாம் நினைத்த காரியத்தைச் சாதித்து விடுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றைப்போல இன்னும் நூற்றுக்கணக்கான உவமைச் சொற்றொடர்கள் தமிழிற் கொட்டிக்கிடக்கின்றன. அவற்றை அறிந்து உரியமுறையில் பயன்படுத்துவது தமிழ்மாணாக்கரின் கடமை.

தாய்த்தமிழைப் பிழையறவும் கருத்துச்செறிவுடையதாகவும் கையாளத்தக்க பிள்ளைகளே தமிழன்னையின் அன்புக்குரியோராவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலாசிரியரைப் பற்றி



திருக்கோணமலை கந்தவனம் கோணேசுவரன்,
நாடறிந்த எழுத்தாளர்,
பாடறிந்து ஒழுககின்ற பண்பாளர்,
நல்ல தமிழ்ப் பாவலர்,
நன்னயம்மிக்க நாவலன்.

1966ஆம் ஆண்டு தனது பதினைந்தாவது அகவையில் 'தினபதி' நாளேட்டில் 'காந்தித்தாத்தா' என்ற தலைப்பில் நான்குவரிப் பாவுடன் எழுத்துலகில் நுழைந்து இற்றைவரை (1966---2020) எழுதி வருபவர்.

தமிழ்மீதும் தமிழிலக்கியத்தின் மீதும் தணியாத காதல் கொண்ட காரணியத்தால் அகவை 16இல் 'கன்னித்தமிழ்' 'தமிழ்மகள்' எனக் கையெழுத்தேடுகள் இரண்டினை மாதந்தோறும் வெளியிட்டவர்.
1989ஆம் ஆண்டில் திருக்கோணமலை மண்ணிலே வெளிவந்த 'வசந்தம்' இதழின் இணையாசிரியர்களில் ஒருவர்.

தமிழினத்தின் தன்மானக் குரலாய் வெளிவந்த 'சுதந்திரன்' ஏட்டுக்கு 19ஆவது வயதில் செய்தியாளரானவர். 'ஈழமுரசு' 'முரசொலி', 'தினமுரசு' என்பவற்றிலும் செய்தியாளராகப் பணிபுரிந்தவர். 'விவேகி' என்ற புனைப்பெயரில் 'சரிநிகர்' இதழிற் கட்டுரைகள் வரைந்தவர். 'வீரகேசரி' 'தினகரன்' தினக்கதிர்' 'சுடரொளி' ஆகியவற்றில் இலக்கியக் கட்டுரைகளும் கவிதை களும் தந்தவர். கனடாவில் வெளிவரும் 'ஆதவனிலும்', 'சுடரொளி' ஞாயிறு இதழ்களிலும் தொடர்ச்சியாக அரசியற் கட்டுரைகள் எழுதியவர்.

'மனக்கோலங்கள்' என்ற வாழ்வியற் கட்டுரைகள் நூலை 1999இல் வெளியிட்டவர்.

புதியதோர் இலக்கிய ஊடகமாக இன்று விளங்குகின்ற 'முகநூல்' வழியாகப் பாக்களும் தமிழிலக்கண. இலக்கியக் கட்டுரைகளும் எழுதுபவர்.

தற்போது வெளிவருகின்ற இலக்கணநூலுடன், இவரது நூலாக்கப்பணி மேலுந் தொடரவேண்டும் என்ற எதிர்பார்ப்புடன்.

தமிழ்ப்பித்தன் கட்டைப்பறிச்சான் கனகசிங்கம்.
B.A, Dip.in.Edu., M.Ed.

நன்றி.
முகநூலில் தொடராக வெளிவந்தபோது வரவேற்று உற்சாகப்படுத்திய முகநூல் உறவுகள்.
வாழ்த்துரை தந்துதவிய மட்டக்களப்பு கல்வியியற் கல்லூரியின் முன்னாள் பீடாதிபதி திரு.சி.பாக்கியராசா.
பிழைதிருத்தமும் ஆலோசனைகளும் வழங்கி அறிமுகஉரையும் தந்துதவிய முன்னாள் அதிபர் தமிழ்ப்பித்தன் கட்டைப்பறிச்சான் கனகசிங்கம்.
வடிவமைப்பாளர் எனது மருமகன் திரு.சுதாகரன் கௌசிகன்
சிறந்தமுறையில் அச்சேற்றிய அச்சகத்தார்
இந்நூலை வரவேற்கும் நல்லுள்ளங்கள்......
அனைவருக்கும்.

ISBN .978-955-97741-1-2
9 789559 774112
PRICE : Rs 450.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org